
ராதையை
அருணா ஹரி
கண்டேன் ராதையை
அருணா ஹரி
ராதையை
அருணா ஹரி
21700
1-6-12

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : கண்டேன் ராதையை |
| ஆசிரியர் | : அருணா ஹரி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : மே, 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 240 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : ஆர்.ஆர்.நிலையம்<br>62/1, முத்து முதலி தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.90.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : உதயம் ஆப்செட்,<br>சென்னை-2. |


# கண்டேன் ராதையை

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| பூக்கள் பூக்கும் தருணம் | 100.00 |
| உன்னிடம் மயங்குகிறேன் | 115.00 |
| திருமகள் தேடி வந்தாள் | 60.00 |
| வீணையடி நீ எனக்கு | 50.00 |

# கண்டேன் ராதையை



## 1

வீடெங்கும் பச்சரிசி மாக்கோலம். மாடப்பிறையில் தீபவிளக்கு சுடர்விட வாசலில் அத்திப்பூக் கோலம் நிலைப்படியில் மாவிலைத் தோரணம். உள்ளிருந்து கமழ்ந்த சுகந்தமான மணம் அழகான விடியலை மேலும் அழகாக்கிக் கொண்டிருந்தன.

''முத்தச்சி எழுந்தாச்சா?''

மாதவன் கேட்டான். ''இன்னும் எழும்பலை. ராத்திரி கால் நோவு என்று ரொம்ப நேரம் தூங்கலை. இப்ப தான் தூங்க ஆரம்பிச்சிருக்காங்க. அதனால் சத்தம் வராமல் பார்த்துக் கொள்'' அவன் அம்மா சொல்ல...

''அந்தப் பெண் நந்தனா வேறு வந்து விடுவாளே?''

''அம்மை உறக்கத்தை கலைக்க வேண்டாம். அவளுக்கு போன் செய்து தாமதமாக வரச்சொல்.''

''பேசாமல் அவளை வரவேண்டாம் என்று சொல்லி விடுங்கள்'' என அப்போது அங்கே வந்த ரோஷனி கூறினாள்.

'ம்ஹூம்! அது தப்பு! அவள் நமக்கு உதவுவதற்காக வருகிறாள். அவள் ஒரு நாள் வராவிட்டாலும் நஷ்டம் நமக்கு தான். முத்தச்சியின் எழுத்து வேலை பாதிக்கப் படும். உனக்கு ஏன் அவளைக் கண்டாலே ஆக மாட்டேன் என்கிறது?''

''ஏன் எனக்கென்ன பொறாமை? முத்தச்சி இப்பொழுது எல்லாம் என்னை கண்டு கொள்வதே இல்லை. எந்நேரமும் அவளுடனே இருக்கிறார்கள். அவளை ரொம்ப உசத்தியாய் பேசுகிறார்கள்.''

''அது சரி! அவள் மேல் நீ தேஸ்யம் காட்ட வேண்டா! முத்தச்சி வேலைக்கு உன்னால் எந்த இடையூறும் வந்து விடக் கூடாது. அதுவும் அந்தப் பெண் ரொம்பவும் ரோஷக்காரி. வேலையில் மிகவும் கெட்டிக்காரி. ஆனால் கண்டிப்பாய் யாரும் சட்டென நெருங்கிவிட முடியாதவளாய் இருக்கிறாள். அவள் இத்தனைக்கும் உன் வயதை ஒத்தவளாய் தான் இருக்கிறாள். ஏன் இப்படி இறுகிப் போய் வாழ்கிறாள் என்று தெரியவில்லை.''

''மாது கேட்டா, எந்தா உனக்கு ஆயி? அவளை இப்படி புரிந்து பேசுவது ஏதோ விஷயமா? என சம்சமயம் உண்டாகிறது?''



''ஹேய்! அங்ஙனம் ஒண்டுமில்லே! அவளை மாலை வரச் சொல்லி போன் செய்து விடுகிறேன். நம்ம வீட்டு இளவரசன் வருகிறான். அவனை வரவேற்க தயார் ஆகுங்கள்.''

''ரோஷனி ராத்திரி முழுசும் தூங்கவே இல்லை. அவன் எப்பொழுது வருவான் என ஆயிரம் கேள்விகள் கேட்டுத் துளைத்து விட்டாள். இப்பொழுது கூட அவள் கனவு நாயகன் வரும்பொழுது யாரும் சும்மா வேடிக்கை பார்க்கக்கூட வரக்கூடாது என்றுதான் நந்தனாவை வரச் சொல்ல வேண்டாம் என்கிறாள்.''

''ஆகா! அப்படியா விஷயம்? பார்த்து ரோஷனி நம்ம ஆள் லண்டன் பார்ட்டி! ஓவர் பொஸஸிவ்வா இருந்தாய் என்றால் அவன் பிச்சுக்கொண்டு ஒடிடுவான். அதுவும் இவன் சரத்சந்தர் மாமா மாதிரி கிடையாது. அவர் ரொம்ப பொறுமை; முத்தச்சி பேச்சை மீறமாட்டார். ஆனால் உன் ஹீரோ பேச்சுக்கு நாம் தான் கட்டப்பட வேண்டும். முத்தச்சி பேச்சை கேட்பது போல் பாவ்லா செய்து தன் விருப்பத்தையே பேச வைத்து விடுவான். எமகாதகப் பயல். ஆனால் எல்லார் மனசையும் கொள்ளையடித்து விடுவான். அவனைப் பார்த்து எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன.

இந்த ஆறு வருடத்தில் இன்னும் எவ்வளவு வளர்ந் திருப்பான்? என பார்க்க ஆவலாய் இருக்கிறது.''

''சித்தி, பெரியம்மா எல்லாரும் காலையில் இருந்து சமையல்கட்டில் பரபரப்பாய் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். அப்பாவும், பெரியப்பாவும் விமான நிலையம் சென்று இருக்கிறார்கள். எப்பொழுது வரு வார்கள் என்று தெரியவில்லை.

''நீ இப்படி குட்டிப் போட்ட பூனை மாதிரி சுற்றுவதை நிறுத்தி விட்டு ஏதாவது வேலை இருந்தால் பார். நீ எதிர்பாராத தருணத்தில் தான் ஆதித்தன் வந்து நிற்பான்.''

''போ சேட்டா! எனக்கு எதிலும் கவனமே போக வில்லை. அவனுக்கு எப்படி உடுத்திக் கொண்டால் பிடிக்கும்? என்ன கலர் பிடிக்கும்? எதை பேசினால் பிடிக்கும்? இசை பிடிக்குமா? பாட்டு பிடிக்குமா? டான்ஸ் பிடிக்குமா? வெஸ்ட்டர்னா, கிளாஸிக்கா? என்ன சாப்பிட கொடுக்கலாம்? எதை விரும்பி உண்பான்? பிரெட், சீஸ், ஜாம் மட்டும்தான் பிடிக்குமா?....''

''ஹேய்! நிறுத்து நிறுத்து! நீ இப்படி பிடி, பிடி என்று அறுத்தால் அவன் அடுத்த ப்ளைட்டை பிடித்து லண்டனுக்கே ஓடி விடுவான். இந்த முறை முத்தச்சி அவனை இங்கேயே பிடித்து வைத்துக் கொள்ள நினைத்து இருக்கிறார்கள். அதை நீ கெடுத்து விடாதே!''

''சரத் அண்ணா மேலே முத்தச்சி ரொம்ப நேசமும், பாசமும் வச்சிருந்தார். அப்படி இருந்தும் அவர் வெளி நாட்டில் போய் செட்டிலாகவில்லையா? என்று கேட்க தானே நினைக்கிறே ரோஷனி? உண்மையில் அவர் மேல் இருந்த பாசம் தான் அவரை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தது. கண்ணுக்கு கண்ணாய், உயிருக்கு உயிரான பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பியது அவன் தனக்கு மட்டும் தான் சொந்தமாய் இருக்கணும் கிற எண்ணம் தான் காரணம். உன் முத்தச்சி ஐந்து சகோதரர்களுடன் பிறந்த ஒரே பொண்ணு. எல்லாரும் அவங்களை ரொம்பவும் கொண்டாடினாங்களாம்.



அவங்க என்ன சொன்னாலும் மறுபேச்சு பேசாமல் எல்லாரும் கேட்பாங்க! எந்த விஷயத்திற்கும் மறுப்பு தெரிவிச்சது இல்லை. என் கல்யாணம் கூட அப்படித் தான்! எல்லாம் அவங்க விருப்பப்படி தான் நடந்தது.''

''சரி அம்மா, அப்பா வந்தால் கோபிப்பார். இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று பார்த்து சொல்லுங்கள்? அவருக்கு ஆசை மருமகனின் பிள்ளையை வரவேற்பதில் குறையிருந்தால் அவ்வளவு தான்! வானத்துக்கும் பூமிக்குமாய் வாமன அவதாரம் எடுத்து நம்மை தரைக்குள் தள்ளி விடுவார்.''

''அதற்கெல்லாம் பயந்தவனா? நீ உனக்கும் ஆதித்தன் மேல் ரொம்ப பிரியம் உண்டு. சக தோழனாய் நீ அவனுடன் அடிக்கும் கும்மாளம் ஊருக்கே தெரிந் திருக்கும் பொழுது எனக்கு மட்டும் தெரியாதா என்ன? நீ போய் அவன் அறை சரியாய் இருக்கிறதா? என்று பார். மாடியில் அவனுக்காகவே சகல வசதிகளுடன் நவீனமாய் அறையை தயார்ப்படுத்தியிருக்கிறார் உன் அப்பா. அது தூசு, தும்பு இல்லாமல் இருக்கிறதா என்று பார். காலையில் கூட செல்வி அதைக் கூட்டி துடைத்து வைத்தாள். எதற்கும் இன்னொரு முறை சரி பார்த்து விடு.''

அப்போது கோபி அங்கு வந்தான். ''மாதவா! விமானம் வரத் தாமதம் ஆகுமாம். இப்பதான் சித்தப்பா போன் செய்தார்.''

''மாதவா! என் கண்ணன் வந்துட்டானா?'' என குரல் கேட்டு அனைவரும் திரும்பினர்.

வெண்பட்டில் குளித்திருந்த ஈரம் காயாத கூந்தல் நுனியில் முடிச்சுடன் நெற்றியில் பளீரிடும் குங்குமமும், சந்தனமும் துலங்க முத்தச்சி வந்தார்.

வயதான கலைமகளைப் போன்ற தோற்றம். கண் களில் கனிவும் அறிவும் சுடர்விட்டன.

''முத்தச்சி! என்ன இவ்வளவு சீக்கிரம் தயார் ஆகி விட்டீர்கள்? நீங்கள் உறங்கிக் கொண்டிருப்பதாக அம்மா சொன்னார்கள். அதனால் அந்த நந்தனா பெண்ணைக் கூட மாலையில் வரச் சொல்லி போன் செய்து விட்டோம். ஆதித்தன் வரும் விமானம் சென்னைக்கே இரண்டு மணி நேரம் தாமதமாக வருகிறதாம். அங் கிருந்து திருச்சி வர இன்னும் தாமதமாகும்.''

''வரட்டும், வரட்டும்! இந்த கிழவியை காக்க வைப் பதில் அந்த கண்ணனுக்கு என்ன சந்தோஷமோ? நான் கோவிலுக்குப் போய்விட்டு வருகிறேன்.''

''இருங்கள் முத்தச்சி! ரோஷனியை உங்களுடன் அனுப்புகிறேன்.''

''அவள் கனவில் இருக்கிறாள்; என்னுடன் வரமாட் டாள்.''

''அப்படியானால் நான் உங்களுடன் வருகிறேன்.''

இருவரும் அருகில் இருந்த கோவிலுக்குச் சென்றனர்.

''கண்ணா! என் மகனைத்தான் நான் பிரிந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. என் பேரனாவது என்னுடன் மனம் நிறைவாய் இருக்க வரம் தா! அவன் என் கடைசி காலம் வரை.... அதாவது... நான் கண் மூடும் வரையாவது என்னை விட்டு விலகாமல் என்னுடன் இருக்க வேண்



டும். வீடு நிறைய உறவினர்கள் குழந்தைகள் எல்லாரும் இருந்தாலும்.... என் அருமை மகனின் கண்மணி என் ஆசை பேரன்... என் கண்ணன் இருந்தால்... எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். நிம்மதியான முடிவிற்கு என் பேரன் வேண்டும். வரம் தா! கண்ணா!''

முணுமுணுப்பாய் முத்தச்சி வேண்டியது மாதவனின் காதுகளிலும் விழத்தான் செய்தது. முத்தச்சி பேரும், புகழும் பெற்ற எழுத்தாளராய் கோலோச்சிக் கொண்டிருந் தாலும் உள்ளத்தில் மகனை பிரிந்த ஏக்கம் வாட்டிக் கொண்டிருந்ததை அனைவருமே உணர்ந்திருந்தனர். முத்தச்சியின் பெரிய அண்ணன் லண்டனில் இருந்தார். பின் அமெரிக்காவிற்கு சென்று அங்கேயே நிரந்தரமாக தங்கி விட்டார். அவர் வீட்டில் இருந்துதான் முத்தச்சியின் அன்பு மகன் சரத்சந்தர் பள்ளிபடிப்பு, கல்லூரி எல்லாம் முடித்தார். படிப்பு முடிந்ததும் தாயின் விருப்பப்படி அவர் தேர்ந்தெடுத்த பத்மினியை மணந்து கொண்டார். ஆனால் தன் அம்மாவின் உடன் அமெரிக்காவில் வசிக் காமல் மனைவியுடன் லண்டனுக்கு சென்று அங்கேயே தங்கி விட்டார். எப்போதாவது இந்தியாவிற்கு வந்து கொண்டிருந்ததும் பிறகு சுத்தமாய் நின்று போய் விட்டது. அவர் மகன் ஆதித்தனை போனிலும், போட் டோவிலும், ஈ மெயிலிலும் தரிசித்த முத்தச்சிக்கு ஏக்கம் வராமலா இருக்கும்? அவன் பிறந்த பொழுது பார்த்த வர்கள், ஆறு வருடங்களுக்கு முன் டீன் ஏஜ் பையனாக பார்த்தார்கள். பிறகு வருந்தி வருந்தி அழைத்து இப் பொழுது தான் மனமிளகி வருகிறான். அவன் இங்கேயே இருக்க வேண்டுமென கடவுளை வேண்டுவது தான் அவர்களால் செய்ய முடிந்தது! காட்டாற்று வெள்ளத்தை

கைகள் கொண்டு தடுக்க முடிய முடியுமா? முத்தச்சியின் அன்பெனும் மெல்லிய நூல் கயிற்றால் அவனை பிணைக்க இயலுமா? இங்கேயே பிறந்து வளர்ந்த சரத்தே இந்த நாட்டை சுத்தமாக மறந்து விட்டான். பிறப்பு, வளர்ப்பு எல்லாமே வெளிநாடாய் இருக்கும். ஆதித்தன் எப்படி இங்கே இருப்பான்? அவனை இணைக்க மந்திரக் கயிறு அல்லவா வேண்டும்! அது எங்கே இருக்கிறது?

நந்தனா முத்தச்சி வீட்டிற்கு தான் கிளம்பினாள். ஆனால் மாலை வரச் சொல்லி அலைபேசி கூற மதியம் கதை சொல்லச் செல்வதாக இருந்த பள்ளிக்குப் போக லாமா? என யோசித்தாள். அப்போது மறுபடியும் அலை பேசி அழைப்பு; பள்ளியில் இருந்து தான் வந்தது. பள்ளி முக்கிய காரணத்தால் மதியம் விடுமுறை விட வேண்டி யிருப்பதால் காலையிலேயே கதை சொல்ல வரமுடி யுமா? எனக் கேட்டார்கள். ‘நல்லதாய் போயிற்று’ என ஒத்துக் கொண்டாள். சமயபுரத்திற்கு அருகில் இருக்கும் தனியார் பள்ளி. குழந்தைகளின் கல்விக்கு மட்டுமில் லாமல் படைப்புத்திறன், தன்னம்பிக்கை வளரவும் அவ்வப்போது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் பள்ளி அது.

நந்தனா ஓர் கதை சொல்லி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் கதை சொல்பவள். ஆட்களுக்கு தகுந்த மாதிரி இடத்திற்கு ஏற்ற மாதிரி கதை சொல்வாள். குழந்தைகளுக்கு அவள் சொல்கிற கதை களில் மிகுதியானவை நகைச்சுவை தான்; விலங்குகள் பற்றிய கதையாகட்டும், அறிவியல் கதையாகட்டும்,



புராணக் கதை, தன்னம்பிக்கை ஊட்டும் கதையாகட் டும். அதில் நகைச்சுவை மெலிதாக கலந்தோடும். குழந்தைகள் கதைகளில் சகலமும் கலந்து இருந்தாலும் அவர்கள் சிரிப்பூட்டும் கதைகளையே விரும்பினார்கள்.

ஒருமுறை அவளிடம் கதை கேட்டவர்கள் மறுபடி யும், மறுபடியும் கதை கேட்க விரும்பினார்கள். முதியோர் இல்லங்களுக்கும் சென்று அவள் கதை சொன்னாள். புராண, வீர வரலாற்று, பாரம்பரிய கதைகள் அவர்களை வாழ்ந்த வசந்த காலத்திற்குக் கொண்டு சுற்றினாள். சிங்கப்பூர், மலேசியா நாட்டு குழந்தைகளுக்கும் அவ்வப் போது சென்று கதை சொல்லி வந்தாள். ஆறு மொழி களில் சரளமாகப் பேச எழுதக் கற்று இருந்தாள். தமிழ், ஆங்கிலம், மலையாளம், சீனம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் கற்று தேர்ந்து இருந்தாள். இலக்கியத்தில் அவளுக்கு தீவிர ஈடுபாடு இருந்ததால் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளில் கதைகள் எழுதி வந்த முத்தச்சிக்கு உதவியாளர் தேவை என அறிந்தவுடன் தயங்காமல் அவருக்கு உதவச் சென்றாள். எழுத்தாளர் ‘தேவமதி’ அவளுக்கு இஷ்டமான படைப்பாளி. அப்படியிருக்க அவள் உதவ மாட்டாளா? என்ன?

ஸ்கூட்டியில் பள்ளிக்குக் கிளம்பினாள். மீட்டிங் ஹாலில் மாணவ மணிகள் குழுமியிருந்தனர். நட்புடன் புன்னகைத்தாள். இயல்பாய் பேச்சுக் கொடுத்துக் கொண்டே கதையை ஆரம்பித்தாள். அந்த மாணவர்களி டையே முதுகு வளைத்து கூம்பிப் போயிருந்த ஒரு சிறுவனைப் பார்த்தாள். சிலர் அவனை சீண்டிச் சிரித்துக் கொண்டிருந்ததையும் கவனித்தாள். ஒரு நகைச்சுவை கதையை நடித்துச் சொல்லிக் காண்பித்து அடுத்த

கதையை ஆரம்பித்தான். ஆமையும், முயலும் கதைதான். ஆமைக்கு முதுகில் கூனல் வியாதி வைட்டமின் குறைபாட்டால் வந்துடுச்சாம். அதனால் எந்த வேலையையும் வேகமாய் செய்ய முடியாமல் போயிடுச்சாம்! ஆனாலும் அது தன் நம்பிக்கையை மட்டும் இழக்கவே இல்லை. எதையும் திட்டமிட்டு, முயற்சித்து இடைவிடாது உழைத்தால் அடையலாம் என்று உறுதியாய் நம்புச்சாம். அப்போ தான் அதன் நண்பன் முயல் அதை தன்னுடன் ஓட்டப் பந்தயத்திற்கு வருமாறு சவால் விட்டுச்சாம். பின் வாங்குவதற்கு ஆமையின் தன்மானம் இடம் கொடுக்கலே! முயற்சி செய்யாமல் தோற்றுப் போயிடுவோம் என்று பயத்தில் அது ஒதுங்க விரும்பவில்லை.

கடிகாரத்தை வைத்து தன்னால் அரை மணி நேரத்திற்கு எவ்வளவு தூரத்தை கடக்க முடியுதுன்னு முதலில் பார்த்துச்சாம். பின் போட்டி தூரத்தை கடக்க எவ்வளவு மணி நேரம் ஆகும்னு கணக்கிட்டுச்சாம். தினம் இடைவிடாமல் பயிற்சி செஞ்சுச்சாம். பாதி தூரத்தில் சோர்ந்து படுத்து விடக்கூடாது பாருங்க. அதனால் தொடர்ந்து பயிற்சி செஞ்சுகிட்டே இருந்துச்சாம். முயல் நம்மால் முடியும்! என்று நம்பிக்கையுடன் ரொம்ப அலட்சியமாய் இருந்துச்சாம். போயும், போயும் ஒரு ஆமையை நம்மால் ஜெயிக்க முடியாதா? என்ற கர்வம் வேறு! தினமும் காரட்டைச் சாப்பிட்டு சாப்பிட்டு நல்லா தூங்கி தூங்கி எழுந்துச்சாம். எந்த பயிற்சியும் செய்யலை.

வெற்றி இலக்கை அடைய எத்தகைய திட்டமிடுதலும் அதுகிட்டே இல்லையாம். போட்டி நாளும்



வந்துச்சு. எடுத்த உடனே முயல் வேகமாய் ஓட துவங்குச்சு. ஆனால் பயிற்சி எதுவும் செய்யாததால் ரொம்ப களைச்சுப் போச்சு! கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கிட்டு போகலாம்னு மரத்தடியில் சாய்வாய் உட்கார்ந்துச்சு! காற்று குளுகுளுன்னு வீசியதாம். முயல் சாஞ்சு தூங்க ஆரம்பிச்சுடுச்சு! ஆமை இடைவிடாத பயிற்சியினால் களைப்பு அடையாமல் சீரான வேகத்தில் வெற்றி இலக்கை குறித்த நேரத்தில் தொட்டுடுச்சாம். தூங்கி எழுந்த முயலுக்கு ரெண்டு விஷயம் புரிஞ்சுச்சாம். தான் போட்டியில் தோத்துட்டோங்கிறது ஒண்ணு; ஸ்கூல் வேன் அதை விட்டுட்டே போயிடுச்சுங்கிறது. இன்னொண்ணு! ரொம்ப கஷ்டப்பட்டு ஸ்கூல் பேகை தூக்கிக்கிட்டு நடந்தப்பதான் அறிவுக் கண்ணு திறந்துச்சாம்!

ஒரு நாள் ஸ்கூல் பேகை தூக்கிக்கிட்டு நடக்கிறதே நமக்கு இவ்வளவு கஷ்டமாய் இருக்கிறதே! நம்ம நண்பன் முதுகில் நிரந்தரமாய் ஸ்கூல் பேக் மாதிரி சுமை இருக்கிறதே! அவன் தினமும் நடக்க எவ்வளவு சிரமப்படுவான்? அது புரியாமல் அவனை எத்தனை கேலி, கிண்டல் பண்ணியிருக்கிறோம்? என்று வருத்தப்பட்டுச்சாம். நண்பன் ஜெயித்ததற்கு வாழ்த்து தெரிவித்ததுடன் முயல் மன்னிப்பும் கேட்டுக்கிச்சாம்! வெற்றி சுலபத்தில் யாருக்கும் கிடைச்சிடாது; அதற்கு முயற்சி, பயிற்சி எல்லாம் தேவைன்னு முயலும், ஆமையும் எல்லாருக்கும் புரிய வச்சுதாம். எல்லாராலும் ஜெயிக்க முடியும்; ஆனால் அதற்காக திட்டமிட்டு பயிற்சி செய்யணும், இடைவிடாமல் இலக்கை நோக்கி உழைக்கணும் என்று சொல்லி நந்தனா கதை முடித்தாள். கூனல் முதுகு

சிறுவன் தோளில் கைப்போட்டுக் கொண்டு ஆர்ப்பரித்த சிறுவர்களைப் பார்த்து புன்னகைத்தாள். அப்படியே ஸ்கூட்டியில் சமயபுரம் மாரியம்மனை தரிசித்துவிட்டு திரும்பும் வழியில் ஒரே டிராபிக் ஜாம்! போக்குவரத்து தடங்கலாகி ஒன்றன் பின் ஒன்றாக வண்டிகள் நகர் வதற்கு இடமில்லாமல் நின்று கொண்டிருந்தன. என்ன வாயிற்று என்று இடுக்கில் நுழைந்து பார்த்தாள்.

முன்னால் ஒரு டிராக்டர் ஆள் இல்லாமல் நின்று கொண்டிருந்தது. அதன் டிரைவர் எங்கே சென்றான் எனத் தெரியவில்லை. ஆளாளுக்கு திட்டிக் கொண்டிருந் தார்களே தவிர வேறு எந்த ஏற்பாடோ, முயற்சியோ செய்ததாகத் தெரியவில்லை.

அவள் ஸ்கூட்டி அருகே நின்று கொண்டிருந்த ஜிப்ஸியில் இருந்து ஓர் இளைஞன் கண்ணாடி கதவை இறக்கி எட்டிப் பார்த்தான். அவனை மீறி இன்னொரு பெண் தலையை நீட்டி ''புல்ஷிட்! இவர்கள் என்றைக் குமே திருந்த மாட்டார்கள்! இந்த நாட்டில் எப்பொழுதும் இப்படித்தான்!'' என நொடிக்க...

நந்தனா ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு முன்னால் சென்றாள். அந்த டிராக்டரில் சாவி தொங்கிக் கொண் டிருந்தது. அதில் ஏறி அமர்ந்து அதை இயக்கினாள். லாவகமாக நகர்த்தி ஓரமாய் நிறுத்திவிட்டு கீழ் இறங்கி வந்து ஸ்கூட்டியை இயக்கினாள். மற்ற வண்டிகள் எல்லாம் புறப்பட்டுச் செல்ல... ஜிப்ஸியிலருந்து அந்த இளைஞன் ''வாவ்!'' என்றான். ஆனால் அவளோ அத எதையும் கவனிக்கவில்லை. தன் வண்டியை ஓட்டிச் கொண்டு சென்று விட்டாள். அவன் அவளின் நீண்ட



கூந்தலை கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தான்.

வீட்டிற்குச் சென்ற நந்தனா முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு முத்தச்சியின் வீட்டிற்குச் சென்றாள். விழாக்கோலம் பூண்டிருந்த வீட்டை ரசித்தவாறே உள்ளே நுழைந்தாள். முத்தச்சியின் முகத்திலிருந்த அலாதியான ஆனந்தம் அவளை மிகவும் கவர்ந்தது.

''வரு! வரு! பொன்னு மோளே! இவ்விடே இருக்கி.''

''எந்தா ஆயி நிங்ஙள்க்கு? ஆனந்தம் கூத்தாடுதே முகத்தில்! முத்தச்சியை இங்ஙனம் ஞான் கண்டுட்டில்ல!''

''வா! வா! இரகசியம் சொல்கிறேன். என் பேரன் லண் டனில் இருந்து இந்தியா வந்துட்டான். இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்து நிற்கப் போகிறான். விமான நிலையத்தில் இருந்து அவனை அழைத்து வர என் அண் ணன் போயிருக்கார். அவன் காலடி ஓசைக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். என் ஏக்கமும், அவசரமும் அவனுக்கு எங்கே புரிகிறது? புரிந்திருந்தால் இந்நேரம் ஓடி வந்திருக்க மாட்டானா?''

இன்றைக்கு அந்த வயதான மூதாட்டி மிகவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தார். காலம் காலமாய் மனதில் சுமந்திருந்த அன்பு இன்று வெளிப்பட துடித்துக் கொண் டிருந்தது.

''வாருங்கள் முத்தச்சி! இன்றைக்கு எழுத வேண்டி யதை எழுதலாம்.''

''சரி வா! அவன் வரும்வரை வேலையிலாவது கவ னத்தை செலுத்தலாம். மனத்தின் பரபரப்பு அப்பொழு தாவது குறையும்.''

இருவரும் எழுந்து அவரது அறைக்குச் சென்றனர். கட்டிலில் கால் நீட்டி அமர்ந்தவர் ''இன்றைக்கு எனக்கு கால் நோவு கூட மறந்து போய்விட்டது. அம்பலத்துக்கு நடந்தே போய்விட்டு வந்து விட்டேன் தெரியுமா?'' என ''அப்படியா?'' என்று அவள் வியந்தாள். எழுது வதற்கு இரண்டு வரிகள் சொல்லியிருப்பாள்...

''இந்த வெண்பட்டு எப்படியிருக்கிறது? சரத் பிறந்த பொழுது வாங்கியது; அவன் மகனே வளர்ந்து கல்யாண வயதிற்கு வந்து விட்டான். இன்னும் அதன் பளபளப்பு மங்காமல் அப்படியே இருக்கிறது இல்லே? இதை கட்டு வதற்கு வாய்ப்பே வரவில்லை. பேரன் வரும் நாளை என்னால் இப்படித்தான் கொண்டாட முடிகிறது!'' என்ற வளைப் பார்த்து நந்தனா சிரித்தாள்.

''அம்மூம்ம! எழுதும் சிந்தனை இன்றைக்கு உங் களுக்கு வரப் போவதில்லை போலிருக்கு? மனசெல் லாம் நிங்கள் பேரன் தான் நிறைஞ்சிருக்கார். வேண்டு மானால் அவரைப் பற்றி கவிதை சொல்லுங்கள்; நான் எழுதித் தருகிறேன்.''

''நீ ஆதித்தனை பார்க்க வேண்டும் நந்தனா! அவன் கம்பீரத்திலும், அழகிலும் யாரும் மயங்கிப் போவார்கள். எத்தனை புத்திசாலி தெரியுமா? படிப்பில் மிகவும் கெட் டிக்காரன்; வெள்ளைக்காரனே மூக்கில் விரல் வைக்கும் படி அசர வைத்து படித்தவன்; எல்லார் மனசையும் அப்படியே கவர்ந்து விடுவான். நாம் நினைப்பதை எல்லாம் வினாடியில் கண்டு பிடித்து விடுவான். ரொம்பக் கூர்மையானவன். ஆனால் அவன் மனதில் என்ன நினைக்கிறான் என்பதைத் தான் நம்மால் கண்டு கொள்ள முடியாது...''



இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு ரோஷனி பொருமித் தீர்த்து விட்டாள். ''இவள் ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தாள்? ஆதித்தன் வரும் நேரத்தில் இவள் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது சாக்கு சொல்லி இங்கிருந்து முதலில் அவளைக் கிளப்புங்கள்.''

''ஏய்! என்ன பேசுகிறாய்? எத்தனை நாளைக்கு ஆதித்தனை யார் கண்ணிலும் காட்டாமல் மறைப்பாய்? அவன் என்ன பொம்மையா? நீ ஒளித்து வைப்பதற்கு? முதலில் உன் சொல்லுக்குக் கட்டுப்படுவானா? நீ ஏன் நந்தனா மேல் பொறாமைப்படுகிறாய்? அவள் அழகு உன்னை இம்சை செய்கிறதா?''

''சித்தி! நீங்களே இப்படிச் சொல்லலாமா?''

''சித்தி கேட்டதில் என்ன தப்பு? ரோஷனி நீ வர வர நாகரீகமான பெண்ணைப் போலவா நடந்து கொள் கிறாய். நமக்கு உதவ வரும் பெண் மேலேயே பழி சொல்லலாமா? முத்தச்சிக்குத் தெரிந்தால் வருத்தப்படு வார்கள்'' என மாதவன் சொல்லிக் கொண்டிருந்த பொழுதே வாசலில் கார் சத்தம் கேட்டது. உள்ளேயிருந்த தால் அதை முத்தச்சி அறியவில்லை. 'என்ன சத்தம் கேட்டாலும் என் கண்ணன் வரும் காலடி போல் இருக்கிறது' என எண்ணியவாறே நந்தனாவை அருகே வரும்படி அழைத்தார். மேசை மேல் எழுதிய தாளையும், எழுதுகோலையும் வைத்துவிட்டு அருகே வந்தாள் நந்தனா கட்டிலில் அமரச் சொன்னார். ஆனால் அவளோ மண்டியிட்டு கீழே கட்டிலை ஒட்டியவாறு அமர... அவள் தலையை தன் மடியில் சாய்த்துக் கொண்டு ஆதுரத் துடன் வருடினார்.

ஆரத்தி எடுத்து முடித்தவுடன் நேரே முத்தச்சியை பார்க்க விரைந்தான் ஆதித்தன். ''முத்தச்சி'' என விளித்தவாறு கதவைத் தட்டியவன் கண்களில் நீண்ட கூந்தல் வலப்புற தோளில் முன்புறமாய் படர்ந்திருக்க... பட்டு ரோஜா வண்ண பருத்திப் புடவையில் கறுப்புநிற பிரிண்டெட் செய்யப்பட்டிருந்தது அவள் அழகை எடுத்துக் காட்ட மெல்லிய செயின் இதய வடிவ லாக்கெட்டுடன் கழுத்தை ஒட்டி அழகு செய்ய, மெரூன் வர்ண திலகம் நெற்றியில் பளீரிட, மண்டியிட்ட கால்களின் பாதங்கள் மருதோன்றி பளிரிட, மண்டியிட்ட கால்களின் பாதங்கள் மருதோன்றி சிவப்பு அச்சுடன் மனம் கவர முத்தச்சியின் மடியில் இயல்பாய் சாய்ந்திருந்த அழகோவியமாய் நந்தனா பட்டாள். அவன் வாயிலிருந்து ரசனையுடன் விசில் சத்தம் வந்தது.

சட்டென நிமிர்ந்த நந்தனா அதிர்ந்து போனாள்.

''கண்ணா!'' என முத்தச்சி இரு கைகளையும் விரித்தவாறே எழுந்து நிற்க...

''மை டியர் கேர்ள் பிரெண்ட்! யூ ஆர் லுக்கிங் வெரி சார்மிங்'' என்றவாறே கட்டிப்பிடித்து தன் முத்தச்சியை தூக்கினான்.

ஒரு சுற்று சுற்றினான்.

சுற்றிலும் நின்றிருந்தவர்கள் ''ஹா'' என ஆர்ப்பரித்தார்கள். நந்தனா அசையாது அப்படியே நின்று விட்டாள்.

கருநீல கோட்டும் கழுத்தை ஒட்டிய வெள்ளை நிற டீ ஷர்ட்டும் கருப்பு நிற ஷூவும் அவனை... அந்த சாக்லேட் பாயை மிக கம்பீரமாய் காட்டின. முத்தச்சியை மெல்ல இறக்கி விட்டான்.



''சே! என்ன பார்வை?'' என ரோஷனி வெறுப்புடன் மெல்ல கடித்து துப்பிய வார்த்தை அவளை சட்டென இயல்புக்குக் கொண்டு வந்தது.

அப்போது அறையில் வாயிலிருந்து ஒரு பெண்

''ஆஷ்! மே ஐ கம் இன்?'' என அனுமதி கேட்டாள்.

''ஹாய் விபு! ப்ளீஸ கம்! ''............'' அவன் முடிப்பதற்குள்

''எக்ஸ்க்யூஸ் மீ! தயவு செய்து வெளியில் போகிறீர்களா? நீங்கள் ஷூவை வெளியில் கழட்டிவிட்டு வந்தீர்கள் என்றால் மிகவும் நல்லது. வயதானவர்களுக்கு சீக்கிரம் நோய்க்கிருமிகள் தொற்றிக் கொள்ளும்...''

நந்தனா முடிப்பதற்குள் ரோஷனிக்கு பற்றிக் கொண்டு வந்தது. 'இவள் யார் இங்கே அதிகாரம் செய்ய? அதுவும் அவருக்கே உத்தரவு போடுகிறாள்.'

''கண்ணா! இது நந்தனா. என் உதவியாளினி. மிகவும் நல்லப் பெண். என் மேல் உள்ள அக்கறையில் அப்படி சொல்லி விட்டாள். அவளைத் தப்பாக நினைக்காதே.''

''நோ முத்தச்சி! ஷி இஸ் கரெக்ட்! நான் ஷூவை அவிழ்த்து விட்டு வருகிறேன்.''

அவன் ஷூவை அவிழ்த்துவிட்டு உள்ளே நுழைந்த பொழுது அவன் தோளில் தொற்றியவாறே 'விபு' என அழைக்கப்பட்டவளும் வந்தாள். மினி ஸ்கர்ட்டும் ஸ்லீவ்லெஸ் டாப்ஸுமாய் இருந்தவளைப் பார்த்த நந்தனாவின் பார்வை தன்னையறியாமல் ரோஷனியை நோக்கிச் சென்றது. பற்கள் நெறிபடும் சத்தம் புன்னகைக்க வைத்தது.



# 2

காலையில் எழுந்ததில் இருந்து ராதாவை தேடிக் கொண்டிருந்தாள் பொன்னி. ''எங்கே போனாள்?'' என தனக்குத்தானே பேசிக் கொண்டே அலைந்து கொண்டிருந்தாள். எதிர்ப்படும் ஒவ்வொருவரிடமும் விசாரித்துக் கொண்டே நடந்தாள்.

''என்ன பொன்னி? நித்தமும் உனக்கு இதே வேலையாக போய் விட்டது போ! நீ பொண்ணை ஆம்பிள புள்ளை மாதிரி வளர்க்கிறாய்! எந்நேரமும் எங்காவது பயமில்லாமல் திரிந்து கொண்டே இருக்கிறாள்.''

''ஆமாம் அக்கா! நானோ ஒத்தைக்கட்டை! எனக்குப் பிறகு என் பொண்ணு தைரியமாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டாமா?''

''பார்த்துடியம்மா! அதுவே ஆபத்தாய் முடியப் போகிறது.''

''நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும்'' என்றவாறே மேலே நடந்தாள் பொன்னி.

கடைத்தெரு, பக்கத்திலிருந்த கோவில் வரை சென்று தேடி விட்டாள். 'இனி எங்கு தேடுவது?' என அலுப்பு ஏற்பட்டது. 'பசித்தால் தன்னால் தேடி வருவாள்' என



உள்ளுக்குள் இன்னொரு எண்ணம் ஓடியது. ஆனால் பாசம் கொண்ட மனதுக்குத்தான் அது எதையும் ஒத்துக் கொள்ள முடியவில்லை. ஆரப் பள்ளத்தில் இருந்தவரை வாழ்க்கையை பறவைகளுடன் ஆனந்தமாய் ராதா கழித்துக் கொண்டிருந்தாள். இருநூறு வீடுகள் கொண்ட சிறிய கிராமம் தான். ஆனால் ஊரெங்கும் பசுமை கொஞ்சும்; தென்னை, பூவரசு, கிளுவை, ஒதியம் போன்ற மரங்கள் நிறைந்து காணப்படும். அவற்றைச் சுற்றிலும் பசுமையான வயல்வெளிகள் அந்த இடத்தை அமைதியான இடமாக அறிவித்துக் கொண்டிருந்தன. மனிதர்களும் எளிமையாய் இருந்தனர். அதனால் பல விதமான பறவை இனங்கள் அந்த ஊரை தங்கள் நிரந்தர இருப்பிடமாய் மாற்றிக் கொண்டன. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் மரங்களில் விதவிதமான பறவையினங்கள் தங்கி இருந்தன.

இவர்கள் வீட்டில்கூட மரத்தில் மைனா, குருவி, காக்கை, மடையான், கொக்கு, சிறவி, நாரை என பலவிதமான பறவைகள் குடியிருந்தன. சிறு வயதில் இருந்து ராதா அவற்றைப் பார்த்து வளர்ந்தாள். காலை 4 மணிக்கு பறவைகள் விழித்துக் கொள்ளும் நேரத்திலேயே அவளும் விழித்துக் கொள்வாள். ஒரு மணி நேரம் அவற்றின் இரைச்சல்கள் கேட்டுக் கொண்டிருக்கும். அவற்றைக் கேட்டுக் கொண்டே உள்ளே கட்டிலில் படுத்திருப்பாள். அவை ஐந்து மணிக்கு குழுக்களாய் வெவ்வேறு திசைகளில் பறப்பதை வேடிக்கை பார்ப்பது அவளது அன்றாட பொழுது போக்கு.

மாலை ஐந்து மணிக்கு அவை ஊர் திரும்புவதையும் பார்த்துக் கொண்டே இருப்பாள். அரை வட்டமாக வரும்

நாரைகள் வட்டமாக கிரீச்... கிரீச் சென்று கத்திக் கொண்டு வரும் குருவிகள்; காதை பொத்திக் கொள்ளும் இரைச்சலோடு வரும் காகங்கள், படகு போல் அணி வகுத்து வரும் சிறவிகள் இவற்றை பார்த்து மகிழ்வதில் அளவில்லா ஆனந்தம் அவளுக்கு!

பறவையினங்கள் வந்ததும் தங்கள் கூட்டில் அடைவதில்லை. மின்சார கம்பியில் சற்று நேரம் ஊஞ்சலாடியும், வயல் வரப்பில் காலார நடந்தும், சாலையில் செல்லும் மனிதர்களை அசட்டையாய் வேடிக்கைப் பார்த்தும் மாலைப் பொழுதை பாரதி சொன்னது போல் விளையாட்டாய் கழித்து விட்டு சற்று இருட்டியவுடன் மரங்களை நோக்கிச் சென்று அடையும் பொழுது கேட்கும் சத்தம் இசை போல் இனிக்கும். அந்த ஊர் மக்களுக்கு பறவைகளும் சொந்த பந்தங்கள் தான். ஒவ்வொரு குடும்பத்திலும் அவை ஓர் அங்கம். பறவைகளுக்கு தொந்தரவு ஏற்படுத்தும் வகையில் அவர்கள் எதையும் செய்வதில்லை. பறவைகள் வெளியே காய வைக்கும் தானியங்களை தின்றாலும் அவற்றை யாரும் வெறுப்பதில்லை. பறவைகளோடு இயைந்த வாழ்க்கைக்கு ராதா நன்றாக பழகி விட்டாள். உறங்கப் போகும் முன்னும் தூங்கி விழிப்பதும் பறவைகள் முகத்தில் தான். அவள் இப்படி பறவைகளுடன் வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில் ஒரு நாள் அவர்கள் வீட்டு மரத்தில் ஒரு கொக்கு வந்து தங்கியது. வெள்ளை வெளேரென்று தும்பைப் பூவைப் போல இருந்த அதை பார்த்தவுடன் ராதா மிகவும் மகிழ்ந்து போனாள். மாட்டுக் கொட்டகையில் நுழைந்தது அப்படியே அங்கேயே தங்கி விட்டது. இட்லி, தோசை, கடலை மிட்டாய் என தான்



சாப்பிடும் ஒவ்வொரு பண்டத்தையும் ராதா அதற்குக் கொடுக்காமல் சாப்பிடுவதில்லை. நாளாக நாளாக அவள் கைகளில் இருப்பதை எடுத்து உண்ண பழகிக் கொண்டது. ஐப்பசி மாதம் வந்த கொக்கு சித்திரை மாதம் முடியும் நேரத்தில் கிளம்பிச் சென்று விட்டது. ராதா தான். அது இல்லாமல் மிகவும் ஏங்கிப் போய் விட்டாள். பொன்னிக்கு அவளை சமாதானப்படுத்துவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

ஆறு மாதம் தங்கி பறந்துப் போன பறவைகளை மறக்க பல நாட்கள் தேவைப்பட்டன. ஒரு வழியாய் அதைப் போலவே ஒரு பறவை பொம்மையை வாங்கித் தந்து சமாளித்தாள். இருந்தும் பறவை பொம்மை உயிருள்ள பறவை ஆகிவிட முடியுமா? உயிர்ப்பை, உணர்வை ஒரு பொம்மையால் ஈடு செய்ய முடியுமா? அவள் அழுகை பொன்னிக்கு எரிச்சல் மூட்ட ஒரு நாள் அடித்தே விட்டாள். அடிகளையும் வாங்கிக் கொண்டு பின்னும் பறவை வேண்டும் என்று அழுதாள். பக்கத்து வீட்டு தாத்தா ''இந்தா! ஏன் பிள்ளையைப் போட்டு அடிக்கிறாய்? நீ வாம்மா; அந்தக் கொக்கு மறுபடியும் ஐப்பசி மாசம் உன்னைத் தேடி வரும். ஒவ்வொரு வருஷமும் அது உன்னைப் பார்க்க கண்டிப்பாய் வரும். கவலைப்படாதே. மனுசப் பயலுகளைத் தான் நம்ப முடியாது. இந்த பறவைகள் பாசம் நம்மையே மயக்கிடும்'' என சமாதானப் படுத்தினார்.

தினமும் அவரிடம் 'நாளைக்கு வந்திடுமா? கொக்கு திரும்ப வந்திடுமா? இன்னும் பெரிசாயிடுமா? என்னை ஞாபகம் வச்சிருக்குமா? என்னிக்கு ஐப்பசி வரும்?'' கேள்விகளால் துளைத்து எடுத்து விடுவாள். அவரும்

அலுக்காமல் சலிக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவள் தினம் தினம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஐப்பசி மாதமும் வந்தது. அப்போது அவர்கள் வாழக்கையில் எதிர்பாராத இடியும் விழுந்தது. பொன்னியின் கணவன் வெளிநாட்டில் வேலையில் இருந்தான். மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வந்து கொண்டிருந்தவன், ராதா பிறந்த பிறகு வருவதே இல்லை. அவளுக்கு ஆறு வயதான போதுதான் வந்தான். வந்தவன் தன்னுடன் ஒரு பொண்ணையும் அழைத்து வந்திருந்தான். ''பொன்னி என்னை மன்னிச்சிடு. வேலைக்குப் போன இடத்திலே ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக்கிட்டேன். நான் செய்யாத தப்புக்கு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை. இந்தப் பெண்ணோட அப்பா தான் மேலதிகாரி. இவள் தான் என்னை இக்கட்டிலிருந்து காப்பாற்றினாள். அதற்கு நன்றிக் கடனாய் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டி வந்துடுச்சு. என்னை தாமதமாய் கல்யாணம் செய்து கொண்டிருந்தாலும் அங்கே சட்டப்படி இவள் தான் என் மனைவி. ஏன்னா, யாருக்கும் நான் கல்யாணம் ஆனவன் என்று தெரியாது. நம்ம கல்யாணமும் ரொம்ப பெரிசா விமர்சையாய் நடந்து விடவில்லையே? கோவிலில் நாலு பேர் கூட இல்லாமல் நடந்தது தானே? இதை தொடர்வதில் எனக்கு சிக்கல் அதிகமாகும். அதனால் நாம சுமுகமாய் பிரிஞ்சிடலாம். அந்த வீட்டை உன் பேருக்கே எழுதி கொடுத்துடுரேன். மேற்கொண்டு பணம் எதுவும் பெரிசா கொடுக்க முடியாது; ஒரு இரண்டு இலட்சம் ரூபாய் தந்துடுரேன். அதை வச்சுக்கிட்டு நீ எப்படியாவது பொழைச்சுக்கோ! இந்த பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துடு.''



அவனை முழுசாய் ஒரு பார்வை பார்த்தாள் பொன்னி. பக்கத்து வீட்டுக்குச் சென்று அந்த வீட்டு முதியவரை அழைத்து வந்தாள். வீட்டினுள் இருந்து ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். கதவை இழுத்து மூடி பூட்டி சாவியை அந்த முதியவரிடம் கொடுத்தாள். ''ஐயா! இந்த மனுஷன் கிட்டே சாவியை கொடுத்துடுங்க. பத்திரத்தில் இந்த ஆளுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. எழுதி கையெழுத்துப் போட்டிருக்கிறேன். நான் பிச்சைக்காரி இல்லை; இந்த ஆள் கிட்டே பணம் வாங்கினால் என்னை விட மானமிழந்தவள் யாரும் கிடையாது. உழைச்சு சாப்பிட கை கால் இருக்கு. மனசில் வேண்டுமளவு தைரியம் இருக்கு. ஊர் உலகத்தில் நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள். நான் எங்கேயோ போய் பிழைத்துக் கொள்கிறேன்.''

''அம்மா, அவசரப்படாதேம்மா! பேசி பிரச்சனையை தீர்த்துக் கொள்ளலாம். கையிலே பொட்டப்புள்ளையை வேறு வச்சிருக்கே! உறவு, சனம் என சொல்லிக்க ஒருத்தரும் உனக்கில்லை. நீ எங்கே போய் அல்லாடப் போகிறாய்?'' அவர்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது அந்த வீட்டின் மேல் ஓர் கொக்கு வந்து அமர்ந்தது.

''அங்க பாரும்மா! அந்த கொக்கு மறுபடியும் வந்துடுச்சு!'' அது பறந்து பொன்னியை வட்டமிட்டு மறுபடியும் மாட்டுக் கொட்டகையில் நுழைந்தது.

'கட்டிக் கொண்ட மனிதருக்கு இல்லாத பாசம்! எங்கிருந்தோ வந்த பறவைக்கு இருக்கிறதே!' என அவள் எண்ணிய பொழுது பள்ளியில் இருந்து ராதா ஓடி வந்தாள்.

''யாரம்மா இவர்?''

''யாரோ தெரியலையம்மா!''

''இங்கே ஏன் வந்திருக்கிறார்?''

''இந்த வீட்டிற்கு புதுசா குடி வந்திருக்கிறார். இனி மேல் நாம வேறு ஊருக்குப் போகப் போறோம்.'' அப்போதுதான் அந்தக் கொக்கை கவனித்தாள்.

''அம்மா! என்னோட கொக்கு வந்துடுச்சும்மா!'' என்று துள்ளிக் கொண்டு அதனருகே அவள் சென்ற வினாடி கொக்கு அடிபட்டு துவண்டு கீழே விழுந்தது.

''ஐயோ அம்மா!'' என அலறியபடி ராதா அதனை பாய்ந்து எடுத்தாள். குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த கொக்கு அப்படியே அவள் கரங்களில் உயிரை விட்டது.

''ராதா! அதைக் கொடு! உங்க சித்திக்கு கொக்கு கறின்னா ரொம்ப இஷ்டம்.''

பொன்னிக்கு எங்கிருந்து அவ்வளவு ஆவேசம் வந்ததோ தெரியவில்லை. பாய்ந்து அவள் கணவனின் சட்டையைப் பிடித்து உலுக்கி கன்னங்களில் மாறி மாறி அறைந்தாள்.

''சீ! தூ! நீ ஒரு மனுசனா? இந்த ஊர் மக்களே பறவைகளை உறவுக்காரங்களா மதிக்கிறாங்க. ஆனால் நீ? இந்த மண்ணில் நிக்கவே தகுதியில்லாதவன்! கொலைகார பாவி; கண் முன்னாலே நிக்காதே'' ராதா கதறித் துடித்துக் கொண்டிருந்தாள். அந்த அருமை கொக்கை கண்ணீரோடு மண்ணில் புதைத்து வணங்கி தாயும் மகளும் ஊரை விட்டுப் புறப்பட்டனர். அவள்



கணவனும் ஊர் மக்களால் விரட்டாத குறையாய் துரத்தியடிக்கப்பட்டான்.

'என் கொக்கு', 'என் கொக்கு' என புலம்பிக் கொண்டே வந்த ராதாவிற்கு அதிர்ச்சியில் காய்ச்சலே வந்து விட்டது. உடம்பு அனலாய் கொதிக்க திருச்சிக்கு பக்கத்திலிருந்த காவிரிக்கரை ஒட்டிய கிராமத்திற்கு வந்து சேர்ந்தனர். பொன்னியின் தோழி அவளை அன்புடன் அரவணைத்துக் கொண்டாள். தன்னந்தனியாய் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்த தோழியிடம் அடைக்கலமாயினர். ராதாவின் காய்ச்சல் குணமாக ஏறக்குறைய பதினைந்து நாட்களாகி விட்டிருந்தது.

வீட்டில் புதிதாக வந்த கலர் கோழிக்குஞ்சுகள் அந்த சின்னஞ்சிறுமியின் வருத்தத்தை, ஏக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றின. அதனால்தான் பறவைகள் பின்னால் சுற்றும் ராதாவை அவள் தாய் எதுவும் சொல்வதில்லை. பன்னிரெண்டு வயது சிறுமியாக வளர்ந்த பின்னும் பயம் என்பதே அறியாமல் சுற்றிக் கொண்டிருந்தாள். பொன்னி ஊரெல்லாம் அவளை தேடிக் கொண்டிருந்த நேரத்தில் ஆற்றங்கரையில் இருந்து அடர்ந்த மரத்தின் மேல் ஏறிக் கொண்டிருந்தாள். பறவைக் கூட்டிலிருந்து தவறி விழுந்த பறவைக் குஞ்சை மீண்டும் அதன் கூட்டில் வைக்க மரத்தின் மீது ஏறினாள். 'நல்ல வேளை! இந்த பறவைக் குஞ்சிற்கு அடிபடவில்லை' என எண்ணியவாறே அதைக் கூட்டினுள் வைத்தாள்.

மனசுக்குள் இமாலய சாதனை செய்தது போல் ஓர் உற்சாகம் வர மரத்திலிருந்து ஆற்றங்கரையைப் பார்த்தாள். அப்போது உயரமான பையன் ஒருவன் கையில்

கேமிராவுடன் பின்னோக்கி நகருவதை கவனித்தாள். 'யார் இவன்? இதற்கு முன் இங்கு இவனைப் பார்த்தது இல்லையே? ஆற்றில் வெள்ளம் வடிந்து விட்டிருந் தாலும் ஆங்காங்கே புதை மணலாய் மணல் பொல பொலவென்றிருந்தது.

''இவனுக்கு இந்த ஊரைப் பற்றி தெரியாதா? காணாதது கண்டது போல் இப்படி என்னத்தைப் பார்க்கிறான்? பின்னால் பார்க்காமலே நடந்து ஏதாவது புதைக் குழியில் மாட்டிக் கொள்ளப் போகிறான்!'

அவள் எண்ணிய மறுவிநாடியே அது நிகழ்ந்தது.

''ஆ! ஐயோ'' என அலறியவாறே ராதா பரபரவென்று கீழே இறங்கினாள். புதைக்குழியில் மாட்டிக் கொண்ட அவனும் அவளை கவனித்தான்.

''ப்ளீஸ்! ஹெல்ப் மீ'' என அவன் கூவ மரத்திலிருந்து முடிந்து அவனிடம் தூக்கிப் போட்டாள். அவனும் ஒல்லியான பையனாய் இருந்ததால் அவளால் மறுபுறம் கொடியைப் பற்றி இருக்க முடிந்தது. மேலும் அவனும் சற்று புத்திசாலிதான் போலும், சற்றே மல்லாந்தாற் போல் படுக்க முயற்சித்தவாறே கொடி கயிறைப் பற்றிக் கொண்டே அந்த மணல் குழியில் இருந்து வெளிவர அவளுடன் இணைந்து செயல்பட்டான். அவனை ஒருவழியாக கடின முயற்சியால் அரும்பாடுபட்டு இழுத்து கரை சேர்த்து விட்டாள். வெளியே வந்தவன் மணலை உதறிக் கொண்டே 'வெரி டேஞ்சரஸ் ப்ளேஸ்' என்றான். தன்னைவிட ஆறேழு வயது இளையவளான அந்த சிறுமி தன்னைக் காப்பாற்றியது அவள் சக்திக்கு மீறிய செயல் என்பதை அவன் நன்கு உணர்ந்தே



இருந்தான். அவன் விழுந்த வேகத்தில் 'கேமரா' சற்றே துள்ளி விழுந்து இருந்தது. அதை கையிலெடுத்தவாறே

''ஹேய்! வாட்ஸ் யுவர் நேம்?'' என்ற பொழுது,

''ராதா! நீ இங்கேயா இருக்கிறாய்? உன்னை உன் அம்மா ரொம்ப நேரமாய் தேடிக்கொண்டு இருக்கிறார் கள்'' - என ஆடு மேய்த்துக் கொண்டிருந்த அருக்காணி கூறினாள்.

''ஐயய்யோ! ரொம்ப நேரமாயிடுச்சே! அம்மா தேடு வாங்க; இன்னிக்கு நல்ல பூசை தான்'' என சொல்லிக் கொண்டே சிட்டாய் பறந்தாள் ராதா.

''ராதா'' என தனக்குள் சொல்லிக் கொண்டவாறே தன் கேமிராவில் சிறைப்பிடித்த அவள் படத்தைப் பார்த்தான். 'வெரி க்யூட் கேர்ள்! அவளுக்கு இன்னும் தேங்க்ஸ் சொல்லவில்லையே!' என எண்ணிக் கொண்டே அவன் புறப்பட்டான்.

வீட்டிற்கு சென்ற ராதா அம்மாவிடம் அன்று பெரும் திட்டுக்களையும், கடிந்த வார்த்தைகளை கேட்க நேர்ந்தது. இருந்த போதிலும் அவளுக்கு ஏனோ வருத் தமே வரவில்லை. இன்னிக்கு இரண்டு பேருக்கு உதவி யிருக்கிறோம் என்ற நினைப்பே மகிழ்ச்சியை தருவதாய் இருந்தது. அவளைப் பொறுத்தவரை பறவைக் குஞ்சும், அவனும் ஒன்றுதான். அத்தோடு அதையும் மறந்து போனாள். அடுத்த நாள் அம்மா அவளிடம் பக்குவமாய் இப்படி ஊர் சுற்றக்கூடாது; அதனால் என்ன மாதிரியான ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புண்டு என எடுத்துச் சொன் னாள். அப்போது தான் ராதா பறவைக் குஞ்சைப்

பற்றியும் புதை மணலில் மாட்டிக் கொண்ட பையனைப் பற்றியும் எடுத்துரைத்தாள்.

ஒரு கணம் பொன்னிக்கு தன் பெண்ணைப் பற்றி பெருமிதமாய் இருந்தது. ஆனாலும் அவளுக்கு ஆபத்து எதுவும் நேர்ந்து விடக்கூடாதே என்ற பய உணர்வும் எழுந்தது. தன் பெண்ணிற்கு கதை சொல்லி அறிவு ஊட்டுகையில் வாழ்ந்த கதை, வளர்ந்த கதை அனைத்தையும் சேர்த்துச் சொன்னாள். இயற்கையாகவே பெண்ணுக்கு எதையும் சீக்கிரம் புரிந்து கொள்ளும் சூட்சும அறிவு உண்டு. இயல்பிலேயே ராதாவிற்கு அறிவுக் கூர்மையாக இருந்தது. ஆனால் எதையும் சட்டென கிரகித்துக் கொள்வாள். ஒரு வாரம் கழிந்திருக்கும். கால்கள் அவளை தன்னாகவே ஆற்றங்கரையை நோக்கி இழுத்துச் சென்றன.

''ஹாய் ராதா'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினாள். அங்கே அவன் நின்று கொண்டிருந்தான். பெர்முடா, தொப்பி சகிதம் நின்று இருந்தவனைப் பார்த்ததும் அடையாளம் கண்டு சின்னதாய் புன்னகைத்தாள். ''தேங்க்யூ வெரி மச்!'' என்றான். ''பரவாயில்லை'' என்று கூறிவிட்டு நகர்ந்தவளின் பின்னாலே அவனும் நடந்தான்.

''உனக்காக தினமும் இருபது கிலோ மீட்டர் பயணம் செய்து வந்து காத்திருந்தேன். ஆனால் நீ தான் வரவில்லை. ஒரு வாரம் காத்திருந்து ஏமாந்து போனேன்.''

''ஏன்?''

''என் உயிரைக் காப்பாற்றி இருக்கிறாய். உனக்கு நன்றி செலுத்துவதற்கு நான் காத்திருந்தேன். என்னை உன் நண்பனாக ஏற்றுக் கொள்வாயா அருமைப் பெண்ணே?'' என்றவாறே அவளது கைகளைப் பற்றிக் கொண்டான். தட்டுத் தடுமாறி அவன் பேசியது அவளுக்கு சிரிப்பை வரவழைத்தது. ஆனாலும் அவனை அவளுக்குப் பிடித்து இருந்தது.



''அம்மா, இப்படி தனியாக ஊர் சுற்றக்கூடாது என்று சொன்னார்கள்.''

''ஐ ஸீ! அம்மா சொன்னால் சரிதான். நான் உன் அம்மாவைப் பார்க்கலாமா?''

''ஓ!'' அவனை அழைத்துக் கொண்டு நடந்தாள். எதிரே பொன்னி வர ''அவங்க தான் என் அம்மா'' என்றாள்.

''வணக்கம் ஆன்ட்டி'' என இருகரம் குவித்து வணங்கியவனை கேள்வியாய் நோக்க ''அம்மா, புதை மணலில் மாட்டிக்கிட்டது இவங்கதான்'' என ராதா சொன்னாள்.

''ஊருக்கு புதிசாப்பா நீ? பார்த்து கவனமாயிரு. ஆறு, குளம்-னு ஆழம் தெரியாமல் இறங்கிடாதே. பெரிய ஆபத்தாகி விடும். ஏதோ பெரியவங்க செஞ்ச புண்ணியத்தால் நீ புதை மணலில் இருந்து பத்திரமாய் வந்து விட்டாய்.''

''தப்பு ஆன்ட்டி! உங்க பெண்ணோட தயவாலத் தான். நான் இன்னிக்கு உயிரோடு இருக்கிறேன். நான் உங்களுக்கு ப்ராமிஸ் பண்ணுகிறேன்; இதற்கு ஒரு நாள் நான் பதில் உதவி செய்து விடுவேன்.''

''தம்பி! நீ திரும்ப உதவி செய்வாய் என்று எதிர் பார்த்து செய்வதற்குப் பேர் உதவி இல்லை. நாம்

செய்கிற நல்ல காரியம் வேறொரு வழியில் நமக்கே திரும்பி வரும். அதனால் நீ எங்களுக்குத் தான் உதவ வேண்டும் என்று இல்லை. யாருக்கு உதவி தேவைப் பட்டாலும் தயங்காமல் உதவி செய். அது என்றைக்கோ உனக்கே திரும்பி வரும்.''

''நைஸ்! நைஸ்! நான் தினமும் உங்களைப் பார்க்க வரலாமா? வெளிநாட்டிற்குச் செல்லும் வரை தான் இந்த இயற்கை அழகை ரசிக்க முடியும்!''

''ஏதோ காசு பணம் கேட்பது போல் தயங்கி, தயங்கி கேட்கிறாயே? இங்கே யார் வீட்டிற்கு வந்திருக்கிறாய்?''

''வீடு இங்கில்லை; கொஞ்ச தூரம். பாட்டி வீட்டிற்கு வந்திருக்கிறேன். ஏன் அப்பாவிற்கு நம்ம ஊரை எல்லாம் நன்றாக சுற்றிப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று ஒரே ஆசை. இதுவரை அவர் விருப்பத்தை என் அம்மாவோ, நானோ அலட்சியப்படுத்தியது இல்லை.''

''மிகவும் நல்ல குடும்பம்! என் பெண்ணிற்கும் ஊர் சுற்றுவதில் மிகுந்த விருப்பம். உன் மாதிரி ஆள் கிடைத்தால் இன்னும் நேரம் காலம் தெரியாமல் சுற்றுவாள். இன்னும் கவலைத் தெரியாமல் இருக் கிறாள்.''

''ஏன் நீங்கள் எல்லாரும் பெண்ணைப் பற்றி இப்படியே சிந்திக்கிறீர்கள்? நான் இங்கு வந்ததில் இருந்து இந்த மாதிரியான எண்ணங்களையே பார்க் கிறேன். இயல்பாய் மனிதனுக்கு பகுத்தறியும் ஆற்றல் உண்டு. இதில் ஆண், பெண் பேதமென்ன? இயற்கை யான ஆற்றல், அறிவு எந்த சூழ்நிலையில் இருந்து வெளிவர, செயல்படத் திறமையை ஏற்படுத்தும்



எல்லாவற்றையும் கற்றுக் கொண்டே யாரும் பிறப்ப தில்லை; வளர வளரத்தான் எல்லாவற்றையும் கற்றுக் கொள்கிறோம்.''

''நீ வளர்ந்த சூழல், உன்னை இவ்வளவு அறிவுப் பூர்வமாய் பேச வைக்கிறது.''

''எத்தனை அறிவுப்பூர்வமாய் பேசினாலும் உங்க பெண்ணுடைய சமயோசித புத்திதான் என்னைக் காப் பாற்றியது!'' எனச் சொல்லி சிரித்தவனை பொன்னி பார்த்துக் கொண்டே இருந்தாள்.

ஏனோ அவனை அவளுக்குப் பிடித்து இருந்தது. தினம் தினம் அவன் தவறாமல் வர கண்ணன் மேல் தனிப்பட்ட பாசமே எழுந்து விட்டது. கல்லுரலில் பதமாய் ஆட்டி வழித்த மாவில் கண்ணன் வந்ததும் சுடச்சுட மெத்து மெத்தென்று பஞ்சான, இட்லிகளை வார்த்துக் கொடுத்து, தக்காளி, பச்சை மிளகாய், கொத்தமல்லித் தழை வைத்து அரைத்த சட்னி வைத்தாள்.

''கண்ணா, சுடச்சுட இட்லி சாப்பிட்டால் இரத்தக் குழாய் விரிவடையும். நன்றாக சாப்பிடு.''

''ஓ ஆன்ட்டி! இன்ப்ரா ரெட் கதிர்கள் இட்லியில் இருந்து வெளிவரும்னு எவ்வளவு சுலபமாய் சொல்லிட் டீங்க. எங்கே ராதாவை காணோம்?''

''அவள் கால்கள் வீட்டில் நின்றால்தானே? சக்கரம் கட்டிக் கொண்டது போல் ஓடிக் கொண்டிருக்கிறாள்.''

''ஓடட்டும்! அவள் ஆறு போல. ஆறு தேங்கி நின்று போனால் குளம் குட்டை ஆகிவிடும். அவள் என்

றைக்கும் வற்றாத நதி போல ஓடிக் கொண்டே இருக் கட்டும். அவளுக்கு தடைப்போட்டு அவள் கற்றுக் கொள்வதை நிறுத்தி விடாதீர்கள் ஆன்ட்டி!

அவர்கள் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஆற்றங்கரையில் நாவற்பழங்களை பொறுக்கிக் கொண் டிருந்தாள் ராதா. அப்போது கையில் வேட்டை துப்பாக்கி யுடன் ஓர் ஆள் வந்தான். 'இந்த ஆள் எதற்கு வந்திருக் கிறான்?' மரத்தின் மேல் அமர்ந்திருந்த நாரையை அவனது துப்பாக்கி குறிப்பார்க்கத் துவங்கியது. நேரே அவனிடம் ஓடினாள். ''ஐயா! தயவு செய்து இந்த நாரையை சுட்டு விடாதீர்கள்.'

அவளை திரும்பி அலட்சியமாக பார்த்தான்.

''நாரைக்கறி நீ சாப்பிட்டு இருக்கிறாயா? சும்மா... அருமையாய் இருக்கும், வேண்டுமானால் ஒரு காலை உனக்குத் தருகிறேன். சாப்பிட்டு பார். பின்னால் நீயே விட மாட்டாய்.''

''சீச்சீ!'' என்றவள் மறுபடியும் ''ஐயா! உங்களுக்கு சாப்பிடுவதற்கு எவ்வளவோ உணவு வகைகள் இருக்கும் பொழுது பறவைகளை வேட்டையாடித் தானா உண்ண வேண்டும்? இது பாவம் இல்லையா?''

''கொன்றால் பாவம் தின்றால் போச்சு.''

''முடிவாக என்னதான் சொல்கிறீர்கள்?''

''நீ உன் வேலையை பார்!''

''நான் உங்களை வேட்டையாட அனுமதிக்க மாட் டேன்.''

''உன்னால் என்ன செய்ய முடியுமோ? அதை செய்து கொள்'' என மீசையை முறுக்கினான்.



'இந்த ஆளுடன் சண்டை போட முடியாது. அந்த பறவையை எப்படியாவது இங்கிருந்து விரட்டி விட வேண்டும்.' என்ன செய்யலாம்?' என சுற்றும் முற்றும் பார்த்தாள். எல்லாம் சிறு சிறு கூழாங்கற்களாய் கிடந்தன. சற்றே தள்ளிக் கிடந்த சிறு கருங்கல்லை எடுத்து மரத்தை நோக்கி எறிந்தாள். அக்கல் மரத்தின் மேல் பட்டுத் தெறித்து நாரையை குறிப்பார்க்க நகர்ந்த அந்த ஆள் மேல் விழுந்தது. நெற்றியின் மீது பட்டக்கல் காயத்தை ஏற்படுத்தி இரத்தம் வழிய வைத்தது. சத்தம் கேட்ட பறவையோ பறந்து சென்றது. நாரைகறிக்கு ஆசைப்பட்டு ஏமாந்து போன காயம் பட்டவனுக்கோ கடும் கோபம் ஏற்பட்டது.

''ஏய்! உன்னை என்ன செய்கிறேன் பார்!'' என அவளை நோக்கிப் பாய... 'ராதா என்ன முட்டாளா?' சிட்டாய் பறந்தாள். சின்னஞ்சிறுமியின் சிட்டான ஓட்டத்திற்கு இணையாய் அவனால் ஓடிவர முடிய வில்லை. வேகமாய் மணலை கடந்து செம்மண் சாலைக்கு வந்த பொழுது 'கிரீச்'சென்ற சத்தத்துடன் ஜீப் ஒன்று வந்து நின்றது.

''சீக்கிரம் ஏறிக்கொள் ராதா.''

டிரைவர் சீட்டில் கண்ணனைக் கண்டதும் தயங் காமல் பாய்ந்து ஏறிக் கொண்டாள்.

வேகமாய் அங்கிருந்து கிளம்பினர். மிகத் தொலைவு கடந்தும் மூச்சு வாங்கிக் கொண்டிருந்த ராதாவை பார்த் தான்.

''என்ன ராதா இது? சும்மா பயப்பட்ட மாதிரியே நடந்து கொள்கிறாய்? தனியாய் இந்த மாதிரி ஆளுடன் மோதலாமா? ஆபத்தை நீயே விலை கொடுத்து

வாங்குகிறாயே? நான் வரவில்லை என்றால் நீ என்ன செய்வாய்?''

''நான் தப்பாக எதுவும் செய்யவில்லை. எனக்கு சரி எனப்பட்டதை நான் தயங்காமல், பயப்படாமல் செய்தேன்; அவ்வளவு தான். அந்த ஆளால் என்னை ஒன்றும் பண்ண முடியாது. கண்களில் மணலை அள்ளி வீசி விட்டு தப்பி ஓடிவிடுவேன்.''

''ஆமாம், ஆமாம்! நீங்க யாரு 32 பற்களும், கூரிய நகங்களும் உடைய இரண்டு கால் பூனையாக்கும்! சும்மா பாய்ந்து பிராண்டி விட மாட்டீர்களாக்கும்!''

''என்ன பூனையா?''

''ஆமாம் ராதா! பூனையும், புலியும் ஒரே இனம் தானே?''

''போ! கண்ணா! இப்படி கிண்டல் பண்ணாதே. அப்புறம் நாளைக்கு நான் உன்கூட வரமாட்டேன்.''

''ஐயோடா! நான் இனி உன்னை கிண்டல் செய்வதில்லை என்று வாக்குத் தருவேன் என எதிர்பார்க்கதே. நான் கூப்பிட்டாலும் கூப்பிடா விட்டாலும் நீ கண்டிப்பாய் வருவாய் என ஊருக்கே தெரியும் சின்னக் கண்ணம்மா!'' வீடு வந்துவிட அவளை இறக்கி விட்டான்.

''யார் இது பொன்னி? அடிக்கடி உன் வீட்டிற்கு இந்த பையன் வருகிறானே?''

''யார் கண்ணனா? என் அண்ணன் பையன்.''

ஆற்றங்கரையில் நடந்ததை கண்ணன் மூலம் அறிந்த பொன்னி மிகுந்த யோசனையில் ஆழ்ந்தாள்.



''கண்ணா! இவளை மாற்ற என்னால் முடியவில்லை. இவள் செய்வது நியாயமாக இருந்தாலும் ஆபத்து அல்லவா வருகிறது. நீ சொன்னால் கேட்பாள் என்று தோன்றுகிறது. நீ கொஞ்சம் எடுத்துச் செல்லேன்.''

''சரி ஆன்ட்டி!'' ராதா என்ன சொன்னாலும், கேட்கிற நாய்க்குட்டியா? ஆறறிவு உள்ள, உயிர்களிடத்து அன்பு வேணும் என கூறுகிற பகுத்தறிவு மிகுந்த பெண்ணாக்கும்! அவள் அவ்வளவு சீக்கிரத்தில் ஒத்துக் கொள்வாளா?'' முடிவில் கோபத்துடன் கண்ணன் கிளம்பிச் சென்றான்.

வழக்கம்போல் வந்து விடுவான் என்று தான் ராதா நினைத்தாள். ஆனால் அவனோ வரவே இல்லை. இன்று மறைந்து நேற்றாகிப் போனது; நாளை என்பதோ கனவாகிப் போனது. ''கண்ணா! நீ இனி வரமாட்டாயா? நீ என்ன சொன்னாலும் கேட்கிறேனடா; வந்துவிடு'' என அவள் மனமுருக பிரார்த்தனை செய்த பொழுது தலையிலிருந்து பூக்கள் கீழே கொட்டின. கண்களைத் திறந்தால்... எதிரே கண்ணன், ''டேய்! எங்கேடா போனாய்? எத்தனை நாட்களாய் வராமல் இருந்து விட்டாய். என் மேல் அப்படி என்ன கோபம்? நிஜமாய் அன்பிருந்தால் இப்படி ஏமாற்றுவாயா?'' என அவனைப் பிடித்து உலுக்கினாள். ''ஹேய்! நான் ஒரு வாரம் வராததற்கே இப்படி கோபிக்கிறாயே? உண்மையாய் நான் ஊருக்கே சென்று விட்டால் என்ன செய்வாய்?'' அவ்வளவு தான்! அவனை அடித்துப் பிடித்து உலுக்கிவிட்டு ஓரமாய் போய் அமர்ந்து கொண்டாள். ''நீ பேசா விட்டால் இதோ நான் இப்பொழுதே கிளம்பி விடுகிறேன்'' என விளையாட்டாய் பயமுறுத்தினான். பேசாமல் அமர்ந்து இருந்தாள். அவன்

போவது போல் போக்கு காட்ட அவள் விறுவிறுவென்று வந்து அவனைப் பற்றி இழுத்தாள்.

"சரி! சரி! நான் எங்கும் போகவில்லை. உனக்காக ஒரு பாட்டைக் கொண்டு வந்திருக்கிறேன்."

"என்ன? என்ன?"

"இது என்ன இசைக்கருவி எனச் சொல்?"

"கிடார்."

"நீ ஏதாவது பாடேன்; நான் கிடாரை வாசிக்கிறேன்."

"எனக்கு பாடத் தெரியாது."

"உன் குரல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது தெரியுமா? நீ பாடினால் மிகவும் நன்றாக இருக்கும். சரி இருக்கட்டும் உனக்காக நான் ஒரு பாட்டை உருவாக்கி இருக்கிறேன்."

"தமிழ் மாட்டு தானே?"

"அன்புக்கு மொழி தேவையில்லை. எனக்கு நன்றாக தமிழ் பேசத் தெரிந்தாலும் கவிதை, பாட்டு... ம்ஹூம் நோ சான்ஸ். ஆங்கில கவிதைதான். சொல்லட்டுமா?" என்றவாறு கிடார் இசையுடன் பாடத் துவங்கினான்.

"You are a wind;

You are a breeze;

You are a gale;

You are a storm;

But you are my air;

Because you are my soul."



இசையுடன் இணைந்து வார்த்தைகள் இனிமையாய் மனதை தாலாட்டின. பாட்டு புரிந்ததோ? இல்லையோ? ஆனால் அந்த இசை அவள் மனதை மிகவும் மயக்கியது. மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள். நேரம் செல்வது தெரியவில்லை. எத்தனை நேரம் கேட்டிருப் பாளோ? வரிகளில் ஒவ்வொன்றும் மூளைக்குள் நுழைந்து பதிந்து போயின. கனவில் கூட அந்தக் கவிதையை தெளிவாய் சொல்வாள். உருவமில்லா காற்றைப் போல அக்கவிதையை மனத்தால் உணர்ந்தாள். தானே காற்றாகிப் போனது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது. கவிதையில், இசையில் கரையாத உயிர் உண்டா? ராதா மட்டும் விதிவிலக்கா என்ன?



# 3

சிதம்பரம் ரயில் நிலையத்தில் புகைவண்டி வந்து நின்றது. ரமணன் அதிலிருந்து இறங்கினான். எக்கச்சக்க மூட்டை முடிச்சுகள் அவனுடன் இருந்தன. தேவானந்த் வருகிறானா? என எட்டிப் பார்த்தான். இதெல்லாம் தேவானந்திற்காக அவன் வீட்டிலிருந்து இல்லையில்லை அரண்மனையில் இருந்து அனுப்பப்பட்டவை. தனியார் பல்கலைக் கழகத்தில் முதுகலை ஆங்கில இலக்கியம் பயின்று கொண்டிருக்கும் அருமை மகனுக்கு அம்மா

ஊரிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் பிள்ளைகள் மூலமோ, அல்லது வீட்டு வேலையாள் மூலமோ இங்ஙனம் ஏதாவது ஒன்று அனுப்பிக் கொண்டே இருப் பார்.

இந்த முறை தேவானந்த் நண்பன் ரமணன் மாட்டிக் கொண்டான். பார்சல் சற்று என்ன... இன்னும் பெரி தாகவே ஆகிவிட்டது. நண்பன் வண்டியை எடுத்துக் கொண்டு வருகிறானா? எனப் பார்த்தான். ஆனால் அவன் வருகின்ற வழியாய் காணோம். சரி நாமே புறப் படலாம் என ஆறு மூட்டைகளையும் இரு கரங்களிலும் எடுத்துக் கொண்டு வெளியே வர எதிரே அண்ணா மலைநகர் பேருந்து வந்தது. அதில் ஏறினான். பேருந்தை விட்டு இறங்கி தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு விடுதி வாயிலை அடைந்தான். பைகளை கீழே வைத்து விட்டு சற்று மூச்சு வாங்கிய பொழுது தேவானந்த் வந்து நின்றான்.

''என்னடா! இதைப் போய் தூக்க முடியாமல் திணறு கிறாய்?''

''அட போப்பா! நீ இதைத் தூக்கிப் பார்த்தால் தெரி யும்!''

''சவாலா? நான் தயார்'' என்றவாறே அனைத்து பைக ளையும் இரு கைகளிலும் எடுத்துக் கொண்டு அலட்சிய மாக நடந்தான்.

''எக்ஸ்க்யூஸ் மீ! மே ஐ ஹெல்ப் யூ.''

இனிய குரல் கேட்டுத் திரும்பினான். நுனியில் முடிந்து நீளக் கூந்தலும் தந்த நிறமும் கேரள நாட்டு பசுங்கிளி என எடுத்துக் காட்டியது.



அவன் பதிலை கூட எதிர்பாராமல் அந்த பைகளில் இரண்டை வாங்கிக் கொண்டாள். ''எங்கே செல்ல வேண்டும்? பஸ் நிலையம் தானே?'' என அவள் வினவ,

'இல்லை' என ரமணன் சொல்வதற்குள் ''ஆமாம்!'' என முன்னே நடந்தான் தேவா. ஒரு மனுஷன் கஷ்டப் பட்டு தூக்கி வந்ததை மறுபடியும் எடுத்து வந்த இடத் திற்கே பின்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியிருந்த அவலத்தை... தானும் மறுபடியும் சுமக்க வேண்டிய சுமையின் துயரத்தை நொந்து கொண்டே ரமணன் பின்னோடு நடந்தான். பஸ் நிலையம் வந்து சேர்ந்ததும் ''சிஸ்டரோட பேரு எந்தா?'' என ரமணன் வினவினான்.

''வசுமதி சேட்டா! இங்ஙன பி.ஏ. இலக்கியம் பர்ஸ்ட் இயர் ஸ்டூடண்ட்.''

''ஆகா என்ன பொருத்தம். இவர் எம்.ஏ. இலக்கியம். ஷேக்ஸ்பியரில் ஏதாவது சந்தேகம் வந்தால் மகாகனம் பொருந்திய தேவானந்த் கிட்டே கேட்கலாம். ஐயா ஷேக்ஸ்பியரை கரைச்சுக் குடிச்சவர்.''

''ஆக சந்தோஷம். தேவா கிட்டே எப்ப டௌட் கேட்க லாம்?''

''எனி டைம்! அவன் தயாராய் இருப்பான். அப்படித் தானே தேவானந்த்?''

''சூ!'' என அவன் முதுகில் தட்டிவிட்டு ''தேங்க் யூ வசு! உனக்கு எப்பொழுது எந்த உதவி தேவையிருந் தாலும் என்னிடம் தயங்காமல் கேட்கலாம். நாம் இரு வரும் ஒரே துறை தானே? அதனால் சந்திப்பதற்கு பிரச்சனை இருக்காது. நீ கிளம்பு!''

அவள் புறப்பட்டுச் சென்றதும்,

''ஏய், தூக்குடா பையை! விடுதிக்குச் செல்லலாம்'' என்றான் தேவா.

''அடேய் அப்பா! வேலை மெனக்கெட்டு அங்கிருந்து இங்கு தூக்கி வந்து பின் மறுபடியும் அங்கேயா? தலை யெழுத்துடா!''

''விடுடா! விடுடா! எவ்வளவு நல்லப் பெண்ணுடா வசு!''

''ம்! நீ கவிழ்ந்துட்டேன்னு எனக்கு எப்பவோ புரிஞ்சு போச்சு. அதுக்கு விளக்கம் வேறு அவசியமா?''

தினம் தினம் புத்தம் புது மலராய் உச்சியில் மட்டும் கிளிப் போட்டு விரித்த கூந்தலும் சந்தனக்கீற்று நெற்றி யில் துலங்க வசுமதி வரும் அழகைக் காண முதலில் ஒரு ரசிகர் மன்றமே உருவானது. அவளோ அதை உணராதவளாய் அமைதியாய் திகழ்ந்தாள். தினம் தினம் தேவானந்தை அவள் பார்க்காவிட்டாலும் இருவரும் சில சமயங்களில் (எதேச்சையாய்) தற்செயலாய் படியேறும் பொழுதோ, அல்லது இறங்கும் பொழுதோ சந்திக்க நேர்ந்தது. அவள் தோழிகளுடன் செல்லும் பொழுது அவளுடன் பேசுவதற்கு அவன் முற்படவில்லை. அவள் அவனைப் பார்த்து விட்டால் புன்னகையுடன் ''குட் மார்னிங்'' என்பாள். பதிலுக்கு தலையசைத்து விட்டு செல்வான். மாணவர்களின் தலைவனாக இருந்ததா மிகுந்த பொறுப்புடனும், கவனத்துடனும் நடந்து கொண் டான். இருவரும் மட்டும் நேரிடையாகச் சந்திக்கின் தருணங்களில் சின்னதான நலம் விசாரிப்புகள். ஆன



லும் உள்ளுக்குள் இருவருக்கும் நட்பு பூத்திருந்தது; அது மெல்ல மலரக் காத்திருந்தது. அன்று தான் அந்த நிகழ்ச்சி நடந்தது. தேவானந்த் ஆங்கிலத் துறையை நோக்கி நடந்து கொண்டிருந்த பொழுது ரமணன் வேகமாக அவனருகே வந்தான்.

''ஆனந்த், என்னவோ தெரியலை, வசுமதி பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் அழுதுகிட்டு நிற்கிறாள்.''

பதறிப் போய் தேவானந்த் அங்கே விரைந்தான்.

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விசும்பி, விசும்பி அழுது கொண்டிருந்தாள்.

''என்னாச்சு வசு? யாராவது ராகிங் செய்தார்களா?'' 'இல்லை' என தலையசைத்தாள்.

''யாருக்காவது உடல்நிலை சரியில்லையா? என்ன விஷயம்?''

அவள் திக்கித் திணறி ''நா... நா... பஸ்... அடிபட் டுடுச்சு!''

''எங்கே? அடிபட்டது சொல்! டாக்டரிடம் போகலாம் வா.''

''ம்ஹூம். எனக்கில்லே... நாய்..க் குட்டியை... அந்த பஸ் அரைச்சுடுச்சு!''

''என்ன?'' என அவன் கேட்கும்பொழுது,

''இந்த நாய்க்குட்டியான்னு பாரேன்'' என ரமணன் குறுக்கிட்டான்.

''ம்ஹூம்! நான் மாட்டேன்! அடிப்பட்டதைப் பார்க்க என்னால் முடியாது.''

''சூ! அவளை பயமுறுத்தாதடா!''

''வசும்மா! கொஞ்சம் கண்ணை திறந்து பாரேன். உன் செல்ல நாய்க்குட்டியின் சின்ன நகம் கூட பெயர்ந்து விழலை'' - தேவாவின் குரலில் ரமணன் சீண்ட ''எங்கே?'' என அழுகையை நிறுத்திவிட்டுப் பார்த்தாள். உண்மையாகவே நாய்க்குட்டியின் மேல் சின்னக் கீறல் கூட விழவில்லை. நாய்க்குட்டி பஸ்ஸிற்கு அடியில் மாட்டியதை மட்டும் தான் பார்த்தாள். அது சக்கரங் களுக்கு நடுவில் வெற்றிடத்தில் கிடந்ததால் சிறு காயம் கூட படாமல் தப்பியது. அதன் பயந்த சத்தத்தைக் கேட்டவள் அது இறந்தே விட்டதாகக் கருதி விட்டாள்.

''ஐயோ பயந்தே போய்விட்டேன்! என்ட குருவா யூரப்பா! நல்லவேளை இதைக் காப்பாற்றி விட்டாய்.''

''அச்சோ! உன் நாய்க்குட்டியின் இறுதி யாத்திரைக் காக எங்க ஆனந்த் பூக்கூடைக்கு ஏற்பாடு செஞ்சுட் டானே! அதை என்ன செய்வது?''

''ம்! அதை அவர் நண்பர் தலையில் அல்லவா கொட்ட வேண்டும். சேட்டன் தானே என்ட நாய்க்குட் டியை கண்டுபிடிச்சு கொடுத்தது?''

''சரி தான்! என்ட குருவாயூரப்பா, என்ட நாய்க்குட்டி இப்படி இன்னும் என்னென்ன?''

''என்ட வம்புனி சேட்டன், என்ட தேவா...''

''எங்க மறுபடியும் சொல்லு!''

''என்ட தேவா...'' என்றவளை கனிந்து தேவா பார்க்க அவள் முகம் சிவந்து கண்கள் பூப்பூவாய் மலர்ந்தன.

ரமணன் நகர...



''ஹேய் எங்கேடா போகிறாய்?''

''கொன்றை மரத்தடிக்கு இன்னொரு புது ஜோடி கிடைச்சிருக்கு. நான் வேறு இடைஞ்சலாய் எதற்கு?''

''இருடா! வேலை இருக்கிறது. நான் வருகிறேன் வசு;'' என தேவானந்த் கிளம்பினான்.

வசுமதி அவன் செல்வதை பார்த்துக் கொண்டே நின்றாள். அவள் அழுகிறாள் என்பதை எந்தச் செய்தி சானல் மூலம் அறிந்தானோ? உடனே எப்படி பதறிப் போனான்? எல்லார் அழுதாலும் இப்படித்தான் பதறு வானா? அல்லது தனக்கு மட்டும்தான் இப்படியா? தேவா பேசினாலே போதும் என ஏங்குபவர்கள் எத்தனை பேர்?

பல்கலைக்கழக வளாகத்தில் அவனுக்கு பல்வேறு துறைகளில் ரசிகர் மன்றமே இருந்தது. தேவா ஒரு சொல் சொல்லிவிட்டால் அதுக்கு மறுப்பே கிடையாது. ஒரே மனதாய் அப்படியே அனைவரும் ஏற்றுக் கொள்வது அவளுக்கு சற்று ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவ னுடன் நிறைய பேசாவிட்டாலும், அந்தக் கனிந்த பார்வையும், கண்ணியமும் குறையாத நடத்தையும், அங்கீகரிக்கும் புன்னகையும் அவள் மனத்தை வசப் படுத்தின. எல்லாரிடமும் இயல்பாய் தான் பழகினான். யாரிடமும் தனிப்பட்ட சலுகை காட்டியது மாதிரி தெரியவில்லை.

தன்னிடம் மட்டும் தனிப்பட்ட ஈடுபாடு இருக்க முடியுமா? தனக்கே தோன்றும் கற்பனையா? ஏதேதோ எண்ணங்கள் தோன்ற பல்கலைக்கழக நூல் நிலை யத்தை நோக்கி நடந்தாள். மிகப் பெரிய அருமையான

நூல்களைக் கொண்ட நூலகம் அங்கே இருந்தது. அவள் படிக்க ஆசைப்பட்ட அத்தனை நூல்களும் அங்கே கிடைத்தன. காண்டேகர், சரத்சந்தர், கல்கி, பிரேம்சந்த் முன்ஷி எல்லாரையும் தேடித் தேடி எடுத்துப் படித்தாள். துறையில் ஆங்கில பேராசிரியர் நாவல் இலக்கிய வளர்ச்சிப் பற்றி ஒரு ஒப்படைப்பு (Assignment) தயார் செய்ய சொல்லியிருந்தார். அதற்காக நூல்களைத் தேடிக் கொண்டிருந்தாள். நாள் முழுவதும் நேரம் போவதே தெரியாமல் அங்கே அமர்ந்து விட்டிருந்தாள். சரத்சந்தரின் 'லலிதா' நாவலை தேடிக் கொண்டிருந்தாள். சரத்சந்தர் அவளுக்கு மிக பிடித்தமான எழுத்தாளர். எனவே அவள் அதைத் தேடி புத்தக அடுக்குகள் இடையே அலைந்தாள். ''அட! இதோ கிடைத்து விட்டது'' என அவள் அந்த புத்தகத்தை கையில் எடுத்தாள். புத்தக இடைவெளியில் நூலக பையன் முகம் தெரிந்தது. ''அக்கா, கிளம்ப இன்னும் நேரமாகுமா?''

''ஆமாம்! இன்னும் கொஞ்ச நேரம் ஆகும்'' விளக்குகளைப் போட்டு விட்டு அவன் நகர்ந்தான். அவள் ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள். 'சரி கிளம்பலாம்' என அவள் புத்தகத்தை மூடி வைத்த பொழுது ஆங்காங்கே படித்துக் கொண்டிருந்த ஓரிருவரைக் கூட காணவில்லை. கடிகாரம் ஒன்பது முறை ஒலித்து ஓய்ந்தது. 'ஆகா! இவ்வளவு நேரம் ஆகிவிட்டதா?' எழுந்த வெளியே வந்தாள். பசி வயிற்றைக் கிள்ளியது. 'மெஸ் இந்நேரம் மூடியிருக்கும் அல்லது உணவு தீர்ந்த போயிருக்கும்' என எண்ணியவாறே நடந்தாள். பின்னால் யாரோ வருவது போல் தோன்றவே திரும்பி



பார்த்தாள். தள்ளாடியபடியே ஒரு குடிமகன் அவளைப் பற்றி கேலி செய்தவாறே தொடர்ந்தான். வசுமதிக்கு மிகவும் பயமாய் போயிற்று. வேகமாய் இல்லையில்லை. ஏறக்குறைய ஓடுவதைப் போலவே நடந்தாள். பின்னால் வந்தவனின் வேகமும் அதிகமாயிற்று. அசிங்கமான வார்த்தைகளை கேட்க முடியாமல் காதுகளை பொத்திக் கொண்டாள். அப்பொழுது மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மின் விளக்குகள் அணைந்து போயின. சட்டென அவள் கைப்பற்றப்படவே நடுங்கிப் போய் 'ஆ' என அலறிவிட்டாள்.

''பயப்படாதே வசு'' என்ற குரலிலேயே இறுக்கம் தளர்ந்து ஆறுதலடைந்தாள். அவன் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். எங்கும் ஒரே இருளாய் இருந்தது. ''வா, கேண்டீனில் ஏதாவது சாப்பிட்டுப் போகலாம்'' அங்கும் உணவுகள் தீர்ந்து போயிருந்தன. அவன் உள்ளே போய் ஏதோ சொல்ல அவசர அவசரமாய் சுடச்சுட உப்புமா செய்யப்பட்டு இரண்டு தட்டுகளில் வந்து சேர்ந்தது.

''சாம்பார், சட்னி எல்லாம் தீர்ந்து போய்விட்டது. சர்க்கரை வேண்டுமா?''

''சாரமில்லே! வெறுமனவே சாப்பிட்டு விடுவேன்.''

பசியில் விடுவிடென சாப்பிட்டவளை பார்த்துக் கொண்டிருந்தான். விடுதி வாசலில் அவளைக் கொண்டு வந்து விட்டு.

''இனி இப்படி படிக்கச் செல்வது என்றால் என்னிடம் சொல்லிவிட்டு செல், நானும் உன்னுடன் பழக்க நூலகம் வருகிறேன்.''

''நன்றி தேவா! ஆக பேடி ஆகிவிட்டேன்!''

''பேடி ஆக வேண்டா மோளே!''

''தேவேட்டன் மலையாளம் அறியுமோ?''

''மலையாளம் அறிஞ்சிட்டில்லா, இ பெண் குட்டியை மட்டும் அறியும்!'' எனச் சிரித்தவன்,

''நீ உள்ளே போ! இருளில் தனியாக பேசிக் கொண்டிருப்பது தவறு'' மறு பேச்சு பேசாமல் வசுமதி அவனிடம் விடைபெற்று உள்ளே சென்றாள். தினமும் காலையில் ஐந்தரை மணிக்கு விடுதி வாசலில் வந்து நிற்பாள். தேவா அங்கு அவளுக்காக காத்திருப்பான். அவளை அழைத்துச் சென்று தன் வகுப்பு மாணவிகள் படித்துக் கொண்டிருக்கும் அலுவலகத்திற்கு எதிரில் அமைந்திருந்த பூங்காவில் விட்டு விட்டு தன் ஜாகிங்கை தொடர்வான். மாலையில் இருவரும் சேர்ந்து நூல் நிலையம் செல்லா விட்டாலும் சற்று தாமதித்தாவது ஏழு மணிக்கு வந்து சேர்ந்து விடுவான். தினமும் கேண்டீனில் சாப்பிடுவதே இரவு வழக்கம் ஆனது.

பல்கலைக்கழக ஆடிட்டோரியத்தில் கவியரங்கம் நடந்தது. பல்வேறு புலவர்கள் கவியரங்கிற்கு வந்திருந்தனர். அதில் மாணவர்கள் சிலரது கவிதைகளும் அரங்கேற இருந்தது. ஒரே மாணவியாய் கவிதைப் படிக்க வசுமதியும் தேர்ந்து எடுக்கப்பட்டிருந்தாள்.

''தேவேட்டா! ரொம்ப டென்ஷனாய் இருக்கு!''

''என் வசு மிகவும் சிறப்பானவள்! அவளுக்கு இதெல்லாம் வரக்கூடாதே? அவள் கவிதையும் அவளைப் போலவே அருமையாகவே இருக்கும்.''



''கவிதையைப் படிச்சு காண்பிக்கட்டுமா?''

''வேண்டாம். மேடையில் அரங்கேறும் பொழுதே கேட்டுக் கொள்கிறேன். ஆல் த பெஸ்ட்.''

வசுவுக்கு மனம் கொள்ளா உற்சாகம்! தேவாவின் வார்த்தைகள் தந்த ஆனந்தம் அவள் முகம் முழுவதும் எதிரொளித்தது. அவள் கவிதை வாசித்து முடித்து அவனைத் தேடினாள். ஆனால் அவன் தென்படவே இல்லை. எங்கே என்று தேடினாள். பார்வையாளர்கள் இருக்கையில் அவனை காணவில்லை. அவன் எங்கிருந்தாலும் கம்பீரமாகத் தெரிவானே! ஏனோ இப்பொழுது மட்டும் தெரியாமல் போனான்? மேடையில் இருந்து இறங்கியதும் பலரது பாராட்டுகளும், பலத்த கைத்தட்டல்களும் அவள் செவியை மட்டுமே எட்டின. ஆனால் அவள் மூளையில் இருந்த நினைவில் எட்டவில்லை.

அங்கே தேவா மட்டுமே ஆக்கிரமித்து கொண்டிருந்தான். 'அவ்வளவு சொன்னவன் கவிதையைக் கூட கேட்காமல் எங்கே சென்றான்? என்னை விட முக்கியமான விஷயம் அப்படி என்ன இருக்கிறது? நாளைக்கு தேர்வை வைத்துக் கொண்டு இன்றைக்கு கவியரங்கில் கலந்து கொண்டது தேவாவிற்காகத் தானே? அவனே அதை கேட்காமல் போனால் எப்படி? என்னைச் சீண்டுகிறானா? அல்லது ஏமாற்றுகிறானா? அவனைச் சுற்றி வரும் பெண்களில் ஒருத்தியாக என்னையும் நினைத்து விட்டானா? அதனால் தான் அலட்சியப் படுத்திவிட்டு போய் விட்டானா?

அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. வீட்டிற்கு செல்லப் பெண் அவள். ஐந்து அண்ணன்களும், ஒரு

தம்பியும் உள்ள குடும்பத்தில் ஒரே பெண் பிள்ளை அவள். தங்கள் வீட்டு தேவதையை, இராஜகுமாரியை, அவள் ஆசைப்பட்டனர் என்ற ஒரே காரணத்திற் காகத்தான் அவ்வளவு தொலைவு அண்மை மாநிலத் தில் விடுதியில் தங்கி படிக்க அனுமதித்தனர். அவள் விருப்பங்கள் அனைத்துமே அவளது வீட்டினருக்கு நேசத்துக்குரிய விஷயங்கள் தான்.

ஆனால் தேவா அவளுக்காக எதையும் செய்வானே? அவள் எதிர்பாராத நேரத்தில் கூட அவளுக்கு உதவி செய்ய ஓடி வருவானே? இவ்விழா ஆரம்பிக்கும் முன் உடன் இருந்தவன் சரியான நேரத்தில் எங்கு போய் தொலைந்தான்? அவன் மேல் ஒருபுறம் கோபம் கோப மாய் வந்தது. மறுபுறம் அவன் அப்படிச் செய்ய மாட் டானே? ஏன் ஏன்? என ஏக்கமும் மிகுந்தது. அவனை ஹால், வராண்டா, வெளிப்புறம் எல்லாம் தேடித் தேடி அலுத்துப் போனாள். அப்போது ரமணன் வந்தான்.

''வசுமதி! உன்னை பத்திரமாக விடுதியில் கொண்டு போய் தேவா விடச் சொன்னான், வா போகலாம்.''

''வேண்டாம் சேட்டா! என் அறைத் தோழிகள் எல்லாரும் வந்திருக்கிறார்கள். நான் அவர்களுடன் சென்று கொள்கிறேன்.''

''சரி! ஜாக்கிரதையாகப் போ'' எனக் கூறிவிட்டு அவள் அறைத் தோழிகளை அழைத்து வந்து அவள் இருக்குமிடத்தில் விட்டான். அவர்கள் ஐவரும் கிளம் பினர். அவர்கள் ஏதேதோ பேசி சலசலத்துக் கொண்டே வந்தனர். வசுமதி மௌனமாய் நடந்தாள். ''ஏய்! என்னப்பா ஒன்றுமே பேசாமல் வருகிறாய்?'' என ஒருத்தி கேட்டதற்கு



''விடுப்பா! அவள் இப்ப கவிதாயினி ஆகிவிட்டாள்! அந்த புகழ் மயக்கத்தில் அவளை கொஞ்சம் இருக்க விடுங்கள். கவிஞர்கள் மத்தியில் கவிதைப் படித்து பாராட்டும், பரிசும் பெறுவது சாதாரண விஷயமா என்ன? அதனால் இன்னும் எத்தனையோ இனிய கனவுகள் மனசுக்குள் மலர்ந்திருக்கும். அதை அவளை அனுபவிக்க விடு. அவள் மோனத்தை கலைக்காதே!''

இரவு படுக்கையில் விழுந்தும் வெகுநேரம் அவளுக்கு உறக்கம் வரவில்லை. முக்கியமான விஷயமாக தேவா சென்றிருந்தாலும் அவள் கவிதையை கேட்டு விட்டு எப்படியிருந்தது? என ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போயிருக்கலாமே? என்ற கேள்வி குடைந்தது.

வெகு சீக்கிரம் எழுந்து குளித்து தேர்விற்கு தயாராகி சென்று விட்டாள். ஒரு மூன்று மணி நேரம் தான் அவனை மறந்து இருந்தாள். தேர்வை முடித்துவிட்டு வெளியே வந்த பொழுது நெற்றியில் பிளாஸ்திரியுடன் ரமணனைப் பார்த்தாள். ''ஐயோ! என்னாச்சு சேட்டா?''

''ஒன்றுமில்லை. நேற்று ஹாஸ்ட்டலில் மாணவர்களி டையே அடிதடி கலாட்டா! அதனால் வந்த காயம்! நல்லவேளை தேவானந்த் வந்தான். இல்லாவிட்டால் பிரச்சனை பெரிசாகி இருக்கும்.''

''இப்ப தேவா எங்கே?''

''அவனுக்கு முக்கியமான வேலை இருக்கிறது. இரண் டொரு நாளில் அவனே உன்னை வந்து பார்ப்பதாக சொல்லச் சொன்னான்.''

''இரண்டு நாட்களா? ஒன்பது நிமிடம் இல்லை அரை வினாடி கூட தேவாவைப் பார்க்காமல் என்னால் இருக்க

முடியாது. எனக்கு அவர் மேல் ரொம்ப கோபம் என்று சொல்லுங்கள். எனக்கு இப்பவே, இந்த நிமிஷமே அவரை பார்க்க வேண்டும்.''

''வசுமதி, நீ என்ன சின்னப் பிள்ளையா அடம் பிடிக்க? அவன் ராஜ பரம்பரையம்மா! ராஜாக்களை அவ்வளவு சுலபத்தில் யாராலும் சந்திக்க முடியாது தெரியுமா? அவரது ராணியாக இருந்தால் கூட அப்படித் தான்!''

''எனக்கொண்ணும் ராஜா வேண்டாம்; தேவா போதும்.''

'அது அவ்வளவு சாத்தியமான காரியமா?' என ரமணன் நினைத்துக் கொண்டான். வசுமதி பிறப்பால் ராஜகுமாரி அல்ல; ஆனால் எல்லா விதத்திலும் ராஜ குமாரி தான். இது தேவா வீட்டினருக்கு புரியுமா? இவளை அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்வார்களா? காதல் மணம் புரிந்து கொண்ட அவன் அத்தையை அவனது தாத்தாவும், பாட்டியும் தங்கள் கடைசி காலம் வரை ஏற்றுக் கொள்ளவே இல்லை. ஏன் தேவாவின் தந்தை கூட தங்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் மறைவிற்கு பிறகு தான் தேவாவின் அம்மா மங்கை யர்க்கரசி கணவனை இழந்து வாழ்ந்து கொண்டிருந்த நாத்தனாரை குழந்தைகளுடன் அழைத்து வந்து அரண் மனையில் வாழ வைத்தார்.

அத்தை மகளை மகனுக்கே முடித்து வைக்கப் போகி றார் என்ற பேச்சு அரசல்புரசலாக அல்ல நன்கு காது படவே பேசப்பட்டது. ஆனால் தேவானந்த் எதற்கும் அலட்டிக் கொள்வதில்லை. அத்தை மகள் மதுரவாணி



அழகான, அறிவான பெண்ணாய் இருந்தும் அவள் மேல் ஆர்வம் காட்டினான் இல்லை. அவன் மனதில் என்ன இருக்கிறது? என அவன் அம்மாவும், அத்தையும் அறிய மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். மதுரவாணியும் எதையும் கண்டு கொண்டது இல்லை. அவள் அண்ணனுக்கு தங்கை வாணியை திருமணம் செய்து கொடுத்தால் தங்களுக்கு மீண்டும் சொத்தில் பரிபூரண உரிமை கிடைக்குமே! என்ற பேராவல் இருந்தது. அதனால் ரமணியிடம் தேவாவைப் பற்றி, கல்லூரியைப் பற்றி விசாரித்துக் கொண்டே இருப்பான்.

தேவா திசை மாறினால் தங்கள் வாழ்வின் வளம் மாறுமே என்ற ஐயம் அவனுக்கு. ஒரு முறை தேவாவை பார்க்கும் சாக்கில் கல்லூரிக்குச் சென்று நோட்டம் கூட விட்டான் அவன். வசந்தன் எதற்கு வந்தான்? என்று தேவானந்திற்கு நன்கு புரிந்திருந்தாலும் அதைப் பற்றி அவன் எந்தக் கவனமும் எடுத்துக் கொள்ளவில்லை. தேவாவைச் சுற்றிச் சுற்றி வந்த நட்புக் கூட்டங்களில், பெண்களும் கலந்து இருந்தனர். யாரிடமும் அவன் தனிப்பட்ட சலுகை காட்டாதது வசந்தனுக்கு பெரும் ஆறுதலாய் இருந்தது. 'சே! என்ன பெண்கள்! பணக்கார, அழகான, கம்பீரமான பையன்கள் என்றால் ஈசிக் கொண்டு வந்து விடுகிறார்களே!' என தேவாவிடம் வாங்கிய புத்தகத்தை திருப்பிக் கொடுத்த பெண்ணை கண்டே புகைந்தான். ஆனால் தேவா மனதில் ஒன்றும் இல்லை என அறிந்து பெருமூச்சு விட்டான். தேவாவின் பேச்சுக்கு மறுபேச்சு வீட்டிலும் இல்லை, கல்லூரியிலும் இல்லை என கண்டு கொண்டான். தேவா நினைத்தால் எதையும் செய்து விடுவான் என்று தெரியும்! எனவே

தேவையில்லாமல் எதையாவது தூண்டிவிட்டு பிரச்சனை ஆக்கி விடக்கூடாது. மேலும் தேவாவின் படிப்பு இந்த வருடத்துடன் முடிகிறது. தன் தாயைத் தூண்டிவிட்டு மாமா மனைவியிடம் கல்யாணப் பேச்சை நாசுக்காய் எடுக்கச் சொன்னான். இன்னும் ஆறு ஏழு மாதங்களுக்குள் என்ன நிகழ்ந்துவிடப் போகிறதென்று சற்று சும்மா இருந்து விட்டான். மாதம் ஒரு முறையாவது வீட்டிற்கு வந்து கொண்டிருந்த தேவா இரண்டு மூன்று மாதங்களாய் வரவே இல்லை; படிப்பதற்கு நிறைய இருப்பதால் வர முடியவில்லை என தன் தாயை அவன் சமாதானப் படுத்தி விட்டதால் வசந்தனால் எந்தக் கேள்வியும் கேட்க முடியவில்லை. கல்லூரிக்கே சென்று வேவு பார்க்கலாம் என்றாலோ... அங்கே செல்ல சரியான காரணம் வேண்டியிருந்தது. சந்தர்ப்பத்திற்காக வசந்தன் காத்துக் கொண்டிருந்தான்.

தேவாவின் வகுப்புத் தோழிகளை வசுமதி பார்த்து, ''தேவா எங்கே?'' என கேட்கத்தான் நினைத்தாள். அவர்களை சந்தித்த பொழுதோ தேவா பற்றி விசாரிக்க சற்று தயக்கமாக இருந்தது. ''என்ன வசுமதி? தேவா எப்படியிருக்கிறார்?'' என்றவள் ''ஹாஸ்பிட்டலில் இருந்து தானே வருகிறாய்?'' என தொடர்ந்து கேட்டாள். அவள் திருதிருப்பதை பார்த்துவிட்டு,

''என்ன விழிக்கிறாய்?'' என்றாள்.

''ஹாஸ்பிட்டல் ஏன்? என்ன? யாருக்கு உடல்நலம் சரியில்லை?'' என விசாரித்தாள்.

''உனக்கு விஷயமே தெரியாதா? நேத்து ஹாஸ்ட்டலில் நடந்த கலவரத்தில் தேவாவிற்கு அடிபட்டு விட்டது. அவன் தான் தைரியமாய் சண்டையை தடுத்து நிறுத்தினான். இல்லாவிட்டால் பல பேர் இறந்திருக்க நேர்ந்திருக்கும்.''



''ஐயோ! என்ட குருவாயூரப்பா'' என்றவள் வினாடி கூட தாமதிக்காமல் மருத்துவமனைக்கு விரைந்தாள். அங்கே ரமணன் ''உன் ஆளுக்கு இப்பவே, இந்த நிமிடமே உன்னை பார்க்க வேண்டுமாம்.''

''ஹேய், அவசரப்பட்டு நீ எதுவும் சொல்லிடலையே?'' என தேவா கேட்டுக் கொண்டிருந்த பொழுதே வசுமதி உள்ள நுழைந்து விட்டாள்.

''சேட்டன் உங்க உத்தரவை எப்படி மீறுவார்? ஏன்? ஏன்? தேவா என்கிட்டே சொல்லலை? பாருங்க எவ்வளவு காயம்? நான் உங்களை வந்து பார்க்கக் கூடாதா? எனக்கு உங்களைப் பார்க்கும் உரிமையில்லையா? நான் ஏதாவது தப்பு செய்திட்டேனா? நான் இங்கே வரக் கூடாதா... உங்களைப் பார்க்காமல் என்னால், இருக்கவே முடியலை...'' என வேகமாகக் கண்ணீருடன் பேச...

ரமணன் அறைக்கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான்.

''ஹேய்! கண்ணம்மா, நீ இப்படி அழுவாய் என்று தான் உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று சொன்னேன். இதெல்லாம் இலேசான காயம்தான். இரண்டு நாட்களில் ஆறிவிடும். அப்புறம் நானே உன்னை வந்து பார்க்கலாம் என்று இருந்தேன். முதலில் நீ கிளம்பு. அதுதான் என்னைப் பார்த்தாகி விட்டதல்லவா? இனி போய் அடுத்த பரீட்சைக்கு நிம்மதியாகப் படி.''

''அதெல்லாம் முடியாது. நான் இங்கிருந்து போக மாட்டேன். நான் நாளை பரீட்சை எழுதப் போவதில்லை. உங்களுடன் தான் இருக்கப் போகிறேன்.''

''இதற்கு நான் ஒத்துக் கொள்ள முடியாது. எங்கே ரமணன்? ரமணனைக் கூப்பிடு. உன்னைக் கொண்டு போய் ஹாஸ்ட்டலில் விட்டு விட்டு வரச் சொல்கிறேன். படிப்பு எல்லாவற்றையும் விட முக்கியம். நீ போ முதலில்.''

''தேவா ப்ளீஸ்! நான் உங்களுடனேயே இருக்கிறேனே! ப்ளீஸ்!''

''கல்யாணத்திற்கு பிறகு நீ என்னுடனேயே தான் இருப்பாய். இப்பொழுது நீ கிளம்பு. என்னால் உனக்கு அவப் பெயர் ஏற்படுவதை என்னால் அனுமதிக்க முடியாது. எங்கே போய் தொலைந்தான் இந்த ரமணன்? இந்த மடப்பயல் கதவை வேறு சாத்திவிட்டுப் போகிறான். அவனை யார் இப்பொழுது வெளியே போகச் சொன்னார்கள்?'' என கோபமாய் பேசியவன் கலங்கி, தவித்து நின்ற வசுமதியைப் பார்த்து மெல்ல கண்களை மூடித் திறந்தான்.

''இங்கே பார் வசும்மா! நான் சொன்னால் கேட்பாய் அல்லவா? என் வார்த்தைக்கு நீ மரியாதை தருவாய் என்று நிச்சயம் தெரியும். அன்பு என்றைக்கும் அவப் பெயர் தேடித் தராது. காலம் காலமாய் தொடர வேண்டிய அன்பு பழிச் சொல்லால் பரிதவிக்கக் கூடாது. நீ இவ்வளவு நேரம் இருந்ததே தவறு. காலையில் வா பார்க்கலாம்.'' போகவே இஷ்டமில்லாமல் திரும்பி, திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றவளை நினைத்துக் கொண்டே உறங்கிப் போனான்.





# 4

நந்தனா விடியற்காலையிலேயே எழுந்து விட்டாள். ஏனோ இன்று சரியான உறக்கம் வரவில்லை. சந்தோஷமா? வருத்தமா? எனப் புரியாத குழப்பமான மனநிலையில் இருந்தான். இருபது வயது பெண்ணாக இருந்தாலும் வயதுக்கு மீறிய முதிர்ச்சியும், பக்குவமும் அவளிடம் இருந்தன. மிகவும் சுதந்திரமாய் பொறுப்புடன் வளர்க்கப்பட்டவள்; எதையும் தானே செய்து தன்னம்பிக்கை பெற்று இருந்தாள். தன்னந்தனியே பல நாடுகளை சுற்றி வந்த அனுபவமும் அவள் தைரியத்தை, அறிவை வளர்த்திருந்தன. தோட்டத்தில் வாக்கிங் செய்யும் பொழுதே தோட்டக்காரனிடம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி அறிவுறுத்தி விட்டே நகர்ந்தாள். தோட்டத்தில் புதிதாக ஒரு செடி முளைத்தாலும் அவளுக்குத் தெரிந்து விடும். அவ்வளவு கவனம்.

''என்னம்மா! இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் எழுந்து விட்டாய்? தூக்கம் வரவில்லையா?''

''குட்மார்னிங் தாத்தா'' என திரும்பினாள். அவளை அவர் கூர்மையாய் பார்ப்பது தெரிந்தது. ''என்ன தாத்தா புதுசா பார்ப்பது போல் பார்க்கிறீர்கள்?''

''எவ்வளவு சீக்கிரம் எழுந்தாலும் உன் முகத்தில் களைப்பே தெரிவதில்லையே?''

''போங்க தாத்தா கிண்டல் செய்யாதீர்கள்! உங்கள் சுறுசுறுப்பில் கால்வாசி கூட என்னிடம் கிடையாது. இந்த எண்பது வயதிலும் உங்கள் விறுவிறு நடைக்கு ஈடு கொடுத்து நடக்க முடியாமல் ஓடிவர வேண்டியிருக்கிறது. வயது ஆக ஆக உங்கள் கம்பீரம் கூடிக் கொண்டே போகிறது. என் தாத்தாவின் அழகு, ஆரோக்கியத்தைப் பார்த்து ஊரே பொறாமைப் படுகிறது.''

''ஏதேது! இந்தக் கிழவனைப் பற்றி கவிதையே பாடி விடுவாய் போலிருக்கிறது? என்னம்மா என்னால் ஆகக் கூடிய காரியம் ஏதும் இருக்கிறதா?''

''நான் ஒன்றும் பொய் சொல்லவில்லை. உங்கள் பற்கள் இன்னும் எத்தனை உறுதியாக உள்ளன. ஒரு நாள் கூட பல் சொத்தை, பல்வலி என நீங்கள் சொன்னதே இல்லை. B.P., சுகர் இப்படி எந்த வியாதிகளும் இல்லை. வயது மட்டும் ஆகிவிட்டது. அதையும் இந்த நரை முடிதான் காட்டிக் கொடுக்கிறது. இந்த நரையும் உங்களுக்கு அழகு தான் தாத்தா.''

''அம்மாடி! காலங்கார்த்தாலே கிழவனை குஷிப் படுத்தி விட்டாய். வருகிறாயா சற்று நேரம் டென்னிஸ் விளையாடலாம்.''

''ஏன் கிரிக்கெட்டும் விளையாடுங்களேன்! தெருவில் இருந்து விளையாடுவதற்கு உங்கள் இளம் நண்பர்களை அழைத்து வரட்டுமா? நேற்று உடைத்த சன்னல் கண்ணாடியை இன்னும் மாற்றவில்லை. இன்னும் இரண்டை உடைத்த பிறகு மொத்தமாய் மாற்றிக் கொள்ளலாம்.''

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.



''இன்றைக்கு உன் ப்ரோகிராம் என்ன?''

''முத்தச்சி வீட்டிற்குச் செல்ல வேண்டும்.''

''வீக் என்டில் நீ போக மாட்டாயே? இன்றைக்கு சனிக்கிழமை தானே?''

''ஆமாம் தாத்தா! ஆனால் வேலையிருக்கிறது. அதனால் என் வாரக் கடைசி நாட்களை தியாகம் செய்து விட்டேன்.''

''சரி! போகும் பொழுது தைலம் வைத்திருக்கிறேன்; கால்வலி என்று சொன்னாய் அல்லவா? அதற்கு வீட்டிலேயே காய்ச்சிய தைலம் தடவினால் சரியாகும் என்று பாண்டி கொண்டு வந்து கொடுத்தது. அதை மறவாமல் எடுத்துப் போய் கொடு.''

''சரி! தாத்தா. பாண்டி என்றதும் ஞாபகம் வருகிறது; அவன் தரவேண்டிய பணத்தை கொண்டு வந்து கொடுத்தானா?''

''எங்கே அம்மா? வயலில் தோட்டத்தில் விளைந்தது என்று காய்கறி, பழங்களும் கொடுத்துவிட்டு நெல் பணத்திற்கு சாக்குப் போக்கு சொல்கிறான்.''

''அவன் உங்களை நன்றாக ஏமாற்றுகிறான் தாத்தா. வரும் வழியில் வாங்கிக் கொண்டு வரும் பழம், காய் கறிகளை வயல், தோட்டத்தில் விளைந்தது என உங்கள் தலையில் கட்டி விடுகிறான். வயலை சும்மா நட்டுக் கொள்ள கொடுத்தால் நிலத்துக்குரிய குறைந்த அளவு நெல்லைக் கூட தருவதில்லை. பேசாமல் அவனிடம் இருந்து அதை திருப்பி வாங்கி விடுங்கள்.''

''வயலை ப்ளாட் போட்டு விற்பது ஒருவித துன்பம் என்றால்... தரிசாக போட்டு வைப்பது அதைவிடத்

துன்பம். நிலத்தை வெறும் மண்ணாக விவசாயினால் பார்க்க முடியாது. அதுதான் அவன் உயிர், வாழ்க்கை! அவனது வாழ்வும் தாழ்வும் வயலை நம்பித்தான்.''

''என்னவோ போங்க தாத்தா. உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஆளிடம் அதை ஒப்படைத்து விட்டால் பிரச்சனை தீர்ந்து விடும்.''

''பார்க்கலாம். எனக்கு நம்பிக்கையே இல்லையம்மா!''

''தாத்தா பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. நான் கிளம்புகிறேன்.''

அவள் முத்தச்சியை பார்க்க சென்ற பொழுது மேலே (வெஸ்ட்டர்ன்) மேற்கத்திய இசையும் பெண்களின் சிரிப்பொலியும் கேட்டது. ரோஷனியோ, விபுவோ அரட்டையடித்துக் கொண்டிருக்கிறார்கள்! வேலையற்ற பெண்கள்! பொழுதை எப்படி வீண் செய்து கொண் டிருக்கிறார்கள். அதில் நடு நாயகமாக இந்த வீட்டு செல்லப் பிள்ளை ஆதித்தன் இருப்பானோ? என்னவோ? முத்தச்சியின் அறைக்குள் நுழைந்த பொழுது ஆதித்தன் தன் பாட்டியை கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

''ஸாரி முத்தச்சி'' என அவள் வெளியே செல்ல முயல...

''ப்ளீஸ் வெய்ட்! நாங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸ் இல்லை: நீ வெளியே ஓட வேண்டாம். நீ இன்றைக்கு வரமாட்டாய் என்று முத்தச்சி சொன்னார்கள். அதனால் மை டியர் கேர்ள் பிரெண்டிற்கு போரடிக்குமே என்று நான் வந்தேன்.''



''நிறைய எழுத வேண்டியிருப்பதால் வந்தேன் முத்தச்சி! வேறு ஒன்றுமில்லை.''

''நீ எப்பொழுது வேண்டுமானாலும் இங்கே வரலாம்; இன்றைக்கு நீ வந்தது எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? வா! வா! என் கதையை கொஞ்சம் என் பேரனுக்கு படித்துக் காட்டு. மக்கு பயலுக்கு இன்னும் தமிழ் வேக மாக வாசிக்க வரவில்லையாம்.'' அவள் அவனைப் பார்க்க...

அவன் கண் சிமிட்டிச் சிரித்தான். கால் நீட்டி முத்தச்சி யின் அருகில் அமர்ந்து கொண்டான்.

அவள் வாசிக்க வாசிக்க தலையை ஆட்டி ரசித்தான். ''நம் தலைமுறை வாழ வேண்டிய இப்பூமியை நந்தவன மாக, பசுமை கொஞ்சும் இடமாக வைத்துக் கொள்ள வேண்டியது நம் கடமை. இயற்கையை அழித்து சுற்றுச் சூழலை மாசுப் படுத்தி மூச்சுக்கூட விட முடியாமல் கான்க்ரீட் வீடுகளை காடுகளை அழித்து உருவாக்குவது நம் தலைமுறைக்கு நாம் செய்யும் துரோகம். இந்த நந்தன வருடத்தில் ஊரெங்கும் நந்தவனம் பெருகட்டும். நலம் நிறையட்டும்! வாழ்த்துக்களை தலைமுறைகள் நமக்கு வழங்கட்டும். நந்தன என்றால் தலைமுறை; வாரிசு; வழித்தோன்றல். இந்த வருடம் நம் தலை முறைக்கு நேரிய வழிகாட்டுவோம். நல்ல சுத்தமான பூமியை பரிசளிக்க உறுதி பூணுவோம்.''

எல்லாம் கேட்டு விட்டு ''என்ன முத்தச்சி! கொஞ்சம் கூட ரொமான்ஸே காணோம்? படிக்கிற பெண் மட்டும் அப்படியிருந்தால் போதும் என நினைத்து விட்டீர் களா?''

அவ்வளவு தான்! அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''ரொமான்ஸைத் தவிர வேறு எதுவுமே இந்த காலத்து இளைஞர், இளைஞிகளுக்கு தெரியாதா? நாடு, மொழி, முன்னேற்றம் இவற்றைப் பற்றி சிந்திப்பதே இல்லையா? தங்கள் நிகழ்கால வெற்று சந்தோஷத்திற்காக எதையும் இழந்து விடுவார்களா? படித்து விட்டு கைநிறைய சம்பளத்தில் கஷ்டப்படாமல் வேலை பார்த்து தண்ணி அடித்துவிட்டு ஜாலியாக ஊர் சுற்றுவது தான் சந்தோஷமா? அது தான் நிறைவான வாழ்க்கையா? தமிழ் தெரியாது என சொல்லிக் கொள்வது தான் பெருமையா? உலகில் மூத்த மொழி, பல்வேறு சிறப்புக்களை தன்னிடத்தில் கொண்டுள்ள மொழியை இலக்கிய இலக்கண பெருமை வாய்ந்த இனிய மொழியின் பெருமை கூட யாராவது வெளிநாட்டுக்காரர் வந்து சொன்னால்தான் தெரிகிறது. நம் உயர்வை, சிறப்பை நாமே உணராவிட்டால் மற்றவர் உணர்வது எப்படி? நமக்கெல்லாம் அடிமையாக இருக்கத்தான் பிடிக்கும். என்ன செய்வது? சோழ பேரரசின் வீழ்ச்சிக்கு பின்னர் ரொம்ப வருடங்கள் நம் சுயத்தை இழந்து தமிழ் மன்னர்களின் ஆட்சியின்றி வாழ்ந்து விட்டோமல்லவா? அதனால் தான் அடிமை உள்ளுக்குள் ஊறிப் போய் விட்டது. நம்மை விட மற்றவர், மற்றப் பொருள் உயர்ந்தது என்ற எண்ணம் படிந்து விட்டது. ஆதலால் எந்த நாட்டிற்கும் நாம் வேலை பார்க்கத்தான் செல்வோம்; தொழில் செய்வதற்கு அல்ல, தொழில் செய்வதற்கான தைரியம், துணிச்சல், நம்பிக்கை, முடிவு எடுக்கும் ஆற்றல், நிர்வாகத் திறமை நம்மிடம் இல்லையா? அல்லது இருப்பதை உணர்வது இல்லையா? நமக்கு



ரிஸ்க் எடுக்காமல் எதுவும் கிடைக்க வேண்டும்! நம் பாரம்பரியம், வீரம், கொடை, அன்பு, விருந்தோம்பல் இப்படி எதற்குமே முக்கியத்துவம் கொடுக்காமல் வாழ்வதில் அர்த்தம் என்ன? உலகத்து பொருளாதாரம் எல்லாம் நம்மை நம்பி இருக்குமாறு நாம் வளர வேண்டாமா?''

விட்டால் இன்னும் பேசிக்கொண்டே போயிருப்பாள். இடைவிடாமல் பலமாய் கைத்தட்டி அவளது பேச்சை நிறுத்தி விட்டான் ஆதித்தன்.

''நைஸ்! நைஸ்! உன் கோபம் கூட அழகாய்த்தான் இருக்கிறது. எவ்வளவு அருமையாய் பேசுகிறாய்?''

''ஆதித்தா! என் உதவியாளினியைப் பற்றி நீ என்ன இவ்வளவு எளிதாக நினைத்து விட்டாய்? அவளைப் பற்றித் தெரிந்தால் நீ என்னை விட்டு விட்டு அவளிடம் தான் ஆட்டோ கிராஃப் கேட்பாய்.''

''ம்! தெரிந்து கொள்ள ஆசை தான். பக்கத்தில் போனால் புலி மாதிரி பாய்ந்து விடுவாள் என பயமாய் இருக்கிறது.''

அப்போது விபு அங்கே வந்தாள். ''ஆஷ்! இன்னும் நீ கிளம்பலையா?''

''எங்கே?''

''என்னது? எங்கேயா?'' என்றாள் முழு மேக்கப்புடன் வந்த ரோஷனி. ''ஹேய்! இது என்ன வேஷம்? அவனை பார் இயல்பாய் எத்தனை அழகாய் இருக்கிறாள்.''

சும்மாவே பொரிந்து கொண்டிருந்த ரோஷனிக்கு இது எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தாற் போலிருந்தது.

''அவளும், அவள் உடையும்! நாசுக்காய் கொஞ்சமாவது உடுத்தத் தெரிகிறதா?''

முத்தச்சிக்கே கோபம் வந்து விட்டது.

''ரோஷனி என்ன பேச்சு இது? அவள் தகுதிக்கு நமக்கு உதவ வருவதே பெரிது...'' முடிப்பதற்குள் குறுக்கிட்டாள்.

''விடுங்க முத்தச்சி. என் உடை கௌரவம் என்று எனக்குத் தெரியும்! மேலும் இது என் உழைப்பில் வாங்கியது.

அதனால் இன்னும் உசத்தி தான். அவள் கருத்தை சொன்னாள். லீவ் இட.''

''இப்போ! மூவி ப்ரோகிராம் உண்டா இல்லையா?''

விபுவும் அரிக்க ஆதித்தன் கிளம்பினான்.

நந்தனா தன் வேலையை தொடர்ந்து கொண்டிருந்தாள்.

போகும் பொழுது அவளிடம் நீயும் வருகிறாயா? எனக் கேட்டது ரோஷனிக்கு தெரிந்திருந்தால் சினிமாவிற்குப் போக வேண்டாம் என முடிவு செய்திருப்பாள்.

காரில் போகும் பொழுதும் ''எல்லாரையும் எப்படித் தான் மயக்குகிறாளோ! முத்தச்சிக்கு அவளைப் பற்றி ஏதாவது பேசினாலே ஆகாது.''

''வெரிஇன்ட்ரஸ்டிங் கேர்ள்! ஆனால் கடுகு மாதிரி பொரிகிறாளே? உன்னை கடித்துக் கொதறி விடப் போகிறாள் என நினைத்தேன். ஒன்றும் சொல்லாமல் விட்டு விட்டாள்.''



''போதும் அவள் பேச்சு!'' அவர்களைக் கொண்டு போய் தியேட்டரில் விட்டு விட்டு உடனே வீடு திரும்பி விட்டான்.

முத்தச்சியின் கால்களில் தைலம் தடவி விட்டு மெல்ல கால்களை அமுக்கிக் கொண்டிருந்தவளைப் பார்த்தான்.

''லவ்வபுல் கேர்ள்!'' என எண்ணிக் கொண்டே கதவை இலேசாக சாத்தி விட்டு தன் அறைக்குச் சென்றான். ஏன்? ஏன்? இவளையே என மனது சுற்றுகிறது. இவளைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும்; பழக வேண்டும் என தவிப்பு ஏற்படுவது ஏன்? எனக்கு ரொம்ப வேண்டியவள் போல் ஏன் தோன்றுகிறது? சினிமாவிற்குச் சென்றால் கூட செல்லாமல் ஓடி வர வைத்தது எது? எத்தனையோ பெண்களிடம் பழகியிருந்தாலும்.. யாரும் ஒரு விளிம்பைத் தாண்டி அவனை நெருங்க விட்டதில்லை. இருந்தது என்னவோ வெளிநாடாய் இருந்தாலும் அவன் ஜீனில் இருந்த ஏதோ ஒரு பண்பு அவனை கட்டிப் போட்டிருந்தது. அவள் மனசில் என்ன இருக்கிறது? இதன் அர்த்தம் என்ன? அருகே வரவிடாமல் என்ன கோபம் கவசம் போல்? உண்மையிலேயே அது மனதை மறைக்கும் கவசம் தானா?

இன்னும் அவன் மனதில் பதிலை தேடிக் கொண்டிருந்த பழைய கேள்விகள் எத்தனையோ? இந்த முறை பதில் கிடைக்காமல் அவன் எங்கும் நகர்வதாய் இல்லை. முத்தச்சி அப்படியே உறங்கி விட.... வெளியே வந்தாள் நந்தனா.

மேலே மாடியறையில் விளக்கு எரிந்தது. 'யாருமில்லாத அறையில் விளக்கு எரிகிறதே?' என அவள்

யோசிக்கையில் பொருமுடாவுடன் ஆதித்தன் வெளிப்பட்டான். 'இவன் படம் பார்க்க தியேட்டர் செல்லவில்லையா? அல்லது பாதியிலேயே வந்து விட்டானா? அந்த இரு கோபிகைகளும் எப்படி விட்டார்கள்?' என எண்ணும் பொழுதே,

''நான் சுய சிந்தனை உடைய மனிதன்! என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது'' என்றான்.

'நானும் பார்க்கத்தானே போகிறேன் சுய சிந்தனை என்ன கிழிக்கப் போகிறது என்று!' ஒன்றும் கூறாமல் ஒற்றை புருவத்தை உயர்த்தி விட்டு நகர்ந்தாள்.

மறுநாள் அவள் முத்தச்சியைப் பார்க்க செல்லவில்லை. மனசு போகத் துடித்தாலும் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள். அன்றைக்கு 'ஒளி' ஆதரவற்ற சிறுவர் இல்லத்திற்கு கதை சொல்லப் புறப்பட்டாள். ஓர் அழகான தோட்டம் ஓர் ஊரின் நடுவே இருந்துச்சாம். அதில் விதவிதமான அழகான மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. ஒவ்வொண்ணும் ஒவ்வொரு விதத்தில் அழகாய் இருந்துச்சு. ஒன்றின் நிறம் அழகு என்றால் மற்றொன்றிற்கு மனம் மயக்கும் மணம் இருந்தது. இன்னொன்றிற்கு அழகான வடிவம் இருந்தது. ரோஜா, முல்லை, செவ்வந்தி, மல்லிகை, மருக்கொழுந்து, சம்பங்கி, சூரிய காந்தி, டேலியா இப்படி பல வகைகள் இருந்தன. அந்த கூட்டத்துக்குள் எப்படியோ எருக்கஞ் செடி ஒண்ணு முளைச்சிடுச்சு! மத்த பூக்களுக்கு எருக்கம் பூவைப் பார்த்தால் இளக்காரமாய் இருக்குமாம்.

''எங்களைப் போல் நீ அழகில்லை; நிறமில்லை; மணமில்லை. இருந்தும் எப்படி நீ பூ என்று சொல்லிக்



கொள்கிறாய்? உன்னை சீந்துவார் ஒருவரும் இல்லை. நீ எங்கள் நடுவில் இருப்பதே கேவலம்'' என மற்ற பூக்கள் எல்லாம் பேசும் போது அமைதியாய் கேட்டுக்கிட்டே கண்ணீர் வடிக்குமாம். அது எருக்கஞ்செடி அம்மா கிட்டே ''அம்மா நான் ஏன் பிறந்தேன்? என்னால் எந்த பயனும் இல்லை. நான் வாழ்வதே வீண்'' என புலம்ப.

அம்மா செடியோ ''கண்ணே கவலைப்படாதே! கடவுள் படைப்பில் எல்லாவற்றிற்கும் ஓர் அர்த்தம் உண்டு. தாழ்வுணர்ச்சியை தூக்கிப் போட்டு உன் வேலைகளைப் பார்'' என்று அறிவுரை கூறியது. ஒரு நாள் ஊரே விழாக்கோலம் பூண்டது. பெரிய பெரிய விநாயகர் சிலை எல்லாம் வாங்கி வந்து தெருவுக்கு தெரு வைத்தார்கள். ஊர் மக்கள் பூப்பறிக்க தோட்டத்திற்கு வந்தார்கள். எல்லா பூக்களும் தங்களைத் தான் பறிக்கப் போகிறார்கள் என ஆவலாய் பார்த்தன. ஆனால் எலலாரும் எருக்கம்பூவைத் தான் தேடிப் போனார்கள்.

''விநாயகருக்கு எருக்கம்பூதான் சாத்த வேண்டும். அது தான் விசேஷம்'' என்றார்கள். காலில் மிதிபடும் அருகம்புல்லையும், வெறுப்புடன் ஒதுக்கும் எருக்கம் பூவையும் மாலைகளாக கட்டி கடவுளுக்கு சாத்தினர். அப்போ தான் எருக்கம்பூவிற்கு பிறப்பால் வருவது மட்டுமல்ல சிறப்பு; செயலால் வருவதே சிறந்த, உயர்ந்த சிறப்பு. எல்லாருக்கும் ஓர் சிறப்பு இருக்கிறது. அதனால் யாரும் தாழ்வுணர்ச்சி அடைய வேண்டியது இல்லைன்னு புரிந்ததாம்.''

அழகாய் குரலில் ஏற்ற இறக்கங்களுடன் அவள் சொன்னதை அங்கு வந்திருந்த ஆதித்தன் கேட்டான்.

அந்த இல்லத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களது ஒரு நாள் சாப்பாட்டு செலவு எவ்வளவு? என கேட்டுப் போக வந்திருந்தான். அவள் அருகில் சென்று பேச முயல்வதற்குள் அவள் அங்கிருந்து கிளம்பி விட்டாள். 'புயல் மாதிரி வேகம் தான்! என்றைக்கு தென்றல் மாதிரி இனிமையாக இருப்பாளோ? ஏனோ அவளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு வந்தது. அவள் எங்கிருக்கிறாளோ. அவள் குடும்பம், அவள் ரசனை, ஆர்வம், மகிழ்ச்சி, கோபம், ஏன் கவலைக்கூட தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. வாழ்வது ஒருமுறை தான். அதை நேர்மையாக, நன்றாக, ரசனையோடு பிடித்த மாதிரி வாழ வேண்டும் என நினைப்பவர்களில் ஒருத்தியோ?

நந்தனா வீட்டிற்கு சென்ற பொழுது தாத்தா சோர்ந்து போய் தெரிந்தார்.

''என்ன தாத்தா?''

நிமிர்ந்த அவர் கண்கள் கலங்கியிருந்தன. அவர் அப்படியிருந்து அவள் பார்த்ததே இல்லை. எனவே பதறிப் போனாள்.

தொண்டையை கமறிக் கொண்டு சொன்னார்.

''கந்தசாமி தற்கொலை செய்து கொண்டான் அம்மா!''

இவரை விட இளையவராய் இருந்தும் இருவருக்குள்ளும் ஏதோ ஓர் நட்பு. குறு விவசாயியாக இருந்தாலும் வாக்கு தவறாதவர்; நேர்மையான மனிதர். அதுதான் அவர்கள் இருவரையும் இணைத்ததோ? விவசாயம் செய்வதை மிகப் பெருமையாக நினைத்தவர்.



''ஏன் தாத்தா?'' என்றாள் அவர் துன்பம் பொறுக்க மாட்டாமல்.

''ஏனா? அவன் என்னம்மா செய்வான்? தொடர்ந்து நஷ்டத்தையே சந்தித்தால் அவனால் எப்படி தாங்க முடியும். விவசாய செலவு அதிகமாயிடுச்சு! ஆனால் விவசாயத்தால் வருகிற வருமானம் பெருகலை. விவசாய வேலைகளுக்கு கூலியும் அதிகமாயிடுச்சு; அதைவிட வேலைக்கு ஆட்களும் கிடைப்பதில்லை. இயந்திரம் வைத்து வேலை செய்ய அவன் பெரு விவசாயி இல்லையே? ரசாயன உரங்களால் நிலங்கள் நஞ்சாக மாறிக் கொண்டு வருகின்றன. நீர் வளமோ நமக்கு குறைவு. காவிரிப் பாசனப் பரப்பில் இந்த பத்து வருஷத்தில் 30 சதவீதம் விவசாய நிலம் குறைஞ்சிடுச்சு. காவிரி, பாலாறு, தென்பெண்ணை, முல்லைப் பெரியாறு போன்ற எல்லா ஆற்றுப் பாசனத்திலும் பிரச்சனை. கோர்ட் தீர்ப்பு வந்தும் மதிப்பில்லை. 1956-ல் ஜவஹர்லால் நேரு இரண்டு சட்டம் நதிநீர்ப் பிரச்சனையை தீர்க்க கொண்டு வநதார். ஒண்ணு நதிநீர் தாவா சட்டம். நதிநீரை பங்கிட்டுக் கொள்வதில் மாநிலங்களுக்கு இடையில் பிரச்சனை எழுந்தால் இருவருக்கும் பொதுவாக நடுவர் மன்றம் அமைத்து விசாரித்து நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும். நடுவர் மன்றத் தீர்ப்பை ஒரு மாநிலம் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் ''நீர்வாரியம்'' அமைக்கப்பட வேண்டும் என்பது இரண்டாவது சட்டம்.

இரண்டு மாநிலங்களுக்குப் பொதுவானது 'நதிநீர் வாரியம்' அது அமைத்ததும் வாய்க்கால், கால்வாய், அணைகள், மதகுகள் எல்லாம் சம்பந்தப்பட்ட

மாநிலங்களின் அதிகாரத்திலிருந்து நதிநீர் வாரியத்தின் அதிகாரத்திற்கு வந்துவிடும். அந்த நதி நீர் வாரியம் தான் இரு மாநிலங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும். ஆனால் எப்படி எதுவும் நடந்ததா? நடக்கிறதா? எல்லாரும் தனக்கு மிஞ்சி தான் தான தருமம் என்றால் எப்படி? இத்துடன் விடுகிறார்களா? ஆற்றில் நீர்தான் இல்லை. ஆற்று மணலாவது மிஞ்சி இருக்கிறதா? கோடி கோடியாய் யாரோ சம்பாதிக்க நம் வாழ்வாதாரத்தை தொலைக்கிறோம். ஆற்று மணல் குறையக் குறைய நிலத்தடி நீர்மட்டத்தையும் இழக்கிறோமே? இதைப் பற்றி நமக்கென்ன? அதிகபட்சம் வருத்தப்படுவதோடு நின்று விடுகிறோம். கந்தசாமி மாதிரி விவசாயி நஷ்டத்தைத் தாங்க முடியாமல், நிலத்தை விற்கவும் மனமில்லாமல், ஊருக்கே படியளந்தவன் பட்டினத்திற்கு போய் கூலி வேலை பார்க்க தன்மானம் இடம் கொடுக்கவில்லை. சாவது சுலபமானதுன்னு போயிட்டான்.''

''எப்படி தாத்தா நூறு கோடி மக்கள் வாழ்கிற நாட்டில் விவசாயி வாழ வழியின்றி தற்கொலை செய்து கொள்கிறான்? இவ்வளவு பேருக்கும் அவன் உணவு கொடுக்கும்போது எப்படி நஷ்டமாகும்?

''நம்ம நாடு விவசாய நாடு. ஆனால் இங்கே விவசாயிக்கு மரியாதை இருக்கிறதா? என யோசித்துப் பார். விவசாயி மேலோ அவன் தொழிலின் மேலோ யாருக்கும் மரியாதை இல்லை. அதனால் தான் ஒரு விவசாயி தன் மகனை விவசாயி ஆக்க விரும்புவதில்லை. பெரிதாக வருமானமும் இல்லை. கஷ்டப்பட்டு உழைத்தால் 'பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும்' என்பதாய்



பயிர் விளையும் வரை விவசாயியின் கைமீறி எத்தனை விஷயங்கள் இருக்கிறது தெரியுமா? மழை, வெள்ளம், வறட்சி, நோவு, புயல் இப்படி எத்தனை எத்தனையோ? இயற்கை, உழைப்பு, சரியான நேரத்தில் வேலைகளைச் செய்தல், அனுபவம் எல்லாம் சரியாக இருந்தால்தான் பயிர் அமோகமாக விளையும். இரசாயன உரங்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒரு குவிண்டால் நெல் உற்பத்திக்கு ரூ. 1,500 வரை செலவாகும் என்று வைத்துக் கொண்டாலும் - ஒரு குவிண்டால் நெல் விற்கும் விலை என்ன தெரியுமா? ரூ.700 முதல் ரூ.1,000 வரை தான் விலை கிடைக்கிறது. ஆனால் 600 ரூபாய் விற்ற உரம் இப்போது ரூ. 1,200. கூலியோ நான்கு மடங்கு ஏறிவிட்டது.

தமிழ்நாட்டிற்கு உணவுத் தேவை 170 லட்சம் டன். ஆனால் உணவு உற்பத்தி தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 80 லட்சம் டன். இருந்தும் விவசாயிக்கு லாபம் கிடைக்கிறதா? இல்லையே? ஏன் விவசாயி விலை நிர்ணயிப்பதில்லை. பணமிருக்கும் இடைத்தரகர்கள் வாங்கிக் கொள்ளை லாபம் பெறுகிறார்கள். எனவே நாம் விவசாயத்தை துறந்து விளைநிலங்களை வீடுகளாக்கிக் கொண்டு இருக்கிறோம். விளை நிலங்களில் எத்தனை தரிசாக கிடக்கிறது தெரியுமா? மானிய விலையில் கிடைக்கிறது என்று அண்டை மாநிலங்களில் இருந்து அரிசியை வாங்கிக் கொள்கிறோம். மற்ற மாநிலங்களை விட விவசாயிகளின் தற்கொலை தமிழ்நாட்டில் குறைவு என ஆறுதல் படக்கூட முடியவில்லை. 2008-ல் 500 பேர்களும் 2009-ல் 1,260 பேர்களும் தமிழ்நாட்டில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள். இந்தக்

கூட்டத்தில் கந்தசாமியும் சேர்ந்து விட்டான். மூன்று பெண் குழந்தைகளையும் கூட மறந்து விட்டான். பாரம்பரியமான இயற்கை உரங்களை நம்பி நடந்த விவசாயம் மாறிவிட்டது. ''தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றான் பாரதி. இங்கே விவசாயியே உணவிற்கு கையேந்தும் நிலை வந்து விட்டது.''

''இப்படியே புலம்பிக் கொண்டிருந்தால் போதுமா தாத்தா? இதற்கு என்ன தான் வழி?''

''முதலில் தனி மனித சிந்தனையில் இந்த விதை விழட்டும். பின் முளைத்து எல்லா திசையிலும் பரவட்டும். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என விவசாயியை பெருமிதம் அடையச் செய்ய வேண்டும் என எல்லாரும் நினைத்தாலே கூட போதும். மாற்றங்கள் வரும். நான் என் சொத்துக்களை எல்லாம் உண்மையாகவே விவசாயம் செய்ய விரும்புபவர்களுக்கு மட்டுமே தரப்போகிறேன். வாரிசு, உறவு இப்படி யாருக்கும் பங்கு கிடையாது.''

''சரி தான்! பாண்டி மாதிரி ஏமாற்று பேர்வழிகளிடம் கொடுத்து விடாதீர்கள். நன்றாக யோசித்து செய்யுங்கள். தாத்தா நீங்கள் கொடுத்த தைலம் நன்றாக வேலை செய்கிறது. முத்தச்சி வலி குறைந்து இருப்பதாகச் சொன்னார்கள். கூடவே அவர்கள் பேரன் ஊரிலிருந்து வந்திருப்பதால் மிகவும் ஆனந்தமாக இருக்கிறார்கள். அவர்கள் இத்தனை ஆனந்தமாக இருப்பதை இதுவரை நான் பார்த்தது இல்லை.''

''மனதிற்குப் பிடித்தமானவர்களைப் பற்றி நினைத்தாலே, பேசினாலே சந்தோஷம் தான். நேரில் சந்தித்



தால் இன்னும் சொல்லவா வேண்டும்? ஆனந்தத்தில் வலி, வேதனை கூட மறந்து போயிருக்குமே?''

''ஆமாம் தாத்தா! காலிற்கு தைலம் தடவி விடும் பொழுதே உறங்கி விட்டார்கள். நல்ல ஆழ்ந்த உறக்கம். அதை கலைக்காமல் கிளம்பி வந்துவிட்டேன். வெகு நாட்களுக்குப் பிறகு அயர்ந்து அமைதியாய் தூங்கினார்கள். நான் அவர்களுடன் தங்கும் போதெல்லாம் இரவில் வெகுநேரம் தூக்கம் வராமல் புத்தகங்கள் படித்துக் கொண்டிருப்பதை பார்த்து இருக்கிறேன். என்னவென்று கேட்டால் 'ஏதேதோ நினைவுகள்' என்று சொல்லி விடுவார். மனசுக்குள் சுமக்க முடியாமல் எதையோ சுமந்து கொண்டிருப்பதாய் தோன்றும்.''

''வயதானாலே தூக்கம் குறைந்துவிடும். நாடு போற்றும் எழுத்தாளர் மனதில் சுமை இருக்கக்கூடாது. முடிந்த அளவு நீயாவது அவர் மனதிற்கு ஆறுதலாய் இருக்க நல்ல விஷயங்களை மட்டுமே பேசு'' என்றவர் 'அருமையான பெண்மணி. ரொம்ப இளகிய மனசு' என தொடர்ந்து தனக்குத்தானே சொல்லிக் கொண்டு நகர வியப்புடன் அவரை பார்த்தாள்.



# 5

ராதாவின் வீட்டிற்கு யாரோ வந்திருந்தார்; தூரத்து சொந்தம். ஒரு வகையில் ராதாவிற்கு மாமா முறை

வேண்டியிருந்தது. அவர் நண்பர் வீட்டுப் பெண்ணிற்கு 'திருவிளக்கீடு' திருமணம் செய்வதாக இருந்தது. அதற்காக அவர் வந்திருந்தார். அவர் ஆர்ப்பாட்டமாய் பேசிக் கொண்டிருந்ததை வித்தியாசமாய் பார்த்தாள் ராதா. ''என்ன பொண்ணு! அப்படி பார்க்கிறாய்? உனக்கும் திருவிளக்கீடு கல்யாணம் செய்துடலாமா? மாமன் நான் சீர்வரிசை எல்லாம் செய்து விடுகிறேன்.''

''சீ! சீ! கல்யாணமா? யாராவது கிழவியைப் பார்த்து நீங்க கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள். நான் நிறைய படிக்கப் போகிறேன்.''

''படி, படி! யார் வேண்டாம் என்று சொன்னார்? திருவிளக்கீடு கல்யாணம் என்றால் என்ன தெரியுமா? விளக்குப் பார்த்து கல்யாணம். சிறு பெண்களை விளக்கை கையில் ஏந்திக் கொள்ளச் செய்து தாய் மாமன் வெள்ளி மணி, பவள மணி கோர்த்த வெள்ளிக் கம்பியை கட்டுவது. அதை அன்றைக்கே அவிழ்த்து யாரிடமிருந்து அதாவது எந்தக் குடும்பத்தில் இருந்து வாங்கி வந்தோமோ அவர்களிடமே கொடுத்து விடலாம்.''

''எதுக்கு இந்த கல்யாணம்? சின்ன பொண்ணுங்களுக்கு கல்யாணம் செய்வது தப்பில்லையா?''

''இது நீ நினைக்கிற மாதிரி கல்யாணமில்லே. அந்த காலத்தில் படையெடுப்பு எல்லாம் நடந்தப்ப சின்ன பொண்ணுங்களை எல்லாம் தூக்கிக்கிட்டு போயிடுவாங்க. கல்யாணம் ஆன பொண்ணுங்களை விட்டுடுவாங்க. அதனால் பொண்ணுங்களுக்கு பாதுகாப்பு வேணும் என்று இந்த மாதிரி செய்வாங்க. கல்யாணம் ரொம்ப சிறப்பாய் நடக்கும் தெரியுமா? அகல் விளக்கை



வெள்ளியில் செய்து கூட சீராய் வைப்பார்கள். எல்லா வகையான சீர்த்தட்டுகளும் வைத்து புதுப் பாவாடை, சட்டை நகை எல்லாம் வாங்கி ஐயர் மந்திரம் சொல்லி சிறப்பாய் நடக்கும். என்ன புரிஞ்சுதா? உனக்கும் கல்யாணம் செய்து கொள்ள ஆசை வந்துட்டுதா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. சரி அந்த காலத்தில் படையெடுப்பு நடக்குதுன்னு திருவிளக்கீடு கல்யாணம் செய்தார்கள். இப்ப ஏன் இந்த கல்யாணம் செய்கிறார்கள்?''

''பொன்னி! உன் பெண் வெடி மாதிரி பேசுகிறாள். உனக்கு கவலையே இல்லை போ. ஆம்பிள பிள்ளை இல்லாத குறையை தீர்த்து விடுவாள்.''

''மாமா! என் கேள்விக்கு பதில் சொல்லாமல் பேச்சை மாத்தாதீங்க!''

''உன்கிட்டே எதுவும் செய்ய முடியாது. எனக்கு சரியான காரணம் தெரியலை. ஒரு வேளை சீர்வரிசை வாங்கிக் கொள்ள செய்கிறார்களோ என்னவோ?''

''தெரியாத விஷயத்தைப் பற்றி பேசாதீங்க மாமா.''

''இந்த குட்டி! என்னமா வாய் பேசுது.''

''குட்டி, கிட்டின்னு சொல்லாதீங்க. எனக்குப் பிடிக்காது. நீங்க கூடத்தான் தாத்தா மாதிரி இருக்கீங்க. இருந்தாலும் அம்மா சொன்னாங்களேன்னு நான் உங்களை மாமான்னு கூப்பிடலையா?''

''ஏதேது விட்டால் மாமா தாத்தான்னு கூப்பிடுவே போலிருக்கு? எனக்கு சின்ன வயசு தாம்மா! குடும்ப பரம்பரை காரணமாய் கொஞ்சம் சீக்கிரமே நரை வந்துடுச்சு.''

ராதா சிரித்துக் கொண்டே அங்கிருந்து ஓடி விட்டாள். அவளுக்கு ஆயிரம் வேலைகள். அடிபட்டு கிடந்த அணிலை எடுத்து வந்து இங்க் பில்லரால் பால் தந்து காயத்திற்கு மஞ்சள் தடவி காப்பாற்றிக் கொண்டிருந்தாள். பள்ளியிலும் அவள் தான் கதாநாயகி. ஆசிரியர் வருவதற்கு முன் வகுப்பறையின் முன் நின்று கொண்டு எதைப் பற்றியாவது பேசிக் கொண்டிருப்பாள். மற்ற மாணவர்கள் வாய் பிளந்து அதைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவள் பேச்சு அவ்வளவு சுவாரஸ்யமாய் இருக்கும். தான் பார்த்த பறவை, ஊர் உலகத்தில் நடந்த விஷயம் இப்படி எதுவாகவும் இருக்கும். தன் புது நண்பன் கண்ணனைப் பற்றியும் அளந்து விட்டிருந்தாள். அவன் அருமையாய் கிடார் வாசிப்பதை விவரிக்க, விவரிக்க எல்லாருக்கும் ஆசை வந்தது. ''ஏய்! யாருப்பா அது? எங்களுக்கும் கொஞ்சம் அறிமுகப்படுத்தி வையப்பா'' என்றனர். ''அவன் திருச்சியிலிருந்து வருகிறான். அதுவும் இது அவன் சொந்த ஊர் கிடையாது. வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறான். எப்ப வேணும்னாலும் ஊருக்குப் போயிடுவான். அப்படி வந்தால் அவனை கூட்டி வருகிறேன்.''

அவள் சொன்னது அவன் எண்ணத்தை எப்படி எட்டியதோ? அவளைப் பார்க்க அன்றே வந்து சேர்ந்தான்.

வகுப்பு தோழர்களிடம் அவனை அறிமுகப்படுத்துகையில் அவளுக்கு ஏக பெருமிதமாயும், கொள்ளை மகிழ்ச்சியாகவும் இருந்தது. அனைவரும் ஆற்றங்கரை மேட்டிலிருந்த ஆலமரத்தடியில் குழுமியிருந்தனர்.



அவனுக்கும் சந்தோஷம் தான். தன்னை ஒரு ஹீரோவாகப் பார்த்தால் யாருக்குத் தான் பெருமிதமாக இருக்காது. நண்பர்கள் குழாமுடன் ஓடி, ஆடி விளையாடி, கிடார் இசைத்துக் காட்டி... ஆகா! அன்றைய பொழுது மிக இனிமையாகவே கழிந்தது. ஜிப்ஸியில் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் பொழுது அவள் அவனுக்கு பளீரென்ற சங்கை பரிசாகக் கொடுத்தாள்.

''ஹேய்! ரொம்ப க்யூட்டாய் இருக்கு! இதை எங்கிருந்து பிடித்தாய்?''

''ஆற்றில் நீச்சல் அடிக்கும் பொழுது கிடைத்தது. உனக்கு கொடுக்கலாம் என்று எடுத்து வைத்தேன்.''

''அப்படியா! நானும் உனக்கும் ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்.''

''என்ன? என்ன?''

''நீ கண்ணை மூடிக்கொள்.'' மூடிய கண்களைத் தாண்டி காதுகளில் குருவிகள் கீச்சிடும் சத்தம் கேட்டது. கண்களைத் திறந்தவள், வியப்பால் விழிகள் விரித்தாள். ''ஐயோ! எவ்வளவு அழகான குருவிகள்'' கூண்டில் ஆறு சின்னஞ்சிறு குருவிகள் வண்ண வண்ண இறகோடு கிரீச்சிட்டுக் கொண்டிருந்தன.

''ரொம்ப அழகாய் இருக்கின்றன. இது எனக்கே எனக்கு தானா?''

''அட! ஆமாம். இது உனக்கே உனக்குத்தான்.''

''நன்றி.''

''நான் நாளைக்கு ஊருக்குச் செல்கிறேன். உன்னிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். ஆன்ட்டியிடம் ஏற்கனவே சொல்லிவிட்டேன். என்னிடம் சண்டை போடாமல் அனுப்பி வைக்க வேண்டும் சரியா?''

அவள் கவனம் எல்லாம் கூண்டிலிருந்த பறவைகள் மேல் இருந்தது.

''என்ன நான் கிளம்பட்டுமா?''

''சரி! போயிட்டு எப்ப வருவாய்?'' சொன்னவளைப் பார்த்தான். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

''ப்ளீஸ்! அழுது விடாதே. எனக்கு மிகவும் கஷ்டமாய் இருக்கும். சிரித்த முகத்துடன் விடை கொடு. நாம் சந்திக்க வேண்டும் என்ற விதியிருந்தால் சந்திப்போம்.''

'நான் போவது பக்கத்து ஊருக்கல்ல; கண்டம் விட்டு கண்டம்' என எண்ணிக் கொண்டான்.

''சரி போய் வா! ஆனால் நீ எனக்கொரு ப்ராமிஸ் பண்ண வேண்டும்.''

''என்ன?''

''என்னை மறந்துவிட மாட்டாய் தானே?''

''ஷ்யூர்! என் ஆயுள் உள்ளவரை உன்னை மறக்க மாட்டேன். நீ என் இனிய தோழி! இந்த விடுமுறையில் உன் அன்பான நட்பு கிடைத்தது என் அதிர்ஷ்டம். நல்லதே நடக்கும்.'' என அவன் அவளிடம் விடைபெற்று சென்று விட்டான். அவளுக்கும் மனது மிகவும் கஷ்ட மாயிருந்தது.

பிறந்ததில் இருந்து உடன்பிறந்தவர் கூட ஒருவரும் இல்லாமல் தாயன்பில் மட்டும் வளர்த்திருந்த அவளுக்கு இரண்டு மாதங்களில் இணையில்லா நட்பை, அன்பை, ஏன் வெளி உலகத்தை கூட கற்றுக் கொடுத்துவிட்டு சென்று விட்டான். இரண்டு பேரும் எதிர்பார்ப்பு இல் லாத அன்புடன் பழகியதால் அங்கு ஆனந்தம் நில



வியது. அவனுக்குத் தெரிந்த நாடு, நகரங்களைப் பற்றி நிறைய விஷயங்கள் சொல்லியிருந்தான். படிப்பின் முக்கியத்துவம் அவனோடு பழகியதில் புரிந்திருந்தது.

நன்றாகப் படிக்க வேண்டும்; சொந்தக் காலில் நிற்க வேண்டும்; மேலும், மேலும் உயர வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டது. அவனுடன் பேசியது எல்லாம் எண்ணிப் பார்க்கையில் நிறைய கற்றுக் கொள்ள வேண் டும் என்ற ஆர்வம் எழுந்தது. நாள்தோறும் நூலகம் சென்று புத்தகங்களைத் தேடித் தேடி படிக்கலானாள். கண்டது கற்க பண்டிதன் ஆவான் என்பதற்கு இணங்க ஆர்வமுடன், ஆசைப்பட்டு படித்தாள். வீட்டிற்குள் நுழை கையில் பேச்சுக்குரல் கேட்டது.

''இந்தப் பேச்சு பேசிக் கொண்டு இங்கே வரவேண் டாம். அவள் பச்சை மண். நிறைய படிக்க வேண்டும் என ஆசைப்படுகிறாள். பெண்ணுக்குக் கல்வி தான் கை கொடுக்கும்.''

அம்மா சொல்ல, யாரென்று பார்த்தாள்.

'மாமா தாத்தா!' இவர் எதற்கு வந்தார்? என கேள்வி எழுந்தது. கண்ணன் ஊருக்குச் சென்று ஒரு வாரம் இருக்கும். தினமும் தன் பறவைகளிடம் பள்ளிக் கதை முதற்கொண்டு எல்லாவற்றையும் பேசினாள். புதுப்புது கற்பனைகள் அவளுக்குள் முளைத்துச் சிறகடித்தன.

அன்றிரவு உறங்கிக் கொண்டிருக்கையில் ஓர் அருமையான கனவு! வானத்தில் இரண்டு அன்னப் பறவைகள் பறந்து கொண்டிருக்கின்றன. அவை அவ ளருகே வந்து இறங்குகின்றன. அதிலிருந்து கண்ணன் இறங்கி வருகிறான். பளீரென்று மின்னல் வெட்டுகிறது.

''ராதா! ராதா! எழுந்திரு!''

அம்மா உலுக்க, ''என்னம்மா?'' என முனகுகிறாள்.

''ராதா! வீட்டில் தீப்பிடிச்சிருக்கு! வா, வெளியே ஓட வேண்டும்.''

திடுக்கிட்டு விழிக்க எங்கும் ஒரே நெருப்பாய் இருக்கிறது. அவளுக்கு பயம் வந்தது. அம்மாவை இறுகக் கட்டிக் கொண்டாள். ''சூ! பயப்பட்டால் செயல்பட முடியாது. வேகமாக ஓடு!''

''அவள் முன்னால் ஓட... பின்னால் அவள் அம்மா! வீட்டை விட்டு வெளியே வந்து விட்டார்கள். எங்கும் நெருப்பு.

''நல்லவேளை விழித்து விட்டேன். இல்லா விட்டால் இருவரும் எரிந்து சாம்பலாகி இருப்போம். எப்படி தீப்பிடித்தது என்று தெரியவில்லை.''

அதற்குள் எல்லா வீடுகளில் இருந்தும் மக்கள் வெளியே அலறிக் கொண்டு வர ஆரம்பித்து இருந்தார்கள். காற்றின் வேகத்தால் நெருப்பு பரவிக் கொண்டே இருந்தது. ''எல்லா பொருளும் எரிந்து போய்விடும்'' என யாரோ சொல்ல சட்டென்று ராதாவிற்கு தன் பறவை கூண்டு ஞாபகம் வந்தது. ''அம்மா! என் பறவை கூண்டு'' எனக் கூறிக் கொண்டே நெருப்பை நோக்கி அவள் பாய, அவளைப் பிடித்துத் தள்ளி விட்டு பொன்னி உள்ளே சென்றாள்.

''ஐயோ! பொன்னி! ஏன் இப்படி நெருப்பில் பாய்கிறாய்? என்ன முட்டாள் தனம்! முதலில் இவளை பிடியுங்கள்'' ராதாவை யாரோ இறுகப் பற்றிக் கொண்



டார்கள். பொன்னி பத்திரமாக பறவை கூண்டை கொண்டு வந்து மகள் கையில் கொடுத்தாள். ''இவைகளை சுதந்திரமாய் பறக்க விடும்மா! அதை அடைத்து வைக்கும் பாவம் நமக்கு வேண்டாம்'' என்று கூறிவிட்டு உணர்வின்றி விழுந்து விட்டாள். ''அம்மா, அம்மா'' என அவள் ஆயிரம் முறை அழைத்தும் எழுந்து வர முடியாத உலகத்திற்கு அவள் அன்னை சென்று விட்டாள். பன்னிரெண்டு வயது பச்சைக் குருத்து ஆதரிக்க ஒருவரும் இல்லாமல் தனித்து தவித்து நின்றது. அன்னையின் காரியங்கள் முடிந்து மூன்றாம் நாள் மாமா தாத்தா வந்து நின்றார். அம்மா சொல்லியபடி பறவைகளை கூண்டிலிருந்து ஆற்றங்கரையோரமாய் திறந்து விட... அவை சற்று தயங்கி நின்று, நடந்து பறந்தன. மரக் கிளையில் அமர்ந்திருந்த குருவிகளுக்கு கையசைத்து, விட்டுத் திரும்பும் போது மாமா தாத்தா ''வா! ராதா! இனி நீ இங்க இருக்க வேண்டாம். உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன் வா. உரிமையுள்ள மருமகளாக வரலாம்'' ராதாவிற்கு ஒன்றும் புரியவில்லை.

''உன் அம்மாவிடம் திருவிளக்கீடு கல்யாணத்திற்கு சம்மதம் கேட்டேன். அவளும் சரியென்று சொன்னாள். ஊருக்குப் போய் ஏற்பாடுகளை செய்து விட்டு வருவதற்குள் இப்படியெல்லாம் நடந்து விட்டது.''

''எனக்கு எந்தக் கல்யாணமும் வேண்டாம்.''

''நீ தப்பாக புரிந்து கொண்டிருக்கிறாய். இது சும்மா உன்னை எங்கள் வீட்டுப் பெண்ணாக அழைத்துச் செல்வதற்காக நடத்தப்படுகிறது. அவ்வளவு தான்! நீ அங்கு வந்து படிக்கலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம் கண்ணு!'' பேசாமல் நின்ற ராதாவிடம்,

''ஊர் மக்கள் எல்லாம் பாசத்தோடு வழியனுப்பி வைப்பார்கள்; அவர்கள் கண்ணீர் விட்டால் உன் துன்பம் அதிகமாகி விடும். அதனால் எல்லாரிடமும் சொல்ல வேண்டாம். மேலண்டை, கீழண்டை வீட்டுக்காரர்களிடம் மட்டும் சொல்லி விட்டு வா.''

என்ன செய்வது? என்று தெரியாமலே அவர் இழுத்த இழுப்பிற்கு சென்றாள்.

கீழண்டை வீடு பூட்டியிருந்தது. மேலண்டை வீட்டில் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். இரவு நேரமாய் இருந்ததால் ஒருவரும் கண்ணில் படவில்லை. 'நன்றாகப் படிக்க வேண்டும்; படிப்புதான் உன் சொத்து' என அம்மா கூறிய வார்த்தைகளே மனதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. பேருந்தில் ஏறி அமர்ந்த பொழுது அவளது வகுப்புத் தோழர்கள் சிலர் ஓடி வருவதைப் பார்த்தாள்.

''தாத்தா! என் ப்ரெண்ட்ஸ் வருகிறார்கள், அவர்களிடம் சொல்லிவிட்டு வருகிறேன்'' என பதிலுக்கு காத்திராமல் கீழே இறங்கி விட்டாள்.

''ராதா! நீ ஏன் எங்களிடம் கூட சொல்லாமல் ஊருக்குப் போகிறாய்? இனிமேல் பள்ளிக்கூடம் வர மாட்டியா?''

''பக்கத்து ஊரு தான்டா செல்கிறேன். பள்ளிக்கூடத்தில் டி.சி. வாங்க திரும்ப வருவேன். அந்த ஊரிலேயே படிக்கப் போகிறேன்.''

''என்ன படிக்கப் போகிறாயா? உனக்குக் கல்யாணம் என்று சொன்னார்கள்?''



''இது வேறடா!''

''சரி! எங்க அத்தை வீடு அங்கே இருக்கு. நாளைக்கு வருவேன். உன்னை வந்து பார்க்கிறேன்.''

''சரிடா!''

மாமா தாத்தாவின் காதுகளில் கல்யாணம் என்ற சொல் காதில் விழுந்ததும் உஷாரானார்.

''ஏ குட்டி! ராதா பொண்ணே! பஸ் கிளம்பப் போகுது! ஏறு'' என்றார்.

ராதா அவர்களிடம் விடைபெற்று பஸ்ஸில் ஏறினாள். மாமாவின் ஊரில் இறங்கியதுமே அவரது தோரணை சற்று மாறியிருந்தது. அவர் வீட்டின் முன்னால் பெரிய பந்தல் போடப்பட்டு வாழைமரம், தோரணம் எல்லாம் கட்டப்பட்டிருந்தது. உறவுக்கார கும்பல் வேறு நிறைந்து இருந்தது. ''என்ன மாமா இது?''

''வேறு ஒன்றுமில்லை. நாளை மறுநாள் உனக்கும், என் மகனுக்கும் கல்யாணம்'' என்றார்.

''முடியாது. நீங்கள் திருவிளக்கீடு கல்யாணம் என்று சொன்னீர்கள்.''

''அப்படிச் சொன்னால் தானே நீ வருவாய். உன் அம்மாவிடம் என் மகனுக்கு பெண் கேட்டேன்; அவள் முடியாது என்று மறுத்து விட்டாள். என்ன என் மகனுக்கு முப்பத்தைந்து வயது தானே ஆகிறது. அவன் முதல் மனைவி ஓடிப் போய் விட்டாள். அவனுக்கும் வாழ்க்கை வேண்டாமா? உங்களுக்கும் ஆதரவில்லை! உனக்கு பக்குவம், வயது இன்னும் வந்ததும் கல்யாணம் பண்ணலாம் என்றால் நீ ஒத்துக் கொள்ள மாட்டாய். இப்பவே

என்ன கேள்வி கேட்கிறாய். அந்தக் காலத்தில் ஐந்து வயதில் கல்யாணம் பண்ணவில்லையா?''

''நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்.''

''நீ என்ன ஒத்துக்கொள்வது. உன்னை அடைத்து வைத்து திருமணம் செய்து கொள்ள முடியாதா என்ன? உனக்கு ஏன் என்று கேட்பதற்கு கூட ஒரு நாதி கிடையாது. பேசாமல், முரண்டு பிடிக்காமல் உள்ளே போ. அடித்து உதைத்து கஷ்டப்படுத்த வேண்டாம் என்று பார்க்கிறேன்.''

'அவசரப்படாதே ராதா! யோசி! இன்னும் ஒரு நாள் அவகாசம் இருக்கிறது. நன்றாக யோசித்தால் ஏதாது வழி புலப்படாமலா போகும்?'

இரவு முழுதும் யோசித்தாள். 'காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தால் இந்தத் திருமணத்தை தடுத்து நிறுத்தி விடுவார்களே? எப்படி தகவல் கொடுப்பது? அருகில் தொலைபேசி எதுவும் இல்லையே? யார் மூலமாவது தகவல் கொடுக்கலாம். நம்பிக்கையான ஆளாக இருக்க வேண்டுமே!'

காலையில் அமைதியாக இருந்தாள். கொடுப்பதை சாப்பிட்டாள். கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொன்னாள். மாமாவுக்கு அவள் மேல் சந்தேகம் வந்தாலும் இங்கே நம்மை மீறி அவளால் என்ன செய்து விட முடியும் என சற்று அலட்சியமாக இருந்தார். தன் நிலைமையை விளக்கி காவல் துறைக்கு கடிதம் ஒன்று எழுதினாள். அதை யாரிடம் கொடுப்பது என யோசித்துக் கொண்டிருந்த பொழுது தான் பாபு அவளைத் தேடி



வந்தான். யாரும் அறியாமல் அவனை பின் பக்கம் வரச் சொன்னாள்.

அவன் வந்ததும், ''டேய்! என்னை ஏமாற்றி இங்கே கல்யாணம் செஞ்சு வைக்கப் பார்க்கிறார்கள். உடனே காவல் நிலையத்திற்குப் போய் இந்தக் கடிதத்தைக் கொடு. தாமதிக்காமல் யார் கண்ணிலும் படாமல் செல்.''

''சரி! ராதா! நம் நண்பர்களிடம் சொல்லட்டுமா?''

''வீட்டில் ஏதும் சொல்லாதே! தடுத்து விடுவார்கள். யாரோ வருகிறார்கள், சீக்கிரம் ஓடு.''

அவன் சிட்டாய் மறைந்தான். எப்படியாவது அக் கடிதத்தை அவன் காவல் நிலையத்தில் கொடுத்து விட வேண்டுமே! என தவித்துக் கொண்டிருந்தாள். ஆனால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

திருமண வேலைகள் மளமளவென்று நடந்து கொண்டிருந்தன. சமையல்காரர் சமையலில் மும்முரமாய் இருந்தார். முதல் நாள் பரிசம் போடுவதாய் இருந்தவர்கள் இன்னும் உறவினர்கள் வந்து சேராததால் காலையில் வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்தனர்.

பாபு வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் காய்ன் பூத்தில் காசை போட்டு ஊரில் இருந்த நண்பர்களுக்கு விஷயத்தைச் சொன்னான்.

''ஆமாம்டா! அவளை ஏமாத்தி வயசானவனுக்கு கல்யாணம் செஞ்சு வைக்கப் பார்க்கிறாங்கடா! நாம ஏதாவது செய்யணும்டா. கல்யாணத்தை நிறுத்தணும்டா.''

அவன் பேசிவிட்டு வைத்த பொழுது அவன் அத்தை காதைப்
பிடித்து திருகினார். ''முளைச்சு மூணு இலை விடலை.
அதுக்குள்ளே கல்யாணத்தை நிறுத்த போறீங்களாக்
கும்? அந்தப் பொண்ணுக்கு, அப்பனும் ஆத்தாளும்
இல்லை. இப்ப இந்த ஆதரவும் போயிருச்சுன்னா
நடுத்தெருவில் நின்னு சீப்பட வேண்டியிருக்கும். என்ன
மாப்பிள்ளைக்கு கொஞ்சம் வயசு தான் அதிகம். மத்தபடி
அவன் ரொம்ப நல்லவன். அவனைப் புரிஞ்சுக்காம
முதல் மனைவி ஓடிப் போயிட்டா. இவளாவது அவனை
அனுசரிச்சா சரி! வாயை மூடிக்கிட்டு வாடா.''

'ஐயோ! எப்படியாவது கடிதத்தை காவல் நிலை
யத்தில் கொடுக்க வேண்டுமே? ராதா என்னைத்தான்
நம்பிக் கொண்டிருப்பாள். எனக்காக வீட்டுப் பாடம்
எல்லாம் எத்தனை நாள் எழுதிக் கொடுத்திருக்கிறாள்!
அதற்காகவாவது இந்த உதவியை கண்டிப்பாகச் செய்ய
வேண்டும். அத்தை இருக்கும் பொழுது வெளியே போக
முடியாது. என்ன செய்யலாம்?'

அப்போது அத்தையின் கணவன் வண்டியில்
வெளியே கிளம்பினான். உடனே ஓடிப்போய் அந்த
வண்டியின் பின்னால் ஏறிக் கொண்டு ''நானும் உங்கூட
வர்றேன்'' என்றான். அவர் அத்தையைப் பார்க்க, ''டேய்
திருவாலித்தனம் பண்ணாமல் ஒழுங்காய் போனமா
வந்தமான்னு இருக்கணும்'' என மிரட்டி அனுமதிக்
கொடுத்தாள். மாமா பத்திரம் எழுதுபவரை பார்க்கச்
சென்று கொண்டிருந்தார்.

செல்லும் வழியில்தான் காவல் நிலையம் இருந்தது.
காவல் நிலையம் வந்ததும் ''மாமா அவசரமாய் நம்பர்



டு வருகிறது. நீங்க போயிட்டு வாங்க. நான் இங்கேயே
கால் கழுவிக் கொண்டு வந்து நிற்கிறேன்.''

அவர் இறக்கி விட்டு விட்டுச் சென்ற பிறகு மெது
வாய் காவல் நிலையத்தினுள் நுழைந்தான். அங்கே
இருந்த காவலரிடம் ராதா கொடுத்த கடிதத்தைத் தந்
தான். அவர் ''என்னடா?'' என அதட்டியவாறே அதனை
வாங்கிப் பிரித்துப் படித்தார்.

''யாருடா? இந்த ராதா?'' என,

''என்னோட ஏழாம் வகுப்பு படிக்கிற பொண்ணு சார்!''

எந்த ஊர்? என்ன உறவு? பெற்றோர் பற்றியெல்
லாம் விசாரித்தார். அவன் அவளைப் பற்றி பெருமை
யாக ''அவ ரொம்ப நல்ல பொண்ணு சார், நல்லா
படிப்பா, பறவைகள்னா ரொம்ப இஷ்டம். யாரையும்
பறவை வேட்டையாட விட மாட்டாள்'' என்றான்.

போலீஸ்காரர் உடனே எழுந்தார்.

பாபு எப்படியும் கடிதத்தை காவல் நிலையத்தில்
சேர்த்து விடுவான் என நம்பினாள் ராதா. ஆனால்
இன்னும் ஏன் போலீஸ்காரர் வரவில்லை? 'ஒருவேளை
இன்னும் அவன் காவல் நிலையம் செல்லவில்லையா?
யாரிடமாவது ஏதாவது உளறி மாட்டிக் கொண்டானா?
என்ன செய்வது?' என யோசித்தாள். நேரம் விரைந்து
கொண்டிருந்தது. கல்யாண வேலைகளோ தொடர்ந்து
கொண்டிருந்தன. அவளுக்கு இரக்கம் காட்ட, உதவி
செய்ய அங்கே ஒரு ஜீவனுமில்லை. 'அம்மா மட்டும்
இருந்திருந்தால் இப்படி நடந்து இருக்குமா? அம்மா
பாரம்மா! நீ இப்படி என்னை தனியே விட்டுப்

போகலாமா?' என ஒரு வினாடி கண்ணீர் விட்டாள். 'அப்புறம் மஹூம் அழக்கூடாது! அழுதால் அம்மாவிற்குப் பிடிக்காது. எவ்வளவு பெரிய துன்பம் வந்த போதும் அம்மா கண்ணீர் விட்டதில்லை. மற்றவர் கஷ்டத்திற்காக, துயரத்திற்காகத் தான் கண்ணீர் வரவேண்டும் என அம்மா சொன்னது சரிதான். இங்கே அழுது எதையும் சாதிக்க போவது இல்லை. தைரியம் தான் இப்பொழுது வேண்டும். ''பாதகம் செய்பவரைக் கண்டால் மோதி மிதித்து விடு பாப்பா - அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா'' என்று பாரதியாரை நினைவுப் படுத்திக் கொண்டாள்.

காலையில் பொம்மைக்கு சுற்றுவது போல் புதுப் புடவையை சுற்றிக் கொண்டு மணமேடைக்கு வந்த பொழுது கூட அவள் தன் நம்பிக்கையை கைவிடவில்லை.

மேடையில் எழுந்து நின்று,

''எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை. இந்த வயதில் கல்யாணம் செய்வது சட்டப்படி தப்பு. நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லியிருக்கிறேன். அவர்கள் வந்தால் நீங்கள் எல்லாரும் ஜெயிலுக்குப் போக வேண்டியிருக்கும்! இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுங்கள்.'' எனக் கூறினாள்.

''ஏ! என்ன கொழுப்பு பார். அடக்கமே இல்லாமல் வளர்ந்திருக்கு. அதை என்ன பேசவிட்டுக்கிட்டு, வாயில் ரெண்டு போட்டு கல்யாணத்தை நடத்துங்க'' என ஒருவர் குரல் கொடுக்க,



''இருப்பா! கொஞ்சம் பொண்ணை சமாதானப்படுத்திட்டு கல்யாணத்தை நடத்தலாமே? சின்ன பொண்ணு கல்யாணம்னா பயப்படறது இயல்பு தானே?''

''எல்லாம் இந்த பாபு பயலை நம்பிக்கிட்டு இவ பேசறா போலிருக்கு? இவன் சண்டியர் மாதிரி கம்ப்ளெய்ண்ட் கொடுக்க போலீஸ் ஸ்டேஷன் போயிட்டான். அந்த போலீஸ்காரர் கிட்டே இவ ஏதோ வாலாட்டி இருக்கிறாள். அதனால் அவர் நீங்க என்ன வேணா செய்து கொள்ளுங்கள் என்று சொல்லிட்டார்.''

ராதாவிற்கு இடி விழுந்தது போல் இருந்தது. ஆனாலும் ''முடியாது. நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது'' என உறுதி குலையாமல் கூறினாள்.

கை காலைக் கட்டி ஊர் கூட்டி கல்யாணம் செய்ய முடியாதே! கசமுசா கசமுசாவென்று பேச்சு எழுந்தது. எத்தனை பறவைகளை அவள் காப்பாற்றியிருக்கிறாள். இன்று அவளே பருந்திடம் சிக்கிய கோழிக் குஞ்சாய் தவிக்கையில் அவள் எந்தவித பிரதிபலனும் எதிர் பாராமல் செய்த நல்ல காரியங்களின் புண்ணியம் காப்பாற்றாதா என்ன?

அப்போது வாசலில் ஓர் ஜிப்ஸி வந்து நின்றது. அங்கிருந்து கண்ணன் வந்து இறங்கினான். அவனைப் பார்த்ததும் ராதா பாய்ந்து ஓடினாள்.

''ஒரு சின்ன பெண்ணிற்கு கல்யாணம் செய்ய யார் இங்கே முடிவு செய்தது? யார் யார் இதற்கு உடந்தை?'' என்று இரண்டு பெண் கான்ஸ்டபிள் உள்ளே வர அவளது மாமா அலண்டு போனார்.

''யோவ்! நீ தான் இதற்குக் காரணமா?''

''இல்லீங்க. அம்மா, அப்பா இல்லாமல் அனாதையாய் நின்னுச்சு! ஆதரவு கொடுக்கத்தான் இந்தக் கல்யாணம்!''

''யோவ்! அறிவு இருக்கா? 12 வயசு பொண்ணை 35 வயசுக்காரனுக்கு இரண்டாம் தாரமாய் கல்யாணம் பண்ணி வைக்கிறதுக்கு பேரு ஆதரவு கொடுக்கிறதா? உன் பெண்ணாய் இருந்தால் இப்படிச் செய்வாயா? உன்னை எல்லாம் முட்டிக்கு முட்டித் தட்டி ஜெயிலில் தள்ளணும்.''

''சார்! நீங்க இந்தப் பெண்ணை கூட்டிக்கிட்டுப் போங்க. யார் யார் எதிர்க்கிறாங்களோ அவங்களை எல்லாம் பிடிச்சு உள்ளே போட்டுடலாம்.''

''ஐயோ! நமக்கு ஏன் வம்பு? கல்யாணம்னு கூப்பிட்டாங்க. வந்தோம் அவ்வளவுதான்! இவ்வளவு அநியாயம் நடக்கிறது. இங்கே வந்த பிறகுதான் தெரிஞ்சது.''

''ஆமாம்! போம்மா! அநியாயம் நடந்ததுன்னு தெரிஞ்சோன்ன தட்டிக்கேட்டு அந்தப் பொண்ணைக் காப்பாத்திட்டியாக்கும். பேசாமல் போய் சேரு.''

கூட்டம் சத்தம் இல்லாமல் கலைந்தது. அவள் மாமா நிஜமாகவே பயந்து போய் விட்டிருந்தார். 'பெண்ணை பிடிக்கிறேன்னு பேயை பிடிச்சுக்கிட்டு வந்துட்டோமடா! சும்மா நம்மை ஆட்டி வைக்குதுன்னு கப்பென்று வாயை மூடிக் கொண்டார். இப்பவே இந்த ஆட்டம் ஆடுகிறவள் கல்யாணம் பண்ணி வைத்திருந்தால் தூங்கும்போது தலையில் கல்லைத் தூக்கிப் போட்டிருந்தாலும்



போட்டிருப்பாள். இவளை தொலைத்து தலை மூழ்கிவிட வேண்டும்' என எண்ணி மன்னிப்பு கேட்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என சிறைக்குச் செல்வதில் இருந்து தப்பிக் கொண்டார். ஊருக்குச் சென்று இருக்க வேண்டிய கண்ணன் எப்படி சரியாய் இங்கு வந்து சேர்ந்தான்? என அவள் ஆச்சரியப்பட, அவன் பாட்டிக்கு உடல்நலம் திடீரென்று சரியில்லாமல் போய்விட அதனால் இங்கேயே தங்க நேர்ந்து விட்டது.

''பாட்டி பாத்ரூமில் வழுக்கி விழுந்து விட்டார்கள். அதனால் அப்பா ரொம்பவும் பயந்து போய் விட்டார். அதான் இங்கே பதினைந்து நாட்கள் இருக்க வேண்டியதாகி விட்டது. ஊருக்குப் போக ஏர்போர்ட்டிற்குக் கிளம்பினோம். பிளைட் நாலு மணி நேரம் தாமதமாய் வரும் என்று சொன்னார்கள். அப்போ தான் அந்த போலீஸ்காரரைப் பார்த்தேன். இவரை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே? என யோசித்த பொழுது தான் அந்த ஆள் உன்னைப் பற்றி பேசினான்; பறவையை வேட்டையாட முடியாமல் தடுத்து என் நெற்றியை உடைத்தவளுக்கு சரியான பாடம் கற்பித்து விட்டேன். அன்றைக்கு என் கையில் சிக்காமல் தப்பித்து விட்டாள். அவளுக்குக் கல்யாணம் காப்பாற்றுங்கள் என்று ஒரு பொடியன் வந்தான், போடா! அவள் ஒழிந்து போகட்டும் என விரட்டி விட்டேன்.

பயலுக்கும் வீட்டில் செம மாத்து கிடைச்சிருக்கும் என உற்சாகமாய் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் ஆடிப் போய்விட்டேன். உங்கள் ஊருக்குப் போய் விசாரித்து விட்டு பின் போலீஸ் உயர் அதிகாரிக்கு எங்கள் குடும்ப நண்பரை போன் செய்யச் சொல்லிவிட்டு

இங்கே வருவதற்குள் எவ்வளவு டென்ஷன் தெரியுமா? நல்லவேளை சரியான நேரத்தில் வந்துவிட்டோம். ஆன்ட்டியோட மரணம் என்னை ரொம்ப கஷ்டப்படுத்தி விட்டது. ஸாரி ராதா! இந்த சூழ்நிலையில் நான் உன்னுடன் இருக்க முடியவில்லை. இன்னும் அரை மணியில் திருச்சி ஏர்போர்ட்டில் நான் இருக்க வேண்டும். அப்பா தவித்துக் கொண்டிருப்பார். அவரிடம் கூட நான் விவரம் சொல்லாமல் வந்து விட்டேன். உன்னை பஸ் ஸ்டாண்டில் இறக்கி விடுகிறேன். நான் சொல்லும் முகவரிக்கு போ. அங்கே உனக்குக் கண்டிப்பாய் பாதுகாப்பு கிடைக்கும். அது என் பாட்டி வீடுதான். ஊருக்குப் போய் போன் செய்கிறேன்'' என முகவரியை எழுதிக் கொடுத்தான். ஜிப்ஸியில் இருந்து இறங்கியவளிடம்,

''இரு. இரு! இதை நீ போட்டுப் போனால் உன்னை எனக்கு வேண்டியவர் என புரிந்து கொள்வார்கள்'' என தன் கையில் இருந்த மோதிரத்தை கழட்டி அவள் விரலில் போட்டு விட்டான். பின் அவன் செல்ல. சென்றபின் தான் கவனித்தாள் முகவரிச் சீட்டை எங்கோ தவற விட்டது.



6

தினமும் வசுமதி தேவாவைப் பார்க்காமல் வகுப்பிற்கு செல்வதில்லை. மூன்று நாட்களில் ஏறக்குறைய



அவன் குணமாகி விட்டான். வசுமதி அன்று அவனைப் பார்க்க வந்த பொழுது உடன் அவள் சாயலை ஒத்த டீன்ஏஜ் பையன் வந்தான். ''தேவேட்டா, இது என் அனியன் நகுல்'' என அறிமுகப்படுத்தினாள். ''சேச்சி! அங்கிள் ஸ்மார்ட்டாயிட்டு உண்டு'' என்றான். ''வெல்கம் மை பாய்!'' என அவன் தோள் மேல் கைப்போட்டுக் கொண்டு தேவா பேசப் பேச நகுல் சில மணி நேரங்களிலேயே அவன் ரசிகன் ஆகிப் போனான். மூவரும் அடுத்து வந்த விடுமுறை நாளில் பிச்சாவரம், பாண்டிச்சேரி என ஊர்ச் சுற்றினார்கள். எங்கே சென்றாலும் மாலை ஆறு மணிக்குள் அவர்கள் இருவரையும் கூட்டி வந்து அவளை விடுதியில் இறக்கிவிட்டு நகுலனை தன் அறைக்கு தங்க அழைத்துச் சென்று விடுவான். இரண்டு நாட்கள் முடிந்து ஊருக்குக் கிளம்பிய அன்று தேவாவைப் பிரிய முடியாமல் விசும்பி விசும்பி சின்னப் பிள்ளையாய் அழுதான் நகுலன். அவனை மிகுந்த அன்போடு தட்டிக் கொடுத்தான் தேவா.

''உன் அக்கா ரொம்ப லக்கிடா. நிறைய பேர் அவளுடன் பிறந்து இருக்கிறார்கள். நான் வீட்டிற்கே ஒரே பையன். கலகலப்பாய் இணைந்து விளையாட, பேச ஆளில்லாமல் வளர்ந்தவன்.''

''கவலைப்படாதீங்க மாமா! அப்புறம் அக்கா கூட நானும் உங்க வீட்டிற்கு வந்து விடுகிறேன்.''

''வெரிகுட்! நீ வந்தால் நான் ரொம்ப சந்தோஷப் படுவேன்.'' அவன் சென்ற பிறகு ஒரு நாள் வசுமதியிடம், ''சொல் வசுமதி! எப்போது நம் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம்? இரண்டு வருடங்களா? மூன்று

வருடங்களா? அல்லது ஐந்து வருடங்கள் சென்றா?'' என தேவா கேட்க,

''ம்! என் படிப்பு முடியட்டும் தேவா!''

''கட்டாயம்! வெரிகுட்! இப்பொழுதுதான் நீ சரியாகப் பேசுகிறாய். மருத்துவமனையில் உடனிருப்பேன் என அடம் பிடித்ததைப் போல பிடிவாதம் ஏதும் செய்வாயோ என நினைத்தேன்.''

அவளுக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. ஏதும் பேசாமல் அமைதியானாள்.

''சூ! பார்த்தாயா? உனக்குள் சட்டென்று கோபம் வருவதை. இன்னும் கொஞ்சம் பக்குவம் ஆனால் தான் பிரச்சனைகளை உன்னால் சமாளிக்க முடியும். அப்புறம் நான் மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லலாம் என்று நினைக்கிறேன். உனக்கு இதில் ஏதும் தடை இல்லையே? தயவு செய்து வேறு எதுவும் சொல்லிவிடாதே கண்மணி! இது என் கனவு!''

''என் மேல் உங்களுக்கு ஏன் இத்தனை அவநம்பிக்கை? தாராளமாக எங்கு வேண்டுமானாலும் போய் வாருங்கள். அதற்குள் நானும் என் படிப்பை முடித்து விடுகிறேன். எனக்கும் இலக்கியத்தில் சாதிக்க வேண்டும் என்று ஆசையிருக்கிறது.''

''செய் கண்ணம்மா! ஆகா! ஒன்றை மறந்து போனேனே! அன்றைக்கு உன் கவிதை அதி அற்புதம். இன்னும் நீ முயற்சித்தால் சிறந்த இலக்கியவாதியாக பரிணமிக்கலாம்.''

''அன்றைக்கு நீங்கள் கவிதையை கேட்டீர்களா? நீங்கள் அதை கேட்காமல் போய் விட்டீர்கள் என்று கோபமும், வருத்தமாயும் இருந்தது.''



''நான் எப்படி கேட்காமல் போயிருப்பேன்? அன்று சூழ்நிலை திடீரென வேறு வேலையை எனக்கு வைத்து விட்டது. ஆனாலும் பிரச்சனை முடிந்ததும் காயத்தைக் கூட பொருட்படுத்தாமல் நிகழ்ச்சி பதிவை வாங்கி கேட்டப் பிறகுதான் மருத்துவமனைக்கே சென்றேன். அழகான கவிதை எழுதிய விரல்களுக்கு ஏதாவது பரிசு தர வேண்டாமா?'' என்றவன்,

அவள் அழகிய வெண்டை விரல்களைப் பற்றி மெல்ல வருடியவாறு தன் கை விரலில் இருந்த மரகதக்கல் பதித்த மோதிரத்தைக் கழற்றி அவளது மோதிர விரலில் போட்டு விட்டான். அவள் விரலில் அது மிகவும் ஜொலித்தது.

''இது எங்கள் பரம்பரை மோதிரம்; வழிவழியாய் அடுத்தடுத்த தலைமுறைக்கு இதைக் கொடுப்பார்கள். எங்கப்பா இதை எனக்கு ஆசையாய் கொடுத்தார். நான் உனக்குத் தருகிறேன். இனி இது உன் பொறுப்பு!''

அவள் அதை கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''கொஞ்சம் பெரிதாக இருக்கிறது. நூல் சுற்றி போட்டுக் கொள்கிறேன். தேவா, உன்னிடம் ஒன்று கேட்கலாமா?''

''என்னம்மா?''

''இன்றைக்கு என்னுடன் நடராஜர் கோவிலுக்கு வருவீர்களா? ப்ளீஸ்!''

''இதற்கெல்லாம் எனக்கு எதற்கு ப்ளீஸ் பண்ணுகிறாய்? எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும் உனக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன்.''

இருவரும் மாலையில் இணைந்து கோவிலுக்குப் புறப்பட்டனர். வெண்ணிற பட்டுடுத்தி கால்கள் பின்ன தன்னுடன் நடந்தவளை ரசனையுடன் பார்த்தான். நடராஜர் மந்தகாசத்துடன் தங்களைப் பார்ப்பது போல் வசுமதிக்கு தோன்றியது. வசுமதி தேவானந்த் பெயருக்கு அர்ச்சனை செய்துகிட்டு திரும்பியபொழுது அர்ச்சகர் இரண்டு மாலைகள் கொண்டு வந்து கொடுத்தார். வசு தேவாவைப் பார்க்க அவன் புன்னகையுடன் அவள் கழுத்தில் மாலையைப் போட்டான்.

''இப்பொழுது உன் கடவுள் ஆசீர்வாதம் கிடைத்து விட்டது; திருப்தி தானே?''

கோயில் குளத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்து மீன்களுக்கு பொரி போட்டுக் கொண்டிருந்த வசுமதியிடம் கேட்டான்.

''நான் ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறேன் தேவா. தேங்க்யூ வெரி மச் தேவா.''

''என்றைக்கும் நீ தேங்க்யூ சொல்கிற மாதிரி நான் உன்னை வைத்துக் கொள்ள வேண்டும்.''

''உங்களுக்கு என்னால் என்றைக்கும் பெருமை கிடைக்குமாறு நடந்து கொள்ள வேண்டும்.''

இருவரும் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு நிலவொளியில் காலார நடந்த பொழுது தலை நிறைய பூ நீண்ட பின்னலுக்கு மிக அழகு சேர்த்தது. காதுகளில் ஊஞ்சலாடிய குடை ஜிமிக்கி அதைத் தொட்டு விளையாடிய அலை போன்ற ஒற்றை முடி சந்தனக் கீற்றுடன் பளீரிட்ட குங்குமம் அலாதியான அழகைக் கொடுத்தது. பூ வாசம், மனசை மயக்கியது. வசுமதியிடம் இருந்து ஓரடி தள்ளியே நடந்தான் தேவா.

காலுக்கடியில் ஏதோ ஓடியது போல் உணர்ந்த வசுமதி துள்ளி அவன் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

''ஏய்! என்னாச்சும்மா!''

''என்னவோ ஓடினது போல் இருந்தது.''

சொல்லும் பொழுதே அவள் உடல் சற்று சிலிர்த்தது. அவளை அருமையாய், அன்பாய் தன்னிடம் இழுத்துக் கொண்டான்.

''வசும்மா! இப்படி தேவதையாய், அருகே ஒரு பெண் வந்தால் முனிவரே தவத்தைக் கலைத்து விடுவார். நான் சாதாரண மனிதன் அம்மா! என் இலட்சியத்தை துறந்து விடக்கூடாது பார்; அதனால் தள்ளியே நடப்போம்.''

முகம் சிவந்து நின்றவளை பிரிய முடியாமல்... விடுதி வாசலில் விட்டு நகராமல் நின்று விழி அசைக்காமல் பார்க்க, ''வருகிறேன்'' என்றாள் மெல்ல,

''எங்கே வருகிறாய்? என்னுடனா? பேசாமல் மணந்து கொண்டு இப்பொழுதே வீட்டிற்குப் போய் விடலாமா?''

''சூ! பேச்சால் என்னை ஏமாற்றாமல் முதலில் கிளம்புங்கள்.''

''ஹேய் என்னைப் பார்த்துச் சொல். நான் சொல்வது பொய்யா? இது நூறு சதவீத உண்மை கண்ணம்மா!''

அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்க... அவன் ஏதோ சொல்ல முற்படுவது போல் சற்றே நகர...

"ஆனந்த் மாப்பிள்ளை" எனக் குரல் கேட்டது.

"வசந்தா நீ எங்கே இங்கே?" எனக் கேட்டவாறே வசுமதியைப் பார்த்து தலையசைத்தான். அவளும் பதிலுக்கு தலையை ஆட்டிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

வசந்தன் தாய், பாட்டு சொல்லிக் கொடுக்க வரும் வாத்தியாருடன் வந்த இளைஞனின் பேச்சில் மதி மயங்கிப் போனாள். ஆடம்பர உடைகளும், ஆர்ப்பாட்டமான நகைச்சுவை கலந்த பேச்சும் மகேச பூபதிக்கு கைவந்த கலை. அவனது பேச்சில் எவரும் மயங்குவர். உலகம் தெரியாத பணக்கார வீட்டுப் பெண்ணை ஏமாற்றுவது அவனுக்கு எளிய காரியமாயிற்று. அளவில்லாமல் இருந்த நன்செய், புன்செய் நிலங்களுக்கும், வைர, தங்க நகைகளுக்கும் ஏக போக வாரிசாக ஆணும், பெண்ணும் தான் என அறிந்த பொழுது... சரி பாதி நகைகள் வந்தாலே அவன் கோடீஸ்வரன் தான் என கணக்கு போட்டு அப்பாவி சாவித்திரியை ஏமாற்றி யாருக்கும் தெரியாமல் திருட்டுத் தனமாய் திருமணம் செய்து கொண்டான். விஷயம் தெரிந்ததும் கோபத்தில் பொங்கிய தேவாவின் தாத்தா அத்துடன் தனக்கு ஒரு பெண் இருப்பதையே மறந்து துறந்து விட்டார். சாவித்திரி மூலம் எளிய வழியில் பணக்காரனாகி விடலாம் என திட்டமிட்ட பூபதி பலமாக ஏமாந்து போனான். என்னென்னவோ கஜகர்ணம் எல்லாம் போட்டுப் பார்த்தும் அவர்கள் அவனை வீட்டு எல்லையென்ன ஊர் எல்லைக்குள்ளே அனுமதிக்கவில்லை. சொந்தப் பெண்ணையே இல்லை என்று துறந்தவர்களின் மனம்



ஒரு ஏமாற்றுக்காரனை, எத்தனை சாதாரண வேலைக்காரனாகக் கூட அங்கீகரிக்க மறுத்தது. வசந்தனும், மதுரவாணியும் பிறந்த பிறகு கூட இரக்கம் வரவில்லை. 'ஊரில் யாரும் செய்யாத தப்பையா நான் மட்டும் செய்து விட்டேன். என்னை மட்டும் ஏன் ஒதுக்கியே வைத்து விட்டார்கள்' என வறுமையில் துன்பப்படும் பொழுது எல்லாம் சாவித்திரி புலம்புவாள்.

பூபதியிடம் ஏமாந்து போனதை யாரிடம் சொல்லி ஆறுதல் அடைய முடியும்? ஏமாற்றுக்காரனை விட்டு வெளியேற முடியாத நிலைமை. வேறு போக்கிடம் எதுவும் கிடையாது. தனியாக வாழ்வதற்கு வேண்டிய திடமோ, திறமையோ அவளுக்கு இல்லை. எனவே இருப்பதை சகித்து வாழ பழகிக் கொண்டாள். வசந்தனுக்கு தந்தையின் குணமே படிந்திருந்தது. மதுரவாணி தான் அமைதியாய் அடக்கமாய் வளர்ந்தாள். ஆடம்பரமாய் வாழ்ந்து பழகிய பூபதியோ பொய்யும், புரட்டுமாய் எல்லாரையும் ஏமாற்றிக் கொண்டே முன்னேற நினைத்தான். பொய்யும், புனைச் சுருட்டும் எத்தனை நாளைக்கு நீடிக்கும்? அவன் குட்டு உடைந்த பொழுது பிழைப்பதற்கு வழியே இல்லாமல் போனது. ஊரைச் சுற்றி கடன்களாய் வாங்கிக் குவித்தவன் ஒரு நாள் அதிலேயே மூழ்கி தன் உயிரை தானே அழித்துக் கொண்டான். செல்லும் வழியறியாமல் தவித்தவளை பூபதியின் தங்கை கணவன் தான் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

"நல்ல குடும்பத்து பெண், யோசிக்காமல் செய்த காரியத்தால் இன்றைக்கு வாழ்க்கையையே அழித்துக் கொண்டு நிற்கிறாய். நீ வேண்டுமானால் என் வீட்டிற்கு

வா. காலம் பூரா என் கூட பிறக்காத தங்கையாய் நினைத்து உன்னையும் உன் குழந்தைகளையும் காப்பாற்றுகிறேன். உன் நாத்தனார், என் மனைவி குணத்தில் பாதி உன் கணவன் தான். அனுசரித்து இருந்து கொள்.''

அனுசரித்து போதல் என்பது அங்கு அவஸ்தைக்குரிய விஷயமாய் இருந்தது. மகாராணியாய் வாழ வேண்டிய சாவித்திரி அந்த வீட்டில் சம்பளம் இல்லாத வேலைக் காரி ஆனாள். என்ன செய்தும் நாத்தனாரின் ஏச்சி லிருந்தும், பேச்சிலிருந்தும் மீளவே முடியவில்லை. தினம் தினம் நரகம்தான். வசந்தன் ஓரளவு வளர்ந்த பையனாக இருந்தான். அவனுக்கு எல்லா விவரங்களும் நன்றாகப் புரிந்தன. அத்தை செய்த கொடுமைகளை தாங்க மாட்டாமல் பொறுமிக் கொண்டிருந்தான். மதுரவாணி சிறு பெண்ணாய் இருந்ததால் அவளுக்கு அது எதுவும் புரியவில்லை. மேலும் கொடுமைக்கார அ;த்தையுடன் அவள் மிகவும் பாசத்துடன் ஒட்டிக் கொண்டாள். அது அவளுள்ளும் சிறு துளி அன்பை ஏற்படுத்தியிருந்தது. எனவே அவளை வாடச் செய்யு மாறு அத்தையம்மாள் எதுவும் செய்யவில்லை. வசந்தன் எதிர்த்துப் பேசுவதற்கு தண்டனையாக அரை வயிறு சாப்பாடுதான் போட்டாள். தின்பண்டங்கள் எதையும் அவனுக்கு தருவதில்லை. ஒரு நாள் பலகாரம் வேண்டும் என்று அடம் செய்தவனை கரண்டியில் இருக்கும் 'கேசரியை' போய் எடுத்துக் கொள் என்றாள். ஆவலாய் ஓடி கரண்டியை எடுத்தவன் பதறித் துடித்து அதை கீழே போட்டான். பழுக்க காய்ச்சி வைக்கப்பட்டிருந்த கரண்டிக் காம்பு அவன் கைகளைப் பதம் பார்த்தன.



''என் அண்ணன் தங்க பாத்திரம் என்று நினைத்து ஓட்டை மண் பாத்திரத்தை அரண்மனையில் இருந்து எடுத்து வந்து விட்டார் என்ற சொல்லம்புகளைக் கூட பொறுத்துக் கொண்ட சாவித்திரியால் தன் மகன் கஷ்டப் படுவதைத் தாங்க முடியவில்லை.

''என் வீட்டில் அப்பாவோ, அண்ணனோ ஆதரித்து இருந்தால் நமக்கு ஏன் இந்த நிலை? நீ ராஜா மாதிரி நூறு பேரை அதிகாரம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்த இடத்திலேயே ஆசைப்படுவதை எல்லாம் சாப்பிடலாம் வா. ஆனால் அவங்க மனதில் இரக்கம் இல்லாமல் போயிடுச்சே?''

சுவையான உணவுக்கும், வசதிக்கும் ஆசைப்பட்ட வசந்தன் மனதில் இது ஆழமாகப் பதிந்து போனது. தாத்தா வீடு, வசதியானது; அங்கு சென்றால் சுகமாக இருக்கலாம் என்பதை புரிந்து கொண்டதுடன் அந்த வளமான வாழ்க்கையை எண்ணி கனவு காண ஆரம்பித் தான். நாட்கள் உருண்டோடின. அவன் துன்பங்களும் வளர்ந்து கொண்டே இருக்க மாமன் வீட்டில் கிடைக்க வேண்டிய வளமான வாழ்வைப் பற்றிய ஆசை கொழுந்து விட்டு எரியலாயிற்று.

சாவித்திரியிடம் பெரிய அளவு நகைகள் எதுவும் இல்லை. அவள் வீட்டிலிருந்து வந்தபோது போட்டிருந்த நகைகளை என்றோ பூபதி விற்று செலவு செய்து விட்டான். மிஞ்சியிருந்தது அவள் போட்டிருந்த தோடு ஒன்றுதான். அதை ஒரு நாள் திருமணத்திற்கு போக வேண்டுமென்று வாங்கிப் போட்டுக் கொண்டு போன

அவளது நாத்தனார் திருப்பி தரவே இல்லை. 'பிச்சை சாப்பாட்டிற்கு ஒரு தோடு ஈடாகாதா' என நொடித்து விட்டு அந்த தோடு தொலைந்து போனதாகக் கூறி விட்டாள். அத்துடன் சாவித்திரி வாயை மூடிக் கொண்டாள். பண்டிகை வந்தது. விதவிதமான பலகாரங்கள் செய்யப்பட்டன. ஆனால் ஒன்றுகூட வசந்தன் கண்களில் காட்டப்படவில்லை. வாசனை மட்டும் தான் அவனது மூக்கை எட்டியது. எப்படியாவது பலகாரங்களை ருசித்துவிட வசந்தன் எண்ணினான். அன்றைக்கு சூழ்நிலை சரியாக அமைந்தது. வீட்டில் ஒருவரும் இல்லை.

மதுரவாணியைக் கூட காணோம். சத்தமில்லாமல் அடுக்களையினுள் நுழைந்தான். ஒவ்வொரு அலுமினிய டப்பாக்களைத் திறந்து திறந்து பார்த்தான். கடைசியாக திறந்த பாத்திரத்தினுள் அவனுக்கு மிகவும் பிடித்தமான கார அவல் பொரி கறிவேப்பிலை, கொத்தமல்லி, பூண்டு வாசனையுடன் மணத்தது. அவசரமாய் அள்ளி வாயில் போட்டான். வாயில் 'கடுக்கென்று' ஏதோ தட்டுப்பட்டது. ''தூ'' என துப்பும் பொழுது பின்னாலிருந்து யாரோ திருட்டுப் பயலே'' என காதைப் பிடித்து இழுக்க பின் பக்கம் திரும்பாமலே ''ஐயோ ராட்சஸி'' தன்னை அறியாமல் வாய் விட்டே அலறி விட்டான்.

''ஏன்டா! தோட்டை திருடியதும் அல்லாமல் என்னை ராட்சஸி என சொல்கிறாயா? என்ன வாய்க்கொழுப்பு உனக்கு?''

அப்போதுதான் வாயிலிருந்து துப்பிய இடத்தைப் பார்த்தான். கல் என நினைத்துத் துப்பியது தங்கத்தோடு.



அவன் அம்மாவிடம் காணாமல் போனதாச் சொன்ன அதே தோடு.

''நான் ஒன்றும் திருடலை. நீங்க தான் இதை எங்கிட்டேயிருந்து திருடிகிட்டீங்க.''

அவ்வளவு தான் அவள் ஆங்காரமானாள். பிடித்து அவனை தூணோடு கட்டி புளியங்குச்சியால் விளாசு விளாசு என்று அடித்துத் தள்ளி விட்டாள். சாவித்திரியால் அதை தாங்க முடியவில்லை. ஓடி வந்து குச்சியை பிடுங்கிப் போட்டு கட்டுக்களை அவிழ்த்து விட்டாள்.

''நானும் ரொம்ப பொறுத்துப் போய்விட்டேன். அதனால் தான் என் பிள்ளைக்கு இந்த நிலைமை! வாழ்க்கையில் நான் செஞ்ச தப்பிற்கு என் பிள்ளை தண்டனை அனுபவிக்க வேண்டுமா? போதும், நீ இனி இப்படி நடந்து கொண்டால் நான் மிகவும் பொல்லாதவள் ஆகி விடுவேன்.''

''வாழ வழியில்லாத பொழுது உனக்கு இவ்வளவு திமிரா? இந்த நிமிஷமே வீட்டை விட்டு 'போ' இது ஒன்றும் அனாதை மடம் அல்ல.''

அவள் கத்தி சாவித்திரியின் பெட்டிகளை வெளியே தூக்கிப் போட்ட பொழுது வாசலில் தேவானந்தும், மங்கையர்க்கரசியும் வந்து நின்றனர். ஆதரவற்று நின்ற சாவித்திரியையும் அவள் குழந்தைகளையும் தங்கள் அரண்மனைக்கு அழைத்து வந்தனர்.

சாவித்திரி பட்ட துன்பத்திற்கு ஈடு செய்வது போல் மங்கையர்க்கரசி மிகவும் அன்புடன் நடந்து கொள்ள வசந்தனின் ஆசைக் கனவு நனவானது. அது என்றைக்கும் நிரந்தரமாக இருக்க அவன் எதைச் செய்யவும் தயாராக

இருந்தான். மதுரவாணியை தேவாவிற்கு மணம் முடிக்க திட்டமிட்டதும் அதன் ஒரு பகுதிதான். அது நடந்து விடும் என உறுதியாய் நம்பிக் கொண்டிருந்த நேரத்தில் பாண்டிச்சேரியில் தேவாவை ஒரு பெண், பையனுடன் பார்த்ததாக அவன் நண்பன் கூறிய பொழுது சிறு கலக்கம் ஏற்பட்டது. அது என்னவென்று அறிந்து கொள்ளத் துடித்தான். ஊருக்கே வராமல் இருந்த தேவா... படிக்க வேண்டும் என்று சொல்லி வீட்டிற்கு வருவதைத் தவிர்த்தவன் ஊர் சுற்றப் போனது எப்படி? என்ற கேள்வி மனதை இடைவிடாமல் குடைந்தது. அப்போது கல்லூரியில் கலாட்டா நடந்ததம், தேவா அடிபட்டதும் தெரிய வந்தது.

அதை வீட்டிற்கே தெரியாமல் மறைத்து விட்டதை மங்கையர்க்கரசியிடம் உள்ளம் உருக, தவித்து, பதறி அக்கறை காட்டி விவரிக்க, மங்கையர்க்கரசி உடனே தேவாவைப் பார்க்க புறப்பட துணை என்ற பெயரில் தானும் தொற்றிக் கொண்டான். செல்லும் பொழுதே கவனமாய் திட்டமிட்டுக் கொண்டான். அத்தையை ரமணனிடம் ஒப்படைத்துவிட்டு தான் சற்று வெளியே போய் விட்டு வருவதாகக் கூறி தேவாவைப் பற்றி இரகசியமாய் விசாரிக்க கிளம்பினான். அவன் தெரிந்து கொண்ட செய்திகள் மனதிற்கு உகந்ததாய் இருக்க வில்லை. தேவா - வசுமதியின் அன்பை, நேசத்தை அறியாதவர் அங்கு ஒருவரும் இருக்கவில்லை. 'தேவாவை தாமரை இல்லத்திற்குச் சென்றால் பார்க்கலாம்' என சிலர் கேலி பேச... அங்கே சென்று வெளியே மரத்தடியில் காத்திருந்தான். தங்கள் தோழிகளைப் பார்க்க வந்த மாணவர்கள் வாசலில் நின்று கொண்டு உள்ளே



செல்லும் பெண்களிடம் அறை எண், தோழி பெயர் கூறி பார்வையாளர் வந்திருப்பதாகக் கூறி அழைக்கச் சொன்னார். வசந்தன் மாலையிலிருந்தே அங்கே காத் திருந்தான்; தேவா தான் அவன் கண்களில் அகப்பட வில்லை. அவன் பொறுமை இழந்து கொண்டிருந்த நேரத்தில்தான் வெண்ணிற தேவதையாய் ஒரு பெண் உடன் வர தேவா மிக மிக ஆனந்தமாய் நிலவொளியில் நடந்து வருவதைப் பார்த்தான்.

'ஆகா! மோசம் போனேன்' என எண்ணினான்.

விடுதி கதவருகே வந்த பிறகும் பிரிய மனமில்லாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே மதிமயங்கி நின்றவர்களைப் பார்க்க அவனுக்கு சகிக்கவில்லை. சட்டென இடையிட்டான். ஆனால் தேவாவிற்கு வசந் தனைப் பார்த்து அதிர்ச்சியோ, பயமோ துளிக்கூட ஏற்படவில்லை. மிக மிக சாதாரணமாய் பேசிக் கொண்டே நடந்தான்.

''முன்பே சொல்லியிருந்தால் நானே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே? அம்மாவை ஏன் அலைய விட்டாய்? அம்மாவின் கால்வலி எப்படி இருக்கிறது? ஏதாவது சாப்பிட்டார்களா?''

''என் தங்கை, அம்மாவைப் பற்றி இல்லை என்னைப் பற்றியாவது ஏதாவது விசாரிக்கிறானா?'

''ஊரில் எல்லாரும் நலம் தானே?''

''ம்! ம்! ஊரில் உள்ள மக்கள் அனைவரும் நலம். ஆடு, மாடு, கோழி உள்பட! மாதம் தவறாமல் மும்மாரி பொழிகிறது. குடிமக்கள் எல்லாரும் குறையின்றி வாழ் கின்றனர்.''

''என்ன வசந்தா, என்னையும் சாளரத்தின் வழியாக எட்டிக்கூட பார்க்காமல் மந்திரியிடம் மாதம் மும்மாரி பொழிகிறதா என கேட்கும் சோம்பேறி ராஜா என்று நினைத்து விட்டாயா? நான் எங்கிருந்தாலும் ஊரில் என்ன நடக்கிறது? என அறியாமல் இருக்க மாட்டேன். கீழத்தெரு மாடசாமி மகன் மாடு முட்டி ஆஸ்பத்திரியில் இருக்கிறான். புதிசாய் போட்ட சாலையால் நம்ம வயல் கண்ணி கொஞ்சம் குறுகிப் போயிடுச்சு! போதுமா? இன்னும் விவரம் வேண்டுமா?''

''நிஜமாலுமே அசத்திட்டீங்க மாப்பிள்ளை. உங்க கூட வந்த பொண்ணு யாரு? நான் தெரிந்து கொள்ள லாம் என்றால் சொல்லுங்கள்.''

''அவசியம் என்றால் நானே அறிமுகப்படுத்தி இருப் பேனே? எங்கள் கல்லூரியில் படிக்கும் பெண்களைப் பற்றி தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் வசந்தா?'' என ஒரேடியாய் முற்றுப்புள்ளி வைத்தான். அவன் சும்மா விட்டுவிட முடியுமா? வேறு வழியாக அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள வசந்தன் முயற்சித் தான். மங்கையர்க்கரசியிடம் யாரோ ஆஸ்பத்திரியில் தேவாவை நன்றாக கவனித்துக் கொண்டதாகவும், அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் தூபம் போட்டான். அவன் நோக்கம் புரியாமல் மங்கை யர்க்கரசியும் வலையில் மாட்டிக் கொண்டார்.

''யார் தம்பி உன்னைக் கண்ணும் கருத்துமாய் என்னை விட அக்கறையாய் கவனித்துக் கொண்டது?''

''உங்களைப் போன்ற அக்கறையுடன் கவனிக்க உங்க கடவுள் ஒரு தேவதையை அனுப்பி வைத்தார். நீங்க ரொம்ப கவலைப்படுவீர்கள் என்று தான் விவரம் தெரி



விக்கவில்லை. இப்பொழுது உங்கள் மகனை பாருங்கள். ஜம்மென்று இருக்கவில்லையா? அதனால் கவலைப் படுவதை விட்டு விடுங்கள்.''

''நீ எதையும் சரியாகத்தான் செய்வாய். ஆனால் கவனமாக இருப்பா'' என்றவர் ''அடடா! மறந்தே போனேன் பார். உன் தேவதையை எனக்கும் கொஞ்சம் காட்டேன்'' என,

''நீங்க நினைக்கின்ற நேரத்திற்கு எல்லாம் தேவதை வராது.''

''நீ நினைக்கிற பொழுதாவது வரும் தானே?''

''கெட்டிக்கார அம்மா! ஏதோ கேட்டுப் பார்க்கிறேன்; வந்தால் எனக்கும் சந்தோஷம் தான் என் வேலையும் சுலபமாகி விடும் அல்லவா?''

''என்னிடம் ஆக வேண்டிய வேலை அப்படி என்ன இருக்கிறது? சீக்கிரம் உன் படிப்பு முடிந்தால் தேவலை. மதுரவாணிக்கும், உனக்கும் திருமணத்தை நடத்தி விடலாம்.''

''அம்மா! இப்போதைக்கு கல்யாணப் பேச்சை எடுக்கக் கூடாது. உங்களுடைய இந்த பேச்சிற்கு பயந்து தான் நான் ஊருக்கே வருவதில்லை. மதுரவாணி பள்ளியில் படிக்கும் சிறு பெண். முதலில் இந்த பேச்சை நிறுத் துங்கள்.''

தேவா இப்படி கூறிய பொழுது நல்லவேளை வசந்தன் அருகே இல்லாமல் போனான்.

''சரி அப்பா! உன் இஷ்டம். நாளை அந்த தேவ தையைக் கூட்டி வா! அதுவாவது திருமண வரம் கொடுக்கிறதா எனப் பார்க்கிறேன்.''



# 7

ரோஷனி உற்சாகமாய் இருந்தாள். விபு அவளது நெட் நண்பனை சந்திக்கச் சென்றிருந்தாள். மாதவன் கூட வீட்டில் இல்லை. ஆதித்தனுடன் வெளியே செல்லப் போகிறாள். அதுவும் தனியாக அவனுடன் வெளியே ஊர் சுற்றப் போவது எத்தனை சந்தோஷமான விஷயம்? இதற்குத் தானே அவள் காத்திருந்தாள். ஆனால் அந்த வாய்ப்பு சுலபத்தில் கிட்டினால் தானே? எந்நேரமும் அவனுடன் விபு! அவனைச் சுற்றி சுற்றி இவளுக்கு எரிச்சல் மூட்டிக் கொண்டிருந்தாள். பத்தும் பத்தாதற்கு அந்த நந்தனா வேறு! அவள் சிடுமூஞ்சி திலகமாயிருந்தது சற்றே ஆறுதலை தந்தது என்றாலும் அவள் இருக்கும் நேரங்களில் இந்த ஆதித்தன் கூட வீட்டை விட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் கூட நகருவதில்லை. இத்தனைக்கும் அந்த நந்தனாவிற்கு கொஞ்சம் திமிரும் கூட உண்டு. ஆதித்தை அவள் சட்டை செய்வதே இல்லை. மேலும் வீட்டிற்கு வந்தால் நேரே முத்தச்சியிடம் சென்று விடுவாள். மற்றவர்களிடம் ஜஸ்ட் ஒரு புன்னகை தான். ஏதேனும் கேட்டால் சுருக்கமாய் பதில் சொல்லிவிட்டு நகர்ந்து விடுவாள். ஆனால் முத்தச்சியிடம் மட்டும் என்னமாய் இழைகிறாள்! அவருக்கும் இவளிடம் அளவுக்கு அதிகமான



பாசமும், நல்ல மரியாதையும் இருந்தது. இல்லையென்றால் அவளை ஒரு வார்த்தை சொன்னதற்காக தன்னையே கடிந்து கொள்வாரா? வார்த்தைக்கு வார்த்தை கேலியும் கிண்டலும் அரட்டையுமாக இருந்தாலும் ஆதித்தனும் யாரையும் ஓர் எல்லைத் தாண்டி வர விடுவதில்லை. ஏன் அவன் அறைக்குள்ளே யாரையும் நுழைய விடமாட்டேன் என்கிறானே? அந்த விபு கூட வெளியில் நின்றுதான் அனுமதி கேட்கிறாள். அந்த வீட்டுப் பெண்ணான அவளே கூட அவன் அறைக்குள் நுழைய முடிவதில்லை. அவளுக்குத் தான் அது உறுத்தலாய் இருந்தது. ஆனால் வீட்டிலிருந்த அனைவருக்கும் அது பெரிய விஷயமாய் தோன்றுவதில்லை. அது ஒரு நாகரீகம் என்றே நினைத்தனர்.

அதனால் வெறுமனே பொரும மட்டும் தான் ரோஷனியால் முடிந்தது.

இன்றைக்கு அவனோடு வெளியே செல்ல வாய்ப்புக் கிடைத்ததால்... அல்வா... சாப்பிடக் கிடைத்தது போல் மகிழ்ந்தாள். இத்தனைக்கும் அவன் இலேசில் ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் வரமாட்டேன் என மறுக்கவும் இல்லை. எனவே பேசி, பேசி கிளம்பச் செய்து விட்டாள். கிளம்புவதற்கு முன் முத்தச்சியின் அறைக்குள் சென்று விட்டு வந்தே சரி சொன்னான். 'ஒருவேளை முத்தச்சியிடம் அனுமதி கேட்டானோ?' என அவள் எண்ணிக் கொண்டாள். முத்தச்சியிடம் அவன் பேசியது உண்மை. ஆனால் கேட்ட விஷயமோ... அவள் எதிர்பார்த்தது அல்ல. நந்தனா அன்றைக்கு வீட்டிற்கு வருவாளா? இல்லையா? என்று தான் கேட்டான். அவள் வர மாட்டாள் எனத் தெரிந்ததும் தான் வெளியே கிளம்பினான்.

அவளிடம் அவனுக்கு அப்படி என்ன சுவாரஸ்யமோ? வெளியே வந்ததும் தான் பார்த்தான்; அவனது ஜிப்ஸியைக் காணவில்லை. அதை மாதவன் வெளியே எடுத்துச் சென்றிருந்தான். ''இன்னொரு நாளைக்குப் போய்க் கொள்ளலாம்'' எனக் கூறிவிட்டு நகர்வதற்குள் ரோஷனி பிடித்துக் கொண்டாள். ''ப்ளீஸ்! ப்ளீஸ்! இருங்க. அதோ ஷெட்டில் கார் நிற்கிறது; அதில் போகலாமே?'' அவன் சற்று யோசிக்க, ''ப்ராமிஸ் பண்ணியிருக்கீங்க!'' என ரோஷனி கூற,

''நான் எப்போது ப்ராமிஸ் பண்ணினேன்?'' எனக் கேட்டான்.

''சரி! என்னை ஏமாற்றத்திற்கு உள்ளாக்காமல் இருக்க வாவது அழைத்துச் செல்லக் கூடாதா?''

அதற்கு மேல் மறுக்க முடியாமல் தான் அவன் கிளம்பினான்.

''எங்கே போக வேண்டும்? கோவிலுக்கா? சினிமாவிற்கா? சினிமா என்றால் நான் வரவில்லை. சரியாக ஏஸி. ஓடாத தியேட்டரில் இந்த வெயிலில் என்னால் மூன்று மணி நேரம் உட்கார முடியாது.''

''ஏன் எங்களுக்கு வேறு எந்த இடத்திற்கும் போகத் தெரியாது. முடிவு செய்து விட்டீர்களா? பக்கத்தில் முக்கொம்பு இருக்கிறது. அங்கே போகலாம். கண்டிப்பாய் அந்த ஆற்றங்கரை பூங்காவை உங்களுக்குப் பிடிக்கும்.''

அவளைத் திரும்பி ஒரு வினாடி பார்த்தான். மறு வினாடி ''போகலாம் வா'' என வேகமாய் காரைக் கிளப்பினான்.

கார் கிளம்பிய வேகத்திற்கு அரை மணியில் முக்கொம்பை அடைந்திருக்கலாம். ஆனால் செல்லும்



வழியிலேயே டயர் வெடித்து விட்டது. பல இடங்களிலும் போக்குவரத்து நெரிசலில் மாட்டி தவித்து தயங்கி புறப்பட்ட பொழுது டயர் வெடித்து 'அம்போ' வென்று நின்றது. சற்று ஓரமாய் அதை நிறுத்திவிட்டு காரை விட்டு கீழிறங்கினான்.

''ரோஷனி, நீ காரிலேயே இரு. நான் ஸ்டெப்னி மாற்றுகிறேன்.'' கார் இடப்புறக் கண்ணாடியில் ஸ்கூட்டியில் நந்தனா வருவது தெரிந்தது. 'இவள் எங்கே இங்கே?' என எண்ணியவன் ''காற்றைப் போல எல்லா இடத்திலும் இருக்கிறாள்'' என வாய்விட்டே சொல்லி விட ஒன்றும் புரியாமல் ரோஷனி பார்த்தாள். சற்றே முன்னே நகர்ந்து அவள் வரும் வழியில் நின்று விரலை உயர்த்தினான்.

''லிஃப்ட் ப்ளீஸ்'' என ஸ்கூட்டியை நிறுத்தியவளிடம் கேட்க...

''ஸாரி!''

''ஏன்? வண்டியில்தான் இடமிருக்கிறதே.''

''முடியாது. நான் போக வேண்டிய இடம் வேறு.''

'என்ன மனுஷி இவள்? ஆதித்தன் கேட்டே மறுக்கிறாளே?'

''இந்த மாதிரி நடு வழியில் எப்படி காத்திருப்பது?'' என ரோஷனி கூற...

அவளைத் திரும்பிப் பார்த்தவள், ஒன்றும் கூறாமல் ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்ய...

''ஹேய் என்ன நீ பாட்டிற்கு கிளம்புகிறாய்?'' ரோஷினி கேட்க கைகட்டிக் கொண்டு நின்ற ஆதித்தனைப் பார்த்து,

''வெளியே கிளம்புபவர்கள் ஸ்டெப்னி இல்லாமலா புறப்படுவார்கள்? யோசிக்காமல் செய்தால் இப்படித் தான்! விழித்திருப்பவர்களுக்குத் தான் வாழ்க்கை; தூங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அல்ல. அலைபேசி இருக்குமல்லவா? அதில் மெக்கானிக்குக்கு தகவல் கொடுங்கள். மெக்கானிக் வரும் வரை கடலை போட ஆள் இருப்பதால் பொழுது போய்விடும். நான் வருகிறேன்'' என போயே விட்டாள்.

ரோஷனி கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டாள். ஆனால் ஆதித்தனோ அலட்டிக் கொள்ளவில்லை. ஏன்? பெண்ணே உனக்கு இத்தனை கோபம்? யார் மேல் பொறாமைப்படுகிறாய்? உன் பொறாமைக் கூட ரசனைக் குரியதாய் இருக்கிறது. மறுநாள் நந்தனா வீட்டிற்கு வந்த பொழுது மெதுவாய் சீண்டினான். ''எப்படி வந்தோம் என கேட்க மாட்டாயா?''

''ஆதித்த மகாராஜா பொடி நடையாய் வந்தாராக்கும்?''

''இல்லை. அண்டை நாட்டு இளவரசி அவள் குதிரையில் லிஃப்ட் கொடுத்தாளாக்கும்.''

அவள் முகம் போன போக்கைப் பார்த்து ரசித்துச் சிரித்தான். முத்தச்சி சந்தோஷமாய் இருந்தார். அவர் உடல்நலம் சீராக இருந்தது. முன்பை போல வலியும் வேதனையும் இப்போது இல்லை. பேரன் முத்தச்சியை தாங்கு தாங்கென்று தாங்கினான். அவன் அன்பால் மலர்ந்து போகின்ற பொழுதெல்லாம் அவரை அறியாமல் ஒரு பெருமூச்சு வெளிவரும். சில சமயங்களில் கண்கள் பனித்துப் போகும். அதுவும் ஆதித்தன்



நந்தனாவை சீண்டும் சமயங்களில் கண்டும் காணாமல் ரசித்துக் கொள்வார். நந்தனாவும் அவனை சும்மா விட்டு விடுவதில்லை. அவர்கள் இருவரும் தன் முன்னிலையில் விளையாட்டாய் சண்டையிட்டுக் கொள்வதில் அவர் தலையிடுவதே இல்லை. ஏதோ மலரும் நினைவுகளில் மூழ்கிப் போன்றதொரு தோற்றம். நந்தனா அதை ரசித்துப் பார்க்க... திடீரென ஏன் மௌனமாகி விட்டாள்? என்று அவன் பார்க்க.... அவள் 'உஷ்' என்று ஜாடை காண்பித்துக் கண்ணால் முத்தச்சியைக் காட்டினாள். கனிந்து இருந்த முத்தச்சியைப் பார்க்க மிகவும் ரம்மியமாய் இருந்தது. சத்தமில்லாமல் அலைபேசி காமிராவால் படம் பிடித்தான். குடும்பத்தினர் எல்லாரும் பிக்னிக் செல்ல முடிவாயிற்று. முத்தச்சி எழுத்து வேலையிருப்பதால் தயங்க... நந்தனாவை உதவிக்கு அழைத்தான். ஒரு வாரம் வெளியூர் செல்ல முடியுமா? என அவள் யோசிக்க... தாத்தா தான் ஏறக்குறைய வற்புறுத்துவது போல் வலியுறுத்தி அவனையும் அனுப்பி வைத்தார். ரோஷனிக்கு இப்படி குடும்பத்துடன் செல்வதில் அத்தனை உற்சாகமில்லை. அன்றைக்கு ஆசையுடன் கிளம்பி வெயிலில் வெந்து பாதியிலேயே திரும்பி வந்த எரிச்சல் இன்னும் தீர்ந்தபாடில்லை. அப்படியிருக்கையில் இப்போதும் நந்தனாவுடன் கிளம்புவது மேலும் புழுக்கத்தை ஏற்படுத்தியது. வீட்டிலுள்ள அனைவரும் குதூகலமாய் புறப்பட்டனர். 'ஏழாற்று முகம்' செல்வது என்று முடிவாகியது. எர்ணாகுளம் சென்று அங்கிருந்து சாலக்குடி செல்வது என்றும் முடிவாகியது. சாலக்குடியில் இருந்து அதிராம்பள்ளிக்குப் போய் அங்கிருக்கிற ஹாலிடே ரிசார்ட்களில் தங்குவதற்கு

ஏற்பாடு செய்யப்பட்டது. அதிராம் பள்ளியிலிருந்து ஏழாற்று முகம் 13 கிலோ மீட்டர் தூரம்தான். இரண்டு கார்களிலும், ஒரு ஜிப்ஸியிலும் கிளம்பினர்.

ஆதித்தனுடன் சேர்ந்து பயணம் செய்ய ஆசை இருந்தாலும் ரோஷனிக்கு ஜிப்ஸி பிடிக்காததால் காரில் ஏறிக் கொண்டாள். ஆளாளுக்கு அடித்துப் பிடித்துக் காரில் உட்கார்ந்து கொண்டனர். ஒரு காரில் பத்து பேர், மற்றொரு காரில் ஆறு பேர், ஜிப்ஸியில் நாலு பேர் கிளம்பினர். மாதவன், நந்தனா, ஆதித்தன், மாதவனின் சித்தப்பா நால்வரும் ஜிப்ஸியில் சென்றனர். ஆதித்தனின் சின்ன மாமா முன்புறம் அமர்ந்து கொண்டார். பின்பக்கம் மாதவனும், நந்தனாவும் அமர்ந்து கொண்டனர். ஏழாற்று முகம் சாலக்குடி நதி ஓரிடத்தில் ஏழாகப் பிரியும் இடமாகும். இது இயற்கைத் தந்த எழிலான பரிசாகும். ஏழாகப் பிரியும் நதி ஆங்காங்கே சின்னச் சின்னத் திட்டுக்களை உருவாக்கிக் கொண்டே ஓடுகிறது. அந்தத் திட்டுகளில் பல வகையான மரங்கள் கம்பீரமாய் எழுந்து நிற்கின்றன. மேலும் ஆங்காங்கே பாறைகளும் பரவிக் கிடக்கின்றன. அவை ஆற்றை நீரைத் தடுத்து நிறுத்த முயற்சித்தாலும் ஆற்றுநீர் அடங்காத குறும்புக்கார சிறுவனைப் போல துள்ளிக் கொண்டு ஓடுகிறது. மலையும், காடும், பாறையும், ஆறும் மனசை வசப்படுத்துவன. ரிசார்ட்ஸ் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு காரில் ஏழாற்று முகம் புறப்பட்டனர். பெரியவரான ஆதித்தனின் மாமாவிற்கு ஜிப்ஸி பயணம் உடல்வலியை ஏற்படுத்தியதால் அவர் காரில் ஏறிக் கொண்டார். ஏழாற்று முகத்தை நோக்கி செல்கிற



பாதையில் இரண்டு பக்கமும் மனதை மயக்கும் பசுமைக் கொஞ்சியது. சாலையின் வலப்பக்கம் வழிகாட்டுவது போல் கூடவே சலசலவென்று ஓடி வருகின்ற சின்ன ஓடை. அமைதியான பயணத்தில் ஓடுகின்ற நீரின் இனிய சத்தமும் பறவைகள் கிரீச்சிடும் சத்தமும் உள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் இசையைத் தட்டி எழுப்பும். கடந்து செல்லும் ஊர்களில் எல்லாம் கனிகளுடன் கூடிய பலா மரங்கள், பலாக்கனியிலிருந்து வரும் நாவில் நீரை ஊற வைக்கக் கூடிய கும்மென்ற பழ வாசனையை மிகவும் ரசித்தான் ஆதித்தன். சற்றே திரும்பியவன் நந்தனாவும் விழி விரித்து ரசித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். ஜிப்ஸியை மிக மெதுவாகவே செலுத்தினான். வெயிலே படாமல் குகைபோல சாலையை மூடியிருக்கிற மரங்களின் நிழலில் பயணம் செய்தபோது ''சாலைக்கு குடைப் பிடிக்கும் மரங்கள்'' என சிலாகித்துச் சொன்னாள் நந்தனா. மலைகளை ரொம்பவும் ரசித்துச் ரசித்துப் பார்த்தாள். பயணங்கள் கலைஞனை, ரசிகனை மேலும் உற்சாகம் கொள்ள வைக்கின்றன. பயணம் மனிதனுக்கு அறிவை மட்டும் கொடுப்பதில்லை. அவன் மனதில் இருக்கும் கவலைகளை மாற்றும் மருந்தாகவும், அமைகிறது. இயற்கை வளம் கொஞ்சும் பகுதிகளுக்கு செல்லும் பொழுது உள்ளுக்குள் ஓர் உத்வேகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கை ஒளி ஏற்றும். வாழ்வை ரசிக்கும் பக்குவத்தை கொடுக்கும். மலைகளைக் கடந்ததும் தூம்பூர்முழி அணைக்கட்டு வரவேற்றது. அங்கிருந்த மூன்று கிலோ மீட்டரில் அமைந்திருக்கிறது. சில்வர் ஸ்டார்ம் என்னும் வாட்டர் தீம்பார்க். அந்த வாட்டர்தீம் பார்க்கிலிருந்து சாலையின் வலப்பக்கம் திரும்புகிற சிறிய சாலையில் பாலம் ஒன்று இருந்தது.

அதுதான் ஏழாற்று முகம் செல்கிற வழி. சாலையிலிருந்து நான்கு கிலோ மீட்டர்கள் மலைப்பாதையில் பயணித்தால் ஒரு பிரமாண்ட கோட்டையின் நுழைவாயில் மாதிரியான வழி வரவேற்கும். சில்வர் ஸ்டாமிலிருந்து இயற்கையை ரசித்துக் கொண்டே நடந்து சென்றால் நன்றாக இருக்கும் என ஆதித்தனுக்குத் தோன்றியது. ''இங்கிருந்தே நடந்து சென்றால் என்ன?'' என நந்தனா கேட்க... கண்களில் பளீரென்று ஓர் ஒளி தோன்றியது அவனுக்கு. ஜிப்ஸியை அனுமதி வாங்கி தீம்பார்க்கில் நிறுத்திவிட்டு மூவரும் உற்சாகமாய் நடக்க ஆரம்பித்தனர். விடுவிடென்று நந்தனா ஆதித்தனுக்கு ஈடு கொடுத்து நடந்தாள்.

''ஹேய்! நீ டரக்கிங் பயிற்சி பெற்று இருக்கிறாயா?''

''ம்! எனக்கு மலை என்றால் ரொம்பப் பிடிக்கும். அதனால் மலையேறும் பயிற்சி எடுத்திருக்கிறேன். அதை விடாமல் தொடர்வதால் நடை பயணம் சுலபமாய் இருக்கிறது'' நுழைவுக் கட்டணம் செலுத்திவிட்டு உள்ளே நுழைந்தனர். திரும்பின பக்கமெல்லாம் உயர்ந்து வளர்ந்து பிரமாண்டமான காட்டு மரங்கள்.

எல்லா மரங்களின் மீதும் சின்னச் சின்னதாய் மூங்கில் வீடுகள். அவற்றில் ஏறி அமர்ந்து சுற்றிப் பார்த்தால் நேரம் போவதே தெரியாமல் பல மணி நேரம் இயற்கை அழகை ரசித்தபடி அங்கேயே அமர்ந்திருக்கலாம். முத்தச்சி ஏறக்குறைய தன் வயதை மறந்தே விட்டார். மூங்கில் குடிலில் அமர்ந்து கவித்துவமான வரிகளைச் சொல்லி நடை அழகால் கதையை மிளிரச் செய்தார். நந்தனா விறுவிறுப்பான நடையை ரசித்துக் கொண்டே



எழுதினாள். இடை இடையே முத்தச்சியை வற்புறுத்தி ஓய்வெடுக்க வைத்தாள். நேரத்திற்கு சரியான உணவை சாப்பிட வைத்தாள். சில நாட்கள் குடிலில் அமர்ந்து எழுதினாள். இடைஞ்சல் அவர்களுக்கு கொடுக்காமல் மற்றவர்கள் நீரில் விளையாடியும், வண்ண வண்ண மீன்களைப் பிடித்து மறுபடியும் ஆற்றில் விட்டும் விளையாடினர். அடர்ந்த மரங்களுக்குப் பிறகு குறுகலான பாதைகள் உள்ளன. அவற்றைத் தாண்டிச் சென்றால் ஆறு முழுக்க எங்கு பார்த்தாலும் பாறைகள். பாறைகள் மேலும், சந்து பொந்துகளிலும் பாய்ந்து செல்கிறது நதி.

சில இடங்களில் மிக வேகமாகவும், சில இடங்களில் பொறுமையாகவும், பெரிய பாறைகளிலிருந்து விழும் போது குட்டி நீர்வீழ்ச்சி போலவும், ஒரு சில இடங்களில் தேங்கி நின்று மீன்களுக்கு வாழ்விடமாகவும் இருந்தது. இந்தியாவிலேயே பல வகையான மீன்கள் அதிகம் உள்ள ஆறு இதுதான். ஒரு துண்டால் வலை வீசினாலே பல வகையான மீன்களைப் பிடிக்கலாம். பின் அவற்றை ஆற்றிலேயே விட்டு விட்டு அருகில் பாய்கிற குட்டி அருவிகளில் குளியல் போடலாம். முங்கிக் குளிக்க விரும்பினால் ஆற்றின் இருபுறமும் அதிக ஆழமில்லாத ஓர் ஓடை பாய்கிறது. பாறைகள் இருப்பதால் விபத்து நேராமல் தடுக்க டைவ் அடிக்க அங்கு அனுமதி இல்லை. ஆற்றுக்கு மத்தியில் சோலை மாதிரியான ஓர் இடமும் இருக்கிறது. எழுத்தாளர்கள் பலரும் இங்கே வந்து பாறைகளுக்கு நடுவே அமர்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருப்பதை அடிக்கடி பார்க்க முடியும். முத்தச்சியும் நந்தனா துணையோடு சென்று இடைவிடாமல் எழுதுவதற்கு மடமடவென்று சொல்லத் தொடங்கினார்.

''முத்தச்சி, இன்றைக்கு உங்கள் நந்தனாவிற்கு விடுமுறை கொடுத்து விடுங்கள்.''

''நீ சொல்வது சரிதான். நாளைக்கு ஊருக்குக் கிளம்ப வேண்டும். அவள் வந்ததிலிருந்து எழுத்து வேலையே செய்து கொண்டிருக்கிறாள். இங்கே எதையும் சுற்றிப் பார்க்கவில்லை. இதோ அவளே வருகிறாள். நானே சொல்கிறேன்.''

''முத்தச்சி! இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறதே? அதை எழுதி விடலாமா?''

''ம்! ஆனால் ரொம்ப களைப்பாய் இருக்கிறது நந்தனா. எனக்கொரு உதவி செய்யேன். நாம் பார்க்காத இடம் இருக்கிறதா என ஆதித்தனுடன் சென்று பார்த்து வந்து விடேன். பின் விவாதித்து எழுதலாம்.''

''இல்லை...''

அவள் மறுத்துச் சொல்லத் துவங்கும் பொழுதே,

''பொன்னுமோளே! மறுப்பு சொல்லாமல் முத்தச்சி சொல்வதை கேட்கணும்.''

ஆதித்தனும், முத்தச்சியும் கண்களால் ஏதேனும் ரகசியம் பேசினார்களோ? அவள் திரும்பிப் பார்த்த பொழுது ஆதித்தன் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். ஆதித்தனுடன், நந்தனா, ரோஷனி, விபு மட்டும் ஏழாற்று முகம் கிளம்பினர். மற்றவர்கள் களைப்பினால் அதிராம்பள்ளியில் இருக்கும் நீர்வீழ்ச்சியை பார்க்கப் புறப்பட்டனர். மிகப் பிரமாண்டமான நீர்வீழ்ச்சியில் எப்போதும் கூட்டம் அதிகமாகவே இருந்தது. மேலும் பல திரைப்படங்களில் இந்த நீர்வீழ்ச்சி



காட்டப்பட்டிருந்ததால் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இங்கே குவிந்து கொண்டிருந்தனர். அதனாலே ஏழாற்று முகம் பகுதியில் கூட்டம் மிகமிகக் குறைவாகவே இருந்து கொண்டிருக்கிறது. இயற்கையின் அழகில் இதயத்தை இழக்க விரும்புகிறவர்களும், அமைதியான இயற்கை வனப்பில் கற்பனை ஊற்றை பெருக்கி எழுத விரும்புகிறவர்களும் ஏழாற்று முகம் செல்லவே விரும்புகிறார்கள்.

தூம்பூர் முழி அணைக்கட்டு பூங்காவில் விதவிதமான வண்ணத்துப் பூச்சிகளை கண்டு பெண்கள் மூவரும் துள்ளிக் கொண்டு ரசித்தனர். மாடர்ன் ஆர்ட் இவற்றின் சிறகுகளில் வரைந்தவர் எவரோ?

''வண்ணத்துப்பூச்சி அழகான அற்புதமான உயிரி, இது மாசு அற்ற சூழ்நிலையில் தான் வாழும். ஒலி மாசு, அதாவது இரைச்சல் மிகுந்த இடத்திலோ, காற்று மாசு உள்ள சூழலிலோ வசிப்பதில்லை. வண்ணத்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை வைத்து அங்கே ஒலி, காற்று மாசு உள்ளதா என அறிந்து கொள்ளலாம்.''

''அப்படியானால் வண்ணத்துப்பூச்சிகள் வாழ்கிற இடம் தான் மனிதன் ஆரோக்கியமாக வாழத் தகுந்த இடம்! சரிதானே நந்தனா?''

''ரொம்ப சரி ஆதித்!''

அங்கேயிருந்த காவலர் ''மழைக்காலங்களில் இங்கே ஆயிரக்கணக்கில் பட்டாம் பூச்சிகளை பார்க்கலாம்'' என்றார்.

''ஆமாம்! நான் கூட படித்தேன். செப்டம்பர் - அக்டோபர் மாதங்கள் வண்ணத்துப் பூச்சிகளுக்கு வசந்த

காலம் என்று அந்த நேரத்தில் இப்போது உள்ளதை விட 10 மடங்கு அதிகமான எண்ணக்கையில் வண்ணத்துப் பூச்சிகளின் நடமாட்டம் இருக்கும்'' ரோஷனி கூற.

''அடடே! நீ கூட புத்திசாலி ஆகிக் கொண்டிருக் கிறாய் ரோஷினி'' என்றாள் விபு.

அத்துடன் நிறுத்தி இருக்கலாம்.

''எந்நேரமும் சிகப்பழகு விளம்பரம் போல் பளீரென்று ஆஷையே சுற்றி வர மட்டும் தான் தெரியும் என நினைத்தேன். அவனல்லவா உன்னை சுற்ற வேண் டும்? ஆனால் விளம்பரமே இங்கு தலைகீழ் ஆகிப் போனது.''

ரோஷனியின் முகம் சுண்டிப் போனது. வெறுப்பை, கோபத்தை வேறு எப்படியும் காட்ட முடியாதவளாய் மறுபுறம் நகர்ந்து சென்றாள். நந்தனாவிற்கு விபு அப்படி பேசி இருக்க வேண்டாமென்று தோன்றினாலும் அவள் எதுவும் சொன்னாளில்லை.

''பட்டாம் பூச்சியை ரசித்துக் கொண்டே ஒரு மணி நேரம் வாக்கிங் போனாலும் களைப்பு தெரியாது. இந்த வண்ணத்துப்பூச்சி மென்மையான உயிரினம். இது செயற்கைப் பூக்கள், சிமெண்ட் தொட்டி, பாலிதீன் பைகளில் வளர்க்கப்படும் தாவரங்களைச் சீண்டாது. மண் தொட்டி, அல்லது தரையில் இயற்கையாக வளரும் தாவரங்களைத்தான் இவை நெருங்கும்'' என மேலும் அந்தக் காவலர் கூறினார்.

''வண்ணத்துப்பூச்சிகள் மனிதர்களுக்கு பலவிதங் களில் உதவுகின்றன. தரமான காய்கறிகள், பழங்கள்



உருவாக தாவரங்களில் அயல் மகரந்தச் சேர்க்கை அவசியம். இந்த அயல் மகரந்தச் சேர்க்கைக்கு முக்கிய காரணகர்த்தா வண்ணத்துப் பூச்சிகள் தான். ஸ்ரீரங்கத்தில் மேலூர் அருகே ஒரு வண்ணத்துப் பூச்சி உருவாக்கும் திட்டம் இருக்கிறது எனக் கூட படித்தேன்.''

''வண்ணத்துப் பூச்சியை கொல்வது கூட வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின்படி குற்றம் தான்.''

''அடேங்கப்பா! இயற்கை மனிதனுக்கு எத்தனை விதமான பாடங்களை கற்றுத்தருகிறது. தடைகளைத் தாண்டி ஓடிக் கொண்டிருக்கும் ஆறு தன்னம்பிக்கையை, போராடும் குணத்தை கற்றுத் தருகிறது என்றால் சுறு சுறுப்பான பட்டாம்பூச்சி பசுமையை நேசிக்க, மாசற்ற சூழலை உருவாக்க சொல்லித் தருகின்றன.''

நந்தனாவும், ஆதித்தனும் அறிவுப்பூர்வமாய் பேசிக் கொள்ள எத்தனையோ விஷயங்கள் அங்கே கொட்டிக் கிடந்தன. கூட மற்ற இருவர் வருவதை மறந்தே போனது போல் இருவரும் பேசிக்கொண்டே நடந்தனர்.

''வீட்டில் கூட சின்ன தோட்டம் அமைத்து வண் ணத்துப் பூச்சி இனத்தை வளர்க்கலாம். ஆங்காங்கே சிறிய மணற் பாத்திகள் அமைத்து உப்புத்தண்ணீரை ஊற்றி வைக்க வேண்டும். சாதா உப்புத்தண்ணீர் தான் ஊற்ற வேண்டும். வண்ணத்துப் பூச்சிகள் இனப் பெருக்கம் செய்ய சோடியம் தான் மிகவும் அவசியம். எனவே சாதாரண உப்புத் தண்ணீர் தான் பயன்படுத்த வேண்டும்.''

''போதும் ஆஷ்! உன்னுடன் நடமாடிக் கொண்டிருக் கும் வண்ணத்துப் பூச்சிகளான எங்களை முதலில் கவனி

ஒரு என்சைக்கிளோ பீடியோவுடன் பேசிக் கொண்டே இருக்கிறாய். நா வறண்டு விட்டது; மொத்த ஐஸ்கிரீம் கடையே வாங்கி வா.''

சிரித்தவாறே அவன் ஐஸ்கிரீம் வாங்கி வரச்சென்றான். அவன் அள்ளி வந்த ஐஸ்கிரீம்களை உண்ண ரோஷனிக்கும், விபுவிற்கும் ஒரு போட்டியே நடந்தது. ரோஷினி ஒரு ஐஸ்கிரீமை அதிகமாக பெற்று விட்டாள். அவ்வளவு தான்! விபுவிற்கு ரோஷம் வந்து விட்டது. ஆதித்தன் ஒரு வாய் ருசித்த ஐஸ்கிரீமை பறித்து சுவைக்கலானாள். ''ஐயடா! எச்சில்'' என்றான். முகம் சுளித்த நந்தனாவிடம் ''உனக்கு ஐஸ்கிரீம் வாங்கி வரட்டுமா?''

''வேண்டாம்! எனக்கு பிடிக்காது'' என்றாள் மிக எரிச்சலான குரலில்.

''ஆற்றின் மீது பாறைகளின் மீது தாண்டியே மறு கரைக்கு செல்லலாமா? யார் என்னுடன் வருகிறார்கள்? சவால்.... யார் சமாளிக்கிறார்கள் என பார்க்கலாமா?''

''ஆஷ்! இந்த சவால் எல்லாம் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் இங்கேயே இருக்கிறோம். எங்கள் சார்பாய் நந்தனா வருவாள்.''

''போ, நந்தனா போ! போய் ஜெயித்து வெற்றித்திருமகளாய் 'வா.''

பருத்திப்புடவை கட்டிக் கொண்டு பாறைகளைத் தாண்டுவது சற்று சிரமமாய் இருந்தது. புடவை நனைந்து கால் தடுக்கியது; இருந்தும் விட்டுக் கொடுத்தாளில்லை. பாறையின் மேலிருந்து சுற்றிப் பார்க்க பார்க்க பரவசமாய் இருந்தது. அடேங்கப்பா! எத்தனை விதமான பறவைகள்!



அணில்கள் இயற்கை படைப்பின் அற்புதங்கள்! அப்படியே மெய் மறந்து போனாள். வேறு எங்கும் பார்க்க முடியாத ஆற்றுக்கு இடையே வளர்ந்து இருக்கும் பிரமாண்டமான மரங்கள் எத்தனையோ செய்திகளை சொல்லின. இயற்கை அழகில் பறவைகளின் வனப்பில் மயங்கி நின்றவளை ஜெயிப்பது கூட மறந்து ஆதித்தன் பார்த்துக் கொண்டே இருந்தான்.



# 8

விடியற்காலையில் பாசுபதீஸ்வரர் மங்கையர்க்கரசி வசந்தனுடன் சென்ற பொழுது... அங்கே கண்களை மூடி மெய்மறந்து வசுமதி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். முதலில் வசந்தன் வசுமதியை கவனிக்கவில்லை. காலையில் தேவா ஜாகிங் புறப்பட்ட பொழுது அவனது கையை கவனித்தாள். எப்பொழுதும் அவன் கையை விட்டு அகலாத மரகதக்கல் மோதிரத்தை அங்கு காணவில்லை. சும்மா போட்டு பார்ப்பதற்கு ஆசைப்பட்ட பொழுது கூட கழட்டித்தராத மோதிரத்தை இன்று காணோம் என்றதுமே பெரிய சந்தேகம் தோன்றியது வசந்தனுக்கு.

''எங்க மாப்பிள்ளை உங்க மோதிரத்தைக் காணோம்?''

''இன்றைக்கு காலையிலேயே வம்பை துவக்கிவிட்டாயா? அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? அது இருக்க வேண்டிய இடத்தில் பத்திரமாக இருக்கிறது.''

''நம் பரம்பரை சொத்து அல்லவா? அதனால் தான் அக்கறையாய் விசாரித்தேன்.''

''என் பரம்பரை பற்றி நீ உழட்டிக் கொள்ள வேண்டாம். நல்ல குலம் என்பது தவம், கல்வி, ஆள்வினையால் வருவது என நாலடியாரில் படித்தது இல்லையா? காலை வேளையில் கடமையை செய்ய விடு வசந்தா'' என தேவனாந்த் விலகிப் போனதையே நினைத்துக் கொண்டிருந்தான். எனவே நாகலிங்க பூ மரத்தினடியே அவன் நின்று விட பிரகாரத்திற்கு சென்று மங்கையர்க்கரசியின் கண்களில் வசுமதி பட்டாள். ''என்ன ஒளி பொருந்திய களையான முகம்! பார்க்க பார்க்க தெவிட்டாத பளீரிடும் அழகு! எந்த தேசத்து ராஜகுமாரியோ?' நீளமான பிஞ்சு விரல்கள், பஞ்சு போன்ற மென்மையான பாதங்கள், கூர்த்த எடுப்பான நாசி வரைந்தது போன்ற உதடுகள்; இடைக்கு கீழிறங்கிய அடர்ந்த கூந்தல், கிளிப்பச்சையில் ஜரிகை வேலைப்பாடு செய்யப்பட்ட பருத்திப் புடவை பசுங்கிளியாகவே அவளைக் காட்டியது. அவளை ரசித்துக் கொண்டிருந்தவரின் பார்வையில் அவள் கையில் இருந்த மோதிரம் பட்டது. 'இது... இது... எப்படி இவள் விரலில்?'

அவள் கண்விழித்ததும் எதிரில் நின்ற மங்கையர்க்கரசியைப் பார்த்து புன்னகைத்தாள்.

'பேசும் விழிகள், மயக்கும் புன்னகை! இருந்தாலும்... இவளிடம் எப்படி இந்த மோதிரம்?'



அவள் நகர்வதற்குள் ''ஏதம்மா இந்த மோதிரம்?'' என்றாள்.

''இது ஏட்டன் கொடுத்தது; பரம்பரை சொத்து என்று பறஞ்சது.''

சொல்லிவிட்டு பிரகாரத்தை சுற்றப் போய்விட்டாள். மின் அதிர்வில் இருந்தவர் சுதாரித்து அவளை மீண்டும் கவனிக்க முற்பட வசந்தன் அர்ச்சனை தட்டுடன் வந்தான்.

''நீ அர்ச்சனை பண்ணு. நான் இதோ வந்து விடுகிறேன்'' அவர் நகர்ந்ததும்'' தேவனாந்த் - மதுரவாணி'' என்ற பெயருக்கு அர்ச்சனை செய்யுங்கள்'' என்றான் வசந்தன். சுற்றி வந்த வசுமதியின் காதுகளில் அது விழ,

''அட! நீங்கள் நேத்திக்கு தேவாவுடன் பார்த்தேன் இல்லே? யார் மதுரவாணி? தேவாவின் தங்கையா?'' என்று வசந்தனிடம் கேட்டாள்.

''அவளை ஏற இறங்க பார்த்தான். மரகதக்கல் மோதிரம் அவன் கண்களிலும் பட்டது. மறுகணமே ''மதுரவாணி தேவானந்த் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்'' என்றான் சிறு தயக்கமும் இன்றி.

மிக மிக அதிகமாகவே அதிர்ந்து வெளிறிப் போனாள் வசுமதி. ''அதோ! அவர் தான் தேவானந்த்தின் அம்மா! அவருக்கு வெளியிடங்களில் பெண் எடுப்பதில் சுத்தமாக விருப்பம் இல்லை. தன் ஒரே மகனுக்கு தகுதியில்லாத இடத்தில் பெண் எடுக்க மாட்டார்கள். பெண் என்றால் அடக்கமாய் வீட்டில் இருக்க வேண்டும் என்று

நினைப்பார். மதுரவாணி குடும்ப பாரம்பரியத்திற்கு ஏற்றப் பெண் என முடிவு செய்திருக்கிறார். எதற்காகவும் குடும்ப மானத்தை விட்டு தரமாட்டார்.

வசுமதிக்கு கண்களில் கண்ணீர் தளும்பி விட்டது. அது பெருகி கீழே கொட்டிவிடும் முன் வேகமாக அங்கிருந்து வெளியேறினாள். வசந்தனின் மூளை துரிதமாக வேலை செய்தது. 'இவள் அழுது கொண்டே ஆனந்தின் முன் சென்று நின்றால் அவன் உடனடியாக இவளை திருமணம் செய்து கொள்ளவும் தயங்கமாட்டான். கண்டிப்பாய் இவள் கண்ணீருக்கு மிகுந்த மதிப்பிருக்கும். ஏதாவது பேசி இவளை தேவாவுடன் பேசுவதை தடுக்க வேண்டும். மரகதக்கல் மோதிரம் இவளிடம் உரிமையுடன் இருக்கிறது. எனவே கவனமாய் விஷயத்தை கையாள வேண்டும். இவள் ஒன்றும் விரட்ட முடியாத பூதமல்லவே? பார்த்தால் பிள்ளைப் பூச்சி போலிருக்கிறாள். இரண்டே தட்டில் விரட்டி விடலாம்!

அவள் பின்னாலே விரைந்து சென்றாள். நல்லவேளை! அவள் சென்றிருக்கவில்லை. நாகலிங்கப் பூவை கையில் பிடித்து இரசிப்பது போன்ற பாவனையில் கண்ணீரை கட்டுப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

''என்னம்மா தங்கச்சி! நீ ஏன் அழுகிறாய்? நேற்று தேவாவையும், உன்னையும் பார்த்ததுமே பொருத்தமான ஜோடி என்று நினைத்தேன். இன்று தேவனாந்த் - மதுரவாணி திருமணத்தைப் பற்றி சொன்னதுமே உன் கண்களில் கண்ட கண்ணீரால் எனக்கு நிச்சயமாயிற்று! உனக்குத் தான் தேவா. மதுரவாணி என் தங்கை தான்.



அவள் நான் என்ன சொன்னாலும் கேட்பாள். இந்த தங்கைக்காக அந்த தங்கையை விட்டுத்தரச் சொல்கிறேன். மதுரவாணி மறுத்து விட்டால் அவன் அம்மா எப்படி திருமணம் செய்து வைக்க முடியும்? இதை நானே முடித்து வைக்கிறேன். நீ கவலைப்படாதே! இந்த விஷயம் தேவாவிற்கு தெரிய வேண்டாம். அம்மா, பிள்ளைக்கு நடுவில், சண்டை எதற்கு? நான் எல்லாவற்றையும் சுமூகமாக தீர்த்து வைக்கிறேன். தேவாவின் அம்மாவையும் நீ சந்திப்பதை தவிர்த்தால் மிகவும் நன்றாக இருக்கும்.''

அப்பாவிப்பெண் வசுமதி அவன் சொன்னதை அப்படியே நம்பி விட்டாள். கண்ணீரை துடைத்துக் கொண்டு மலர்ந்த முகத்துடன் ''நன்னி சேட்டா'' எனக்கூறிவிட்டு புறப்பட்டாள். தேவாவின் விஷயம் இவ்வளவு எளிதாக முடியும் என வசந்தனே எதிர்பார்க்கவில்லை. கோவிலை விட்டு வெளியே வந்த மங்கையர்கரசி ''என்ன வசந்தா நீ வருவாய் என பார்த்தால் இங்கே என்ன செய்கிறாய்?''

''கோவிலில் நீங்கள் சற்றுநேரம் அமர்வீர்கள் என்று தான் இங்கே வந்தேன். சரி வாருங்கள் போகலாம். மாப்பிள்ளை காத்திருப்பார்.''

தேவாவை பெயர் சொல்லி அழைப்பதை அவன் தாய் ஏற்பதில்லை. ராஜாங்கம் இல்லாவிட்டாலும் ராஜ மரியாதை சரியாய் தன் மகனுக்கு தரப்பட வேண்டும் என எதிர்ப்பார்த்தார்.

'யார் இந்தப் பெண்? தேவா மிகுந்த பெருந்தன்மையானவன். தன் கடைசி காலத்தில் அவன் தந்தை

தேவாவிடம் சாவித்திரியைப் பற்றி கூறிய பொழுது அவளை ஆதரிக்க வேண்டும் என்று எடுத்துரைத்தவன். ஆனால் அவர் தான் அதை ஏற்கவில்லை. தேவா தாத்தாவிற்கு கொடுத்த வாக்குறுதி தான் முக்கியம் எனக் கூறிவிட்டார். அவர் மகனை விருப்பம் போல் அவர் வாழ்வின் முடிவிற்கு பிறகு செயல்பட உரிமை தந்து விட்டிருந்தார். தந்தையின் இழப்பிற்கு பிறகு தாயை சமாதானப்படுத்தி சாவித்திரி அத்தையை வீட்டிற்குள் ஏற்றுக் கொள்ள வைத்தான். அதனால் மதுரவாணியுடன் மணம் செய்ய விருப்பம் இருக்குமோ? என்று நினைத் தார்.

'ஆனால்... அவன் எண்ணம் வேறோ? உண்மையி லேயே இந்தப் பெண் கனிந்த முகமும், மலர்ந்த கண்களுமாய் அனிச்ச மலரைப் போல் மென்மையாய் இருக்கிறாள். தேவாவையும், இந்தப் பெண்ணையும் ஒன்றாக நிறுத்தினால்... ஆகா! அருமையான ஜோடிப் பொருத்தம்! என் தேவானந்திற்கு என்றே உருவானவள் போல் இருக்கிறாள். அவளை சந்திக்க வேண்டுமே? இவளைப் பற்றி தான் தேவா புதிர் போட்டானா? இவள் தான் தேவாவிற்கு உதவி இருக்க வேண்டும்.

குலம், கோத்திரம் பார்ப்பேன் என்று என்னிடம் சொல் லாமல், தேவா தயங்குகிறானா? என் பிள்ளைக்காக நான் எதையும் விட்டுத்தருவேன் என்று அவனுக்கு தெரி யாதா? என் பிள்ளை ஒன்றும் முட்டாளில்லை. தகுதி யற்றவர்களை அவன் தேர்ந்தெடுக்க மாட்டான். சட் டென இரக்கம் காட்டுவான் என்றாலும் உதவி செய் வதையும், உறவையும் குழப்பிக் கொள்ளமாட்டான்.



வரட்டும், வரட்டும் அவன் வாயிலிருந்தே உண்மை வரட்டும். அதுவரை நான் காத்திருப்பேன்.'

மகனை கவனிக்க அவன் முகத்திலிருந்த களையும், ஆனந்தமும் ஏதேதோ உணர்த்தின. கோவில் விபூதி, குங்குமத்தை அவனிடம் கொடுத்த பொழுது தான் பார்த்தாள் அவன் நெற்றியில் ஏற்கனவே அவை அங்கே துலங்கிக் கொண்டிருப்பதை.

''ஏதேது! என் மகனுக்கு கடவுள் நம்பிக்கை வந்து விட்டது போலும், காலையிலேயே கோவிலுக்கு போய் வந்தாகி விட்டது போலிருக்கிறது?''

''என்னம்மா செய்வது? உங்களைப் போன்று பிரி யத்துக்கு உகந்தவர்கள் பூசிவிடும் பொழுது மறுக்க முடிவதில்லை''

''அப்படியாப்பா? எந்த பச்சைக்கிளி வந்து பூசி விட்டது?''

''பச்சை பசுங்கிளி! மீனாட்சியம்மையின் கையிலிருக் கும் கிளி தான் அம்மா பூசிவிட்டது.''

''கையிலிருக்கும் கிளியோ? உன் மனசில் இருக்கும் கிளியோ? நீ நன்றாய் இருந்தால் எனக்கு போதுமப்பா! கிளியை என் கண்ணிலேயே காட்டமாட்டேன் என் கிறாயே?''

''உங்களுக்கு தெரியாமல் எதுவும் நடக்காதம்மா! நீங்கள் என்னை முழுமையாக நம்பலாம். நேரம் வரும் பொழுது நானே சொல்கிறேன். இப்பொழுது சந்தோஷ மாக நீங்கள் ஊருக்கு கிளம்புங்கள்.''

வசுமதியை அழைத்து வந்து அன்னையின் முன் நிறுத்துவதற்கு தேவாவிற்கு தயக்கமோ, பயமோ

கிடையாது. வசுமதியின் தம்பி, அம்மை அறிந்த அவர்கள் விஷயத்தை அவள் அண்ணன்மார்களிடம் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் அதை அத்தனை சுலபத்தில் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று அன்னை கவலைப்படுவதாக வசுமதி தெரிவித்து இருந்தாள். மேலும் அம்மை சேட்டன்களிடம் சம்மதம் வாங்கும் வரை யாருக்கும் தங்கள் விஷயம் தெரிய வேண்டாம்; படிப்பும் மீதியிருக்கிறது. படிப்பு முழுவதற்கும் சம்மதம் வாங்குவதற்கும் சரியாய் இருக்கும் என முடிவு செய்திருந்தனர்.

பூ வாசனையும், பழ வாசனையும் எங்கு மறைத்து வைத்திருந்தாலும் காட்டிக் கொடுத்து விடுமல்லவா? அப்படித்தான் அவர்கள் விஷயத்திலும் நடந்தது. வசுமதி அம்மை விஷயத்தை பக்குவமாய் எடுத்து சொல்வதற்குள் வசுவின் தம்பி வாய்தவறி உளறிவிட அண்ணன்கள் வானத்துக்கும், பூமிக்குமாய் குதித்தார்கள் ''இது சரி வராது. நம் வீட்டுப்பெண் அங்கே சென்றால் கஷ்டப்படுவாள். அவள் பூவை விட மென்மையானவள்; இளகிய மனசு உள்ளவள் அதனால் சுலபமாய் அவளை மயக்கி விட்டான். அவளுக்கு என்ன தெரியும்? ப்ரேமம் எல்லாம் அவளுக்கு சரி வராது.'' நகுலன் குறுக்கிட்டான். ''அங்கிள் அப்படிபட்டவர் இல்லை. அவர் சேச்சியை கண்ணு போல பார்த்துக்கும்.''

''இவனை இரண்டு போட வேண்டும்; கண்ணு போல பொன்னு போல என்று குறுக்கே பேசிக் கொண்டிருக்கிறான். நம்ம பொண்ணுக்கு வல்லாய்ம (வருத்தம்) உண்டாயிடக்கூடாது. அவள் அங்கு படித்தது போதும்.



போய் அழைத்து வந்து விடலாம். படிக்க ஆசைப் பட்டால் ஞங்ஙள் நாட்டிலேயே படிக்கட்டும்.''

''அது செய்யாதீங்க! சேச்சி அவிடை சுகமாயிட்டு இருக்கு. இங்ஙன, சங்கடம் உண்டாக்க வேண்டா!''

''ஏ! சும்மாயிரு'' என நகுலனை அதட்ட,

''குறச்ச திவசத்தில் இந்த மாஸங்கள் கடந்து போகும். இ வருஷம் கழிஞ்சிட்டு அவள ஞங்ஙளுடெ தறவாடுக்கு கூட்டி வந்திடலாம். படிப்பு பாழாக வேண்டா!'' என பெரிய அண்ணன் சொல்ல சின்னவர்கள் ''அது சரியாணு'' என வழி மொழிந்தனர்.

அண்ணன்களின் கோபத்தைக் கண்டு வசுமதி பயந்து நடுங்கிப் போனாள். ''தேவேட்டா, சேட்டன்மார் எல்லாம் தேஷீயம் ஆயிட்டு; என்னை உங்க கிட்டே இருந்து பிரிச்சிட மாட்டாங்களே?''

''சூ! இது எதிர்பார்த்தது தானே? நீ பயப்படாதே! நான் இருக்கிறேன். எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்'' அதே நேரம் வசந்தன் தன் திட்டத்தை செயல்படுத்தலானான். வசுமதி வீட்டிற்கு தேவானந்தைப் பற்றி மோசமாக ஒரு கடிதம் எழுதிப் போட்டான். மொட்டைக் கடுதாசி தான் என்றாலும் அது ஏற்படுத்திய விளைவோ மிக மோசமாயிருந்தது. அவளுடைய அண்ணன்கள் அனைவரும் கிளம்பி வந்து உடனே ஊருக்கு புறப்படுமாறு அவளை வற்புறுத்தினர். அவள் அம்மையை கட்டிக் கொண்டு 'பரீட்சை முடியட்டும்' என கரைந்து போனாள்.

''பொன்னு மோளே கரையேண்டா; நின்னோடு அம்மை உண்டாவு. எல்லாம் சுகமாயிட்டு கழியும்.''

அவர்கள் வந்த நேரத்தில் தேவானந்த் ஊருக்குச் சென்று இருந்தான். ரமணனிடம் சொல்லி அவனுக்கு விஷயத்தை தெரிவிக்கச் சொன்னாள். அவள் தேர்வு முடியும் வரை அங்கே இருக்கலாம் என்றும் அண்ணன் ஒருத்தன் அந்த ஊரிலேயே தங்கி தினமும் அவளை விடுதியில் இருந்து கல்லூரியிலும், கல்லூரி முடிந்ததும் விடுதியிலும் கொண்டு போய் விடுவதை செயல்படுத் தினர். அவள் அம்மை ஊருக்கு போகும் முன் நடராஜர் கோவிலுக்கு சென்றார். அங்கு தேவானந்த்தை சந்தித் தார். பார்த்தவுடன் அம்மையிடம் ஆசீர்வாதம் வாங்கிய வனை அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. ''இப் பொழுது வசுவை ஊருக்கு அழைத்துப் போனாலும் பயப்படாதீர்கள். எங்கள் மனதை யாராலும் மாற்ற முடியாது. அவள் அண்ணன்களுக்கு அவள் மேல் உள்ள அன்பைப் பற்றி நான் உங்களுக்கு சொல்ல வேண்டாம். அதனால் அவளை கட்டாயப்படுத்தி யாருக்கும் மணமுடிக்க மாட்டார்கள். மேலும் அம்மை நீங்கள் அவள் மனதை புரிந்தவர்கள்; நீங்கள் இருக்கும் பொழுது கவலைப் பட வேண்டிய அவசியமில்லை. படிப்பில் மேல் அவளுக்கு நல்ல ஆர்வமுண்டு. அது வீணாகக் கூடாது; அவள் படிக்கட்டும். இன்னும் இரண்டு வருடங்களில் என் மச்சான்களின் மனங்கள் கண்டிப்பாய் மாறும். நான் எல்லாருடைய சம்மதத்துடன் என் வசுவை மணந்து கொள்வேன்'' இந்தப் பேச்சை கேட்ட அம்மை மனம் நிறைந்து போனார்.

''வசு, பல தலைமுறைக்குப் பிறகு எங்கள் குடும் பத்தில் பிறந்த பெண் வாரிசு. நாலைந்து தலைமுறைக்கு முன்னால் பிறந்த பெண்ணிற்கு துர்மரணம் சம்பவிச்சு



போச்சு! அதிலிருந்து எங்க குடும்பத்தில் பெண்ணே பிறக்கவே இல்லை. சாபம் வாங்கிட்டு இருந்த குடும் பத்தில் வரமாய் கிடைத்தவள் வசுமதி. அவள் வாழ்க் கையிலும் பழைய மாதிரி பிரச்சனை என்று தான் சேட்டன்கள் பயப்படுகிறார்கள். உன்னை மாதிரி பார்த்தா கிடைக்க என்ட மகள் புண்ணியம் செய்திருக்கணும். பத்தொன்பது வயது பெண் என்றாலும் அவள் எங்களை பொறுத்த வரை பச்சைக் குழந்தை தான். நாங்கள் பரீட்சை முடிந்ததும் அவளை ஊருக்கு அழைத்து செல்கிறோம். என் பெண்ணை நீங்க தான் நன்றாக வாழ வைக்க வேண்டும்;'' எனக் கூறிவிட்டு புறப்பட்டார். வசுவும் தேவா தந்த நம்பிக்கையில் ஊருக்கு புறப் பட்டாள். ஆனால் விதி வேறு விதமாக விளையாடியது. அவள் ஊருக்கு சென்று ஒரு வாரத்திலேயே ஒரு பத்திரிகை அவள் வீடு தேடி வந்தது. அது கல்யாண பத்திரிகை. ''அம்மே! இடி விழுந்திட்டது. என்ட தேவா வுக்கு கல்யாணமாம்;'' என்றவள் விடுவிடுவென்று ஓடிச் சென்று கதவை சாத்திக் கொண்டாள். கல்யாணப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தார். மணமகன் தேவா என்றும் மணமகள் மதுரவாணி என்றும் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்தது. அதை அப்படியே போட்டு விட்டு மகளைத் தேடி ஓடினார். ''என்ட பொண்ணு மோளே தாழைத்திற'' வீட்டில் ஒருவரும் இல்லை. பெரியவன் மனைவியுடன் திருமணத்திற்கு சென்றிருந்தான். மற்ற அண்ணன் மார்களும் வேலைக்கு சென்றிருந்தனர். நகுலன் அப்போது தான் உள்ளே வந்தான். கதவின் தாழ்ப்பாளை சரியாக போடாததால வேகமாக தட்டியதும் கதவு திறந்து கொண்டது.

உத்தரத்தில் புடவையை கண்டதும், ''என்ன காரியம் செய்ய துணிந்து விட்டாய்? இதற்கா அம்மை உன்னை வளர்த்தது? இ வீட்டில் இன்னொரு துர்மரணம் சம்ப விக்க வேண்டாம். தேவா இங்ஙனம் செய்ய வாய்ப் பில்லே. இது ஏதோ சதியாக்கும்! உன் மனசில சஞ் சலத்தை வச்சுக்கிட்டு நீ வாழ முடியாது. உன் அனி யனை கூட்டிக்கிட்டு நேரா தேவாகிட்டே போ! என்ன நடந்ததுன்னு தெரிஞ்சுக்கிட்டு வா'' என நகுலனுடன் அனுப்பி வைத்தார். அவள் தொடர்ச்சியாய் பிரயாணம் செய்து மங்களபுரத்தை அடைந்த பொழுது ஏறக்குறைய பின்னிரவாகி விட்டிருந்தது. பிரம்மாண்டமான அரண் மனையை பார்த்ததும் பிரமித்து போனாள். 'இங்கு எங்கு போய், யாரிடம் போய் தேவாவைப் பற்றி என்ன கேட் பது? உண்மையிலேயே என் தேவாவிற்கு கல்யாணமா?' மேள தாள ஊர்வல ஓசை வெடிச்சத்தத்துடன் கேட்டது.

''என்ட குருவாயூரப்பா! என் தேவாவை எனக்கே கொடுத்துடு'' என அவள் மனமுருக வேண்டிய கணம்.

''வசு'' எனக் குரல் கேட்டது. திரும்பியவள் கழுத்தில் மாலையுடன் நின்ற தேவாவிடம் ஓடினாள்.

''தேவேட்டா! எனக்கு நீங்க வேணும். நம்மை பிரிக்க யாரோ சதி செய்யுறாங்க. உங்களுக்கு கல்யாணமா? கழுத்திலே ஏன் மாலை.... உங்களை பிரிஞ்சா நான் செத்துப் போயிடுவேன்!''

''ஹேய் வசும்மா! என்ன உளறுகிறாய்? உன்னை கனவில் கூட நான் பிரிவதில்லை. என்னாச்சு?''

அவளை அணைத்து தட்டிக் கொடுத்தான்.



''மாமா, சேச்சி இ கல்யாண பத்திரிகையைப் பார்த்து பேடி ஆகிப் போய் மரிச்சு போக பார்த்தது. அம்மை இது ஏதோ சதின்னு சொல்லி சேச்சியோட சஞ்சலம் போக்க இங்கே அனுப்பி வச்சது.''

அதை கையில் வாங்கிப் பார்த்தவன், அழுது கொண் டிருந்த அவள் முகத்தை நிமிர்த்தி ''உனக்கு என் மேல் நம்பிக்கை அவ்வளவு தானா? இது யாரோ உன்னை ஏமாற்ற செய்த சதி! இதை நம்பி உயிரை விட போனாயா வசு? உன் மேல் அன்பு வைத்ததற்கு நீ எனக்கு கொடுக்கும் தண்டனையா? உன்னை இப்படி விட்டு விட்டு வெளிநாட்டிற்கு போய் எப்படி என்னால் படிக்க முடியும்? அம்மாவின் அழுகை கூட என் வெளிநாட்டு பயணத்தை தடுக்கவில்லை. ஆனால் இப்பொழுது... நான் முடிவு செய்துவிட்டேன்.'' என்றவாறே மங்கையர்க் கரசியிடம் திரும்பினான்.

''கோவில் திருவிழாவில் நான் வேண்டிக் கொண்டது நிறைவேறிடுச்சு. மாரியம்மன் சக்தியுள்ளவள் என நிரூபித்து விட்டாள். இனி என் மருமகளை திருப்பி அனுப்ப வேண்டாம். திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விடலாம்'' மகன் பேசுவதற்கு முன்னரே முத்தாய்ப்பாய் முடிவு சொன்னார்.

சாவித்திரி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள். ஏதோ இப்பொழுது தான் வாழ்வு வளமாக இருக்கிறது. இந்த வீட்டின் மருமகளாக வேறு ஒருத்தி வந்தால்... தன் மகள், மகன் நிலை என்ன? தான் இந்த வீட்டில் பிறக்கவில்லையா? தனக்கு இந்த சொத்தில் பங்குயில்லையா? அன்றைக்கு அறியாமல் நான் செய்த தவறைத்தானே. இன்றைக்கு அண்ணன் மகனும்

அறிந்தே செய்கிறான். அவனுக்கு மட்டும் இரத்தின கம்பள வரவேற்பு. தனக்கோ பிச்சைக்காரிக்கு போடுவது போல் சோறு. இது என்ன நியாயம்? என் மகன் வசந்தன் சரியாகத்தான் சொன்னான். மதுரவாணியை தேவானந் திற்கு திருமணம் செய்து வைக்காவிட்டால் எங்கள் கதி அதோ கதிதான். வசதியான வாழ்விற்கு கொஞ்ச காலம் என்றாலும் மிக நன்றாக பழகி ஆகிவிட்டது. இனி இதை விட முடியாது. இந்த வாழ்வு நிலைக்க என்ன வேண்டு மானாலும் செய்யலாம். நேரே தன் அண்ணியிடம் சென்றாள்.

''அண்ணி! நீங்க செய்வது தப்பு! ஆனந்திற்கு என்று என் பெண் வீட்டிலேயே வளர்ந்து கொண்டிருக்கிறாள். அவளை விட்டுவிட்டு எவளோ முன்பின் தெரியாத வளை நம் பாரம்பரியம் கெட்டுப் போகுமாறு கல் யாணம் செய்து வைக்கிறீர்களே?''

மங்கையர்க்கரசி அவளை சுட்டெரிப்பது போல் பார்த்தார். அப்போதாவது சாவித்திரி பேசுவதை நிறுத்தி யிருக்கலாம். ஆனால் அவளோ சரியாய் பேசி நியா யத்தை வலியுறுத்தி காரியத்தை சாதிப்பதாய் எண்ணிக் கொண்டு, ''சீ! சீ! என்ன பெண் இவள்? ஆம்பிளையைத் தேடி வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறாள். அதுவும் அவள் அம்மாவே அனுப்பி வைத்தாளாம். தூ! தூ! மானங்கெட்ட குடும்பம்!'' என,

''சாவித்திரி நிறுத்து உன் பேச்சை! என் மருமகளைப் பற்றி நீ ஒரு வார்த்தை கூட பேசக் கூடாது. நீ இருபத் தைந்து வருடங்களுக்கு முன்னால் தகுதியில்லாத தரங்கெட்டவனோடு ஓடியவள் என்பதை மறந்து



விடாதே. உன் கணவன் இக்குடும்பத்தோடு இணைய எத்தனை தகிடுதத்தங்கள் செய்தான் என்பது என்னை விட உனக்கே நன்றாகத் தெரியும். சின்ன மாமனார் மகனுடன் உறவாடுவது போல் சேர்த்து அவனை பாழாக்கி, தவறுகள் செய்ய வைத்து பழி முழுவதையும் அவன் மேல்போட்டு அவன் வாழ்வையே குலைத்தவன் உன் கணவன். என் மகனையும் அவன் நெருங்க முயன்றான். என் கணவர் - உன் அண்ணன் எச்சரிக்கை யாய் இருந்ததால் அது முடியாமல் போயிற்று. என் மகன் எதுவும் தெரியாமல் உங்களை அழைத்து வரவில்லை. எல்லாம் தெரிந்தும் ஏன் கூட்டி வந்தான் தெரியுமா? நம்மை நம்பி பல பேர் வாழும் பொழுது நம் உறவுக் காரரை நாமே மன்னித்து வாழ வைக்காவிட்டால் எப்படி? என்ற பெருந்தன்மை தான் காரணம். அவன் மதுரவாணி யிடம் அன்பு காட்டியதால் அவள் மேல் ஆசையிருக் குமோ என்று நான் நினைத்தேன்; அவ்வளவு தான். என் மருமகளின் பாரம்பரியத்தைப் பற்றி பேசுகிறாயே, உன் மகளின் பாரம்பரியத்தை நினைத்துப் பார்த்தாயா? ஒரு பெண்ணைப் பற்றி பேசும் முன் அதற்கு உனக்கு தகுதியிருக்கிறதா? என்று யோசி.''

சாவித்திரி அப்படியே அதிர்ந்து வாயடைத்து போனாள். ''வசந்தன் வீட்டில் இல்லாமல் போய் விட்டானே!'' என தன்னையறியாமல் கூற.

''ஏன் அவன் இருந்தால் என்ன செய்துவிடுவான்? அப்பனுக்கு தப்பாமல் உன் பிள்ளை பிறந்து இருக் கிறான். அவன் புரட்டு வேலைகள் எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்? எனக்கு மட்டுமல்ல என் மகனுக்கும் தெரியும். எனக்கு கூட இப்போது ஒரு

சந்தேகம். இந்த மாதிரி பொய் பத்திரிகை உன் மகன் தான் அடித்து அனுப்பியிருப்பான். இது என் மருமகள் உயிரை பலி வாங்கியிருந்தால்.... ஐயோ!.... நினைக்கவே.... பயமாக இருக்கிறது. இந்த விஷயம் என் மகனுக்கு தெரிந்தால் தயங்காமல் உங்களை இங்கிருந்து அனுப்பி விடுவான். நடுத்தெருவில் தான் நிற்க வேண்டும்.''

''ராஜா மாதிரி எனக்கொரு மகன் இருக்கையில் நாங்கள் ஏன் நடுத்தெருவில் நிற்கப் போகிறோம்?''

''பார்த்து! மண் குதிரையை நம்பி ஏற்கனவே ஆற்றில் இறங்கியவள் நீ! ஒரு முறை பட்டாலே உணர்ந்து கொள்ள முடியாத முட்டாளா? ஒரே தப்பை எத்தனை முறை திருப்பிச் செய்வாய்?''

கேள்வியில் இருந்த உண்மை அவளை பேச விடாமல் செய்தது.



# 9

ரோஷினி சீக்கிரமே எழுந்துவிட்டாள். தலைக்கு குளித்து நுனியில் முடியிட்டுக் கொண்டு துளசி மாடத்தில் தீபம் ஏற்றி வைத்தாள். நெற்றியில் சந்தனம் துலங்க அந்த விழுகின்ற நேரத்தில் அவளை பார்ப்பவர்களை அப்படியே வசீகரித்து விடுவாள். ஏனோ



ஆதித்தனை அவளால் கவர முடியவில்லை. அழகு, அடக்கம், சமையல் திறமையோடு வீட்டிற்கு ஏற்ற குத்து விளக்காய் தான் இருந்தாள். அதனால் முத்தச்சி அவளை ஆதித்தனுக்கு மணம் முடிக்கலாமோ? என்ற எண்ணத்தில் இருந்தார். அவளுக்கும் அவனை மணந்து கொள்ள மிகுந்த விருப்பம் இருந்தது. ஆதித்தன் நன்றாகத் தான் பழகினான். ஆனால் நந்தனாவை பார்க்கும் பார்வையே வேறு என்று நிச்சயமாக அவளுக்குத் தெரிந்தது.

அவளை பார்க்கும் போது மட்டும் அவன் பார்வையே கனிந்து போகிறதே! அவள் எத்தனை வெடு வெடுத்தாலும், சிடு சிடுத்தாலும் லட்சியம் செய்வதே இல்லையே? அன்றைக்கு கார் ரிப்பேராகி நின்ற சமயத்தில் எப்படி பேசி விட்டுச் சென்றாள்? ஆனால் துளியளவு கோபம் கூட அவன் காட்டவில்லையே? சற்று நேரத்தில் 'மெக்கானிக்' வருவான் எனக் கூறிக் கொண்டு காரின் பானட்டில் அமர்ந்து கொண்டான். அவன் சொன்னது போலவே கொஞ்ச நேரத்தில் மெக்கானிக் ஸ்டெப்னியுடன் வந்துவிட 'கோபம் இருக்கும் இடத்தில் தான் குணமும் இருக்கிறது' என்றான்.

அவள் மேல் தான் எத்தனை நம்பிக்கை! நந்தனா வந்து விட்டால் அவளைத் தவிர யார் மேலும் கவனம் அவனுக்கு திரும்ப மாட்டேன் என்கிறது. காலை வேளையில் பேசிப் பழகலாம் என்றாலோ அவன் படுக்கையை விட்டு எழுவதே மிகவும் தாமதமாகத் தான். எல்லாரும் சீக்கிரம் எழுந்து விட்டாலும் முத்தச்சி செல்லப்பேரனை எதுவும் சொல்வது இல்லை. இந்நேரம் அவன் எழுந்து இருந்தால் எப்படியெல்லாம் பேசி மகிழலாம்.

இளையவர்கள் பேச விஷயங்களா வேண்டும்? மொக்கை ஜோக்குகள் கூட போதுமே? எண்ணிக் கொண்டே பார்த்தவள் வியந்து போனாள். 'அட! யாரது? ஆதித்தன் தானே? என்ன இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் எழுந்து விட்டான்? இந்த சமயத்தை தவறவிடக் கூடாது. உடனே அவனிருக்கும் கொன்றை மரத்தருகே செல்ல வேண்டும்' பரபரத்தவள் அப்போது தான் கவனித்தாள். ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு இள மஞ்சளில் சிவப்பு நிற நூலில் பூவேலைப்பாடு செய்யப்பட்ட பருத்தி புடவை; குட்டைக் கையில் ஒற்றைப் பூ மலர்ந்து சிரிக்க பனித்துளி படிந்த மஞ்சள் பூவாய் சிலிர்ப்புடன் வந்தாள். அவளிடம் சிரித்துக் கொண்டே அவன் நெருங்க... 'இவளைப் பார்க்கத்தான் இத்தனை சீக்கிரம் எழுந் தானா?'

''ஹாய் குட்மார்னிங்! காலை நேர தென்றலைப் போல சுகந்தமாய் இருக்கிறாய்!''

''காலை நேரத்தில் செய்வதற்கு எந்த வேலையும் உங்களுக்கு இல்லையா?''

''எப்பொழுதும் இயந்திரம் மாதிரி இருக்க முடியாது. இளைஞனாய் கொஞ்ச நேரம் இருக்க விடேன்.''

''அடடா! எந்நேரமும் இரண்டு பெண்களுடன் டீன் ஏஜ் பையனாய் சுற்றிக் கொண்டிருப்பவர் பேசுகிற பேச்சா இது?''

''ரொம்ப தப்பும்மா! நான் யார் பின்னாலும் சுற்றுவ தில்லை. என் பின்னால் வருபவர்களை உன்னைப் போல் விரட்டுவதுமில்லை.''



''நீங்கள் சுற்றினாலும் அவர்கள் சுற்றினாலும் இரண் டும் ஒன்றுதான். வழியை விடுங்கள்; எனக்கு வேலை இருக்கிறது.''

''இருக்கட்டும், இருக்கட்டும்! எனக்கொரு சந்தேகம் அதை தீர்த்து விட்டு போ.''

''என்ன?''

''உன் பெயர் என்ன?'' பைத்தியம் முற்றி விட்டதோ? என்ற தொனியில் பார்த்தாள். ''இது என்ன முட்டாள் தனமான கேள்வி எனப் பார்க்கிறாயா? நீ என்ன நினைத் தாலும் சரி! எனக்கு முதலில் பதிலைச் சொல்!''

''நந்தனா'' ''உன் முழுப் பெயரும் இது தானா? இல்லை வேறு ஏதாவது பெயர் இருக்கிறதா?''

''ஏன்? இந்தப் பெயர் பிடிக்கவில்லையா? புதுப் பெயர் எதுவும் சூட்டுகிற யோசனை இருக்கிறதா? எனக்கு அப்படி எந்த விருப்பமும் இல்லை.'' அவன் ஏதோ சொல்ல முற்படுவதற்குள் ரோஷனி வந்து சேர்ந் தாள்.

''என்ன நந்தனா? முத்தச்சி உன்னை காணோம் என்று தேடிக் கொண்டிருக்கிறார். நீ இங்கே அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாய்?''

அவளை முறைப்பதற்கு பதிலாய் ஆதித்தனை முறைத்து விட்டு நந்தனா உள்ளே நகர்ந்தாள்.

''இந்த கொன்றை மரப்பூக்கள் பொன்னிறமாய் மிகவும் அழகாய் இருக்கிறது தானே?''

ஆதித்தன் அந்த மலர்களைப் பார்த்தான். மஞ்சள் நிற மலர்கள் நந்தனாவை நினைவுப் படுத்தின.

''மண்ணில் பூத்த மலரை மணமுள்ள வரை

சுவாசி; உன் மனதில் பூத்த மலரை

உயிருள்ளவரை நேசி!'' எப்படியிருக்கிறது கவிதை?'' என அவனிடம் கேட்டாள்.

''எந்த குறுஞ்செய்தியில் சுட்டது இது? ஏற்கனவே இது என் அலைபேசிக்கு வந்துவிட்டது.''

''ஐயோ! இதுவும் சொதப்பியாகி விட்டதா? தனக்கு மட்டும் ஏன் இப்படி நேருகிறது? பிக்னிக் போனால் டயர் வெடித்து பாதியிலேயே திரும்ப நேருகிறது. மாதவனிடம் கெஞ்சி கூத்தாடி ஒரு கவிதைக் கேட்டு வாங்கி வந்தால்... அதுவும் இப்படியாகிப் போகிறது. எழுத்தாளரின் பேரனை கையாளுவது கூட இத்தனை கடினமாக இருக்கிறதே! கவித்துவம் மரபணுவிலேயே எழுதப்பட்டிருக்கிறதோ? அவன் எதுவும் எழுதுவ தில்லை என்றாலும் நல்ல ரசனை, நல்ல வாசிப்பு இருந்தது. அது தான் நந்தனாவை நோக்கி அவனை இழுக்கிறதோ? அவள் சிந்தனையில் இருந்து விடுபட்டு பார்க்கும் பொழுதோ அவன் அங்கிருந்து போயே போய் விட்டிருந்தான். எங்கு சென்றிருப்பான் என தெரியும் தான். ஆனால் அங்கு செல்வது பிரயோசனமற்றது என அவளுக்கு நன்றாகவே புரிந்தே இருந்தது. புரியாத விஷயங்கள் பேசப்படும். பிடிக்காத செயல்கள் நடக்கும்; அவற்றைப் பார்த்து பார்த்து கண்களில் அல்சரே வந்து விடும் அவளுக்கு. முத்தச்சியுடன் நந்தனா இருக்க, அங்கே ஆதித்தனும் சென்று அமர்ந்தான்.

''எழுத்து என்பது தவம். எழுதுபவர்களுக்கு அதாவது எந்த படைப்பாளிக்கும் மனிதர்கள் மேல் ப்ரியம் இருக்க



வேண்டும். அந்த ப்ரியம் இருந்தால் தான் நல்ல படைப்பை உருவாக்க முடியும். வெறும் துள்ளல், ஆட்டம், கொண்டாட்டம், இளமை மட்டும் இருந்து விட்டால் போதாது. ஓர் சமூக விழிப்புணர்ச்சியை படைப்பு ஏற்படுத்த வேண்டும். நல்ல அதிர்வை உண்டாக்காத படைப்பு வெறும் குப்பை காகிதத்திற்கு சமம்.

அழகியலும், அறமும் கலந்து இருக்கும் போது தான் நல்ல இலக்கியம் உருவாகிறது. ஒரு தனிமனிதன் வாழ்வில் மாற்றத்தை, நல்லதை உண்டாக்கினாலே அதுவே மிகப் பெரிய விருது தான். நம்மைச் சுற்றி இருக்கும் இயற்கையை நேசிக்க முதலில் படைப்பாளிகள் கற்று தர வேண்டும். இயற்கை இல்லையேல் நாம் இல்லை. பறவைகளும், விலங்குகளும் நம்மைச் சார்ந்து வாழ்வதாக நாம் நினைக்கிறோம். உண்மையில் நாம் தான் அவைகளைச் சார்ந்துள்ளோம். பறவையியல் ஆய்வாளர் சலீம் அலி என்ன சொல்கிறார் தெரியுமா? ''மனிதர்கள் இல்லா உலகில் பறவைகளாலும் விலங்கு களாலும் உயிர் வாழ முடியும். ஆனால் பறவைகளும், விலங்குகளும் இல்லாத உலகில் மனிதர்களால் வாழவே முடியாது'' எவ்வளவு உண்மையான வார்த்தை?''

முத்தச்சி சொல்ல சொல்ல எழுதிக் கொண்டிருந்த நந்தனா நிமிர்ந்தாள்.

''முத்தச்சி! இன்றைக்கு மார்ச் 20ந்தேதி.''

'சிட்டுக்குருவிகள் தினம்' நாம் கூட அதைக் கொண் டாடுவோம்.''

''விட்டு விடு தலையாகி நிற்பாய் அந்தச் சிட்டுக் குருவியைப் போலே'' எனக் கொண்டாடப்பட்ட

சிட்டுக்குருவி இனம் அருகி வருவது வேதனைக்கு உரிய விஷயம் தான். அன்றைக்கு நம் வீட்டு சின்னப் பயல் கூட கேட்டான். ''சிட்டுக்குருவியா? அப்படின்னா என்ன முத்தச்சி? அது கருப்பா? சிவப்பா? அது எங்கே இருக்கும்?'' என பல கேள்விகள் கேட்டான். தெரு, வாசல்... ஏன் வீட்டு முற்றங்களில் கூட எங்கெங்கும் காணப்படக்கூடிய மிகச் சிறிய பறவையினம் தான் சிட்டுக்குருவி. சாம்பலும், பிரவுனும் கலந்த சிறிய இறக்கைகள்; சின்ன முகத்தில் குட்டியான அலகு; சுறுசுறுப்பாய் அதிகாலையில் குரல் எழுப்பி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். பத்து பாத்திரங்களில் ஒட்டிக் கிடக்கும் பருக்கைகளையும், முற்றத்தில் காய வைக்கும் தானியங்களையும், வீட்டுத் தோட்டப் பந்தலில் படரும் பாகல், புடலை, பீர்க்கையில் இருக்கும் புரதச் சத்தும், நீர்ச்சத்தும் நிறைந்த புழுக்களையும், வயல்களில் காணப்படும் புழு, பூச்சிகளையும் உண்டு வாழும் சிட்டுக்குருவிகள்; என்றேன். 'இப்போது அவைகள் எங்கே போயின?' என அவன் திருப்பிக் கேட்டான்.

அதற்கு காரணம் ஒன்றா? இரண்டா? எதைச் சொல்ல? இக்குருவிகள் பெரும்பாலும் வீடுகளில் கூடு கட்டி வசிப்பதால் வீட்டுக்குருவிகள் என்றே கூறுவார்கள். ஒட்டு வீடுகளும், கூரை வீடுகளும் குறைந்து போய் கான்கிரீட் வீடுகளாகி விட்டன. மனிதனுக்கே மூச்சு விட இடமில்லாத போது குருவிகளுக்கு எங்கே இடம் கிடைக்கப் போகிறது? அவை வீடு கட்ட இடமில்லாமல் போய்விட்டது. சாக்கடைக்கு போகும் உணவு பருக்கைகளால் குருவியின் பசியாற்ற முடியுமா? வீட்டுத் தோட்டங்கள் இல்லாமலே போய்விட்டன.



வயல்களில் பயன்படுத்தப்படும் ரசாயனப் பூச்சி மருந்துகள் புழு, பூச்சிகளை கொன்று விடுவதால் பறவைகளுக்கு உணவு பஞ்சம் ஏற்படுகிறது. பூச்சி மருந்து பாதிப்புள்ள தானியங்களை உண்ணும் பறவைகள் இடும் முட்டைகள் குஞ்சு பொரிக்கும் வீரியத்தை இழக்கின்றன. சிட்டுக்களுக்கு இனப்பெருக்க காலம் என்று தனியாக எதுவும் இல்லை. ஆண்டுக்குக் குறைந்த பட்சம் 3 அடைகள் வரை வைக்கும். ஒரு அடையில் 14 குஞ்சுகள் வெளிவர வாய்ப்பு உண்டு. அதில் பத்தேனும் தப்பிப் பிழைக்கும். இப்போது அந்தச் சூழல் இல்லை. பூச்சிக் கொல்லி மருந்துகள் அடிக்கப்பட்ட தாவரங்களில் புழுக்கள் கிடைப்பது அரிது. அதனால் குஞ்சுகள் இரையின்றி இறந்து போகின்றன.

செல்போன் டவர்களில் கதிர்வீச்சும் இவ்வினம் அழிய காரணமாகின்றது. கோவை சலிம்அலி பறவையில் இயற்கை வரலாறு மையத்திலுள்ள ஆராய்ச்சியாளர்கள் இதை சோதனை அடிப்படையில் நிரூபித்து இருக்கிறார்கள். ஐம்பது முட்டைகளை கதிரியக்கத்தின் தாக்கத்தில் முப்பது நிமிடம் வைத்திருந்து பரிசோதித்ததில் எல்லா முட்டைகளின் கருக்களுமே சிதைக்கப்பட்டு விட்டன என்று ஆதாரப் பூர்வமாக நிரூபித்து இருக்கிறார்கள்.''

''என் முத்தச்சி, அருமையான முத்தச்சி!'' என ஆதித்தன் அவரைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டான்.

''நீ கூட அந்த சிட்டுக்குருவியைப் போலத்தான். இந்தக் கிழவியை விட்டு விட்டு வெகுதூரம் போய்விடுவாய். இவ்வளவு நாள் என்னை தவிக்க விட்டது

போதாதா? இனியாவது இந்தக் கிழவியின் வாழ்நாள் இருக்கும் வரையாவது என் கண் முன் இருப்பா! இன்னும் இரண்டு, மூன்று வருடங்கள் தாக்கு பிடிப்பேனா? உன் அப்பா கொடுத்த பிரிவு என்ற தண்டனையை தாங்க தாயான எனக்கு திடம் இருந்தது. பேரனைப் பிரிய இந்த முத்தச்சிக்கு தெம்பு என்பதே இல்லை. உன்னை கட்டிப் போட பார்த்தால் நீதான் பிடி கொடுக்கவே மாட்டேன் என்கிறாய்?''

''கட்டிப் போட மாயக்கயிறு...'' என இழுத்தவனின் பார்வை நந்தனாவின் மேல் படிந்தது. ஆனால் அவளோ சட்டென தலைகுனிந்து கொண்டாள். முத்தச்சியின் கூர்மையான பார்வையில் இந்தக் காட்சி பட்டது. உள்ளுக்குள் ஒரு சின்ன மலர்ச்சி ஏற்பட அவனை ஆழ்ந்து பார்த்தார்.

''முத்தச்சி, அம்மாவை கொண்டு போய் முதியோர் இல்லத்தில் விட்டு விட்டு அன்னையர் தினம் கொண்டாடுவது மாதிரி, சிட்டுக்குருவிகளை அழித்து விட்டு சிட்டுக்குருவிகள் தினம் கொண்டாடுகிறோமா?'' என பேச்சை மாற்றினான்.

''அப்படியில்லையப்பா! மக்களுக்கு இப்பறவையினத்தை காக்கும் முயற்சிகளுக்கு அழைப்பு; ஓர் தூண்டில், ஓர் விழிப்புணர்வு; இப்படி எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.''

''முத்தச்சி நம் வீட்டிலேயே சிட்டுக்குருவிகள் வாழ இடம் ஏற்படுத்தி தரலாமா?''

''தாராளமாய் செய்யலாம் கண்மணி. நல்ல யோசனை சொன்னாய்! என்னை மாதிரி வயசானவங்களுக்கு



பறவைகள் தான் பிள்ளைகள் மாதிரி. கொஞ்சவும், பேசவும் ஆறுதலாய் இருக்கவும் உதவுகின்றன. இன்னும் என் செல்லப் பேரப்பிள்ளை இங்கேயே இருக்கப் போவதாக வாக்கு கொடுக்கவில்லையே?''

''எல்லாம், இருப்பார்! இருப்பார்! நீங்கள் கவலைப் படாமல் இருங்கள்.''

''நீ சொன்னால் நான் நம்புகிறேன்'' என அவர் சிரிக்க ஆதித்தனும் கண் சிமிட்டிச் சிரித்தான்.

நந்தனா முகம் சிவந்து போனாள்.

மறுநாளே வீட்டின் மொட்டை மாடியில் மூங்கில்களை கட்டி கொட்டகை கீற்று வேய்ந்து கட்டப்பட்டது. வைக்கோலால் கூரை நெருக்கமாய் குளிர்ச்சி பொருந்தியதாய் கட்டப்பட்டது. ஒரு வாரம் ஓடிப் போக, கொட்டகையைச் சுற்றி மண் தொட்டிகளில் செடிகள் வெயில் படும் இடங்களில் வைக்கப்பட்டன. 'துளையிடப்பட்ட அட்டைப் பெட்டிகளை வைக்கலாமா?' என ஆதித்தன் கேட்க அவை நெடு நாட்களுக்கு தாங்காது என்று ஒரு கை தாராளமாக உள்ளே நுழைந்து வெளியே வருவதற்கேற்ப துளையிடப்பட்ட பானைகளை செய்து தரச் சொல்லி பத்து பானைகள் நந்தனா வாங்கி வந்திருந்தாள். பிரிகயிறால் கட்டப்பட்ட உறிகளின் அருகில் சிறிது வைக்கோல் நிரப்பப்பட்ட துளையிடப்பட்ட பானைகளை கட்டி தொங்க விட்டனர். அந்த உறிகளில் அரிசி போன்ற தானியங்களை வைத்தனர். கீழேயும் தானியத்தட்டுகளும், தண்ணீரும் வைத்தனர். எதையும் 'நெஸ்ட் பாக்ஸ்' ஆக மாற்ற முடியும் என்பதற்கு இணங்க ஹூபெட்டி முதற்கொண்டு, பல பொருள் கொண்டு

கூடு அமைத்து, பூனை, நாய் போன்ற விலங்குகளுக்கு எட்டாத உயரத்தில் வெயில், மழையால் பாதிக்கப்படாத இடத்தில் எல்லாம் வைத்தனர். குருவிகள் வரும் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தனர். ஏறக்குறைய ஒரு மாதம் நெருங்கி விட்டது. மறுநாள் தமிழ் வருடமான ''நந்தன வருடப்பிறப்பு'' காலையிலேயே நந்தனாவை முத்தச்சி வரச் சொல்லியிருந்தார். மாக்கோலமும், செம்மண் மிளிர வசந்தத்தை வரவேற்றுக் கொண்டிருந்தது.

வீட்டு பூஜையறையில் பெரிய குத்து விளக்கில் ஐந்து முகங்களும் திரிகளை வைத்து ஏற்றியிருந்தனர். அனைத்து வகையான கனிகளும், தானியங்களும், பருப்பு, உப்பு, நீர் தனித்தனி தட்டுகளிலும் கும்பத்திலும் வைத்திருந்தனர். பூஜை அறை சங்கில் நாணயங்களை நிறைத்து வைத்திருந்தனர். புதுப்புடவை பொன்னாவரணங்களும் வைக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றிற்கும் முன்னால் பெரிய நிலைக் கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது.

காலையில் வீட்டிலிருந்த அனைவரும் நிலைக் கண்ணாடியில் தெரிந்த அனைத்துப் பொருட்களிலும் கண் விழித்துவிட்டு குளித்து முடித்து புத்தாடை அணிந்து முத்தச்சியின் கால்களில் விழுந்து வணங்கி அவர் கையால் நாணயப் பையை அதாவது நூற்றியொரு ரூபாய் நாணயங்கள் கொண்ட பையை பரிசாகப் பெற்றனர். ஆதித்தன் வணங்கி எழுந்த பொழுது நந்தனாவும் உள்ளே வந்தாள். ஆரஞ்சு வண்ணமோ, பொன்னிறமோ காட்டிய சில்க் காட்டன் புடவையில் வந்தவள் நிலைக்கண்ணாடியை தரிசித்து முத்தச்சியின் கால்



களில் விழுந்து வணங்கி எழுந்தாள். 'என் கண்ணே! எல்லா ஆசையும் நிறைவேறி என் மனம் பூக்கட்டும்.'

முத்தச்சியின் கண்கள் பனித்து இருந்தன. முத்தச்சியின் நாவல், வெளியாகி பரபரப்பாய் விற்பனையாகிக் கொண்டிருக்கிற செய்தி வந்து சேர்ந்தது. ஆனால் முத்தச்சி அதைப் பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இப்பொழுது எல்லாம் அவர் மனது ஆசைப் பேரனையே சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தது. பேரன் சாயல்ல அவர் யாரைப் பார்த்தாரோ? அவன் என்ன சொன்னாலும், செய்தாலும் கோபிப்பது இல்லை. 'கடவுளே! இந்த அன்பை எனக்கு நிலைக்க வையப்பா!' என்பதே அனுதினமும் அவரது பிரார்த்தனையாக இருந்தது.

வீட்டில் உறவுக்காரர்கள் அனைவரும் நிறைந்து இருந்தனர். எல்லாரும் அன்புடனும், மரியாதையுடனும் முத்தச்சியிடம் நடந்து கொண்டனர். நாடே கொண்டாடும் எழுத்தாளரை ஏறக்குறைய தங்க தாம்பாளத்தில் வைத்து தாங்கினர். அவர் சொல்வதே எல்லா விஷயத்திலும் வீட்டினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் முடிவாய் இருந்தது. முத்தச்சியை தங்கள் பொக்கிஷமாகவே நினைத்தனர். அவர் மனம் கோணும்படி சின்ன விஷயம் கூட நடக்கக் கூடாது என மிகவும் கவனமாய் இருந்தனர். அவர் மதிக்கும் நந்தனாவை அவர்கள் ஏற்றுக் கொண்டது கூட அப்படித்தான். ரோஷனிக்கு அவளை பிடிக்காமல் போயிருந்து கூட அவளிடம் சின்ன அளவு... துணுக்கு அளவு கூட விகல்பம் காட்டியது இல்லை. முத்தச்சியின் ஆரோக்கியம் பேணுவதில் கூட மிகுந்த கவனம் செலுத்தினர்.

கைப்பிடித்து நடைப்பயிற்சிக்கு அழைத்து செல்வதில் இருந்து அவள் உடல்நலத்திற்கு ஏற்ற பத்திய உணவுகளை சமைப்பது வரை எல்லாவற்றையும் பார்த்து பார்த்து செய்தனர். தனக்காக மற்றவர்களும் உணவு கட்டுபாடு மேற்கொள்வதை முத்தச்சி கண்டித்து தடுத்து விட்டார். அவரும் அனைவருக்கும் வேண்டியதை அக்கறையுடன் செய்தார். இவ்வளவு பேர் சூழ்ந்திருந்தும் உள்ளுக்குள் ஓர் வெறுமை நிறைந்திருந்தது. என்றைக்கோ எதுவோ கிடைக்காத, நடக்காத ஏக்கம் உள்ளே நிறைந்து படிந்து வெறுமையாய் மாறி விட்டிருந்தது. ஆனால் அவரும் அதை வெளிக்காட்டிக் கொண்டதில்லை.

அவர்களுக்கு புரிந்ததோ, புரியவில்லையோ அவர் மனம் நோகும்படி எதையும் கேட்டதில்லை. தனித்திருக்கும் சமயங்களிலும், உறக்கம் வராமல் தவித்திருக்கும் இரவுகளிலும் அவர் படும் துன்பத்தை அறிந்தே இருந்தார்கள். ஆனால் அதற்கு ஆறுதலோ, தேறுதலோ சொல்ல முடியாத தங்கள் நிலைமைக்கு அவர்களும் வருத்தப்பட்டார்கள். எந்த துன்பத்தையும் காலம் ஆற்றும் என காத்திருந்தார்கள்.

நந்தனா கிளம்பி சென்றபிறகும் தன் அருகிலேயே அமர்ந்திருந்த ஆதித்தனை வாஞ்சையுடன் பார்த்தார் முத்தச்சி. அவன் தலையை மெல்ல வருடிக் கொடுத்தார்.

''என்ட பொன்னு மோனே! ஏதாவது என்னிடம் சொல்ல வேண்டுமா? தயங்காமல் சொல். நீ எதைக் கேட்டாலும் இந்த முத்தச்சி மறுக்காமல் சரி சொல்வேன்;'' ஒரு விநாடி தயங்கி பின் ''நீ என்னை விட்டு



செல்வதாகக் கூறினால் கூட நான் மறுக்க மாட்டேன். உன்னைப் பிரிந்து என் உயிர் செல்வதையும் யாராலும் தடுக்க முடியாது;'' என தழுதழுத்தார்.

''என் முத்தச்சி இன்றைக்கு சிறு குழந்தையாகி போய் விட்டார். நாளும், கிழமை இது என்ன பேச்சு? யாருடைய உரிமையையும் பறிக்கக்கூடாது; அன்பு என்ற பெயரில் அடிமை ஆகக் கூடாது என்று அப்பா சொல்லுவார்.''

''அவனுக்கென்ன? எதுவும் சொல்வான். என் வார்த்தைக்கு எதிர் வார்த்தையோ, மறுவார்த்தையோ அவன் பேசியது இல்லை. ஆனால் அவன் மனசுக்குள் நிறைய பேசியிருப்பான் போல... சிறு வயதில் படிப்பதற்காக சென்றவன்... மனதளவில் என்னை விட்டு வெகுதூரம் சென்று விட்டான். இனி இங்கு வந்தாலும் அவன் மனசு அவனுக்கு பிடித்தமான இடத்தில் தான் இருக்கும். என்னிடம் திரும்பாது. எனக்கும் உள்ளுக்குள் ஓர் குற்றஉணர்ச்சி! நீயாவது என் அந்திமகாலம் வரை உடன் இருப்பாயா? அதற்குத் தான் ரோஷனியை உனக்கு மணமுடிக்க நினைத்தேன். ஆனால் உனக்கு விருப்பமில்லை என்றால் நான் வற்புறுத்த மாட்டேன். அந்த காலத்திலேயே என்னையே யாரும் எதற்கும் வற்புறுத்தியது கிடையாது. அப்படியிருக்க உன்னை நான் வற்புறுத்த மாட்டேன். உன் மனசு வேறு எதிலாவது படிந்திருந்தால் சொல்லலாம்.''

''எனக்கே இன்னும் தெளிவு வரவில்லை முத்தச்சி! வந்ததும் சொல்கிறேன்.''

''தெளிவு செயலில் இறங்கினால் தானே கிடைக்கும்! வெறும் யோசனையை விட்டு விட்டு செயல்படு.

நினைத்தது நிறைவேறும்'' என நந்தனாவை நினைத்துக் கொண்டே கூறினார்.



## 10

தேவா - வசுமதி திருமணம் மிக கோலாகலமாய் நடந்தேறியது. அவள் அண்ணன்கள் திருமணத்திற்கு வர மறுத்துவிட்டார்கள். அவள் அன்னைக்கு அவர்கள் தடை போடவில்லை. அவரும் வரவில்லை. ஆனால்! முன்பே தன்னை சந்திக்க வந்த தேவாவிடம் ''எங்கள் வசுவை எங்களை விட நீங்கள் நன்றாக பார்த்துக் கொள் வீர்கள் என்று தெரியும். அவள் சட்டென்று உணர்ச்சி வசப்படுவாள். இனி ஏதாவது தவறு செய்தால் நீங்கள் தான் தாயாய் பொறுத்துப் போக வேண்டும்.

நான் வரவில்லை என்று தவறாக நினைக்க வேண்டாம். என் மனம் முழுவதும் உங்களிடம் தான் இருக்கும். என் பெண்ணிற்கு நீங்கள் தான் முக்கியம் என தன் உயிரை விடத் துணிந்து உணர்த்தி விட்டாள். அதனால் அவர் அண்ணன்களின் மனக்காயம் அதிகமாகி விட்டது. அதை ஆற்றுவது என் கடமை. நகுலன் சிறு வயதில் இருந்தே வசுமதியுடன் இணைந்தே வாழ்ந்து விட்டான். இங்கு அவள் இல்லாமல் வரமாட்டான். அவனையும் நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.''



''நகுலனை என்றைக்கோ எங்களில் ஒருவனாக ஏற்றுக் கொண்டு விட்டேன் அத்தை! இனி அவனது வளமான வாழ்வு என்னைச் சேர்ந்தது.''

சாவித்திரி மனதில் பட்ட காயத்தில் இரத்தம் வடிந்து சீழ்பிடித்து அழுகிக் கொண்டிருந்தது. அதனால் அதி லிருந்த கொஞ்ச நஞ்ச நல்ல எண்ணங்களும் அழிந்து போயிருந்தன. தன் தப்பு அவளுக்கு புரியவில்லை. சுட்டிக்காட்டி கடிந்து பேசிய அண்ணியின் வார்த்தைகள் தான் நெஞ்சத்தை சுட்டெரித்துக் கொண்டிருந்தன. 'என்னை ஓடிப்போனவள் என்றதுடன் என் மகளையும் ஓடுகாலியின் மகள் என்று இழிவுப்படுத்தினாளே!

இவளை பழிவாங்க வேண்டாமா? நான் படுகின்ற துடிப்பை, தவிப்பை இவளும் அடைய வேண்டாமா? திருமணம் நடந்து விட்டால் இவள் மகனை நிம்மதியாக வாழவிட்டு விடுவேனா? என் மருமகள், என் மருமகள் என்கிறாளே? இவர்களை இணைய விடாமல் பிரிக்கி றேனா இல்லையா பார்? இவள் மருமகளை இந்த குடும்பத்தை விட்டு ஓட வைக்காவிட்டால் என் பெயர் சாவித்திரி இல்லை. ஓடுகாலி இவள் மருமகள் தான் நிருபிக்கிறேன்' என தனக்குத் தானே சூளுரைத்துக் கொண்டாள். மதுரவாணி தான் அந்தக் கல்யாணத்தில் மிக சந்தோஷமாய் வளைய வளைய வந்தாள். அவள் வயதை ஒத்த நகுலன் கேலியும், கிண்டலுமாய் இருந் ததை ரசித்து தானும் பதிலுக்கு கேலியும், கிண்டலுமாய் பேசி திரிந்து கொண்டிருந்தாள்.

வசந்தனுக்கு கை மீறி விஷயங்கள் நடந்து விட்டதால் இறுகிப் போன முகத்துடன் வலம் வந்து கொண்டிருந் தான். சாவித்திரி சும்மா இல்லை; வசுமதியை அன்பாய்,

ஆதரவாய் கவனித்துக் கொள்வது போல் இனிக்க, இனிக்க பேசினாள். வேலைகளை தானே செய்து கொடுத்தாள். புதுவாழ்வு இனித்தது வசுமதிக்கு. தேவா அவளை நெஞ்சில் வைத்து தாங்கினான். கூடவே அன்புக்குரிய தம்பி வேறு. ஆனந்தத்தை தவிர வேறு எதையும் அவள் காணவில்லை. சாவித்திரி கல்யாண பத்திரிகை அடித்து அவள் வீட்டிற்கு அனுப்பியது மங்கையர்கரசி தான் என தூபம் போட்டாள். வசுமதிக்கு இருந்த சந்தோஷ மனநிலையில் அது பெரிதான விஷயமாக தோன்றவில்லை. மாமியாரிடம் மகளைப் போலவே நடந்து கொண்டாள். மாமியாரும் மகள் இல்லாத குறையை மருமகள் மூலம் தீர்த்துக் கொண்டார். நல்லநாள் பார்த்து குலதெய்வம் கோயிலுக்கு மருமகள் கையால் புது பொங்கலிடச் சென்றார்கள். 'யார் உதவியும் இன்றி, புது மருமகள் பொங்கலிட வேண்டும்' அதாவது தனியாய் தானே பொங்கி இறைவனுக்கு படைக்க வேண்டும். வசுமதிக்கு சமைக்கவே தெரியாது. இப்பொழுது தான் மாமியாரிடம் ஒவ்வொன்றாக கற்றுக் கொண்டு வருகிறாள். இந்த நேரத்தில் இப்படி ஒரு சோதனை. ''எவ்வளவு பேருக்கு சமைக்க வேண்டும்? என்னென்ன பொருள்கள்? எந்த அளவு? எப்படி செய்ய வேண்டும்?'' என கேள்விகளை அடுக்கும் பொழுதே தேவா சிரிக்க ஆரம்பித்தான். ''நகுலா! நல்ல ஹோட்டலில் ஏதாவது வாங்கி வந்து விடப்பா.''

''அப்படியே பொங்கலுக்கு நான் எழுதி தரும் பொருள்களையும் வாங்கி வந்து விடுங்கள். நான் பொங்கல் செய்தவுடன் நீங்கள் அதை சாப்பிடுங்கள். நான் நீங்கள் வாங்கி வந்ததை சாப்பிடுகிறேன்.''



''வசு சொல்வது சரிதான்! என் மருமகள் செய்ததை நாம் சாப்பிடுவோம். கடையில் வாங்கி வருவதை அவளுக்கு தந்துவிடுவோம்.''

அனைவரும் சிரித்தனர். அந்த சிரிப்பைக் கண்டு சாவித்திரிக்கு பொசு பொசு வென்று வந்தது. 'குல தெய்வ கோவிலில் பொங்கல் சரியாக வராவிட்டால் தெய்வக் குற்றம் என எல்லாரும் பயப்படுவார்கள்; ஏதாவது செய்து பொங்கலை கெடுக்க வேண்டும். எல்லாரும் மன வருத்தத்தால் தவிக்க வேண்டும்' என முடிவு செய்து கொண்டாள்.

வசுமதி பக்தியாய் வேண்டிக் கொண்டு புதுப்பானையில் நீர் நிறைத்து அடுப்பில் ஏற்றினாள். பால் கிடைக்காததால் தண்ணீரையே அதிக அளவு எடுத்துக் கொண்டு செய்ய ஆரம்பித்தாள். மஞ்சளில் பிள்ளையார் பிடித்து சூடம் காட்டி மணியடித்து அடுப்பை பற்ற வைத்தாள். நகுலனும், வாணியும் ஆலமரக்கிளையைப் பற்றி ஊஞ்சலாடிக் கொண்டிருந்தனர். வசந்தன் ஆற்றங் கரையில் நீராடிக் கொண்டிருந்தான். மங்கையர்க்கரசி கோயில் பிரகாரத்தின் ஓரமாய் அமர்ந்திருந்தார். தேவாவை அங்கு காணவில்லை. ''சேச்சி! இவ்விடெ வரு'' என நகுலன் வசுமதியை அழைத்தான். ''எந்தா வேண்டே அனியா?' என அவள் நகர சாவித்திரி அங்கே வந்தாள். உலையில் அப்போது தான் அரிசியை போட்டிருந்தாள் வசுமதி. அதிலிருந்த நீரை அருகில் இருந்த பாத்திரத்தில் பாதியளவு வடித்து எடுத்துக் கொண்டு போய் ஆற்றில் ஊற்றினாள் சாவித்திரி. ''என்னம்மா ஊற்றுகிறாய்?'' என வசந்தன் கேட்க, ''ம். என் வயிற்று எரிச்சலை ஊற்றுகிறேன். இன்றைக்கு பொங்கல்

பொங்கலாக இருக்காது. நறுக்கரிசி பொங்கல் தான். சாப்பிட முடியாமல் சாப்பிட்டு எல்லாரும் வயிற்று வலியில் சாகட்டும். ஐயோ! இப்படி ஆகிவிட்டதே? என்ன தெய்வக்குற்றமோ? என மனப்புழுக்கத்தில் தவிக்கட்டும்.''

அங்கே வசுமதி வர திடுக்கிட்டு சமாளித்தாள், ''நீ ஏன் அம்மா இங்கே வருகிறாய்? குரல் கொடுத்திருந்தால் நானே வந்திருப்பேனே? கோயில் வாசலில் நீர் தெளித்து கோலம் போட பாத்திரத்தை எடுத்து வந்தேன்.''

அவள் அசந்த சமயத்தில் வெல்லத்தில் கொஞ்சம் எடுத்து வந்து ஒளித்து வைத்தாள். இடையில் தேவா எங்கிருந்தோ வந்தான். தன் அன்பு மனைவி அடிக்கடி அங்குமிங்கும் நகர்ந்து ஏதோ தேடுவதைப் பார்த்து யாருமில்லா சமயத்தில் அருகே சென்று பற்றி இழுத்தான்.

''என்ன கண்மணி? யாரைத் தேடுகிறாய்?''

''எங்கே போனீர்கள் தேவேட்டா? பொங்கல் எப்படி வருமோ? என்று எனக்கு கவலையாக இருக்கிறது.''

''இதற்கெல்லாம் கவலைப்படாத கண்ணம்மா! நீ எப்படி செய்தாலும் நாங்கள் சாப்பிடுவோம். செய்கின்ற மனசும், அன்பும், பரிவும் தான் முக்கியம்.''

''ஏதாவது தப்பு செய்து தெய்வ குற்றம் ஆகிவிடப் போகிறது தேவா.''

''தெய்வத்திற்கு குற்றம் குறைகள் தெரியாது. அன்பு மட்டும் தான் தெரியும். அன்பே சிவம் என படித்தது இல்லையா?''



பொங்கலை இலையில் வைத்து கடவுளுக்கு படைத்துவிட்டு சாப்பிடத் தொடங்கிய அனைவருமே சுவையில் சப்புக் கொட்டினர். வசந்தன், சாவித்திரியை கேள்விக்குறியாய் நோக்க 'நன்றாக இல்லாவிட்டால் கூட அருமை மருமகள் செய்தது என விழுங்கி வைப்பார்கள். வயிற்று வலியால் துடிக்கும் பொழுது தான் புரியும்' என எண்ணிக் கொண்டே இலையைப் பார்த்தாள். நன்கு, குழைந்து பால் கலந்தாற் போலிருந்தது. இது, இது எப்படி சாத்தியம்? துளி விண்டு எடுத்து வாயில் போட்டாள். சுவையோ சுவை! இலையில் இருந்த பொங்கல் நிமிடத்தில் காலியானது. வசுவின் வாயில் பொங்கலை ஊட்டிவிட்டான். ''சூ! எப்படி தேவா, நான் செய்த பொங்கல் இவ்வளவு சுவையாய் இருக்கிறது?''

''அது தான் கண்ணம்மா எனக்கும் புரியவில்லை! நான் வந்து எட்டிப்பார்த்த பொழுது பொங்கல் பானையில் தண்ணீரே இல்லை' பொங்கலுக்கு ஊற்ற பால் கேட்டாயே என்று ஐந்து லிட்டர் பால் வாங்கி வந்தேன். அதை அப்படியே பானையில் ஊற்றிவிட்டேன். சற்று நேரம், நீ அயர்ந்து அப்படி நின்றதால் அப்படியே கிண்டிவிட்டு வந்து விட்டேன்.''

''ஆகா! தேவேட்டா உங்க கைவண்ணத்தால் தான் இன்று பொங்கல் சுவையோ சுவையாக இருக்கிறது. நீங்கள் மட்டும் இதை செய்யவில்லை என்றால் பொங்கல் அரிசி அரிசியாக இருந்திருக்கும். நான் சரியாய் நானே தண்ணீர் வைத்தேன்? எப்படி குறைந்து போனது?''

''ஓ அதுவா? பானைக்கு தாகம் எடுத்து குடித்திருக்கும்.''

''போங்க தேவா'' என அவள் சிரிக்க தன் செயல் பொய்த்து போனது எப்படி என்று சாவித்திரிக்கு புரிந்து போயிற்று.

'சிரிங்க, சிரிங்க. இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி சிரிக்கப் போகிறீர்கள்? காலமும், நேரமும் எனக்கும் கூடி வரும்: அப்போது நான் வைத்துக் கொள்கிறேன் என் கச்சேரியை.'

நடக்கும் பொழுதே தலைச்சுற்றி தடுமாறினாள் வசுமதி. அவளை சட்டென்று தாங்கிப் பிடித்தான் தேவா.

''என்னடா அம்மா ஆச்சு?'' என கரங்களைப் பற்றி யவன் அவள்.

''ஆ'' என விரல்களைப் பிரித்துப் பார்த்தான். உள் ளங்கை கன்றி போயிருந்தது. மயில் இறகால் வருடுவது போல் மென்மையாய் வருடி விட்டான். சற்று தாமதித்து காரில் ஏறினார்.

''என்ன வசு?'' என மங்கையர்க்கரசி கேட்க,

''இலேசாக தலையைச் சுற்றுகின்றது.''

''தேவா மருத்துவருக்கு சொல்லி விடு.''

வீட்டில் நுழைந்த சற்று நேரத்தில் மருத்துவர் வந்து சேர்ந்தார். நாடி பிடித்து பார்த்துவிட்டு ''இராணியம்மா! நீங்க பாட்டி ஆகப் போகிறீர்கள்! வாழ்த்துக்கள்'' என்றார்.

சந்தோஷத்தில் விழாவே கண்ணேறு கழித்து கொண் டாடிவிட்டார்கள். நாளுக்கு நாள் வாந்தியும் உடல் உபாதைகளும் அவளுக்கு அதிகமாயின. மங்கயைர்க்கரசி அருகே இருந்து அவளுக்கு தைரியம் சொல்லி கஷாயம்



வைத்துக் கொடுத்து கவனித்துக் கொண்டார். தேவா அவள் வீட்டிலேயே அடைந்து கிடந்தால் ஒரு மாதிரி இருக்கும் என்று வெளியே அழைத்துச் சென்றான். உலாவ மாலை வேளைகளில் கூட்டிச் செல்வான். இருந் தும் அடிக்கடி சோர்ந்து சோர்ந்து போனாள். அதனால் மங்கையர்க்கரசி ''தேவா, ஒரு முறை அவள் அம்மா விடம் கூட்டிச் சென்று வா. மனசுக்குள் அம்மாவை பார்க்கும் ஏக்கம் இருக்கிறதோ, என்னவோ?''

''டாக்டர், இந்த நிலைமையில் ரொம்ப தூரம் பிரயாணம் செய்யக் கூடாது என்று சொல்லி இருக்கிறார். கொஞ்ச நாள் போகட்டுமே!''

''பேசாமல் நீயே போய் அவர்களை கூட்டி வாயேன்.''

''அது சரி தான் அம்மா! நாளைக்கே நான் செல் கிறேன்'' மறுநாள் அவன் கிளம்பிய பொழுதே செய்தி வந்து சேர்ந்தது. பதறிப் போய், வசுமதி, நகுலை அழைத்துக் கொண்டு மலை நாட்டிற்கு புறப்பட்டான். போகும் பொழுதே மெல்ல நகுலனிடம் விஷயத்தை சொல்லி விட்டான். வசுமதியிடம் மிக மிக மென்மை யாய் விஷயத்தை சொல்வதற்கும் அவள் வீடு சென்று சேர்வதற்கும் சரியாய் இருந்தது. அங்கே அவள் அம்மா இறுதி யாத்திரைக்கு கிளம்பிக் கொண்டிருந்தார்.

''அம்மே!'' என கதறியவள் அப்படியே மயங்கி தேவா வின் மேல் சரிந்தாள். அவள் மேடிட்டிருந்த வயிறை பார்த்த அண்ணன்களுக்கு அவளிடம் கோபிக்க மனம் வரவில்லை. ஒன்றும் சொல்லாமல் அவர்களும் அவளைத் தேற்றுவதில் முனைந்தனர். ''என்னாச்சு சேட்டா? என்னிடம் ஒண்ணு கூட சொல்லலையே?''

''அம்மே பாத்ருமில் வழுக்கி விழுந்து மண்டையில் பலமாய் அடிபட்டு விட்டது'' என பெரிய அண்ணன் அத்துடன் நிறுத்திக் கொண்டார்.

''சேட்டா, எனக்கு சொல்லி இருக்கலாமே?'' என்றதும் பட்டென்று பெரிய அண்ணி, ''உன் வீட்டிற்கு தான் டிரங்கால் போட்டு சின்ன அண்ணன் சொன்னாரே'' என.

''இல்லையே; எனக்குத் தெரியாதே.''

''உன் மாமியாரிடம் தான் பேசினார். நீ வெளியில் சென்று இருப்பதாக சொன்னாராம். கடைசி வரை உன்னை பார்க்கத் தான் அம்மா துடித்துக் கொண்டிருந் தார். நகுலனைக் கூட அவர் தேடவில்லை.''

வார்த்தைகளே மறந்து போனது போல் அமைதி யானாள். தேவானந்தும் அவர்கள் அந்தச் செய்தியை சொன்ன பொழுது அங்கே தான் இருந்தான். 'கண்டிப் பாய் அம்மா இதை சொல்ல மறந்திருக்க வாய்ப்பே இல்லை; இப்படிப்பட்ட விஷயத்தை மறைக்கக் கூடிய வரும் அல்லவே? என்ன நடக்கிறது? முன்னர் அப்படித் தான் தவறான எண்ணத்துடன் கல்யாண பத்திரிகை அனுப்பப்பட்டது. அதைப்பற்றி நான் அப்பொழுதே ஆராய்ந்து இருக்க வேண்டுமா? இன்றைக்கு இவ்வளவு பெரிய விஷயத்தை யாரோ கேட்டுவிட்டு வேண்டு மென்றே மறைத்து இருக்கிறார்கள். வசுமதியை எப்படி நான் சமாதானப்படுத்துவேன்? அம்மாவின் பெயரை யாராவது தவறாக பயன்படுத்துகிறார்களா? முதலில் இதை கண்காணிக்க வேண்டும்.'



மிகவும் தாமதமாகத் தான் சிந்திக்க ஆரம்பித்தான் தேவா. சிந்தித்தவன் உடனே செயல்பட்டு இருந்தால் பல்வேறு பிரச்சனைகள் வராமல் முற்றிலும் தவிர்த்து இருக்கலாம். மனிதனுக்கே உரிய என்ன ஆகும்? பார்த்துக் கொள்ளலாம் என்ற உணர்வு வேறு வேலையை பார்க்க வைத்தது. ஆனால் அதுவே பெரிய விரிசலை வீட்டிற்குள் உருவாக்கியது. வசுமதி மாமியாரிடம் கோபிக்கவில்லை, ஏன் இப்படி செய்தீர்கள்? என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. அவள் கேட்டிருந்தால் அல்லது என்ன நடந்தது? என வினவியிருந்தால் கூட விளக்கம் கிடைத்திருக்கும், யார் குடும்பத்திற்குள் விளையாடுகிறார் என்ற உண்மையாவது புரிந்திருக்கும். எதுவுமே செய்யாமல் அமைதியாய் இருந்தாள். ஆனால் பழைய மாதிரி ஒட்டுணர்வு மட்டும் குறைந்து போயிற்று. இது சாவித்திரியின் கண்களில் தெளிவாகவே புலப் பட்டது.

சாவித்திரியின் மகிழ்ச்சியைப் பார்த்து வசந்தன் கேட்டான்.

''என்னம்மா?''

''இப்பொழுது தான்டா காலம் கூடி வருகிறது. இனி நான் நினைப்பது எல்லாம் நடக்கப் போகிறது பார்.''

''விவரமாக சொல்லேன்.''

''அம்மா மகள் போல் உறவாடிக்கொண்டிருந்த மாமியார் மருமகளை கவனித்தாயா?''

''பார்த்தேன்! பட்டும் படாதது போல, விட்டேற்றி யாய் இருப்பது போல் படுகிறது. இதை தேவா கூட கவனிக்கவில்லையா? அவன் ரொம்ப கூர்மையாய் இருப்பானே?''

''வசுமதியின் அம்மா சாக கிடப்பதாகவும், அவளை கடைசியாக பார்த்து பேச வேண்டும் என ஆசைப்படு கிறார் எனவும் போன் வந்தது; நான் தான் எடுத்தேன். என் குரல் தெரியாததால், ஏன் மங்கையர்க்கரசியின் குரல் கூட தெரியாததால் என்னை வசுவின் மாமியார் என நினைத்துப் பேசினார்கள். வசு வீட்டில் தான் இருந்தாள்; நான் அவள் வெளியே சென்றிருப்பதாக கூறிவிட்டேன். அவள் அம்மா இறந்த செய்தி வந்த பிறகு தான் இங்கிருந்து கிளம்பினார்கள்.''

''இரு, இரு அம்மா, மீதியை நான் சொல்கிறேன். அங்கே போனதும் ஏன் அப்பொழுதே வரவில்லை என சண்டைப் போட்டு இருப்பார்கள். அப்ப தான் தொலை பேசி விஷயம் தெரிந்திருக்கும். மாமியார் ஏன் இப்படி செய்தார்கள்? என்று வசுமதியின் மனம் முறிந்திருக்கும். அப்படித்தானே?''

''ரொம்ப சரி!''

''இப்பதானம்மா! நீ என்னை மாதிரியே யோசிக்க ஆரம்பித்து இருக்கிறாய். இன்னும் என்னென்ன திட் டங்கள் வைத்திருக்கிறாய்?''

''அதையெல்லாம் பொறுத்து இருந்து பார். இவளை துரத்தி விட்டு தேவானந்திற்கு என் பெண்ணை மணம் முடித்து என் அண்ணியின் கண்களில் விரலை விட்டு ஆட்டுகிறேனா? இல்லையா பார்.''

''நீ நிச்சயம் செய்வாய் அம்மா. இப்ப தான் அப்பா வின் சாமர்த்தியம் உனக்கு வந்திருக்கிறது.''

''இந்த மதுரவாணி எங்கே போய் தொலைந்தாள்? தேவாவை கைக்குள் போட்டுக் கொள்ளத் தெரிய



வில்லை. எந்நேரமும் விளையாட்டும், சிரிப்புமாய் திரிகிறாள்.''

''எல்லாம் நாளாக நாளாக சரியாய் போகும்.'' இரு வரும் நடுக்கூடத்திற்கு வந்த பொழுது மங்கையர்க்கரசி உறவுப் பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தார்.

''என்னவோ தெரியலை! வசுமதி அவள் அம்மா இறந்து போனதிலிருந்து வாடியே கிடக்கிறாள். எதிலும் ஈடுபாடு இல்லை. கலகலப்பாக இல்லாவிட்டாலும் இரண்டொரு வார்த்தைகளாவது பேசலாமில்லே? ஒற்றை வார்த்தையோடு அமைதியாகி விடுகிறாள். அம்மாவின் இழப்பு பெரியது தான். தானே அம்மாவாக மாற ஒரு சில மாதங்களில் குழந்தை பெற இருக்கும் பொழுது இப்படி இருப்பது குழந்தை வளர்ச்சியை பாதிக்குமே என கவலையாக இருக்கிறது.''

''கோவில் பூசாரிக்கிட்டே மந்திரிச்சு விபூதி பூசுங்கள், எல்லாம் சரியாகப் போகும்.''

இந்தப் பேச்சு ஊஞ்சலில் படுத்திருந்த வசுமதியின் காதுகளில் கூட விழுந்தது. மேலே கேட்க பிடிக்காமல் எழுந்து அறைக்குள் சென்றாள்.

அதை நமுட்டுச் சிரிப்புடன் ''பார்த்துக் கொள்'' என்பது போல் மகனிடம் கண் ஜாடை காட்டினாள் சாவித்திரி. அவனும் நன்றாகவே புரிந்து கொண்டான்.

மறுநாள் காலை சமையலறைக்குள் நுழைந்தாள் சாவித்திரி. சப்பாத்தி போட பிசைந்து வைத்திருந்த மாவில் கொஞ்சத்தை உருட்டி எடுத்து வந்தாள்.

''அந்த மாவில் என்னம்மா செய்யப் போகிறாய்?''

''இரு. இரு! அவசரப்படாதே! பொறுத்திருந்து கவனி!''

சப்பாத்தி மாவில் உருவ பொம்மை செய்தாள். பின் கண், காது, மூக்கு வைத்து மஞ்சள் குங்குமம் தடவினாள். பிறகு நாலைந்து குண்டூசிகளை எடுத்து அந்த மாவில் ஆங்காங்கே சொருகினாள். ''இனி பாரேன் வேடிக்கையை? யாரோ.... இல்லையில்லை... மாமியார் ஏதோ பில்லி சூன்யம் வைத்ததாக எண்ணி பயப்படப் போகிறாள் பாரேன்! இனி எழுதி எழுதிச் செல்லும் விதியின் கை என் மூலம்.''

இரவு அனைவரும் உறங்கிய பிறகு இரண்டு எலுமிச்சை பழத்தை அரிந்தாள். அதன் மேல் குங்குமத்தை தடவினாள். சப்பாத்தி மாவு குச்சி மனிதன் பொம்மையை வசுமதியின் அறை வாசலில் ஓரத்தில் நிலைப்படியை ஒட்டி வைத்தாள். எலுமிச்சை மூடிகளை அங்கொன்று இங்கொன்றாக நான்கு மூலைகளில் தூக்கிப் போட்டாள். நள்ளிரவில் பூனையை பிடித்து ஓடவிட்டாள். பாத்திரங்களை உருட்டிக் கொண்டு தடதடவென ஓடிய சத்தம் கேட்டு வசுமதி விழித்தாள். விளக்கை போட்டு விட்டு வெளியே வந்த வசுமதியின் காலில் உரசிய வாறே பூனை ஓடியது. அவள் பயந்து அலற.... தேவா எழுந்து ஓடிவந்தான். ''என்ன வசு? என்னவாயிற்று?''

''தேவேட்டா! அங்கே... அங்கே...'' என கண்களை மூடிக் கொண்டு நடுங்க...

அவளை ஆதரவுடன் தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

''என்ன கண்ணம்மா?''



''அந்த... அந்த... பொம்மை... யாரோ நமக்கு கெடுதல் செய்ய... இப்படி செய்திருக்கிறார்கள்.''

அப்போது தான் அவன் அதை கவனித்தான்.

''பயப்படாதே கண்மணி! சப்பாத்தி மாவில் யாரோ சிற்பம் செய்ய முயற்சித்திருக்கிறார்கள். நாட் பேட்'' என அதை எடுக்க குனிந்தான்.

''வேண்டாம், வேண்டாம்! இது ஆபத்தானது. உங்களுக்கு ஏதாவது ஆகிவிடும்.''

''இந்த மாவு உருண்டை என்னம்மா செய்யும்? முதலில் மூட நம்பிக்கையிலிருந்து வெளியே வா. இந்த சமயத்தில் இப்படி பயப்படக்கூடாது. இங்கே பார். என் மகள் தைரியசாலியாக பிறக்க வேண்டாமா?''

''மகள் இல்லை, மகன் தான்.''

''சரி! யாராய் இருந்தாலும் தைரியசாலியாய், வீரமாய் பிறக்க வேண்டும். வா, வா, துன்பமே நம்மை கண்டு துவண்டு ஓட வேண்டும்.''

கீழே குனிந்து அந்த பொம்மையை எடுத்து உருட்டி மாவாக்கினான். எலுமிச்சை துண்டுகளை எடுத்து மாவுடன் சேர்த்து கொண்டு போய் குப்பைத் தொட்டியில் போட்டு வந்தான்.

''போ! மறந்துவிட்டு உறங்கு.''

அவன் சொன்னதோடு நின்றிருந்தால் வசுமதி அதை மறந்து போயிருப்பாள். அவன் குப்பைத் தொட்டியில் போடச் சென்ற பொழுது சாவித்திரி வந்தும் ஒன்று தெரியாதது போல் விசாரித்து விட்டு ''பூசாரி வந்துட்டு போனார். இதை செய்வதற்கு தானா வந்தார்? எனக்கு

தெரியாதம்மா! உன் அத்தை உன்னிடம் சொல்லாமலா இருந்திருப்பார்? நான் வருகிறேன்; நீ படு'' என சென்றாள். அவள் நாசுக்காய் ஏற்றிய நஞ்சு வசுமதியின் மனசில் ஏறிக் கொண்டது.

''தேவேட்டா! எனக்கு மனதில் அமைதியே இல்லை. படித்தால் மனசின் கவனத்தை திசை திருப்பலாம். கல்லூரி படிப்பை தொடர முடிந்தால் சந்தோஷமாக இருக்கும்'' என தனிமையில் இருக்கும் பொழுது சொன்னாள்.

''நீ படிக்கிறாய் என்றால் எனக்கு சந்தோஷம் தான். ஆனால் இப்பொழுது நீ கல்லூரிக்கு செல்ல முடியாதே? குழந்தை இன்னும் பதினைந்து நாட்களில் பிறந்து விடும். இந்த வருடம் முடியட்டும். அடுத்த வருடம் நீ படிக்கலாம். வசுமதி எல்லாரிடமும் கலகலவென பேசி வளர்ந்தவள். கூட்டுக்குடும்பம் அவளை மிக மிக பாசமாய், அரவணைத்து அவள் குணத்தை, திறமையை ரசித்து போற்றியவர்கள். அவளுக்குள் எந்தவிதமான தீய எண்ணங்களும் இதுவரை படர்ந்ததோ, வளர்ந்ததோ இல்லை. தப்பு செய்பவர்களைக் கூட ஏனோ தண்டிக்க வேண்டும் என்று கூட நினைத்தது இல்லை. அவள் கோபப்பட்டது கூட கிடையாது.

நகுலன் அவளுடன் வந்தது அவளுக்கு மிகவும் ஆறுதலாய் இருந்தது. அன்பான அன்னையை, பாசமான அண்ணன்களை பிரிந்து வாழும் துன்பத்தை சற்று குறைத்தது. நகுலன் தன் இரண்டாவது தாயாகத்தான் வசுமதியை பார்த்தான். அவளுக்கும் அவனிடம் அப்படியொரு பாசப்பிணைப்பு, மங்களபுரத்திற்கு வந்த பிறகு



தேவாவின் அன்பு, மங்கையர்க்கரசியின் அரவணைப்பில் அவள் திளைத்திருந்த நேரத்தில் நகுலனும் வேறு வேறு விஷயங்களில் ஆர்வம் செலுத்தலானான். புதிதாக விளையாட்டு ஆர்வம் முளைத்திருந்தது. அதற்கு தேவாவும் தூண்டுகோலாய் இருக்க உற்சாகமாய் அதில் ஈடுபடலானான். எப்பொழுதும் அவளையே சுற்றிக் கொண்டிருந்தது போக எப்பொழுதாவது தான் அவனையே காணக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. அவள் வீட்டில் யார் எந்த வேலை செய்தாலும் அனைவருக்கும் தெரியும். ஆனால் இங்கு யார் வேலை செய்கிறார்கள் என்று தெரிவதில்லை. இன்னமும் யார் வேலைக்காரர்கள், யார் உறவுக்காரர்கள் என்பதே வசுமதிக்குப் பிடிபடவில்லை. எல்லாரும் அவளிடம் மரியாதைக்கு உகுந்த தூரத்தை விட்டு நெருங்கி வருவதில்லை. அவள் வீட்டில் எல்லாரிடமும் ஓர் இனிமையான நெருக்கம் இருந்தது. இங்கோ தேவா, நகுலனைத் தவிர மற்றவர்களிடம் இனம்புரியாத விளக்கம் இருந்தது. நன்றாகப் பழகினார்கள்; வேண்டியது எல்லாம் கிடைத்தது. மரியாதை அதிகமாகவே இருந்தது. ராஜ குடும்பத்தின் மருமகளாக வந்து விட்டாலும் அவள் மனதளவில் நடுத்தரக் குடும்பத்தின் செல்வமகளாகவே இருந்தாள். ராஜகுடும்பத்தின் பழக்கங்களுக்கு முற்றிலும் மாற்றிக் கொள்வது அவளுக்கு அத்தனை கைவரவில்லை. வேட்டை அவளை பொறுத்தவரை உயிர் கொலை தான்; வீரம் என அவளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. தேவாவின் அப்பா, தாத்தா, வேட்டையாடிய விலங்குகளின் தோல்கள் பாடம் செய்யப்பட்டிருந்த அறைக்குள் மறந்து போய்கூட அவள் காலடி

எடுத்து வைக்கவில்லை. மாடிப்படி வீட்டினுள் நடு நாயகமாக இருந்தது. மாடியின் மேல் வளைவில் ஒரு புறமாய் இருந்தது அந்த அறை. தேவாவும், நகுலனும் கோல்ப் விளையாட தோட்டத்திற்கு சென்றிருந்தனர். விடிந்து சூரியன் உதயமாகி இருப்பதை அறிவிப்பது போல் மெல்ல வெளிச்சம் பரவ ஆரம்பித்தது. தலைக்கு குளித்து நெற்றியில் மஞ்சள், குங்குமம், சந்தனம் துலங்க ஈர முடியை கோதியவாறு கவனமாய் கீழே இறங்க மாடி வளைவிற்கு வந்தாள் வசுமதி. தன் மேல் யாரோ பின்னால் மோதியதை... இல்லை... தள்ளியதை உணர்ந்து தடுமாறி சமாளிக்க முடியாமல்... திரும்ப முடியாமல் கீழே உருளும் பொழுது ''ஐயோ'' என மங்கையர்க்கரசி அலறும் குரலை கேட்டவாறு மயக்கமானாள் நிறைமாத கர்ப்பிணியான வசுமதி.



## 11

என்றும் இல்லாத வழக்கமாய் டி-ஷர்ட்டும், ஜீன்ஸும் அணிந்திருந்தது ஆதித்தை 'சாக்லேட் பாயாக' முழுமையாக காட்டியது. ஜிப்ஸியை அநாசியமாக ஓட்டினான். அருகில் அமைதியாய் நந்தனா அமர்ந்திருந்தாள். 'கலம்காரி கைவேலைப்பாடு' செய்யப்பட்ட காட்டன் புடவையில் கம்பீரமாய் தான் இருந்தாள். சாக்லேட் ஃபாய் அவளை உட்பக்க கண்ணாடி வழியாய் பார்த்துக்



கொண்டு தான் இருந்தான். 'வயசுக்கு ஏற்றார் போல் சின்னப் பெண்ணாய் உடை உடுத்திக் கொண்டால் என்ன? எப்போதும் கண்டிப்புக்கார ஆசிரியைப் போல உடுத்திக் கொண்டு.... விபு இவளை விட மூத்தவள்; இருந்தும் அவள் எப்படி மாடர்னாய் இருக்கிறாள்! அவளைப் போல் முக்கால் பேண்ட்டும், கையில்லாத பனியனும் கழுத்து நிறைய நீள கிரிஸ்ட்டல் மாலையும் அணிய வேண்டும் என்று ஆசைப்பட வேண்டாம்.... ஆனால் கௌரவமான எத்தனை நவீன உடைகள் இருக்கின்றன? அதில் ஏதாவது ஒன்றை அணிந்தால் என்ன? எந்நேரமும் யாரையும் நெருங்காதே என எச்சரிக்கிற மாதிரி மொடமொட காட்டன் புடவைதான்!' மங்குனி மங்கூஸ்!

'இவளை இப்படி தள்ளி வரவே எத்தனை வேலை செய்ய வேண்டியிருந்தது! முத்தச்சியிடம் போய் சென்னை ஷாப்பிங் மாலுக்கு இவளை அழைத்துச் செல்ல எவ்வளவு நாசுக்காய் பேச வேண்டியிருந்தது? அந்த மாதிரி வேலை எதுவும் நடந்ததாக காட்டிக் கொள்ளாமல் ஏதோ முத்தச்சிக்காக அவளை அழைத்துச் செல்வது போல் பாவ்லா வேறு திறமையாக செய்ய வேண்டியிருந்தது. ஆளின் பழக்கவழக்கம் தான் பழங்காலமாய் பீட்ஸா யுகத்தில் தயிர்சாதமே பெஸ்ட் -னு சொல்ற M.S.Office கேர்ள் - என்று நினைக்க வைக்குது. ஆனால் வேலை... ஷார்ப்னஸ்.... வெரி இன்ட்ரஸ்ட்டிங்!

ச்சூயிங்கம் மென்று கொண்டே ''ஹாய் சின்ட்ரெல்லா.... என்ன கனவில் இருக்கிறாய்? தொலைந்து போன கண்ணாடி செருப்பை வெளியில் தேடிக் கொண்டிருக்கிறாயா?''

''என்ன?'' என சட்டென கோபமடைந்தவள், ஏதோ நினைத்து மௌனமானாள்.

''ஹேய்! ஈஸி! இந்த கேர்ள்ஸே இப்படித்தான்!''

''கேர்ள்ஸைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?''

''ஏதோ கொஞ்சம் தெரியும். சொல்லட்டுமா?

சர்வர் கேர்ள்ஸ் - எப்போதும் பிஸியாக இருப்பது போல பந்தா காட்டி சமயத்தில் பையன்களின் வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கும் பெண்கள்.

''இ-மெயில் கேர்ள்ஸ் - நின்னது, நடந்தது, தும்மினது, இருமினது, பக்கத்து சீட் பையன் தன்கிட்டே தண்ணி வாங்கிக் குடிச்சது முதற்கொண்டு மேலிடத்துக்கு மெயில் தட்டிவிட்டு கண்ணைக் கசக்கும் கிளீசரின் பார்ட்டிகள்!''

''போதும்! போதும்!''

''ஹேய்! நம்பு! இதெல்லாம் சும்மா கப்ஸா என்று நினைக்காதே! அனைத்தும் உண்மை. இன்றைக்கு எல்லா வகை பெண்களையும் உனக்கு காட்டுகிறேன்.''

கடற்கரைச் சாலைக்கு அருகே உள்ள ஷாப்பிங் மாலின் முன் ஜிப்ஸியை நிறுத்தினான்.

சாவியை கையில் எடுத்து விரலில் சுற்றியவாறே தாவி படிகளில் ஏறினான். நடக்க ஆரம்பித்ததும் ஒரு திசையில் இருந்து கமகமவென்று பேக்கரிப் பொருள்களின் நறுமணம் மூக்கைத் துளைத்தது.

''பிஸ்கட் சுடச்சுட சாப்பிடலாம் வா.''

பில்கவுண்ட்டரில் பணத்தைக் கொடுத்து ஒரு காகிதத்தட்டில் பிஸ்கட்டுகளை வாங்கிக்கொண்டு திரும்பும்



போது விதவிதமான வாசனை திரவியங்களின் நெடியுடன் மேக்கப்புடன் சிலர் கடந்து சென்றனர். நட்டு வைத்த செயற்கை ஈச்ச மரத்தினடியில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த நந்தனாவின் அருகில் சென்று உட்கார்ந்தான். ''இப்போது சென்ற கேர்ள்ஸை பார்த்தாயா?'' ''ம்! ஓவர் மேக்கப்!''

''மேக்கப்பை கிராஃபிக்ஸ் மாதிரி போட்டு அழகு தேவதையாய் அழுகுணி ஆட்டம் காட்டும் இவர்கள் மல்டி மீடியா கேர்ள்ஸ்.''

வாயை பொத்திக்கொண்டு சிரித்தாள்.

''நீங்க பேசாமல் ரோஷனியை அழைத்து வந்து இருக்கலாம். அவளுக்கு இது மிகவும் ஏற்ற இடம்; மேலும் ஷாப்பிங் செய்யவும் ஆசைப்படுவாள்.''

''ஐயய்யோ! அவ பெண் டிரைவ் கேர்ள். சொந்தமாய் மூளை இல்லாட்டியும், சொன்னதை மண்டையிலே ஏத்தி வச்சுக்கிட்டு அப்பப்ப நம்மை டார்ச்சர் பண்ணிடுவாள்.''

''ம்ஹூம்! எனக்கு என்ன பேர் வச்சிருக்கீங்க? அதையும் சொல்லிடுங்க.''

''ஆகா! அதை எப்படி இப்பவே சொல்வது? இன்னும் எனக்கு ஆக வேண்டிய காரியம் எல்லாம் பாக்கி இருக்கிறதே!''

''அந்த பயம் இருந்தால் சரி. இப்பொழுது இங்கு என்ன வாங்க வேண்டும் என்று சொல்லுங்கள்.''

''வா, போகலாம்'' என எதிரே இருந்த எஸ்கலேட்டரை நோக்கி நகர்ந்தான். நந்தனா அருகே வந்ததும்,

''என்ன தயாரா?'' என்றவன் சட்டென அவள் கையைப் பற்றிக் கொண்டு தாவி அதில் ஏறினான். எதிர்பாராமல் சற்று தடுமாறியவளை விழுந்து விடாமல் பற்றிக் கொண்டான்.

'இது என்ன விளையாட்டு' என கோபமாய் பார்த்தாள்.

''ஹேய்! எவ்வளவு ரொமான்ட்டிக்கான இடத்திற்கு வந்து இருக்கிறோம்? இங்கு வந்தும் உன் புகழ்பெற்ற கோபத்தைக் காட்டாதே. என்னையாவது சந்தோஷமாய் கலர் பார்க்க விடம்மா! காணுமிடம் எல்லாவற்றிலும் பெண்கள்; விதவிதமான உயரங்கள் விதவிதமான உடைகள், ஆனால் எல்லாரும் ஒன்று போல்-' (ஷாம்பூ விளம்பரம் போல்) முடியை விரித்து போட்டுக் கொண்டு ஷாப்பிங் செய்கிறார்கள். கோன் ஐஸூம், மொபைல் போனுமாய் கும்பல் கும்பலமாய் செல்கிறார்கள்.''

''தனியாகவா செல்கிறார்கள்?'' என மெல்லத்தான் முணுமுணுத்தாள். ஆனாலும் அவன் அதை கவனித்து விட்டான்.

''ஒரு கைக்கு கோன் ஐஸ், மறுகைக்குக் காதலர் அல்லது பாய்பிரெண்ட். அவர்கள் வாழ்க்கை இனிப்பாகவே இருக்கிறது....'' என பெருமூச்சு விட்டவாறே கடிகார கடையினுள் நுழைந்தான்.

''அம்மாவிற்கு ஏற்ற மாடலிங் கைக்கடிகாரம் தேர்ந்தெடு. நான் அப்பாவிற்கு எடுக்கிறேன். அவர்களுக்கு திருமண நாள் வருகிறது. வெள்ளிவிழா ஆண்டு. மறக்க முடியாத பரிசை எதிர்பாராமல் கொடுக்க வேண்டும்.''



'ஓ! அது தான் ரோஷனியையோ, விபுவையோ அழைத்து வராமல் என்னை கூட்டி வந்தாரா?' என எண்ணியவளின் மனதிற்குள் சிறு ஏமாற்றமும் வந்தது. இலட்ச ரூபாய்க்கு கடிகாரங்கள் வாங்கினான்.

'நூறு ரூபாய்க்கு வாங்கினாலும் லட்ச ரூபாய்க்கு வாங்கினாலும் அதே நேரம் காட்டும் கடிகாரங்கள் தான்' என எண்ணிக் கொண்டாள். இசைக்குறுந்தட்டுகள் பலவும், தோல் பொருள்கள் பகுதியில் பலவிதமான கைப்பைகள், வாசனாதி திரவியங்களையும் வீட்டினருக்காக வாங்கினான்.

''உனக்கு என்ன வேண்டும்?''

''ம்ஹூம்! எனக்கு இதெல்லாம் கட்டுப்படியாகாது.''

''நான், உனக்கு வாங்கித் தரமாட்டேனா?''

''இலவசமாய் யாரிடமும் எதுவும் பெற்றுக் கொள்ளக் கூடாது.''

''நீ மட்டும் இலவச சேவை செய்யலாமா?''

''அப்படியென்ன நான் செய்தேன்?''

'நீ எனக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்வது எனக்குத் தெரியாது என்றா நினைத்துக் கொண்டாய்?'

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையை உணர்ந்து தலையை குனிந்து கொண்டாள். இருந்தாலும் அவன் பார்வையை விலக்கிக் கொள்ளவில்லை. இப்பொழுது எல்லாம் அவன் சற்று அதிகப்படி உரிமை எடுத்துக் கொள்வதாகவே அவளுக்குத் தோன்றியது.

''முத்தச்சிக்கு என்ன வாங்கலாம்? நீ தான் அவருடன் நெருங்கி பழகுகிறாய். வீட்டில் அனைவருமே அவரிடம் மிகுந்த மரியாதையுடன் ஒரு வட்டத்திற்கு மேல் நுழையாமல் மதிப்புடனும், அன்புடனும் பழகுகின்றனர். நீயோ எல்லா எல்லையையும் உடைத்து விட்டது நன்றாகவே தெரிகிறது. அது தான் முதல் நாளே ரசித்தேனே மடியில் தலை சாய்த்திருந்த அழகை! அப்புறம் என்னை அதிகாரம் செய்ததையும் தான்!''

''ஓ! மன்னித்துக் கொள்ளுங்கள்! உங்களை அதிகாரம் செய்யவோ, என் உரிமையை நிலை நாட்டவோ நான் அப்படி சொல்லவில்லை.''

''நீ விளக்கம் எதுவும் சொல்லத் தேவையில்லை. அன்றைக்கே உன் மேல் கோபம் வரவில்லை. இன்றைக்கா உன்னை கடிந்து கொள்ளப் போகிறேன்? மன்னிப்பெல்லாம் நமக்குள் எதற்கு?''

பேச்சை மாற்றுவது போல்,

''எல்லாரும் முத்தச்சியின் பேச்சை கேட்கிறார்கள். ஆனால் முத்தச்சியோ உங்கள் பேச்சை அல்லவா கேட்கிறார்கள். இன்றைக்கு கூட நீங்கள் தான் நான் உங்களுடன் வர முத்தச்சியிடம் வலியுறுத்தி இருப்பீர்களோ? என்று தோன்றுகிறது.''

'புத்திசாலிதான்' என எண்ணிக் கொண்டே,

''நான் ஏன் சிபாரிசு பிடிக்க வேண்டும்? விருந்தோம்பலில் சிறந்த தமிழ்நாட்டுப் பெண்ணாகிய நீ நான் கேட்டால் மறுக்கவா போகிறாய்?'' என மடக்க,



அவனுக்கு பதில் கூறாமல் வித விதமான பித்தளை விளக்குகள் பகுதிக்குள் நுழைந்தாள். இரண்டடிக்கு மேற்பட்ட சிறிய தூண் பீடத்திலிருந்து கிளி சர விளக்கை தன் அலகால் கொத்தி கீழ்நோக்கி பிடித்திருந்தது. மிக அழகாய் இருந்த அந்த விளக்கை முத்தச்சிக்காக தேர்ந்தெடுத்தாள்.

''நைஸ்! இது ஒன்றாய் வாங்காமல் இரண்டாய் வாங்கி விடலாம்'' என ஆதித் கூறி இரண்டிற்கும் ஆறாயிரம் ரூபாயைக் கொடுத்து வாங்கினான்.

''நீ கண்டிப்பாய் ஏதாவது வாங்கிக் கொண்டு தான் ஆக வேண்டும்'' ஹாட் பேஷன் நகைகள் எத்தனை இருக்கின்றன! வா, வா வாங்கலாம்.''

''இருங்கள்!'' என்றவள் வளையத்தின் உள்ளும் வெளியும் ஜெய்ப்பூர் பீட்ஸ்களோடு ஆன்ட்டிக் ஃபினிஷ் செய்யப்பட்ட காப்பர் மிக்ஸ்டு கம்மலை தேர்ந்தெடுத்தாள்.

விலையை எட்டிப் பார்த்தான் ஆதித்தன்.

வெறும் ரூ.66/ -தான் அதற்கும் பணம் தர அவள் தன் கைப்பையைத் திறக்க...

''இதற்கு மேல் நீ என்னை அவமானப்படுத்த முடியாது. மேலும் ஒரு 66 ரூபாயில் நான் பிச்சைக்காரனாகி விடப் போவதில்லை. உன் பொன்னான நேரத்தில் எனக்கு உதவி செய்ய வந்ததற்காக சிறு பரிசு என நினைத்துக் கொள்!'' என கடிந்து ஆரம்பித்து கனிந்து முடித்தான்.

டிரஸ் செக்ஷனுக்குள் நுழைந்தனர்.

ஜர்தோஸி வேலைப்பாடுகள் கொண்ட பிங்க் கலர் காக்ரா சோளியை காட்டி "இது உனக்கு மிகவும் பொருத்தமாய் இருக்கும்" என்றான். ரூ.74 ஆயிரம் என்ற அதன் விலையை பார்த்தவாறே.

"இதெல்லாம் நான் அணிவதில்லை."

"வைகரிகா பட்டு வாங்கிக் கொள்கிறாயா?"

"ஒன்றும் வேண்டாம்."

"பார்ப்பதற்கு கூட காசு கொடுக்க வேண்டியதில்லை வா." உண்மையிலேயே அந்தப் பட்டு மிக அழகாய் மனம் கவர்வதாய் தான் இருந்தது. பார்த்ததும் அதன் அழகில் கண்களை விரித்தாள். "என்ன வாங்கட்டுமா? விலை ஒன்றும் அதிகமில்லை. ஜஸ்ட் நைன்ட்டி தௌசன்ட் ருபிஸ் தான்!"

"ஐயடா! எனக்கு வேண்டாம்!"

"உன் உழைப்பில் சம்பாதிப்பதை தான் உடுத்துவேன் என விபுவிடம் சொன்னது போல் என்னிடம் சொல்லாதே. இந்தப் பணம் கூட என் பெற்றோருடையதோ அல்லது மற்றவருடையதோ கிடையாது. இது என் சொந்தப் பணம். அதில் நான் உனக்கு வாங்கித் தர ஆசைப்படுகிறேன். மற்றவர்கள் உன் உடையை வைத்து உன்னை கேலி செய்யக்கூடாது. பணக்கார பெண்கள் இருக்கும் இடத்தில் உன் கௌரவத்தை நீ உடையால் குறைத்துக் கொள்ளக் கூடாது. நீ இன்னும் கொஞ்சம் மாடர்னாக உடை உடுத்தலாம். அவசியம் ஏற்படும் போது புடவை உடை உடுத்திக் கொண்டால் போதுமானது. முத்தச்சி கூட நீ பழங்காலமாய் இருப்பதை விரும்பமாட்டார்கள். இரு இரு! அவசரப்படாதே!



அதற்காக நீ அணிந்து இருக்கும் 'உடையை கேவலப் படுத்துவதாக நினைத்துக் கொள்ளாதே. இது உனக்கு மிகவும் அழகாய்த்தான் இருக்கிறது. சேலையிலேயே எத்தனை விதங்கள் இருக்கின்றன? ஷிபான், டிசைனர்ஸ் புடவைகளையாவது உடுத்தலாமில்லையா?"

"உங்கள் அறிவுரைக்கு நன்றி. முதலில் கிளம்புங்கள். எனக்கு புத்தகங்கள் சில வாங்க வேண்டியிருக்கிறது."

"ஆகா! ஆனால் உன்னுடன் வர ஒரு கண்டிஷன். நான் தான் பணம் கொடுப்பேன். வேண்டுமானால் உன் பணத்தில் எனக்கு ஏதாவது வாங்கிக் கொடு. டீல் ஒகேயா?"

"பிப்ட்டி பர்ஸன்ட் ஓகே!"

"பார்த்தாயா, இப்போது கூட நூறு சதவீத சம்மதம் வரமாட்டேன் என்கிறது."

அவள் ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள்.

"யூ ஆர் எ ஸ்மைலிங் பியூட்டி!"

"தேங்க்யூ"

"மை குட் நஸ்! இப்பொழுது தான் பாராட்டிற்கு நன்றி வருகிறது."

அவள் புத்தகங்களை ஆசை ஆசையாய் வாங்கிய ஆர்வத்தையும், வேகத்தையும் பார்த்து வியந்து போனான். கிட்டத்தட்ட ஆறாயிரம் ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்கி குவித்து விட்டாள்.

"இவ்வளவும் நீ படித்து விடுவாயா?"

"பின்னே? தலையணையாக வைத்து தூங்குவதற்கா புத்தகங்களை வாங்குகிறேன்?"

இலக்கியம், அறிவியல், வரலாறு என சகலமும் அவளது புத்தகத் தேர்வில் இருந்தன. அவளை மதிப்புடன் பார்த்தான்.

''ஹேய்! எனக்கு ரொம்ப பசிக்கிறது. அரேபியன் ஹட்டுக்கு போகலாமா? கடைசித்தளம்.''

இருவரும் சென்றனர். பலவிதமான உணவுச்சாலைகள் இருந்தன. தென்னிந்திய உணவு கிடைக்கும் கடைக்குள் நுழைந்தான். ''பீட்ஸா சாப்பிடுவதற்கு விரும்புவீர்கள் என நினைத்தேன்'' மெனு கார்டை மேய்ந்து கொண்டே,

''ஏன் அப்படி நினைத்தாய்?'' என்றான். பதில் ஏதும் வராததால் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் கவனம் மக்கள் கூட்டத்தின் மேல் இருந்தது. பேசிக்கொண்டே சாப்பிடுவதும், சாப்பிட்டுக் கொண்டே பேசுவதுமாய் இருந்த கூட்டத்தில் கல்லூரி மாணவிகளின் மேல் அவள் பார்வை இருந்ததைப் பார்த்தான். உரக்க சிரித்து, அடிக்கடி செல்போனில் பேசிக்கொண்டே அனிச்சையாய் கூந்தலைக் கோதிக் கோதித் தள்ளி விட்டுக் கொண்டே அவர்கள் இருந்தார்கள். அடிக்கொருதரம் எக்ஸ்க்யூஸ் மீ என்றார்கள். அவர்கள் மேல் படிந்த அவன் பார்வை மெல்ல அவள் மேல் படிந்தது. மிக அழகாய் இருக்கிறாள்; நீண்ட அடர்ந்த கூந்தல் வேறு! அவளை இளைஞர்கள் திரும்பிப் பார்க்க வைத்தது. தன் அழகைப் பற்றிய கவனம் அவளுக்கு இல்லை போலும்! ஸ்வீட்டாய், ஸ்டைலாய், ஸ்மார்ட்டாய்.... அவளைப் பற்றிய ஓர் இனிய கனவு! சின்னதாய் பூக்களிட்ட கருநீல மிடி கணுக்காலை வருட, அழகான, பூக்கள் நிறத்தில்



டாப்ஸ்ூம் விரிந்த கூந்தலுமாய், விழிகளில் ஒரு வானவில்லுடன் பூஞ்சிரிப்புடன் துள்ளி வரும் இனிய காட்சி மலர....

கனிந்து அவளை பார்த்துக் கொண்டே இருக்க... அவள் முகம் சிவந்து போனது.

பேரர் வர ஆர்டர் கொடுத்து வாங்கி சாப்பிட்டது எதுவும் நினைவில் நிற்காத கனவு மயக்கம் இருவருக்கும். கைக் கடிகாரங்களை அழகாய் பரிசுப் பொருளாய் வண்ண காகிதங்களால் சுற்றி பார்சல் செய்தனர்.

அன்பாய் இரண்டு வரி கவிதை நயத்துடன் எழுதித் தருமாறு நந்தனாவிடம் கேட்டான்.

''அன்பும், அறனும் - நீங்கள்

பண்பும் பயனும் - நான்.''

திருமண நாள் வாழ்த்துக்களுடன் உங்கள் அன்பு மகன் என எழுதித் தந்தாள். படித்து விட்டு பொருள் கேட்டான். அவள் விளக்க இலேசாய் விசிலடித்தான்.

''காலரை நான் தூக்கிவிட்டுக் கொள்ளலாமா?''

''அது சரி! ஏதோ வாழ்த்துவதற்காக உங்களைப் பற்றி கொஞ்சம் உயர்வாய் எழுதினேன். அவ்வளவு தான்!''

''உன்னிடம் பாராட்டு வாங்குவது கடினம் தான். நீயும் ஒரு வரி எழுதி வாழ்த்திவிடேன்.''

''என்னை யாரென்று அவர்களுக்குத் தெரியாதே!''

''முகம் தெரிந்தால் தான் வாழ்த்துவாயா? என் தந்தை எத்தனை உயர்வான மனிதர் தெரியுமா? சரத்சந்தர் என்ற பேருக்கு ஏற்றாற் போல் அன்பும், பண்பும், கம்பீரமும்

வாய்ந்தவர். என் அம்மா போல் மென்மையான, அருமை யான பெண்ணை பார்க்கவே முடியாது! பத்மினி பேரைப் போலவே அவர்களும் அழகு தான். இருவரும் ஒருவருக்கொருவர் பிறந்தவர் போலவே இருப்பார்கள். அப்படியே வாழ்கிறார்கள். அவர்களுக்கிடையே சின்ன சுணக்கம் வந்து கூட நான் பார்த்ததில்லை. சின்னச் சண்டை கூட இல்லாவிட்டால் என்ன சுவாரஸ்யம் இருக்குமென்று கூட எல்லாருக்கும் தோன்றும். இருந்த போதிலும் அவர்கள் அருமையாக வாழ்கிறார்கள். அந்த வாழ்வைப் பார்த்தால் மணம் வீசும் மலர்களை முகர்ந்த சுகந்த அனுபவம் தான் கிடைக்கும். அவர்கள் உண்மை யிலேயே அதிர்ஷ்டக்காரர்கள்! உண்மையான, அலாதி யான அன்பில் பிறந்தவர்களாய் இருப்பார்கள் என்று எனக்குத் தோன்றும்! அந்த அன்பு அடிமைப்படுத்தும் அன்பல்ல! சுதந்திரக் காற்றை சுவாசிக்க வைக்கும் சுயநலமற்ற எதையும் எதிர்பார்க்காத தூய்மையான அன்பு! அப்படிப்பட்ட அன்பு கிடைக்க தவமல்லவா செய்ய வேண்டும்?''

''ஆகா! முத்தச்சியின் வரிகளை உங்களுக்கு பொருத்த மாய் எடுத்தாளுகிறீர்களே! 'கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும்' இது தானோ?''

''நல்லவேளை! கழுதை என்று சொல்லாமல் போனாயே?'' என்று சிரித்தவன்,

''இன்றைக்குத் தான் கொஞ்சம் நார்மலாய் இருக் கிறாய். இல்லாவிட்டால் என்னிடம் சண்டை அல்லவா பிடித்துக் கொண்டிருப்பாய்! உன் இயல்பே அப்படித் தானோ? என்று கூட சந்தேகம் வந்தது. ஆனால்......''



அவன் இழுக்க

''என்ன ஆனால்...''

''நீயே புரிந்து கொண்டிருப்பாய்! என் வாயால் கேட்க வேண்டும் என்று நினைக்கிறாய் போலும்! உன் ஆசையை கெடுப்பானேன்! என்னிடம் மட்டும் தான் நீ கோபம் காட்டுவது! அதுவும் ரோஷனி, விபு ஏன் அருகில் இருக்கையில் நீ காட்டும் கோபம் இருக்கிறதே! அடடா! என்ன அழகு! என்ன அழகு!'' குப்பென்று முகம் சிவந்து போனாள்.

அப்போது அவன் அலைபேசி ஒலிக்க..

''விபு தான் எனக் கண்சிமிட்டி கூறிவிட்டு

''ஹேய் டார்லிங்! ஐ மிஸ் யூ'' என்றான்.

நந்தனா முகம் போன போக்கை பார்த்துவிட்டு ''அம்மா! ஒன் மினிட்'' என்றவாறே போன் வாயை மூடி.

''இந்தா பேசு! என் டார்லிங்குடன்!'' அவளிடம் கொடுத்தான். அவள் மறுக்க முடியாமல் வாங்கி காதில் வைத்தாள்.

''ஆதித்! எப்படியிருக்கிறாய்? உன் அப்பா நீ இல் லாமல் ரொம்பவும் ஏங்கிப் போனார்டா!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நாங்க இரண்டாவது ஹனிமூன் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். நீ நிதானமாகவே வா. உன் அம்மா சும்மா சொல்கிறாள். உன் வேலை முடிந்ததா?''

''அங்கிள் நான் நந்தனா. முத்தச்சியின் உதவியாளினி. நன்றாக இருக்கிறீர்களா?''

"ஓ! அந்த ஸ்வீட் கேர்ள் நீதானா அம்மா! உன்னைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். நீ மிகவும் ஸ்மார்ட்டாய் இருக்கிறாய்! அட! எப்படி என்று யோசிக்கிறாயா? செல்போன் காலத்துப் பெண் நீ! சரியாய் புரிந்து கொண்டாயே!" என அவள் பதில் கூறும் முன்பே புரிந்து பேச போனை அவனிடமே கொடுத்தாள்.

விழிகள் மலர அவன் பேசுவதை பார்த்துக் கொண்டே இருந்தாள். 'தன் பெற்றோரிடம் பேசுவதில் எத்தனை உற்சாகம் இவனுக்கு! என் தாத்தா கூட இவனைப் போலத் தான் துறுதுறுப்பாய் இருக்கிறார். இத்தனை வயதிலும் துள்ளலும், உற்சாகமும் அவருக்கு குறைய வில்லை. வேகம் தான் சற்று குறைந்து இருக்கிறது.'

இருவரும் பரிசுப் பார்சலை இலண்டனுக்கு அனுப்பி விட்டு கிளம்பினர். இரவு நேரப் பயணம். நிலவு ஒளியில் ஜிப்ஸியில் ஊருக்குத் திரும்பவும் பயணமும் இனிமையாகவே இருந்தது. குளிர்காற்று வீச.... புடவை தலைப்பை எடுத்து போர்த்திக் கொண்டாள். முன்புறம் எடுத்து போடப்பட்டிருந்த நீண்ட பின்னல் மடியில் புரள கைகளை கட்டிக் கொண்டு அமர்ந்து இருந்தவளை திரும்பிப் பார்த்தான். இலேசாய் விசிலடித்தான். முகத்தில் புரளும் கூந்தல் சுருள்கள், எடுப்பான நாசி, வடிவான உதடுகள் முல்லையரும்பும் முத்துமாய் பளிரிடும் பல் வரிசை, எல்லாவற்றிற்கும் மேலாக அறிவுச்சுடர் விடும் அழகான அகன்ற பேசும் கண்கள். நிலவொளியில் பேரழகாய் தோன்றினாள். உறுத்தாமல் மிளிரும் அழகு அவளது வசீகரப்புன்னகையால் அதிகமாகியது.



ஓர் வினாடி ஜிப்ஸியை நிறுத்தி விட்டு அப்படியே அவளை உள்ளுக்குள் வாங்கிக் கொள்வது போல் ஆழ்ந்துப் பார்த்தான். அந்த பேசும் கண்களை உறக்கம் எப்பொழுது வந்து தழுவிக் கொள்வது? என்பது போல் காத்திருப்பது புரிந்தது. முதல் நாள் முழுவதும் கேமிராவை தூக்கிக் கொண்டு எந்தக் காட்டில் சுற்றினாளோ? இன்றும் நாள் முழுவதுமான பயணம் அவளை களைப்புற செய்துவிட்டதோ?

தலையணையை எடுத்து அவளிடம் கொடுத்தான். "நன்றாக சாய்ந்து படுத்துக் கொள்" மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். "ஓட்டுவதற்கு என்னுடைய தூக்கம் தொந்தரவாய் இருக்காதா?"

"அதெல்லாம் இல்லை!" விழிகளை மூடிய இரண்டு வினாடியில் உறங்கத் தொடங்கி விட்டாள். இருவருக்கும் இடையில் இருந்த தலையணையை எடுத்து அவளின் மறுபுறம் அணைவாய் வைத்தான். அதன் கதகதப்பில் சீட்டில் சாய்ந்து உறங்கியவள் வண்டியின் வேகத்தில் மெல்ல அவன் தோள் மேலே சரிந்தாள். புன்னகையுடன் அவளை கலைக்காமல் ஜிப்ஸியை செலுத்தினான்.



## 12

மிக மிக ஆபத்தான கட்டத்தில் இருந்து தப்பி பிழைத்தாள் வசுமதி. அவள் உயிருக்கு ஆபத்து நேரக்கூடாது

என்று அவள் நம்பும் கடவுளிடம் முதன் முதலாக கண்கள் மல்க வேண்டிக்கொண்ட தேவானந்தின் வேண்டுதல் நிறைவேற்றப்பட்டது. மணியான அருமை மகனைக் கூட அவன் முதலில் பார்க்கவில்லை. அன்றைய நிகழ்ச்சியின் பயங்கரம் அவன் கண் முன்னே இன்னமும் நின்றது. அவள் இரண்டொரு படிகளில் உருளும் போதே உள்ளே வந்துவிட்ட தேவா பாய்ந்தோடி இலாவகமாக அவளை அள்ளி விட்டான். மயக்கத்திலிருந்தவளுக்கு உடனடியாக முதலுதவி செய்து மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். முழு படிகளும் உருண்டிருந்தால் அவள் முழுசாய் கிடைத்திருக்க மாட்டாள். தாயும் சேயும் நலமானாலும் இனியொரு குழந்தை பிறக்கும் பாக்கியம் அவளுக்கு கிடையாது என மருத்துவர் உறுதியாக கூறிவிட்டார்.

''எனக்கு என் வசுவே போதும்! வேறு எதுவும் வேண்டாம். அவள் கடவுள் கூடவே ஒரு கண்ணனையும் கொடுத்து இருக்கிறார். ஏழு ஜென்மத்திற்கும் இது போதும்'''

வசுமதி மிகவும் பயந்து போயிருந்தாள். அவள் கண்விழிப்பதும், மயங்குவதுமாய் இருந்தாள். எந்நேரமும் தேவாவின் கையை பிடித்துக் கொண்டே இருந்தாள். மயக்கநிலையில் கூட அவன் கையை விடவில்லை. மெதுவாய் பேசி, பேசி அவளுக்கு தைரிய மூட்டினான் தேவா. அவனது அன்பான கவனிப்பும், ஆறுதலான பேச்சும், ஆர்வமூட்டும் நகைச்சுவையும் அவளை தேற்றின. தேவனாந்த் அவளை கவனித்துக் கொண்டதை பார்த்தவர்கள் இதை மாதிரி கணவன், மருமகன் வேண்டுமென்றே ஆசைப்பட்டார்கள்.



மங்கையர்க்கரசி, சாவித்திரி வசந்தன் கூட அவன் அன்பைக் கண்டு ஆச்சரியமானார்கள். நகுலனிடம் சொல்லி அவள் வீட்டினரையும் அழைத்து வந்துவிட்டான். அவர்கள் கூட அவர்கள் அன்பை கண்டு திகைத்துப் போனார்கள். இப்படியொரு மனிதனை தங்களால் தங்கைக்கு தேடி கொடுத்து இருக்க முடியுமா? என சந்தேகம் வந்தது. மேலும் தங்கள் வீட்டு இளைய மகன் தேவானந்தின் பின்னாலே சுற்றுவதை கண்டு முதலில் பொறாமைப்பட்டவர்கள். அவன் அருமை அருகில் இருந்து கவனித்த ஒரே வாரத்தில் புரிபட்டு போனது. கூடி குலாவி தேவானந்துடன் அவர்கள் உறவாடா விட்டாலும் அவன் மேல் மரியாதை கூடிவிட்டது.

அண்ணன்கள் குடும்பத்துடன் கிளம்பிய பிறகு தன்னை பார்க்க வந்த மங்கையர்க்கரசியிடம் எதுவும் பேசாமல் அமைதியாய் தன் குழந்தையை பார்த்தபடி இருந்தாள் வசுமதி. தேவா எங்கோ வெளியே சென்றிருந்தான். இவ்வளவு நாட்களும் மயக்கமும், உடல் வேதனையுமாய் இருந்ததால் தன்னிடம் சரிவர பேசவில்லை என்றே மங்கையர்க்கரசி நினைத்திருந்தார். இன்று நன்றாகவே தேறிய பிறகு யாருமே அருகே இல்லாத நிலையில் கூட தன்னிடம் ஒரு வார்த்தை கூட ஏன் அவள் பேசவில்லை? என கேள்வி எழுந்தது. அவரும் ஏதேதோ பேசிக் கொண்டே இருக்க, ஒன்றுக்கும் அவள் 'ம்' கூட கொட்டினால் இல்லை.

''வசு! பிள்ளை அப்படியே தேவாவை உரித்து வைத்து இருக்கிறான் இல்லை? ஆனால் கண்கள் இரண்டும் உன்னைப் போல் கனிவாய் இருக்கின்றன. இவள்

துள்ளி, துள்ளி நடை பயின்றான் என்றால் கிண்கிணி நாதம் போல் இருக்கும். இப்பொழுதே என்ன வளர்த்தியாய் இருக்கிறான் பாரேன். உன்னைப் போல நிறம் வேறு! உங்கள் இருவரின் அழகையும் இந்த சின்ன கண்ணன் கொண்டு இருக்கிறான். குணத்திலும் அப்படியோ? என்னவோ? உங்கள் இருவரைப் போலவே அன்பும், பண்பும் இருந்து விட்டால் போதும். என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது. இவனை பார்க்காமல் என்னால் இருக்கவே முடியவில்லை. இப்படியே அள்ளிக் கொண்டு போய்விடலாம் போலிருக்கிறது. கனவில் கூட இவன் முகம் தான் வருகிறது. பிஞ்சு காலால் இவன் எட்டி உதைக்கும் பாக்கியம் பெற நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். கண்ணை மலர்த்தி பார்ப்பதை பாரேன். இந்த குட்டிப்பயல் யாரை இப்படி தேடுகிறான்? எந்நேரமும் கூடவே இருக்கும் தேவானந்தை தேடுகிறானா? எங்கே அவன்?'' எனக் கேட்டவாறே பிள்ளையிடமிருந்து திரும்பி வசுமதியைப் பார்த்தார். அவள் வேறுபுறம் திரும்பியிருந்தாள். 'ஏன் இந்த பாராமுகம்? ஏதேனும் உடல் வேதனையோ?' என எண்ணியவாறே,

''வசுமதி! என்ன அம்மா செய்கிறது? தயங்காமல் சொல்! நீ சொன்னால் தானே தெரியும்'' அவள் திரும்பி நேரே அவர் கண்களைப் பார்த்தாள்.

''அத்தை, என்... என்னை உங்களுக்கு பிடிக்கவில்லையா? நான் என்ன தப்பு செய்தேன்? என்னை ஏன் மாடிப்படிகளில் தள்ளிவிட்டீர்கள்?'' எனத் தெளிவாய் கேட்டாள்.



''என்ன?....'' அதற்கு மேல் அவருக்கு வார்த்தைகளே வரவில்லை. 'நானா! என் அருமை மருமகளை தள்ளி விடுவேன்? அதுவும் நிறை மாத கர்ப்பிணியை... கடவுளே!.... வசு... வசு வாயில் இருந்தா இப்படியொரு வார்த்தை வருகிறது? இது உண்மைதானா? நிஜமாலுமே வசுமதி தான் இதை கேட்டாளா? இது கனவா? நிஜமா? இல்லை.... ஏன்... இப்படி கேட்டாள்? என்ன நடக்கிறது வீட்டில்? நானும், தேவாவும், நினைத்தது போல் அவளே கால்தவறி விழவில்லையா? யாரோ அவளைப் பிடித்து தள்ளி விட்டார்களா? யார்? யார்?' அப்படியே அதிர்ந்து நின்றார்.

அப்போது தேவா உள்ளே நுழைந்தான். இருவரையும் மாறி மாறி பார்த்தான். ''என்ன வாயிற்று? இரண்டு பேரும் இவ்வளவு அமைதியாய் இருக்கிறீர்கள்? அம்மா. நீங்கள் வீட்டிற்கு கிளம்புங்கள்; வண்டி வந்துவிட்டது. இன்னும் இரண்டு நாட்களில் உங்கள் மருமகள் வீட்டிற்கு வந்துவிடுவாள். நீங்கள் கால்வலியுடன் அலைய வேண்டாம். ஏன் சோர்ந்து போய் தெரிகிறீர்கள்? வீட்டிற்கு போய் ஓய்வு எடுங்கள். மருமகளுக்காக விரதம் தினமும் இருந்து ஒரு மாதத்தில் எப்படி இளைத்து விட்டீர்கள்? எனக்கு எப்படி நீங்கள் இருந்த விரதம் தெரிந்தது என்று பார்க்கிறீர்களா? நகுலன் தான் சொன்னான். நீங்க இரண்டு பேரும் மலைக் கோவிலுக்கு நடந்து வேறு சென்றீர்களாமே?

கால் வலியோடு இது தேவையா? எல்லாம் நல்லதே நடக்கும். நீங்கள் கிளம்புங்கள்'' ஒன்றும் பேசாமல் தலையசைத்து விட்டு அவர் கிளம்பினார். அவர் பின்னோடு சென்று,

''ரொம்ப கவலைப்படாதீர்கள் அம்மா! எல்லாம் சரியாகிவிடும். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

மகனை நிமிர்ந்து பார்த்துவிட்டு அவர் கிளம்பினார். நகுலன் உள்ளே வந்தான். ''என்ன மாமா? ஏன் அத்தை முகம் சரியாய் இல்லை. வர வர நீங்கள் யாரையும் சரிவா கவனிப்பதில்லை. எப்போதும் சேச்சி மட்டும் தான் உங்கள் மனசில் இருப்பாரா?'' அவன் கேட்டதும் வசுமதி தன் தம்பியைப் பார்க்க,

''அவனை கவனிக்கவில்லை என்ற பொறாமையில் சொல்கிறான்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ கீழே விழுந்த அன்று மாமா என்னை குதிரையேற அழைத்து செல்வ தாக சொல்லியிருந்தார். அத்தை கூட நான் எப்போதும் மாமா கூடவே சுற்றுவதை சொல்லி கேலி செய்தார்கள். நாங்களிருவரும் பூட்ஸை கழட்டி விட்டு வருவதற்குள் அவர்கள் அலறிய சத்தம் கேட்டது. அப்புறம் தான் பதறி ஓடி வந்தோம். மாமா பாய்ந்து உன்னை தூக்கி விட்டார். ஆனால் அதற்குள் நீ மயக்கமாகிவிட்டாய், அப்பா! எக்கச்சக்க இரத்தம்! அத்தையும் மயங்கி விட்டார்கள். மாமா உன்னை தூக்கிக் கொண்டு ஓட, நான் தான் அத்தையின் மயக்கத்தை தெளிவித்தேன். கண்விழித் ததும் உன்னைப் பற்றி தான் கவலை. பூஜையறை யிலேயே உனக்காக வேண்டிக் கொண்டு இருந்தார்கள் தெரியுமா?''

தேவா நகுலன் பேசப்பேச வசமதியின் முகத்தை கவனித்துக் கொண்டே இருந்தான். அவள் முகத்தில்



குழப்ப ரேகைகள் படர்வதைப் பார்த்தான். குழம்பினால் யோசிப்பாள்; யோசித்தால் உண்மை புரியும். வசுமதி நல்லவள், அம்மாவும் நல்லவர்; இருந்தும் இருவருக்கும் இடையில் இடைவெளி எங்ஙனம் வந்தது? வசுவை யார் கொலை செய்ய முயற்சித்திருப்பார்கள்? பழி ஏன் அம்மாவின் மேல் விழுந்தது? எந்த நம்பிக்கையின்மை வசுவை அம்மாவை சந்தேகப்பட வைத்தது? அவள் அம்மாவின் மரணம் வசுவை இப்படி நினைக்கத் தூண் டியதா? வசுவிற்கு வஞ்சத்தை மனதிற்குள் வைத்துக் கொள்ளவோ, வளர்த்துக் கொள்ளவோ தெரியாதே! அவள் குழந்தை போல எதையும் மனதிற்குள் வைத்துக் கொள்ளத் தெரியாது. உடனே எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விடுவாள்.

அவன் எண்ணியது போலவே.

''தேவேட்டா! அன்னிக்கு மாடியில் மேலே இருந்து யாரோ மோதுவதுபோல் கீழே தள்ளிவிட்டார்கள்; என்னால் பார்க்க முடியவில்லை. அம்மா குரல் தான் கேட்டது; அதனால் என்னை மோதியது அம்மாவோ என நினைத்து விட்டேன்.''

''எந்தா சேச்சி எந்தா பறயு? அத்தை எங்களுடன் தானே உள்ளே வந்தார்? அவர் எப்படி மேலே இருந்து உன்னை தள்ளியிருக்க முடியும்? தப்பு சேச்சி! அபாண்ட மான பறயக் கூடாது.''

''அனியன் சொன்னது சரி தான்! அத்தைக்கிட்டே மாப்பு கேட்கணும்.''

''உன் மேல் தப்பில்லை. உனக்கு தெரிந்ததை நீ கேட்டாய். அதுவும் குறையாகவோ, குற்றமாகவோ

மற்றவர்களிடம் சொல்லவில்லை? நீ என்னிடம் கூட அம்மாவைப் பற்றி குறை சொல்லவில்லையே?''

''இல்லை தேவேட்டா! நான் அப்படி கேட்டது அத்தையின் மனதை புண்படுத்தியிருக்கும். அதனால் கண்டிப்பாய் மாப்பு கேட்க வேண்டும்.''

''இதில் ஒரு சிக்கல் இருக்கிறது வசு! என் கேள்விக்கு நன்றாக யோசித்து நீ ஒரு பதிலைச் சொல். வெறும் குரலை மட்டும் கேட்டா அம்மா என்ற முடிவுக்கு வந்தாய்?''

''ம்! இல்லே தேவேட்டா! அம்மாவின் புடவை தலைப்பை பார்த்தேன். காற்றில் பறந்து முகத்தில் பட்டது.''

''பார், பார்! உன்னை தள்ளி விடுகிறவர் இதோ என்னை பார்த்துக் கொள் என தானே புடவை தலைப்பை பறக்கவிடுவாரா சேச்சி? என்றைக்கு உன் மூளையை கடன் கொடுத்தாய்? எல்லாம் மாமாவே யோசிக்கட்டும் என விட்டுவிட்டாயா?''

''ஹேய்! என் வசுவை திட்டுவதற்கு யாருக்கும் உரிமை இல்லையாக்கும்?

''அது சரியாணு! நீங்க ரெண்டு பேருமே எல்லாம் செய்து கொள்ளுங்கள். நான் வருகிறேன்.''

''யாரை பார்க்க இப்படி அவசரமாக ஓடுகிறாய்? எந்த சேச்சி நிங்கள் அனியனுக்கு கேர்ள் பிரண்ட் உண்டாறு?''

''அதே. அதே சம்சயம் தான் எனக்கும்.''

''சேச்சி! ஸே சைடு கோல் வேண்டா! அத்தையை சமாதானப்படுத்த நான் போகிறேனாக்கும்.'' அவள் கிளம்பி சென்றதும்,



அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம்.

''நீ அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம். அம்மா மேல் சந்தேகப்பட்டது மாதிரியே இருக்கட்டும். உன்னை தள்ளி அம்மா மேல் பழி போட்டது யார் என்று கண்டுபிடிக்க வேண்டும். மேலும் உன்னை ஏன்? யார்? கொலை செய்ய முயற்சித்தார்கள் என அறிய வேண்டும். அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும். அதனால் எதையும் அறிந்து கொண்ட மாதிரி காட்டிக் கொள்ள வேண்டாம்.''

''ஆனாலும் அம்மா மனசு சங்கடப்பட்டிருக்குமே!''

''சூ! அதை நான் அம்மாவிடம் பக்குவமாக சொல்லி விடுகிறேன். நீ கவலைப்படாதே. ஆமாம்! என் பையன் என்ன சொல்கிறான்?''

''அவன் எந்நேரமும் உங்களைத் தேடுகிறான்.''

''பார்த்தாயா? என் பையன் உன்னைப் போலவே இருக்கிறான்.''

''போங்க தேவா.''

வசுமதி வீட்டிற்கு வந்ததும் குழந்தையுடன் மங்கையர்க்கரசியை நமஸ்கரிக்க முயன்றாள்.

''வேண்டாம் அம்மா! பச்சை உடம்புக்காரி, அறுவை சிகிச்சை வேறு நடந்திருக்கிறது. அதனால் விழுந்து கும்பிட்டு மேலும் வலியை ஏற்படுத்திக் கொள்ளாதே. நீ யார் காலிலும் விழ வேண்டாம். போ, ஓய்வு எடுத்துக் கொள்.''

''வசு! மாடியறை வேண்டாம். கீழே இருக்கும் அறையிலேயே நீ இருந்து கொள்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது வசந்தன் வந்தான். ''ஆனந்த், அவசரமாக கொஞ்சம் பணம் வேண்டும் எனக்கு. எடுத்து தருகிறாயா?'' எனக் கேட்க மங்கையர்க்கரசி கோபமானார்.

''வசந்தா, தேவானந்தை பேர் சொல்லி ஒருமையில் கூப்பிட உனக்கு எவ்வளவு தைரியம்? முதலில் மரியாதையாக பேசக் கற்றுக்கொள்.''

''ஏன் அண்ணி? அவன் உறவுக்காரன் தானே? பெயர் சொல்லி கூப்பிடக் கூடாதா? வசுமதி கணவன் பெயரைச் சொல்லி தானே கூப்பிடுகிறாள். மருமகள் சொன்னால் தப்பில்லாதது போல் தானே இதுவும்.''

''வசுமதியும், மற்றவர்களும் ஒன்றில்லை. அவளுடன் யாரையும் ஒப்பிட வேண்டாம் என்று ஏற்கனவே நான் உனக்கு சொல்லியிருக்கிறேன் சாவித்திரி.''

சாவித்திரி ஏதோ சொல்ல முற்பட வசந்தன் தடுத்தான்.

''அம்மா விடு. மாப்பிள்ளை மன்னித்து விடுங்கள். உரிமை இருக்கிறது என பேசிவிட்டேன். அத்தைக்கு அது பிடிக்காவிட்டால் விட்டு விடுகிறேன்.''

தேவானந்த் ஏதோ கூற முயல ''போ தேவா. எல்லாரிடமும் இயல்பாய் நீ இறங்கிப் பழகினால் உன் மரியாதை குறைந்து போகும். கன்றுக்குட்டி என்று நீ கொஞ்சினால் அது மூஞ்சியை உரசத்தான் செய்யும். இனியாவது எல்லாரையும் ஒரே மாதிரியாக நினைக்காதே'' பேசாமல் தேவா வசுவுடன் தாயை மதித்து உள்ளே சென்றது சாவித்திரியின் மனதில் கனலை மூட்டியது.

''என்னம்மா! கிழவி ரொம்ப துள்ளுது?''



''அதான் தெரியலைடா! மாமியாரும், மருமகளும் கீரியும் பாம்புமாக இருந்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலே தவிர்த்தார்கள். நீ வலப்பக்கம், நான் இடப்பக்கம் என எதிரும், புதிருமாய் மௌன யுத்தம் நடத்தினார்கள். இன்றைய பேச்சைப் பார்த்தால் புயல் புஸ்வாணமாய் போயிடுச்சு போலிருக்கு? அரும்பாடு பட்டு ஏற்படுத்திய விரிசலை சேர விடக்கூடாது. உறவை ஒட்டுப் போட முடியாத சுட்ட மண் பாத்திரமாக மாற்ற வேண்டும். இவர்கள் சண்டை போட்டால் தான் நாம் இன்பமாக வாழலாம். இந்த சாவித்திரி தோற்றுப் போகிறவள் இல்லை. எப்படியும் இவர்கள் எல்லாரையும் பிரித்துக் காட்டுகிறேன்.''

''அட போம்மா! நீ சவால் விடுகிற அளவிற்கு பாய்வதில்லை. எல்லாம் பாதியிலேயே ஒன்றும் இல்லாமல் போகின்றன. எவ்வளவு கஷ்டப்பட்டு வசுமதியை உருட்டி விட்டாய். திட்டம் போட்டு அம்மாவின் மேல் பழி வருவது மாதிரி ஏற்பாடு எல்லாம் நன்றாகத் தான் இருந்தது. ஆனால் ஒன்றும் நிகழவில்லையே? கிழவியின் மேல் பழி விழுந்தும் ஏன் எதுவும் நடக்கவில்லை.''

''அதுதான்டா எனக்கும் புரியவில்லை. மருத்துவமனையில் இருந்த பொழுதே கவனித்தேன். மருமகள் மாமியாரிடம் முகம் கொடுத்தே பேசவில்லை. இரண்டு பேரும் வீட்டிற்கு வந்ததும் சண்டை போடுவார்கள். வீடு ரெண்டாகும். நாம் இரண்டு பக்கமும் கொம்பு சீவி விட்டு ஜீவனம் பண்ணலாம் என்று பார்த்தேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லையே? இப்போதைக்கு விஷம் கொடுத்தோ அல்லது வேறு வழியிலோ வசுமதியை அழிக்க முயல வேண்டாம் என்று நினைக்கிறேன்.

அப்படி உடனே செய்தால் நாம் மாட்டிக் கொள்வோம். அப்புறம் உள்ளதும் போய்விடும். நீயும் கொஞ்சம் அடக்கி வாசி.''

வசுமதியும் மங்கையர்க்கரசியும் சமாதானம் ஆகி விட்டாலும், பழைய சுமூகமான பேச்சு குறைந்து விட்டிருந்தது. அந்த இடைவெளியை உணர்ந்து வசுமதி வருத்தப்படாமல் இருக்க தேவா அவள் அறைக்கு அருகிலேயே நூலக அறையை உருவாக்கித் தந்தான். அவள் குழந்தையுடன் செலவழித்த நேரங்கள் போக மீதி நேரம் நூல்களுடன் கழித்தாள். குழந்தையும் வசுவை விட எந்நேரமும் தேவாவிடம் ஒட்டிக் கொண்டது. தேவா வின் மார்பின் மேல் ஏறி படுத்துக் கொள்ளும் அளவிற்கு வந்தது. தேவா வாக்கு கொடுத்தது போல் வசு கல்லூரிக் குச் சென்று படிக்கத் துவங்கினாள். இரண்டு, மூன்று வருடங்கள் விளையாட்டாய் ஓடி விட்டன. வசுமதி பி.ஏ. ஆனாள். மங்கையர்க்கரசி எதிலும் தலையிட்டுக் கொள்வதில்லை. பேரனைக் கொஞ்சுவதும், பூஜை யறையில் அடைக்கலம் ஆவதுமாகிப் போனார்.

பேரனை பள்ளியில் சேர்க்க முடிவு செய்த பொழுது தேவானந்திடம் ''தேவா நகுலனுக்கு திருமணம் செய்ய வேண்டும். முதலில் நல்ல பெண்ணைப் பார். அவன் நம்மை நம்பி வந்துவிட்டான். இன்னும் ஏதும் செய் யாமல் இருப்பது நல்லதில்லை.''

''சரி அம்மா! மதுரவாணிக்கும் ஒரு நல்ல பையனை பார்க்கிறேன்.''

''உனக்கு ஏனப்பா வேண்டாத வேலை? அவளுக்கு அம்மா, அண்ணன் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.''



அம்மாவிற்கு சாவித்திரி அத்தையின் மேல் தான் வசுமதிக்கு தீங்கு செய்ததில் சந்தேகம் இருந்தது. தேவாவிற்கும் அது உண்மைதான் என்ற உறுதி வந்தது. ஆனால் உண்மையை நிரூபிக்கும் சாட்சியில்லை. அதனால் அவர்களை வீட்டை விட்டு விரட்டவில்லை. மேலும் மதுரவாணி நல்லப்பெண். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும் முன் இவர்களுக்கு தண் டனைக் கொடுத்தால் அவள் வாழ்வு பாதிக்கப்படுமே? என்ற எண்ணத்தில் சற்று பொறுமை காத்தான். ஆனால் துஷ்டருக்கு இரங்கியதன் பலன் அவன் வாழ்விலேயே இடியாய் இறங்கியது.

நகுலனுக்கு பெண் பார்க்க வசுமதியும், மங்கையர்க் கரசியும் கிளம்பினார்கள். சாவித்திரி உள்ளுக்குள் பொறுமி விட்டாள். ''என் பிள்ளைகள் இருவரும் நெடு மரமாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு எதுவும் செய் யாமல் ஒரு எடுபிடி பயலுக்கு கல்யாணமாம். டேய் தம்பி! ஏதாவது செய்யடா! அண்ணிக்காரியும், அவள் மருமகளும் ஒழியணும்.''

வசந்தனுக்கு சிக்னல் கிடைத்ததும் முடிவு செய்து விட்டான். 'இவர்களை அழித்தால் நம் வாழ்வு நிலைக் கும்' என எண்ணி அவர்கள் புறப்பட்ட காரில் 'பிரேக்கை' பிடுங்கி விட....

வசுமதி புறப்பட்ட நேரத்தில் மாமியார் முழங்கால் வலியில் துடிப்பதைப் பார்த்து அப்போது அங்கே வந்த நகுலனிடம் எங்கே செல்ல வேண்டும் என்று கூறாமல் தேவாவுடன் புறப்படச் சொன்னாள்.

''ஆ! சேச்சி ஞங்ஙள் எவிடெ போகணும்?''

''அது தான் சஸ்பென்ஸ். அனியனுக்கு சேத் சர்ப்ரைஸ் கொடுக்கப் போகிறாள். அதுவும் சந்தோஷ மான சர்ப்பரைஸ்.''

''எந்தா? ப்ளீஸ்! மாமா சொல்லிடுங்களேன்.''

''கொஞ்சம் நேரம் தவி மைத்துனா!''

''நீங்கள் ஏதும் சொல்லாவிட்டால் கதவைத் திறந்து குதித்து விடுவேன்.''

''இரு! இரு! காரை நிறுத்தி விடுகிறேன். போய் உன் அக்காவையே கேட்டு வரலாம்.''

''வேண்டாம்! வேண்டாம்.''

''சரி சொல்லி விடுகிறேன். என் அருமை மைத்துன னிற்கு பெண் பார்க்கப் போகிறோமாக்கும்.''

அவர்கள் காரில் சென்று கொண்டிருந்த நேரத்தில் சாவித்திரியும், வசந்தனும் பேசிக் கொண்டிருந்தனர்.

''அம்மா நீ சொன்னபடி செய்து விட்டேன். பிரேக் இல்லாத காரில் பயணம் செய்து பரலோகம் போக வேண்டியது தான். அந்தக் காரில் மாமியார், மருமக ளுக்கு பதிலாக மாமனும், மச்சானும் போயிருக்கிறார்கள். இனி நாம தான் இந்த சொத்திற்கு உரிமையாளர்கள்.''

அதைக் கேட்டுக் கொண்டிருந்த மதுரவாணி ஓடி வந்தாள். ''ஐயோ அம்மா! என்ன காரியம் செஞ்சிட் டீங்க? மாமாவையும், நகுலையும் காப்பாற்ற வேண்டும். வாங்க உடனே போய் அத்தை, அக்காகிட்டே சொல்ல லாம்.''

''ஏய்! பேசாமல் வாயை மூடிக் கொண்டு போ. எங்களுக்கு எல்லாம் தெரியும். எத்தனை நாள் வன்மம்



இது தெரியுமா? ஓடிப் போனவள், என்று என்னை மட்டும் சொல்லவில்லை. உன்னையும் அப்படி தானடி சொன்னாள். நான் நடுத் தெருவில் நிற்பேன் என்று சொன்னாளே? இனி யார் நடுத்தெருவில் நிற்கப் போகிறார்கள் என்று பார்க்கப் போகிறேன்.''

''அம்மா! வேண்டாம் அம்மா! உன் காலில் வேண்டு மானாலும் விழுகிறேன். அவர்களை காப்பாற்று! அண்ணா ப்ளீஸ்! இரக்கம் காட்டு!''

''டேய்! வாயில் இரண்டு போடு. யாருக்கு இரக்கம் காட்டு என்கிறாள்? நமக்கு யாரும் இரக்கம் காட்ட வில்லையே! என் மகன் பலகாரத்திற்கு ஆசைப்பட்டு திருட்டு பட்டம் சுமக்க வேண்டியிருந்தது. இங்கு வந்தும் நிம்மதியில்லை. உரிமையாய் வாழ வேண்டிய இடத்தில் பிச்சை சோறு சாப்பிட வேண்டிய நிலைமை. நீ இருக்க வேண்டிய இடத்தில் இன்னொருத்தி! என்னை தரங் கெட்டவள் எனக் கூறியவளை எப்படி நான் மன்னிக்க முடியும்?''

''நீங்கள், வராவிட்டால் போங்கள். நான் போய் அத்தையிடம் சொல்லப் போகிறேன்'' என ஓடியவளை,

''டேய்! பிடிடா அவளை! ரெண்டு சாத்து சாத்தி அறைக் குள் போட்டு பூட்டு! இரவு செய்தி வந்ததும் கதவைத் திறந்து விட்டுக் கொள்ளலாம்.''

வசந்தன் பாய்ந்து அவளைப் பிடித்தான். அவள் அவன் கைகளைக் கடித்தாள். ஓங்கி ஓர் அறை விட்டு தரதரவென்று இழுத்துச் சென்றான். நகங்களால்

பிறாண்டினாள். எதற்கும் அவன் அசரவில்லை. அவளை பின்பக்க அறையில் போட்டு வெளியே பூட்டினான். அவள் கத்துவதோ, கதறுவதோ அங்கிருந்து யாருக்கும் கேட்காது எனவே தைரியமாய் சென்றான். ஒரு மணி நேரம் கடந்திருக்கும்; தேவானந்த் சென்ற வண்டி விபத்துக்குள்ளான செய்தி வந்து சேர்ந்தது. பதறி கதறி மருத்துவமனைக்கு ஓடினர். நகுலன் தலையைச் சுற்றி கட்டுப் போடப்பட்டிருந்தது. காதுகளில் இருந்து இரத்தம் வழிந்தது. ''சேச்சி! மாமா! மாப்பு!'' அவ்வளவுதான் மூன்றே வார்த்தைகளில் உயிரை விட்டான் நகுலன். தேவாவிற்கு கால்களில்தான் அடிபட்டிருந்தது. காரை நிறுத்த முடியாமல் போனதும் அருகில் இருந்த மரத்தில் மோதி நிறுத்த தேவா முயற்சிக்க கண்டிப்பாய் அவனுக்கு பலத்த அடிபடும் என்று ஊகித்து அவன் பக்க கார் கதவைத் திறந்து மின்னல் வினாடியில் தேவாவை வெளியே தள்ளினான் நகுல். தன்னுயிரைக் கொடுத்து அக்காவின் அருமைக் கணவனைக் காப்பாற்றி விட்டான். வீட்டிற்கு சென்ற பொழுது அங்கே மதுரவாணி குற்று யிரும், குலையுயிருமாகக் கிடந்தாள்.

கண்ணாடி சன்னலை உடைத்துக் கொண்டு வெளியே வந்தவள் விபத்தைப் பற்றி கேள்விப்பட்டதும் விஷத்தைக் குடித்து விட்டாள். சாவித்திரி தாமதமாகத் தான் அவளைப் பார்த்தாள். அவள் சொன்னதைக் கேட்டதும் ''ஐயோ பாவி மகளே! நான் மோசம் போயிட் டேனே!'' என தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். வசுமதி, தேவாவுடன் உள்ளே நுழைந்த பொழுது விஷ யத்தை கேள்விப்பட்டு பதறி ஓடி வந்தாள். மதுரவாணி



''அக்கா! மன்னிச்சுடுங்க! நான்... துரோகம்... உங்களுக்கு பண்ணிட்டேன்!'' என்றவாறே உயிரை விட்டாள். பிரமை பிடித்தவள் போல் சாவித்திரி நின்று கொண்டிருக்க...

என்னவோ செய்யப் போக எதுவோ நடந்து கொண் டிருந்தது. வசுமதியின் காதுகளில் ''மாமா மாப்பு'' என்ற வார்த்தைகள் ஒலித்துக் கொண்டே இருந்தது. 'தேவா என்ன செய்தார்? நான் ஏன் அவரை மன்னிக்க வேண் டும்?' என யோசித்தாள். 'மதுரவாணி ஏன் மன்னிப்பு கேட்டாள். அவள் எனக்கு என்ன துரோகம் செய்தாள்?' அவளைச் சுற்றி கேள்விகள் எழும்பிக் கொண்டே இருந்தன. இரண்டு நாட்கள் ஓடிவிட்டன; எல்லாம் முடிந்து விட்டிருந்தது. அப்போது தான் போலீஸ்காரர் ஒருவர் வந்து பிரேத பரிசோதனை முடிவை கொடுத்து விட்டு 'இது என் கடமை சார்! இந்த விஷயம் வெளியில் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கவலைப் படாமல் இருங்கள்'' எனக் கூறிவிட்டு சென்றார். தேவா கண்களை மூடிக் கொண்டு படுத்திருக்க மேசை மேல் இருந்த ரிப்போர்ட்டை எடுத்துப் படித்தாள் வசுமதி. அப்படியே அதிர்ந்து போனாள். மதுரவாணி உடலை பரிசோதனை செய்த ரிப்போர்ட் அது.

அது என்ன விஷயத்தை... விஷத்தை தன்னுள் வைத்திருந்தது தெரியுமா? மதுரவாணி கர்ப்பிணி என்ற விஷயத்தை தெள்ளத் தெளிவாக மறுக்க முடியாமல் எடுத்துக் காட்டியது. இப்போது எல்லாம் அவளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்கியது. ''ஏன் தேவா இப்படி பண்ணினீங்க! உங்க தப்பை என்னால் ஆயுசுக்கும் மன்னிக்கவே முடியாது'' என்றாள்.



# 13

நந்தனா மறுநாள் காலையில் முத்தச்சியின் வீட்டிற்கு சென்ற பொழுது ஓர் இனிய கனவு பூத்திருந்தது. சென்ளை சென்று வீட்டிற்கு வந்தது கூட தெரியாத அளவு சுந்தரமான மயக்கம். மனசு முழுக்க இனிமை நிரம்பி வழிந்தது. பார்க்கின்ற எல்லாரையும் தட்டிக் கொடுத்து, கைகுலுக்கி தன் உணர்வை, மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. தன் மேல் மிகுந்த அன்பு ஆதித்தனுக்கு இருக்கிறது என தெள்ளத் தெளிவாய் புரிந்து போயிற்று. ஆனால் உள்ளே ஒரு சின்னக் கேள்வி. விடை கிடைக்குமா? விடையில்லாத விடுகதையாகிப் போகுமா? பார்க்கலாம் ஆதித்தன் புத்திசாலியா என்று? இதுவரை அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லையா? எப்படி எப்படி? உண்மையில் விபு மேலோ, ரோஷனி மேலோ அவனுக்கு எந்தவித ஈடுபாடும் இல்லையா? அவன் பார்வை என்னை பார்த்தால் மட்டும் ஏன் மாறி விடுகிறது? அன்றைக்கு எதற்கு என் பெயரைக் கேட்டான்? பெயரை வைத்து எதை கண்டுபிடிக்கப் போகிறான்? கண் முன்னால் நிற்கும் அன்பை உணராமல், அன்பை உணர்த்தும் செயலை புரிந்து கொள்ளாமல் அன்பு என எழுதிக் காட்டினாலோ? சொன்னாலோ தான் தெரிந்து கொள்வானா? நிஜமாகவே பெற்றோருக்கு பரிசு வாங்கத்தான் தன்னை சென்றானா? அல்லது அது



ஒரு சாக்கா? அவளுக்கு பரிசு வாங்கித் தர ஆசைப்பட்டது ஏன்? இதையெல்லாம் எதிர்பார்ப்பவளா அவள்? தாத்தாவின் அற்புதமான அன்பையும், அன்னையின் அன்பையும் மட்டுமே நம்பி வளர்ந்தவள் அல்லவா?

வாழ்க்கை அவளுக்கு எவ்வளவோ கற்றுத் தந்திருக்கிறது. மனிதர்களை எடை போட, தவறானவர்களை ஒதுக்கி நடக்க நேர்மையை வணங்க, உழைப்பை மதிக்க, தப்பை தயங்காமல் தட்டிக் கேட்க இப்படி எவ்வளவோ? தாத்தா அவளுக்கு கல்வி கற்றுக் கொடுத்ததுடன் கலைகளை ரசிக்கவும், இலக்கியத்தில் ஆர்வத்தையும் ஆசையையும் ஏற்படுத்தினார். விரல் பிடித்து நடக்கும் முன்னே விலகியவரை விட விரல் பிடித்து எழுத கற்றுக் கொடுத்த தாத்தா மிக உயர்வாய் தெரிந்தார். 'என் தாத்தா எல்லாவற்றிற்கும் மிக உயர்ந்தவராக்கும்' என்ற நினைவு பெருமிதப்பட வைத்தது. மற்றவர்களுக்கு உதவுவதில் அவரிடம் கஞ்சத்தனமே கிடையாது. தனக்கென்று வாழாமல் பிறருக்காக வாழ்வதின் சுகத்தை அறிந்தவர். பெண்ணை மதிப்பவர். உழைக்க அஞ்சாதவர். எல்லாவற்றிலும் பெரிதானது அவரது சுதந்திர சிந்தனை தான். எதற்காகவும் யாருடைய சுதந்திரத்தையும் பறிக்கவோ, இழக்கவோ செய்ய விரும்பாதவர். தான் ஆசைப்பட்ட துறையில் ஜெயிக்க உதவியாய் இருக்கிறவர் அல்லவா? அவரிடம் ஆதித்தனை கூட்டி வந்து அறிமுகப்படுத்த வேண்டும்.

தாத்தாவிடம் வாங்கி வந்த புத்தகங்களைக் காட்டிய பொழுது அவர் பெருமிதமாய் புன்னகை புரிந்தார். அதுவே அவளுக்கு ஓராயிரம் பாராட்டுகளை சொல்வது போல் இருந்தது. முத்தச்சிக்கு வாங்கிய சரவிளக்குகள்

அவளிடமே இருந்தன. அதை மறவாமல் எடுத்து வைத்துக் கொண்டாள். இன்றைக்கு என்னவோ சற்று பார்த்துப் பார்த்து உடுத்திக் கொண்டாள். பச்சை நிற ஷிபான் புடவை தங்க சரிகையிட்டது போல் இருந்ததை எடுத்து கட்டிக் கொண்டாள். அது தாத்தா அவளது பிறந்த நாளுக்கு வாங்கிக் கொடுத்தது. அதற்குப் பொருத்தமாய் காதணி, கையணி, விரலணி என அணிந்து கொண்டு புறப்பட்டாள். ''உன் பாட்டியை நினைவு படுத்துகிறாய் அம்மா'' எனக் கூறியவளிடம் ''அப்படியா? வந்ததும் அதைப் பற்றி உங்களிடம் விசாரிக்கிறேன்'' என்றவாறே ஸ்கூட்டியில் கிளம்பினாள்.

காலை ஒன்பது மணிக்கெல்லாம் முத்தச்சியின் வீட்டை அடைந்து விட்டாள். ஆனால் அவள் பார்க்க நினைத்தவன் தான் அங்கில்லை. ஏதோ அவசர வேலை யாக வெகு சீக்கிரமே கிளம்பி சென்று விட்டானாம். 'அப்படி என்ன அவசர வேலை? தான் இவ்வளவு சீக்கிரம் வருவேன்னு என்று அவனுக்கு எப்படித் தெரியும்? நன்றாக ஒய்வு எடுத்துக் கொண்டு மாலை தானே வரச் சொன்னான். அதனால் தான் இப்பொழுது வருவதற் கில்லை என்று வெளியே சென்றிருப்பான்' என பல வாறு எண்ணிக் கொண்டே முத்தச்சியின் அறைக்குள் சென்றாள். அங்கிருந்து ரோஷனி கண்ணை கசக்கிக் கொண்டு வெளியே வர ஒரு விநாடி தயங்கி பின் உள்ளே நுழைந்தாள். ''வா, வா நந்தனா! இந்த நந்தன வருடத்தில் எங்கள் குடும்பத்தில் பசுமை பொங்க வைத்து விட்டாய்! நந்தன என்றால் வழித்தோன்றல், வாரிசு என்பார்கள். உன் பெயரைப் போலவே என் ஆசைக் கனவு நிறைவேற செய்து விட்டாய்'' என முத்தச்சி பேச... நந்தனாவிற்கு என்னவென்றே புரியவில்லை.



''என்ன சொல்கிறீர்கள் முத்தச்சி?'' என்றாள்.

''நீ மாலையில் தான் வருவாய் என்று ஆதித்தன் சொன்னான். ஆமாம், எனக்காக என்னவோ வாங்கினா யாமே? அது என்ன பொருள்? காட்டு பார்க்கலாம். அவன் நிறைய சஸ்பென்ஸ் வைத்து சென்று இருக் கிறான்.

ரோஷனியிடம் கூட நான் சொல்லிவிட்டேன். என் பேரன் திருமணம் அவன் விருப்பப்படி தான்'' என்று அவர் பேசிக் கொண்டே போக...

சரவிளக்கை எடுத்துக் கொடுத்தாள். அட்டைப் பெட்டிக்குள் இருந்ததால் அது என்னவென்று அறியாமல் அவளைப் பார்க்க, ''பிரிங்க முத்தச்சி! இதை ஆதித்தான் உங்களிடம் கொடுக்க வேண்டும். நீங்க ரொம்ப ஆசைப் படுவதால் இப்பொழுதே கொடுத்து விடுகிறேன். எப்படி யிருக்கிறது என்று சொல்லுங்கள்?'' மெதுவாக பிரிப் பதுபோல் தோன்றினாலும் உள்ளுக்குள் ஓர் பரபரப்பு ஓடுவதை உணர முடிந்தது. அட்டைப் பெட்டியிலிருந்து அந்த கிளி மூக்கிலிருந்து தொங்கிய சரவிளக்கைப் பார்த்து அப்படியே ஒரு விநாடி அயர்ந்து போனார். ''இது.... இது...'' என்ற பொழுது அலைபேசி ஒலித்தது. எடுத்துப் பேசினாள். பின் முத்தச்சியிடம் திரும்பி ''இது சென்னையில் உங்களுக்காக வாங்கினது. என்னை உடனே வரச் சொல்லி வீட்டிலிருந்து போன் வந்தது; முத்தச்சி நான் போய்விட்டு மாலை வருகிறேன்.''

வாசலில் போஸ்ட் மேன் பதிவுத் தபால் வந்திருக் கிறது எனக் குரல் கொடுத்தார். நந்தனா போய் வாங்கி வந்தாள். முத்தச்சி கையெழுத்துப் போட்டுக் கொடுத் தார். அதை அவரிடம் கொடுத்து விட்டு வந்தவள் முகம்

வெளிறி நின்ற முத்தச்சியைப் பார்த்தாள். ''என்ன முத்தச்சி?'' என்பதற்குள் மயங்கி விழுந்தார். சட்டென பாய்ந்து தாங்கிப் பிடித்தாள். அருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்து முகத்தில் தண்ணீரை தெளித்தாள். முகத்தில் நன்கு காற்றுப் படுமாறு பேனை திருப்பி வைத்துவிட்டு குடிப்பதற்கு ஹார்லிக்ஸ் கலந்து கொண்டு வந்தாள். அதற்குள் வீட்டிலிருந்த அனைவரும் அங்கே குழுமி விட்டனர். ''முத்தச்சிக்கு ஒன்றுமில்லை. லோ B.P. இருப்பதினால் மயக்கம் வந்திருக்கும். டாக்டருக்கு போன் செய்து இருக்கிறேன்; அவர் வந்து விடுவார். யாரும் முத்தச்சியை தொந்தரவு செய்ய வேண்டாம். அவர் ஒய்வு எடுக்கட்டும்'' என்றாள். ரோஷனிக்கு கோபம் வந்தது. ''நம்ம வீட்டில் நம்மையே அதிகாரம் செய்கிறாளே? எங்கள் முத்தச்சியை பார்த்துக் கொள்ள எங்களுக்குத் தெரியாதா? இவள் என்ன நம்மைத் தொந்தரவு செய்ய வேண்டாம் கூறுவது? யார் இவள்? காசுக்கு வேலை செய்ய வந்தவள் தானே? அதை மறந்துவிட்டு உரிமைக்காரி மாதிரி அதட்டுகிறாள்'' - என படபடவென்று தன் தாயிடம் பொரிந்தாள். ஆனாலும் எல்லாரும் அவள் சொன்னதைக் கேட்டு அனைவரும் சென்றனர்.

''என்ன முத்தச்சி? அந்த கடிதத்தில் என்ன இருக்கிறது? ஏன் அதிர்ச்சி அடைந்தீர்கள்?''

''இந்த வீட்டின் மேலும் நாங்கள் அனுபவிக்கின்ற சொத்தின் மீதும் எங்களுக்கு உரிமையில்லை என்று வக்கீல் நோட்டீஸ் வந்திருக்கிறது.''

''இந்த வீடும், அடுத்திருக்கும் நிலமும் உங்களுடையது தானே? அப்படியிருக்க யார் நோட்டீஸ் அனுப்ப



முடியும்? விடுங்கள். வக்கீலை கலந்து பேசிக் கொள்ளலாம்'' என்ற பொழுது டாக்டர் வந்தார். முத்தச்சியை பரிசோதித்து ஊசி போட்டார். பின் நந்தனாவிடம் ''இது அதிர்ச்சியால் வந்த மயக்கம். நன்கு தூங்கி எழுந்தால் சரியாகிப் போகும். ஊசி போட்டிருக்கிறேன்'' என கிளம்பிப் போனார். அவரை அனுப்பி விட்டு வந்தால் முத்தச்சி கண் மூடிப் படுத்திருந்தார். சத்தம் செய்து அவரை எழுப்பாமல் எங்கிருந்து நோட்டீஸ் வந்திருக்கிறது? எனப் பார்த்த நந்தனாவிற்கு ஒரு விநாடி தலையைச் சுற்றியது. 'இது, இது தாத்தாவின் பெயரல்லவா? அவரா இந்த நோட்டீஸை அனுப்பியிருப்பார்? நிச்சயமாக இருக்க முடியாது. கிள்ளிக் கொடுக்க வேண்டிய இடத்திற்குக் கூட அள்ளிக் கொடுக்கக் கூடியவர் முத்தச்சியின் மேல் மிகுந்த மரியாதை வைத்திருப்பவர். அவர் அப்படி செய்யக் கூடியவர் அல்ல. என்னவோ ஏதோ சதி நடந்து இருக்கிறது. இந்த இடம் தாத்தாவோடதா? இதை முத்தச்சிக்கு தானமாக கொடுத்தாரா? அப்படியிருந்தால் இதன் மேல் ஏன் நோட்டீஸ் விட வேண்டும்? கொடுத்ததைத் திருப்பி வாங்கும் குணம் கண்டிப்பாய் அவருக்குக் கிடையாது. உடனே இதைப் பற்றி தாத்தாவிடம் விசாரிக்க வேண்டும்.'

வெகு வேகமாகக் கிளம்பினாள். மாதவனைக் கூப்பிட்டு எல்லா விவரங்களையும் சொல்லி விட்டு அந்த வக்கீல் நோட்டீஸுடன் கிளம்பினாள். காற்றை விட வேகமாகச் செல்ல முடிந்திருந்தால் அவள் சென்றிருப்பாள். தாத்தாவிற்கும், முத்தச்சிக்கும் ஏதோ சம்பந்தம் உண்டு போல் தோன்றியது. பேச்சு வாக்கில் முத்தச்சியை விசாரித்தது கூட அக்கறையோடு வினவியதாக

நினைக்கத் தோன்றியது. தைலம் கொடுத்தது, ஆறுத லாக இரு எனக்கூறியது, பிக்னிக்கிற்கு உடன் செல்ல வலியுறுத்தியது எல்லாமே அன்பான அக்கறையோ? அப்படியிருந்தாலும் நோட்டீஸ் அனுப்பி சொத்தை திருப்பிக் கேட்க வாய்ப்பில்லையே? எப்படித்தான் வீடு வந்து சேர்ந்தாளோ? ஏறக்குறைய பாய்ந்தே தாத்தா விடம் ஓடினாள். அவரிடம் நோட்டீசை கொண்டு போய் நீட்டினாள். ''என்னம்மா சீக்கிரமாக வந்து விட் டாய்? உன்னை சிங்கப்பூருக்கு வரச் சொல்லிக் கேட் டிருந்தார்கள். நான் யோசிக்க நேரம் கேட்டு அனுப்பி வைத்து விட்டேன். அவர்களுடன் பேசத்தான் வந்தாயா? உன் முத்தச்சி எப்படியிருக்கிறார்? இது என்ன?'' என்ற வாறே அதை வாங்கிப் பார்த்தார். அப்படியே அதிர்ந்து போனார்.

''யார்? யார்? இப்படி வசுமதியின் வீட்டிற்கு நோட் டீஸ் அனுப்பியது எதுவும் என் பெயரில்?''

''என்ன தாத்தா சொல்கிறீர்கள்? வசுமதியா? முத்தச்சி யின் பெயர் தேவமதி தானே? அவரை உங்களுக்கு நன்றாகத் தெரியுமா? உறவுக்காரரா?''

அவளை ஒருமுறை ஆழ்ந்து பார்த்துவிட்டு பெருமூச்சு விட்டார். பின் நிதானமாக ''வசுமதி, என் மனைவி, அதா வது தேவாவின் அன்பு மனைவி தேவமதி'' என்றார். இப்போது அதிர்ந்து போனது நந்தனா தான்.

''என்ன? என்ன?''

''நம்ப முடியலையா? நீ எத்தனையோ நாட்கள் உன் பாட்டியைப் பற்றி குடும்பத்தைப் பற்றி கேட்டிருக் கிறாய். நான் ஏதும் சொன்னதில்லை. வசுமதி என்னை



நேசித்து மணந்து கொண்டவள். உன்னைப் போலவே அவளும் மிக அருமையானப் பெண். விதி எங்கள் வாழ்க்கையில் விளையாடி விட்டது. அவ்வளவுதான்.''

''என்ன இவ்வளவு சுலபமாகக் கூறிவிட்டீர்கள்? முத்தச்சி தான் உங்கள் மனைவி என்பதை இத்தனை நாட்கள் ஏன் மறைத்தீர்கள் தாத்தா? எனக்கென்னவோ உங்களைப் பற்றி முத்தச்சிக்கும், அவரைப் பற்றி உங் களுக்கும் முழுசாக எதுவும் தெரியாது என்றே தோன்று கிறது. உங்கள் பையன் சரத் சந்தர், மருமகள் பத்மினி, பேரன் ஆதித்தன் பற்றி ஏதாவது தெரியுமா? அவர் களைப் பார்க்கவோ, பேசவோ நீங்கள் முயலவில்லையா? எப்படித் தாத்தா கற்பாறைப் போல் உங்களால் இறுகிப் போய் இருக்க முடிந்தது. யார் யாருக்கோ உருகுபவர் நீங்கள்; கந்தசாமி இறந்து போன அன்று நீங்கள் கண்ணீர் விட்டதை நான் அறிவேன். அப்படிப்பட்டவர் ஒரு நாள் கூட குடும்பத்தைப் பற்றி நினைத்ததோ, பேசியோ நான் கேட்டதில்லையே?

''இன்றைக்குத்தான் நான் இந்தப் புடவையில் முத்தச் சியைப் போல் இருப்பதாகக் கூறினீர்கள். இனிமையாக இருக்க வேண்டிய குடும்பம் கலைந்து போனது எத னால்? பிறகும் சேர்வதற்கு எந்த முயற்சியும் நீங்கள் செய்யவில்லையா?'' அவள் கேள்விகளைக் கேட்டு துவண்டு போய் நாற்காலியில் அமர்ந்தாள். ''சொல்கிறேன். உன் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. என் வசு அன்பாலே செய்யப்பட்டவள். எங்கள் நேசிப்புக்கூட அவள் அன்பிலே உதவும் குணத் தில் இருந்து தான் முகிழ்த்தது. உதவி தேவைப்படும் எவருக்கும் ஓடிச் சென்று உதவுவாள். நல்ல படிப்பாளி;

கவிதாயினி. என் மேல் கொண்ட நேசத்திற்காக உயிரையும் விடத் துணிந்தவள். அண்ணன்களின் எதிர்ப்பையும் மீறி என்னை மணந்து கொண்டாள். நாங்கள் மிகவும் இன்பமாக ஊரே கண்படும்படி வாழ்ந்தோம். அவள் அம்மா இறப்பதற்கு முன் வசுவைப் பார்க்க விரும்பினார். தொலை பேசி செய்தி வேறு யாரோ கேட்டுச் சொல்ல மறந்தது போல் சதி செய்தார்கள். இவளைப் பார்க்காமலே நிராசையுடன் அம்மா இறந்து போனார். நாங்கள் அங்கே சென்ற பொழுது தான் தொலைபேசியில் பேசியது தெரிந்தது. போனை எடுத்து என் அம்மா என்று சொன்னார்கள்.

தாயும் மகளைப் போல பழகிக் கொண்டிருந்த என் அம்மாவிற்கும், வசுவிற்கும் நடுவில் இடைவெளி வந்தது. இடையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் அவர்கள் உறவைக் கெடுப்பது போல் நிறை மாத கர்ப்பிணியான வசுவை மாடியிலிருந்து படிகளில் யாரோ தள்ளி விட்டார்கள். அந்தப் பழியும் என் அம்மாவின் மேல் விழுந்தது. இந்த முறை அம்மா புடவை தலைப்பைப் பார்த்தவள் வசு. அதில் செத்துப் பிழைத்து எழுந்தாள். அது அவளுக்கு மறு ஜென்மம் தான். உடல் அளவிலும், மன அளவிலும் அவள் பெரிதும் பாதிக்கப்பட்டாள். அவள் அன்பு தம்பி நகுலன் தான் அம்மா அந்த பாவ காரியத்தைச் செய்யவில்லை என்று அவளிடம் நிரூபித்தான். உண்மையில் அவன் எனக்கு மகன் போல் தான் இருந்தான். எங்கள் மேல் அவனுக்கு அத்தனை பாசம். எவ்வளவு அருமையானவன் தெரியுமா? வசுவிற்கும் அவன் மேல் கொள்ளைப் பாசம். வசு சட்டென்று உணர்ச்சி வசப்படுவாள்; கொஞ்சம் அவசரப்பட்டு முடிவு செய்து



விடுவாள். மற்றபடி அவள் மேல் எந்தக் குற்றம் குறையும் சொல்ல முடியாது. நகுலன் சொன்னதும் அம்மா மேல் மறுபடியும் பாசமானாள்.

''இருங்கள் தாத்தா! யார் இந்த சதியெல்லாம் செய்தது என்று கண்டு பிடிக்கவே இல்லையா தாத்தா?''

''எப்படி அம்மா முயற்சி செய்யாமல் இருப்பேன்? என் அருமை வசுவையும், என் குழந்தையையும் கொலை செய்ய முயற்சித்து இருக்கிறார்கள். என் அம்மாவின் மேல் அந்தப் பழியைப் போட முயற்சித்திருக்கிறார்கள். இதை சும்மா விட்டுவிட முடியுமா? மறுபடியும் அதே முயற்சியை மேற்கொள்வார்களே என்று தீவிரமாக முயன்றேன்.''

''கண்டு பிடித்தீர்களா இல்லையா?''

''கண்டு பிடித்தேன் அம்மா! அது வேறு யாருமில்லை; என் சொந்த அத்தைம், மகனும் தான் இந்த வேலையைச் செய்தது. இளமையில் அவர்கள் பட்ட கஷ்டம் தான் இந்த மாதிரி நடந்து கொள்ளத் தூண்டியது. தப்பானவனை நம்பி ஓடிப் போன அத்தையை குடும்பத்தில் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை நாங்கள் இங்கே அழைத்து வந்தபோதே அவர்கள் துன்பம் பெருங்காயமாகி புரையோடி அழுகிப் போயிருந்தது. அதனால் கிடைத்த இன்ப வாழ்வை நிலைக்க வைக்க எதுவும் செய்யத் தயாரானார்கள்.

அடுக்கடுக்காய் திட்டங்களைத் தீட்டினார்கள். ஆனால் அவர்களுக்கு ஓர் அருமையான பெண் இருந்தாள். மதுரவாணி என்ற பெயருக்கு ஏற்றாற்போல் மதுரமாய் குணத்திலும் இருப்பாள். அவர்கள் மேற்கொண்டு

செயல்படாதவாறு எல்லா வகையிலும் வழிகளை அடைத்து வைத்தேன். வசுமதியின் மனம் தேற கல்லூரிக்குப் படிக்கச் சென்றாள். என் அருமை மகன் என் மார்பிலும், தோளிலும் வளர்ந்தான். என்னை விட்டு அரை விநாடிக்கூட இருக்க மாட்டான். அவன் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தான். நகுலனுக்கு திருமண ஏற்பாடு செய்ய நினைத்தோம். பெண் பார்க்க அம்மாவும், விசுவும் செல்வதாக இருந்தது. கடைசி நிமிடத்தில் நானும், நகுலனும் புறப்பட்டோம். செல்லும் பொழுது தான் காரில் 'பிரேக்' இல்லை எனத் தெரிந்தது. என்னை கீழே துள்ளி விட்டு நகுலன் தன் உயிரை விட்டான். ஏற்கனவே இந்த சதிப் பற்றி தெரிந்த மதுரவாணி எங்களை காப்பாற்ற முயற்சி செய்த பொழுது அவளையே அடைத்து வைத்தனர். தப்பி விஷயம் சொல்ல வரும் பொழுது விபத்துப் பற்றித் தெரிந்து விஷம் குடித்து உயிரை விட்டாள். நான் செய்த ஒரே தப்பு! துஷ்டன் எனத் தெரிந்தும் விலக்காமல் அருகிலேயே வைத்திருந்தது தான்.''

''இதில் உங்கள் பிரிவிற்கான காரணம் வரவில்லையே எதுவும் இல்லையே தாத்தா?''

''ஏனம்மா இல்லை? விதி விபத்து ரூபத்தில் வந்தது அம்மா. விபத்தில் நகுலன் இறந்தது கேட்ட வினாடி மதுரவாணி விஷம் அருந்தி விட்டாள். அப்போது அவள் மூன்று மாத கர்ப்பிணி.''

தயங்கி சொன்ன தாத்தாவை பார்த்தவளுக்கு காரணம் சட்டென்று விளங்கியது.

''என்ன அநியாயம் தாத்தா? உங்களைப் போய் யார் சந்தேகம் பட்டது? முத்தச்சியா?''



''உனக்கு இருக்கும் தெளிவு அவளுக்கில்லை. அவள் இயல்பே கண்டதும், கேட்டதும் உண்மை என உடனே நம்பி விடுவது தான். சந்தர்ப்பமும், சூழ்நிலையும் அப்படி அமைந்து போனது. இதற்கு யாரை குற்றம் சொல்வது?''

''இது உங்கள் பெருந்தன்மை. கேட்டுக் கொண்டிருக்கும் என்னாலேயே சகிக்க முடியலையே? நீங்கள் எப்படி சகித்தீர்கள்?''

''உண்மையில் அன்றைக்கே என் உயிர் பிரிந்து விட்டதம்மா! இது என் கூடுதான். ஏன் இப்படிச் செய்தீர்கள்? உங்களை ஆயுளுக்கும் மன்னிக்க மாட்டேன் என்றாள். அவ்வளவு தான்! எங்களுக்குள் எல்லாம் முடிந்து போனது. என்னிடம் விளக்கம் கேட்கவோ, உண்மை என்ன என அறியவோ அவள் முயலவே இல்லை. என்றைக்கு அவள் வாயிலிருந்து அத்தகைய வார்த்தை வந்ததோ இனி சேர்ந்து வாழ்ந்து பிரயோசனம் என்ன? என நானும் விட்டு விட்டேன். என் அம்மா துடித்துப் போனார். சாவித்திரி அத்தையோ தன் வினை தன் மகளைச் சுட்டதை கண் முன்னே கண்டு புத்தி பேதலித்து கிணற்றில் குதித்து இறந்து போனார். வசந்தன் வீட்டை விட்டு வெளியேறி விட்டான். கடைசி காலம் வரை அம்மா கண்ணீரிலேயே கரைந்து போனார். இதெல்லாம் முடிந்து போனது கூட என்னை நிலை குலைய வைக்கவில்லை. என் மகன் என் மேல் வைத்த பாசம் தான் திக்குமுக்காட வைத்தது. அவனுக்கு ஆதித்தன் என பெயர் வைக்கத்தான் ஆசைப்பட்டேன். ஆனால் வசுமதி சரத்சந்தர் பெயரை வைக்க விரும்பினாள். நான் அவளுக்கு விட்டுக் கொடுத்தேன். என் மகன் தன் மகனுக்கு நான் ஆசைப்பட்ட பெயரை வைத்து

விட்டான்'' என்றவர் கண்களில் பிள்ளை பாசம் அப்படியே நிழலாடியது.

''அப்பா! நான் உங்க கூடவே வரேன்பா. என்னைக் கூட்டிட்டு போங்கப்பா'' என கால்களை கட்டிக் கொண்டு அழுதான். பிள்ளையைப் பார்க்க பள்ளிக்கு வந்திருந்தான் தேவனாந்த். நேசித்த மனைவியை பிரிய முடிந்த அவனால் அரை வினாடி கூட பிரியாமல் உடனிருந்த மகனை மறக்க முடியவில்லை. பள்ளிக்கு சரத்சந்தரைக் கொண்டுவிட வசுமதியின் பெரிய அண்ணன் வந்திருந்தார். அவருக்கும் பிள்ளையின் துக்கமும், தந்தையின் பாசமும் தர்ம சங்கடமாய் தான் இருந்தது.

''மாப்பிள்ளை, உங்கள் இருவருக்கிடையில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் வசுமதியும் அதைச் சொல்ல மறுத்து விட்டாள். இருந்த போதும் பிரிவில் அவள் உறுதியாய் இருக்கிறாள்; நகுலனின் மரணம் அவளை வெகுவாய் பாதித்து இருக்கிறது. ஏதாவது கண்டித்தால் அவள் உயிரை விட்டு விடுவாள். எனவே அவளையும், எங்களையும் மன்னித்து விடுங்கள். உங்களை மாதிரி அருமையான மாப்பிள்ளை யாருக்கும் கிடைக்க மாட்டார்கள். தயவு செய்து சரத்தைப் பார்க்க வராதீர்கள். பிள்ளை நித்தமும் ஏங்கிப் போவான். இராத்திரி எல்லாம் தூங்காமல் அப்பா, அம்மா என்று அழுகிறான்; அவனை சமாதானப் படுத்தவே முடிவதில்லை.

சாப்பிட, விளையாட, தூங்க, குளிக்க எல்லாவற்றிற்கும் பிள்ளை உங்களைத்தான் தேடுகிறான். வசுவிடம் நெருங்குவதே இல்லை. என்னிடமாவது கொஞ்சம்



பழகுகிறான். அவளிடம் முகம் கொடுத்துப் பேசுவதே இல்லை. ரொம்ப புத்திசாலிப் பிள்ளை. அவள் கெஞ்சினால் 'அப்பாவிடம் கூட்டிப் போ' என்கிறான். நீங்கள் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளுங்கள். அதுதான் நியாயம். உங்களுக்கு இன்னொரு குழந்தை பிறக்கும். எங்கள் வசுவிற்கு இவன் மட்டும் தான். எனவே தயவு செய்து விட்டுக் கொடுத்து விடுங்கள்'' என கைகூப்பி கேட்டுக் கொண்டார். பிள்ளை பாசம் கால்களைக் கட்டி இழுத்தாலும் தேவா பள்ளியின் பக்கமே செல்லவில்லை. பதினைந்து நாள் சென்றிருக்கும்; பிள்ளை பாசத்தால் தன் மகன் படும் பாட்டை கண்டு வருந்துவதா? பேரனை கொஞ்ச முடியாத தன் வருத்தத்தை எண்ணி கவலைப்படுவதா? என எண்ணி கண்ணீர் விட்ட பொழுது... ''அப்பா'' எனக் குரல் கேட்டது. கனவா? என நினைத்துக் கொண்டு தேவானந்த் கண் மூடிக் கொண்டிருந்தான். மறுபடியும் ''அப்பா'' என்ற குரல். 'பிள்ளைதானோ?' பதறி கண் திறந்தான். பள்ளியில் இருந்து நடந்தே ஓடி வந்திருந்தான். கால்கள் இரண்டும் கன்றிப் போயிருந்தன. ''என் கண்ணா!'' என அணைத்துக் கொண்டான். அவனைக் கட்டிப் பிடித்து மாறி மாறி முத்தமிட்டான். ''ஏனப்பா என்னைப் பார்க்கவே வரலை? மாமா வரவேண்டாம்னு சொன்னதுக்காக வரலையாப்பா?''

''ஐயோ! கண்ணே! மணி மணியாய் பேசுகிறாயே?'' என மங்கையர்க்கரசி அழ...

''அப்பா என்னை இங்கேயிருந்து எங்காவது கூட்டி போப்பா. இல்லாட்டி அவங்க எல்லாம் வந்து விடுவார்கள். என்னைத் தூக்கிட்டுப் போயிடுவாங்க.''

அவன் சொல்லிக் கொண்டிருந்த பொழுது பெரியவர் வந்து நின்றார். ''ஐயோ! என்னை அனுப்பிடாதீங்கப்பா! நான் போக மாட்டேன். அம்மா எனக்கு வேண்டாம். நான் உங்ககூடவே இருந்து விடுகிறேன்.''

''இருப்பா! அழாதே! முதலில் சாப்பிடலாம் வா.''

''ரொம்பப் பசிக்குது அப்பா'' என்றவன் தேவா ஊட்ட ஊட்ட வெகு நாட்களுக்குப் பிறகு வயிறு முட்ட சாப்பிட்டான். பிள்ளையின் பசியைக் கண்டு தேவாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவனுக்கு மட்டுமா கண்ணீர் வந்தது? அங்கே நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒவ்வொருவர் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடியது.

''ஏம்பா அழுகிறாய்? நான் உன்னை விட்டுட்டுப் போக மாட்டேன். அப்பா'' என்றவன் ''நான் தூங்கட்டுமா?'' என, ''தூங்கப்பா'' என்று மடியில் போட்டுத் தட்டிக் கொடுத்தான்.

''நான் தூங்கின பிறகு அவங்க தூக்கிட்டுப் போக மாட்டாங்களே?'' என்ற மகனை அணைத்து முத்தமிட்டு ''கண்ணா, அப்பா சொன்னால் கேட்பாயா?'' என்றான். ''ம்! காலை பிடித்து விடுங்கள் வலிக்கிறது'' அவன் கால்களில் தைலம் தடவி பிடித்து விட்டான். பாதங்களில் மயிலிறகால் எண்ணெய் பூசி விட்டான். ''இங்கே பார் கண்ணா! அம்மா ரொம்ப நல்ல அம்மா. நீ அம்மாவிடம் தான் இருக்க வேண்டும். அம்மாவைப் பார்த்துக் கொள்ள நீ அங்கே செல்ல வேண்டும். அப்பா உனக்கொரு வேலை தருகிறேன். அது அம்மாவை பார்த்துக் கொள்ளும் வேலை. அதை நன்றாகச் செய்வாய் அல்லவா?



அம்மா என்னை பார்க்கலாம் என்றால் தான் நீ என்னை பார்க்க வரவேண்டும். இது என் மேல் சத்தியம்.''

''சத்தியம் எல்லாம் சொல்லக்கூடாது என்று நீங்க தானே சொன்னீங்க! அதெல்லாம் வேண்டாம் அப்பா நான் நீங்க சொன்னாலே கேட்பேன். பை! ஸீயூ!'' என்றவன்,

''நான் உங்களைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டே தூங்கிடுறேன். அப்புறமாய் அவங்க தூக்கிக்கிட்டு போகட்டும்'' எனக் கூற அவன் சரி என்றான். பிள்ளை அவன் கழுத்தை இறுக கட்டிக் கொண்டு தூங்கி விட்டான். அப்போது வசுமதி தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்ட செய்தி வந்தது. பிள்ளையை அலுங்காமல், குலுங்காமல் அவள் பெரிய அண்ணனிடம் தூக்கிக் கொடுத்து விட்டு அவன் குலுங்கி குலுங்கி அழுதான்.



## 14

தூக்கிச் சென்ற பிள்ளை சொன்னது போலவே நடந்து கொண்டான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது அவன் பரம்பரை அணுவாய் அவனுடன் கலந்து இருந்தது. தாயை நெருங்குவதில்லை. சட்டென்று அழுகை அடம் நின்று போயிருந்தது ''சேட்டா! இவன் இங்கிருந்தால் அப்பாவைப் பார்க்க ஓடிக் கொண்டிருப்பான். எங்காவது ரொம்ப தூரத்தில் படிக்க வைக்க

வேண்டும். இவன் இல்லாமல் என்னால் வாழ முடியாது. சரத் எனக்கு மட்டுமே வேண்டும். அவர் இவனை சொந்தம் கொண்டாடக் கூடாது. என் பிள்ளை எனக்கு மட்டும்தான். அவர் மேல் இவனுக்கு பாசம் அதிகம். நான் கல்லூரிக்குச் சென்ற பொழுது அவர் தான் இவனை வளர்த்தார். குழந்தையாய் இருந்ததில் இருந்து அவர் அரவணைப்பிலேயே வளர்ந்து விட்டான். இவனை நம் ஊருக்கு அழைத்துச் சென்று விடலாம். இவனுக்காக இங்கேயே தங்கியது தப்பாகி விட்டது'' என வசுமதி பலகீனமான குரலில் பேசினாள். தன் மேல் உயிராய் இருந்த கணவனையும் பிரிந்தாகி விட்டது. இனி அவளுக்கு என்று யார் இருக்கிறார்கள்? பிள்ளையைப் போல் வளர்த்த நகுலனும் போய் விட்டான். வாழ்வு முழுமைக்கும் சரத் மட்டும்தான் அவளுக்கு. அவனை முழுதாக பற்றிக் கொள்ளும் வெறி வந்தது. ஆனால் அவள் நெருங்கினாலும் விலகி விலகிப் போனான். குழந்தை மனது அவள் பெரிய அண்ணனுக்கு நன்றாகப் புரிந்தது.

குழந்தைக்காகவாவது வசுமதி விட்டுக் கொடுக்கக் கூடாதா? என ஒரொரு சமயம் அவருக்கே தோன்றியது. அது நடக்காது என்று தெரிந்ததும் தந்தையை தேடும் அந்தக் குழந்தைக்கு தானே ஆறுதலாக நடக்கத் தொடங்கினார். அவனுக்கு எல்லாம் செய்தார்; தேவா என்ன எல்லாம் செய்வான் எனக் கேட்டுக் கேட்டுச் செய்தார். அவனும் மெல்ல மெல்ல அவருடன் ஒட்டிக் கொண்டான். அப்போது தான் குடும்பத்துடன் அவர் அமெரிக்கா செல்ல வாய்ப்பு வந்தது. அவர் வேலை செய்யும் நிறுவனமே அவரை அங்கே அனுப்பி வைத்தது. வசுமதி



தன்னால் சமாளிக்க முடியாது என புரிந்து சரத்தை தன்னால் சமாளிக்க முடியாது என புரிந்து கொண்டாள். அவன் படிப்பு மேல் நாட்டில் தொடங் கட்டும் என நினைத்தாள். அவள் பிள்ளையின் நினைப்பும் அப்படித்தான் இருந்தது.

''மாமா! நீங்க ஊருக்கு போறீங்களா? நானும் வரேன். அப்பா மாதிரி நீங்களும் என்னை விட்டுடாதீங்க.'' என்றவனை அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டார். ஊருக்குக் கிளம்பும் பொழுது வசுமதி தான் அழுதாள். பிள்ளை தான்பாட்டிற்கு விளையாடிக் கொண்டிருந்தான். ''சரத் கண்ணா! சமத்தா படிக்கணும். நல்ல பிள்ளையா இருக்கணும். அண்ணே இவனுக்கு மறைக்காமல் தமிழ் படிக்க ஏற்பாடு செய்யுங்கள். உனக்கு அம்மா கிட்டே இருந்து என்னடா வேணும்?'' என கன்னத்தில் முத்தமிட்டு கேட்டாள்.

அவள் இடக்கை விரலில் இருந்த பச்சைக்கல் மோதிரத்தைக் காட்டினான் பிள்ளை கன்னத்தைத் துடைத்துக் கொண்டே. 'அவர் நினைவாக என்னிடம் இருப்பது இது ஒன்றுதான். இருந்தாலும் இது உன்னைச் சேர வேண்டிய பொருள் தானே?' என எண்ணிக் கொண்டே அதை கழட்டி அவனிடம் கொடுத்தாள். வசுமதி பிள்ளையின் எதிர்காலம் வளமாய் இருக்கட்டும் என அவனைப் பிரிந்தாள். பிள்ளையுடன் தொலைபேசி வழியாகப் பேசினாலும் அவள் தாயன்பை அவனிடம் காட்ட முடியவில்லை. அவனும் அவளிடம் நெருங்காமலே போய் விட்டான். அவனுக்கு பத்மினியை அவன் தான் தேர்ந்து எடுத்தாள். ஊரிலிருந்து வந்தவன் மறுக்காமல் அவளை மணந்து கொண்டான். தந்தையைப் பார்க்க ஆசைப்படுவானோ?

என நினைத்தாள். ஆனால் அவன் அப்படி எதுவும் செய்யவில்லை. திருமணம் முடிந்து இரண்டே நாளில் ஊருக்குக் கிளம்பி விட்டான். வசுமதி இலக்கியத்தில் தன் கவனத்தைத் திருப்பி பேரும், புகழும் பெற்று விட்டாள். சுற்றிலும் உற்றார் உறவினர் இருந்தும் மனசுக்குள் ஓர் வெறுமை சூழ்ந்து இருந்தது.

வசுமதியின் அண்ணன் தேவாவிற்கு பிள்ளையின் வளர்ச்சிப் பற்றி அவ்வப்போது கடிதங்கள் எழுதிக் கொண்டு இருந்தார். தாத்தா சொல்லி முடித்த பொழுது நந்தனா அழுது கொண்டு இருந்தாள். அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. அங்கிருந்து எழுந்து வாய் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள். பின் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு நேரே முத்தச்சியின் வீட்டிற்குக் கிளம்பினாள். புயல் மாதிரித்தான் வீட்டிற்குள் நுழைந்தாள். நந்தனா அவர் எதிரே நின்று நேராக முத்தச்சியைப் பார்த்தாள். ''என் இப்படி பண்ணினீங்க?''

தேவாவை அவள் கேட்ட அதே கேள்வி! அன்றைக்கு தேவாவிற்குப் புரியாதது போல இன்றைக்கு முத்தச்சிக்கும் புரியவில்லை. ''என்ன நந்தனா?''

''என் தாத்தாவிற்கு என் இப்படி அநியாயம் செய்தீர்கள்?''

''உன் தாத்தாவா? யார்? என்ன அநியாயம்?''

''தேவாவை இன்னும் மறந்து இருக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன். அவர் என்ன தப்பு செய்தார்? அவருக்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுத்து உள்ளீர்கள்?''

''தேவா... என்ன... தப்பு?'' என்றவர் ''அதை நான் உன்னிடம் சொல்ல வேண்டியது இல்லை.''



''முதலில் நீங்கள் உங்களையே புரிந்து கொள்ளவில்லை. அப்புறம் எப்படி என் அருமை தாத்தாவைப் பற்றி புரிந்து கொண்டு இருப்பீர்கள்? சொர்க்கமே கிடைத்தும் அதை பாலைவனம் ஆக்கிக் கொண்டவர் நீங்கள். தாத்தா மேல் சந்தேகப் பட்டீர்களாமே? எப்படி உங்களுக்கு மனம் வந்தது. அப்படி அவர் மேல் பழி போட? அவருடன் வாழ்ந்த உங்களுக்கு அவர் எப்படிப்பட்டவர் எனத் தெரியாது? என்ன பெரிய சந்தர்ப்பம், சூழ்நிலை? எப்பேர்ப்பட்ட நிலைமை வந்திருந்தாலும் நீங்கள் அவரை நம்பியிருகக வேண்டாமா? அவ்வளவு தானா உங்கள் அன்பு? அவர் மேல் தப்பாக எண்ணும்படி என்றாவது அவர் நடந்திருக்கிறாரா? என அரை வினாடியாவது யோசித்தீர்களா? ஆயுளுக்கும் மன்னிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டுப் போனவர்களை இன்னும் 'என் வசு என் வசுன்னு' சொல்லிக் கொண்டு இருக்கிறார். முதலில் உங்களுக்கு உங்கள் மேலே நம்பிக்கை இல்லை. நல்லவரை தேர்ந்தெடுத்தோம் என நம்பிக்கையிருந்து இருந்தால் அவரை விட்டுப் பிரிந்து இருப்பீர்களா? எல்லாமே உங்களுக்கு அவசர முடிவாக போய் விட்டது. உங்கள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை நீங்களே நினைத்துப் பாருங்கள். அவசரத்தில் எத்தனை தவறான முடிவுகளை எடுத்தீர்கள் என்பது உங்களுக்கே புரியும். யார் மேலயும் உண்மையான அன்பு, காதல் வச்சிருந்தா அது எவ்வளவு பிரச்சனை வந்தாலும் கடைசி வரை நீடிக்கும். நீங்க வச்சது உண்மையான அன்பில்லே! உங்க வாழ்க்கையை தொலைச்சு, தாத்தா வாழ்க்கையை நரகமாக்கி, பிள்ளையின் பிஞ்சு மனசை முறித்து எதை சாதித்து விட்டீர்கள்? ஒரு இனிமையான, அருமையான

வாழ்வை இழந்து விட்டீர்கள். தாத்தா எவ்வளவு உயர் வான மனிதர். இன்னமும் உங்களை குற்றம் சொல்லி ஒரு வார்த்தை சொல்லவில்லை. அவர் விரும்பியிருந்தால் இன்னொரு பெண்ணை மணந்து அருமையாக வாழ்ந் திருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லையே? தன் பிள்ளையை உங்களுக்காக முழுதாக விட்டுக் கொடுத்தாரே! அவர் அருமை இன்னமுமா உங்களுக்குப் புரியவில்லை?''

அவள் சொற்கள் ஈட்டி போல் அவர் இதயத்தில் பாய்ந்தன.

''போதும் நந்தனா! போதும்! நானா அவர் மேல் அன்பு இல்லாதவள்? அவர் பெயரை என்னோடு இணைத்து எழுத்தாளர் தேவமதி ஆனது அவர் மேல் இருந்த அன்பால் தான். அவர் தப்பு செய்தார் என நினைத்தேன்; அதனால் அவரைப் பிரிந்தேன். அது அவருக்கு மட்டுமா தண்டனை? எனக்கும் தான். பிள்ளையை அவரிடமிருந்து பிரித்தது தப்புதான். ஆனால் அவன் தான் என்னையும் பிரிந்து எனக்கும் தண்டனை கொடுத்து விட்டானே? எத்தனை நாட்கள் தேவாவையும், எங்கள் மகனையும் நினைத்து கண்ணீர் விட்டு இருப்பேன்? தூக்கம் வராமல் தவித்த காரணம் எதுவென்று உனக்குப் புரியுமா? தேவா அருகிலே வாழ வேண்டும் என்று தான் தேவா எனக்கு வாங்கிக் கொடுத்த இந்த வீட்டிற்கே குடி வந்தேன். அவரை எப்படி என்னால் மறக்க முடியும்? என் உயி ரோடு கலந்தவர் அல்லவா?'' என விம்மி விம்மி அழு தார்.

மாதவன் சரத்திற்கு உடனே போன் செய்து நோட்டீஸ் வந்த விவரத்தைச் சொல்லி விட்டான். சொன்னதும் சரத்



சொன்ன முதல் வார்த்தை ''அப்பா அப்படிச் செய்ய மாட்டார். நானே வருகிறேன்'' என்பது தான். பின் ஆதித்தனுக்கும் போன் செய்தான். அவன் அவசரமாக வீட்டிற்கு வந்தான். அவனை ரோஷனி வழிமறித்தாள். நந்தனா முத்தச்சியின் அறைக்குள் வெகு வேகமாய் நுழைந்ததை அவள் பார்த்தாள். பின்னோடு சென்றாலும் அறைக்குள் ரோஷனி நுழையவில்லை. நந்தனா முத்தச்சியிடம் கடும் கோபமாகப் பேசும் குரல் கேட்டது. வார்த்தைகள் தெளிவாய் விழாவிட்டாலும் அவரை கோபமாய் ஏதோ சொல்கிறாள் எனப் புரிந்தது. கதவு சாத்தியிருந்ததால் அவளால் தெளிவாகக் கேட்க முடிய வில்லை. முத்தச்சியின் அழுகுரல் கேட்டதும் மேலும் அவள் பதறிப் போனாள். 'யார் இவள்? எல்லாம் முடிவும் இவளே எடுக்கிறாள். எங்கள் அருமை முத்தச்சியை இந்த பேச்சு பேசுகிறாள். அவரையே அழ வைக்கிறாள். அவர் வயதிற்காவது மரியாதை கொடுத்தாளா? எல்லாம் முத்தச்சி கொடுத்த இடம். இன்றைக்கு ஆதித்தன் வரட்டும். இவளை வீட்டை விட்டே விரட்டி விடுகிறேன்.' எண்ணிக் கொண்டிருந்த பொழுதே அவன் வந்துவிட நேரே அவனிடம் சென்று பொரிந்து தள்ளி விட்டாள். ''காலையிலேயே மயக்கம் போட்டு விழுந்த முத்தச்சியை கடுமையாகப் பேசி கண்ணீர் விட்டுக் கதற வைத்துக் கொண்டிருக்கிறாள் உங்கள் அருமை நந்தனா. போய் என்னவென்று பாருங்கள்.''

ஆதித்தனுக்கு முத்தச்சி மேல் பாசம் ஏனோ மிகுந்து இருந்தது. அவன் தந்தை காண்பிக்காத பாசத்தை இவன் அவர் மேல் வைத்திருந்தான். சரத்தும் அதற்காக தன் மகனைக் கண்டித்தது இல்லை. அது அவன் விருப்பம்

என அவன் போக்கிற்கே விட்டு விட்டான். அதுவும் தந்தை மேல் அவனுக்கு மரியாதையைக் கூட்டியது.

அந்த முத்தச்சியிடம் நந்தனா சண்டையிடுகிறாள் எனக் கேட்டதும் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. வெகு விரைவாய் அவரது அறைக்குச் சென்றான். கதவை வேகமாய் திறந்தான். ''இப்பொழுது அழுது என்ன பயன்? அன்றைக்கே உங்கள் முட்டாள் தனத்தை விட்டு சற்று சிந்தித்து இருந்தால் உண்மை புலப்பட்டிருக்கும்.''

'என்ன தைரியம் இந்த நந்தனாவுக்கு? முத்தச்சி விம்மி விம்மி அழுகிறார். கொஞ்சம் கூட கருணை இல்லாமல் முட்டாள் தனம் என்று இழிவாக மரியாதையில்லாமல் பேசுகிறாளே?'

''நந்தனா'' என கோபத்துடன் இரைய தலைமுடியை ஒதுக்கியவாறு திரும்பியவளின் இடக்கை விரலில் இருந்த பச்சைக்கல் மோதிரத்தைப் பார்த்தான். அப்படியே பேச்சு வராமல் நின்று போனான்.

''உங்கள் பேரனிடமே நீங்கள் செய்தது சரியா என கேட்டுப் பாருங்கள். அப்புறம் தூங்கிப் போய் விட்ட உங்கள் மனசாட்சியை எழுப்பிக் கேளுங்கள்'' எனக் கூறி விட்டு புயலாய் மறுபடியும் வெளியேறி விட்டாள்.

வீட்டிற்கு சென்ற பொழுது தாத்தா வக்கீல் வீட்டிற்குச் சென்றிருந்தார். அவர் வந்ததும் ''இன்னும் எத்தனை நாள் நன்மை செய்து துன்பம் வாங்கும் உள்ளத்துடன் இருப்ப தாய் உத்தேசம்?'' என்றாள்.

''வா, உட்கார். வெறுப்பை மனதில் சுமந்து எதை சாதிக்கப் போகிறோம் அம்மா? வாழ்வது ஒருமுறை தான். இந்த உறவுகளும் இப்போது தான். இதை ஏன்



சிக்கலாக்கி துன்பப்பட வேண்டும்? குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.''

''நான் போய் முத்தச்சியின் மனதில் உறைக்குமாறு நாலு கேள்வி கேட்டு வந்தேன். கண்ணீர் விட்டு கதறி விட்டார்.''

''ஏனம்மா அப்படிச் செய்தாய்? அவளுக்கு பூஞ்சை மனசு! எதுவும் தாங்காது. அவளுக்கு என் மேல் மிகுந்த அன்பு. அதனால் தான் என் மேல் தப்பு என்று பெயர் வந்ததுமே பிரிந்து போய் விட்டாள். அது அவளுக்கும் தண்டனை தான். அவள் இன்றைக்கு இலக்கியத்தில் பெருமளவு சாதித்து இருக்கிறாள் என்றால் அதற்கு எங்கள் பிரிவு தான் காரணம். குழந்தை, கணவன் என அவள் உலகம் குறுகிப் போயிருக்கும். இன்று தன்னை முழுமையாக இலக்கியத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறாள். என் வசு தன்னை நிருபித்து விட் டாள். பிரபல எழுத்தாளர் பிரபஞ்சன் சொல்வது போல் நானும் குற்ற உணர்ச்சியில் தவிக்க வேண்டியிருக்கும். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'நிறைந்த கனவு களும், லட்சியங்களும் கண்களில் மிதக்க, ஆனந்த மாகப் பறந்து திரிய வேண்டிய, அறிவும் ஞானமும் பொலிந்த, மகத்தான மானுட உணர்வுகள் கொண்ட பெண்மணிகளை மனைவியாகக் கொண்டு, அவர் களைக் கீழிறக்கி, ஒளி இழக்கச் செய்த, செய்து கொண் டிருக்கும் கோடி கோடி ஆண்களின் வரிசையில் நானும் சேர்ந்து இருக்கிறேன் என்கிற குற்றவுணர்வு மட்டும் எப்போதும் என்னுடன் இருந்து தீரும். அதிலிருந்து நான் தப்ப முடியாது' என்கிறான். அது உண்மை தானே?''

''உங்களை மாதிரி இவ்வளவு சுலபமாய் மன்னிக்க யாராலும் முடியாது.''

''வேண்டாம் அம்மா! உன் மனதில் அவள் மேல் கோபத்தை வளர்த்துக் கொள்ளாதே. இத்துடன் விட்டு விடு. அவள் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லையே? என் மேல் நீ வைத்திருக்கும் அன்பு உன்னை இப்படி பேச வைக்கிறது. போதும் சில சமயம் பேசாமல் விட்டு விடுவதே நல்லது.'

''இளமையில் கூட துணையில்லாமல் வாழ்ந்து விடலாம். முதுமையில்தான் துணையின் அவசியத்தை நன்றாக உணர முடியும்.''

''ஏன் நான் நன்றாகத்தானே இருக்கிறேன். என் அருமை பேத்தி நீ இருக்கிறாய். அப்புறம் என்ன வேண்டியிருக்கிறது?''

''சரி, நீங்கள் வக்கீலை பார்த்த விஷயம் என்னவாயிற்று?''

''யாரோ என் பெயரில் வசுமதிக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்கள்.''

''யார் தாத்தா அது? போலி கையெழுத்துப் போட்டு இந்த வேலையைச் செய்தது?''

''இது போலி கையெழுத்து இல்லையம்மா! என்னிடம் எப்படியோ ஏமாற்றிக் கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். யாருக்கு எப்போது கையெழுத்து போட்டுக் கொடுத்தேன் என யோசித்துக் கொண்டே இருக்கிறேன்.''

''ஐயய்யோ! இப்போது என்ன தாத்தா செய்வது?''

''நான் செய்யவில்லை என்று நிரூபிப்பது கடினம். எனவே வாபஸ் வாங்குவதாகச் செய்தித் தாளில்



அறிவிப்பு கொடுத்து விட்டால் போதும். மேலும் அந்த இடத்தை வசுமதி பெயரில் எழுதி பதிவு செய்யவும் ஏற்பாடு செய்துவிட்டு வந்தேன்.''

''இன்னும் எத்தனை நாள்களுக்குச் செய்யாத தப்பிற்கு சிலுவை சுமக்கப் போகிறீர்கள்? என்னால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. உங்கள் ஆசை, கனவு எதுவும் நிறைவேற வேண்டாமா?''

''ஏன் எல்லாக் கனவையும் நிறைவேற்ற நீ இருக்கிறாயே போதாதா? போ அம்மா குடிக்க கொஞ்சம் கறிவேப்பிலை மோர் கொண்டு வா.''

''நிச்சயமாக தாத்தா! கண்டிப்பாய் உங்கள் கனவை நிறைவேற்றுவேன்.''

நந்தனாவை வரச் சொல்லி பல குறுஞ் செய்திகள் மாதவனிடம் இருந்து வந்து விட்டன. ஆனால் இவள் சட்டை செய்யவில்லை. முத்தச்சி சொல்லித்தான் அவன் அனுப்பியிருப்பான் என்று அவளுக்குத் தெரியும். இருந்தாலும் போகத் தோன்றவில்லை. ஆனாலும் அவளுக்கு கடமை ஒன்று இருந்தது. தாத்தாவின் விவசாயக் கனவை நிறைவேற்ற பேரனைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய கனவு இருந்தது. இதுவரை அவரது பெருந்தன்மையால் மற்றவர்கள் ஏமாற்றியது போதும். இனியாவது அவர் வாரிசு அவர் கனவை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைய வைக்க வேண்டும். அதற்கு அவள் தான் முயற்சிக்க வேண்டும். எனவே தான் இஷ்டமில்லாவிட்டாலும் முத்தச்சி வீட்டிற்கு சென்றாள். அவள் சென்ற நேரம் வழக்கத்தில் இல்லா பழக்கமாய் முத்தச்சி கோவிலுக்குச் சென்று இருந்தார். 'நல்லவேளை, அவர் முகத்தில்

விழிக்க வேண்டிய அவசியமில்லை. அன்றைக்கு கோபத்தில் பேசி விட்டாள். இன்று அன்பு சொட்டும் விழிகளுடன் அவர் ஏதாவது சொன்னால் அவளால் மறுக்க முடியாமல் போய்விடும்.

நேரே மாடிக்குச் சென்றாள். ஆதித்தன் அறைக்கதவு திறந்து தான் இருந்தது. கதவை இலேசாய் ஒருக்களித்து விட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். மிக சுத்தமாக, வைத்த பொருள்கள் அதனதன் இடத்தில் அப்படியே இருந்தது. மடிக்கணினிக்கு அருகில் ஓர் அழகான சங்கு இருந்தது. அதை கையிலெடுத்தாள்; பார்த்துக் கொண்டே இருந்தாள். பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு ஆதித்தன் வெளியே வந்தான். அவனைப் பார்த்ததும் ''நான் உங்களிடம் பேச வேண்டும்'' என்றாள்.

''ஆச்சரியமாக இருக்கிறதே? நீ சண்டை தானே போடுவாய். இன்றைக்கு பேசப் போகிறாயா?'' சற்று நேரம் மௌனமானாள். ''சொல்லு நந்தனா? எதைச் சொல்ல வந்தாய்?''

''நீங்கள் பொறுப்பை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

''என்ன பொறுப்பு?''

''தாத்தாவின் கனவை நனவாக்கும் பொறுப்பு.''

''என்ன கனவு?''

''விவசாயத்தை நீங்கள் கையிலெடுத்துக் கொள்ள வேண்டும்.''

''எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாதே?''

விளையாடுகிறாயா? என கேட்காமல், முடியாது என மறுக்காமல் அவன் இப்படிக் கேட்டது அவளுக்கு ஆறுதலாய் இருந்தது.



''யாரும் எதையும் கற்றுக் கொண்டு பிறப்பதில்லை. முயற்சி செய்தால் முடியாததும் இல்லை.''

''சரி.''

''என்ன?''

''நீ சொன்னால் சரிதான்.''

''என்ன?'' இப்போது அவள் கேட்டாள். மேலும்,

''விவசாயம் மிகவும் கஷ்டமான காரியம்; மரியாதை கூட கிடைக்காது.''

''இருக்கட்டும்! நீ என் மேல் நம்பிக்கை வைத்து கேட்கும் பொழுது நான் என்னை நம்பாமல் இருக்க முடியுமா? மரியாதையை விட்டுத் தள்ளு. வெற்றி வந்தால் அது தன்னாலே வரும்.''

''நிஜமாகவே விவசாயம் செய்ய ஒத்துக் கொள்கிறீர்களா?''

''பொய் என்னிடம் கிடையாது பெண்ணே.'' என்ற பொழுது ''ஆஷ்'' என விபு அழைப்பது கேட்டது.

''சரி. நான் கிளம்புகிறேன், அவள் ஏதாவது நினைக்கப் போகிறாள்.''

''கவலைப்படாதே! என் அனுமதியில்லாமல் யாரும் அறைக்குள் வரமாட்டார்கள்; உன்னைத் தவிர.''

''ஸாரி!'' என அவள் தலைகுனிய,

''இதற்கு அவசியமில்லை நந்தனா! இப்போது எப்படி உரிமையோடு விவசாயம் செய்யச் சொன்னதையே கேட்டேனே! உள்ளே வர மட்டும் அனுமதியில்லாமல் போய் விடுமா? ஆனால் ஒரு நிபந்தனை...''

''என்ன?'' ''நான் விவசாயம் செய்வதற்கு உன் உதவியும் தேவை. கண்டிப்பாய் செய்வாய் என்று நினைக்கிறேன்.''

அவளையும் அல்லவா அவன் வேலையில் கட்டிப் போட்டு விட்டான். ''வா போகலாம்'' என்றான் கிளம்பிய வாறே.

''எங்கே?''

''முதலில் நிலத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்; சூழ்நிலை, சுற்றுப்புறம் புரிய வேண்டாமா? உன் ஸ்கூட்டியில் தானே வந்தாய்? இன்றைக்காவது லிஃப்ட் கொடுப்பாயா? அந்த சங்கு அவ்வளவு பிடித்திருக்கிறது என்றால் நீயே வைத்துக் கொள்'' அதை அப்போதுதான் உணர்ந்தவளாய்,

சட்டென கீழே வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

''உங்கள் பொருள் எனக்கெதற்கு?' என மெல்ல முணுமுணுக்க ''என்ன?'' என்றான். ''ஒன்றுமில்லை.''

நந்தனா ஓட்ட பின்னால் ஏறிக் கொண்டான். இருவரும் நிலங்கள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தார்கள். நன்செய், புன்செய், தோட்டம், நீர்ப்பாசனம் எல்லாவற்றையும் கேள்விகள் கேட்டு தெரிந்து கொண்டே வந்தான். தன்னை யாரென்று அறிமுகப்படுத்திக் கொள்ளாமலே நிலத்தை பயன்படுத்துபவர்களிடம் விளக்கங்கள் கேட்டுக் கொண்டிருந்தான். அவர்கள் பாண்டியைச் சந்தித்தார்கள். பெரியவர் முன் கூழைக் கும்பிடு போடுபவன் தெனாவெட்டாகப் பேசினான். ''யாரு பாப்பா இது? ஜாலியா எங்கேயாவது ஊர் சுற்றப் போகாமல் வயல் காட்டிற்கு கூட்டி வந்திருக்கிறாய்?'' அவன் பேச்சிலிருந்த குசும்புத்தனம் அவளுக்கு எரிச்சல் மூட்டியது. அவளைப் பார்த்த ஆதித்தன்,



''நான் விவசாய பத்திரிகை ரிப்போர்ட்டர். விவசாயத்தைப் பற்றி கட்டுரை எழுத செய்தி சேகரிக்க வந்தேன்.''

''அப்படியா! நான் சொல்றதை எல்லாம் அப்படியே எழுதுவீங்களா? விவசாயி பொழப்பை மாதிரி மோசமான பொழப்பு எதுவும் இல்லீங்க. பாடு தன் பெரும்பாடு. பலன் ஒண்ணும் இல்லை. விவசாயி கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாதுங்கறது ரொம்ப சரி. ஆத்துல நீர்ப்பாசனத்துக்கு தண்ணீர் வரலை. மோட்டார் பம்புல தண்ணீர் இறைக்கலாம்னா மின்சாரம் இல்லை. இதெல்லாம் மீறி விதை தெளிச்சா வேலைக்கு ஆள் இல்லை. உரம் விலையோ நான்கு மடங்காகி விட்டது. பயிர் வளர இயற்கையும் ஒத்துழைக்கணும். புயல், மழை, வெள்ளம், வறட்சி இப்படி எத்தனையோ தாண்டி பயிர் விளைந்தால் அதற்கு நல்ல விலையில்லை. நகைய வச்சு பாங்கில் வாங்கின கடனை அடைக்க வழியில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் வாராக்கடன், ரூ.71,047 கோடியாம். இது கடந்த ஆண்டை விட ரூ. 14 ஆயிரம் கோடி அதிகமாம்.

இதில் ஏறத்தாழ 50 ஆயிரம் கோடி ஏதோ கார்ப்பரேட் நிறுவனங்கள் தர வேண்டிய வாராக்கடனாம். இந்த மாதிரி பல கோடி ரூபாய் மக்கள் பணத்தை சுரண்டி விழுங்குகிறவர்கள் பேரை எல்லாம் பத்திரிகையில் போட மாட்டாங்க. ஏழை விவசாயி விவசாயத்திற்காக வச்ச நகையையோ, வாங்கிய கடனையோ செய்தியாய் போட்டு ஏலம் விடுவாங்க. இதெல்லாம் இனி மாறாதுங்க. நாம தான் தொழிலை மாத்திக்கணும்.''

அவர்கள் கிளம்பியதும் ''அய்யா சாயல் அப்படியே இருக்கு. இவங்க பேட்டி எடுக்க வந்தாங்களாம்?

முதலில் நம்ம ஆளுக்கு இந்த விஷயத்தை தெரியப் படுத்தணும்.''

''சரியான விவரமான ஆள் போலிருக்கு.''

''இவன் வில்லங்க பார்ட்டி! விவசாயம் செய்யறேன்னு தாத்தா கிட்டே உதவிக் கேட்டு வந்தான். இவனை நம்பக் கூடாது என்று கூட தாத்தாவிடம் சொன்னேன். இவன் விவசாயம் செய்வது போல் நடிக்கிறான்.

உண்மையான விவசாயி இவன் இல்லை. ஏதோ திட்டத்துடன் தான் வந்திருக்கிறான். பாங்கில் கடன் வாங்க வேண்டுமென்று இவன் தான் தாத்தாவிடம் கையெழுத்துகள் வாங்கிச் சென்றான். அதில் கூட ஏதோ சூது இருக்குமோ என்று தோன்றுகிறது. வாருங்கள் வங்கிகளைக் கூட விசாரித்து விடலாம்.''

வங்கிகளில் விசாரித்த பொழுது எந்தவிதமான விவசாயக் கடனும் பாண்டி வாங்கவில்லை என்று தெரிந்தது. அப்படியானால்? முத்தச்சிக்கு நோட்டீஸ் அனுப்பியது இவன் தானா? ஆனால் இவனுக்கு முத்தச்சியைப் பற்றிய விவரம் எப்படித் தெரியும்? என யோசித்தாள். நந்தனா வீட்டில் இன்னொரு காரியம் செய்தாள். மதுரவாணி அறையைத் திறந்து அதில் ஏதாவது சாட்சி கிடைக்கிறதா? எனப் பார்த்தாள்.

ஒரு நைந்து மங்கிப் போன காகிதம் கிடைத்தது. அதைப் பூப்போல எடுத்துப் படித்தாள். ''ஆகா!'' என மகிழ்ந்தாள். இயற்கை விவசாய முறைப்பற்றி தகவல் கேட்க ஆதித்தன் சென்றிருந்தான். சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியாக மாற்றியதை பார்வையிட்டு வந்திருந்தான். அதைப் பற்றிய பயிற்சி, செயல் முறை விளக்கமும் தேடிப் போய் பெற்றான். அரிசி ஆலை



களையும் பார்வையிட்டு வந்தான். ''எம்.பி.ஏ. படிப்பவர்கள் கூட நிதி, மனித வளம் என ஒரு துறையில் மட்டுமே சிறப்பு பயிற்சி பெறுகிறார்கள். நானும் அப்படித்தான் நிதியை எடுத்துப் படித்தேன். ஆனால் விவசாயி நீர் மேலாண்மை, மனித வளம், பயிர்ப் பாதுகாப்பு, பருவ நிலை, உணவு பதப்படுத்துதல், சந்தைப் படுத்துதல் போன்ற பலவற்றை நிர்வாகம் செய்தால் தான் வெற்றி பெற முடியும் போலிருக்கிறது'' என்றான் நந்தனாவிடம்.

''நான் உங்களைக் கஷ்டப்படுத்துகிறேனா?''

''சே! இஷ்டப்பட்டு கஷ்டப்பட்டால்தான் கனவு நனவாகும். அதுதான் கண்ணின் கடைக்கண் பார்வை தனை நந்தனா காட்டிவிட்டால்...'' என அவன் இழுக்க நந்தனா முறைத்தாள்.



## 15

நந்தனா வீட்டிலிருந்து கிளம்பும் பொழுதே உள்ளுக்குள் ஏதோ கலக்கமாகவே இருந்தது. ஏன் என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு மட்டும் இப்படிப்பட்ட உணர்வு! பாண்டியைப் பற்றிய சந்தேகத்தைத் தாத்தாவிடம் சொல்லி விட்டிருந்தாள். அவர் முன்னைப் போல அலட்சியமாக அதைப் பற்றி எடுத்துக் கொள்ள வில்லை. அவன் பின்னணியில் யாரோ இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். கவனமாய் காய் நகர்த்தினார்;

போலீஸ் அதிகாரி சுலபமாய் யார் இருக்கிறார்கள்? என ஊகித்து விட்டார். அவனை வலை விரித்துப் பிடிக்கத் திட்டமிட்டனர். நிலத்தை பாண்டி பெயருக்கு மாற்றித் தருவதாகக் கூறி வரச் சொல்லியிருந்தனர். அவர்கள் ஊகித்த நபர் பாண்டி பின்னால் இருந்து செயலாற்றி இருந்தால் பாண்டியின் பெயரில் நிலத்தை எழுதுவதை ஒப்புக் கொள்ள மாட்டார் என நம்பினர்.

அதற்கு ஏற்றாற் போல் பாண்டியும் தன் பெயருக்கு நிலத்தை எழுதுவதற்கு முதல் நாள் பத்திர பதிவு அலுவலகத்தில் பவர் ஆஃப் அட்டர்னி பற்றி விசாரித்த செய்தி வந்தது. அதே போல் பத்திர பதிவு அன்று பாண்டி யாரோ ஒருவனுடன் ரகசியமாகப் பேசிவிட்டுப் பின்னால் அனுப்பி வைக்க அந்த ஆளை போலீசார் மஃப்டியில் சுற்றி வளைத்தனர். அவன் வேறு யாரு மல்ல. வசந்தன் தான். தாய், தங்கை அனைவரையும் இழந்தும் அவன் திருந்தியபாடில்லை. சிலரது பிறவிக் குணமே இப்படித்தானோ? என எண்ண வைத்து விட்டான். பாண்டி வசந்தன் மாட்டியது அறிந்ததுமே தப்பி ஓடிவிட்டான். பாண்டியின் தங்கையை வசந்தன் மணந்து இருந்தான். ''சும்மா விடாதே பாண்டி'' என வசந்தன் கத்தியதை காதில் வாங்கினானோ? இல் லையோ? சிட்டாய் பறந்து விட்டான். நந்தனாவிற்கு தாத்தா போன் செய்து பாண்டி தப்பிய விவரத்தைக் கூறி சீக்கிரமாக வீட்டிற்கு வரச் சொன்னார். அப்போது தான் நந்தனாவிற்கு ஆதித்தனின் நினைவு வந்தது. 'ஐயோ அவன் ஆதித்தனைப் பார்த்து இருக்கிறானே? அவனுக்கு ஏதாவது ஆபத்து என்றால்...'' உடனே அலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

''என்ன நந்தனா?''



''சீக்கிரம் வீட்டிற்கு வாருங்கள். எங்கே இருக்கிறீர்கள்?''

''நான் வயலில் தான் இருக்... ஆ!'' என அலறல் கேட்டது. நந்தனா விரைந்து அங்கே ஓடினாள்.

ஆதித்தனை கத்தியால் குத்திவிட்டு பாண்டி ஓடி விட்டான். ஆதித்தன் தன் சட்டையைக் கழற்றி காயம் பட்டிருந்த விலாப் பகுதியில் இறுக கட்டுப் போட்டான். அவனைப் பார்த்ததும் பதறியவளின் துணையோடு ஸ்கூட்டியில் ஏறினான். மருத்துவமனையில் சேர்க்கும் பொழுது,

''என்னைக் காப்பாற்ற சரியான சமயத்தில் எப்படி ராதா வந்து விடுகிறாய்?'' எனக் கேட்டவாறே மயக்க மானான். தாத்தா விவரம் தெரிந்ததும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார். முதன் முதலாய் தன் அன்பு மகனின் அருமைப் பிள்ளையை மருத்துவமனையில் பார்த்த பொழுது அப்படியே உருகிப் போனார். தன்னை அப்படியே உருக்கி வார்த்தாற் போல் ஆசைப் பேரன் இருந்தான். நந்தனா மிரட்டலைப் பார்த்து பயப்படும் பெண்ணல்ல; நிமிர்ந்து நிற்கும் பெண். அதனால் பாண்டியைத் தேடி புறப்பட்டாள். எப்படியும் அவன் தன்னை தாக்க வரு வான் என்று அவளுக்குத் தெரியும். ஆரம்பத்திலிருந்தே அவனை அவளுக்குப் பிடிக்கவில்லை; குற்றம் குறை கள் கூறிக் கொண்டிருந்தாள். வீட்டில் யாரும் இல்லை என தெரிந்து கொண்டு வீட்டிற்கே வந்தான். அவனைக் கண்டு அவள் பயப்படவில்லை. ''கோழை மாதிரி ஒளிந்து குத்தி விட்டுப் போகிறவனால் என்னை என்ன செய்ய முடியும்? நீ வருவாய் என என்னால் ஊகிக்க முடியாதா? ஊகிக்க முடிந்த என்னால் எப்படி பாதுகாப் பாய் இருக்க வேண்டும் என்று சிந்திக்கத் தெரியாதா?

வசமாக வந்து நீயே வலையில் மாட்டிக் கொண்டாயே?''
பாண்டிக்கு கிலிப் பிடித்தது. வேகமக ஓடியவன் எண்ணெய் கொட்டியிருந்த தரையில் கால் வைத்து வழுக்கி விழுந்தான். விழுந்தவன் எழுவதற்குள் கதவை மூடி பூட்டிவிட்டு வெளியே சென்றாள் நந்தனா. நடந்ததை அறிந்து போலீஸ்காரர் அவளை பாராட்டினார். ''உன் மன உறுதிக்கு முன் ஆயுதம் எல்லாம் சும்மா தான்.''

சரத்சந்தர், பத்மினியுடன் வீட்டிற்கு வந்து விட்டார். பல நாள்களுக்குப் பிறகு தாயைப் பார்த்தாலும் கோபமோ, வெறுப்போ காட்டவில்லை. முத்தச்சிக்கு 'ஞான பீடப் பரிசு' கிடைத்து இருப்பதாக செய்தி வந்தது. பேட்டி எடுக்க வந்தவர் முல்லை பெரியாறு அணை பற்றி ஐந்து முறை நிபுணர் குழுவை மத்திய நீர் ஆணையமும், உச்சநீதிமன்றமும் அமைத்துள்ளது. இந்தக் குழுக்கள் 'முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானது' தான் என உறுதி செய்து இருக்கின்றன. மறுபடியும் நிபுணர் குழு அமைக்கப்பட்டு உள்ளது. இதில் புனேயில் உள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆராய்ச்சி நிலையம், டெல்லியில் உள்ள மத்திய மண் மற்றும் கனிம ஆராய்ச்சி நிறுவனம், சென்னையில் உள்ள இந்திய மண்ணியல் கணக்கெடுப்புத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளார்கள். அவர்கள் நல்ல முடிவை தருவார்கள். இரண்டு மாநில மக்களும் சகோதர உறவுடன் பழகி வருகிறார்கள். கடலில் வீணாகக் கலக்கும் நீரை தமிழ்நாட்டு மக்களுக்கு தருவதில் கேரள மக்களுக்கு எந்தவித மாறுபாடும் இருக்க முடியாது. மொழிவாரி மாநிலம் பிரிக்கையில் தேவிகுளம், பீர்மேடு தங்களுக்குத்தான் வேண்டும் என்று போராடியில்லை... அனைவரும் ஒருங்கிணைந்து கேட்டிருந்தாலே இன்றைக்கு தமிழக மக்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருந்து இருக்காது அவர்கள் பெருந்தன்மையை மதிக்க வேண்டும்.'' என உறுதியாகக் கொடுத்து பேட்டியை தாத்தா படித்துக் கொண்டிருந்த பொழுது... வாசலில் நிழலாடியது.

முத்தச்சி தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடியே நின்றனர். முத்தச்சியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. ''தேவேட்டா! மன்னிப்பு கேட்கக் கூட எனக்குத் தகுதியில்லை'' எனக் கேவ ''வேண்டாம் வசு! அதற்கு அவசியம் இல்லை. போனதைப் பற்றிப் பேசாதே'' என கண்களைத் துடைத்து விட்டார்.

''இனி நாங்கள் உள்ளே வரலாமா?''

பத்மினியும், சரத்சந்தரும் வெளியே நின்றிருந்தனர்.

''வாம்மா பத்மினி!''

''தேவேட்டா பத்மினியை உங்களுக்குத் தெரியுமா?''

''கல்யாணத்திற்கு முன் பத்மினி என்னை வந்து சந்தித்தாள். சரத்சந்தரை மணந்துகொள்ள அனுமதி கேட்டாள். நான் அனுமதியும், ஆசீர்வாதமும் செய்து அனுப்பினேன்.''

''ஓ! அதுதான் மறுபேச்சு பேசாமல் உங்கள் மகள் அவளை மணந்து கொண்டாளா?''

ஆனால் எந்த பதிலும் அங்கே கிடைக்கவில்லை. தந்தையும் தனயனும் பாசத்தால் கட்டுண்டு நின்றார்கள். 'பார்த்தீர்களா அப்பா! நீங்க சொன்ன வார்த்தையை நான் மீறவே இல்லை. அம்மாவுடன் தான் வந்து உங்களை சந்திக்கிறேன். நாம் சந்தோஷமாக வாழ்ந்திருக்க வேண்டிய வசந்த காலத்தை எப்படி இழந்து விட்டோம்?'

'மகனே! நீ என் மகன் என்பதை நிரூபித்து விட்டாய்! நாம் உடலால் பிரிந்திருந்தாலும் உள்ளத்தால் இணைந்தே

இருந்தோம். இப்படி நம்மைப் போல அருமையான, மனம் அப்பா - மகன் எத்தனை பேருக்குக் கிடைக்கும்? இணைந்த இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர்.

''அப்பா! எங்கே என் மருமகள்?''

''யார் நந்தனாவா? அவள் ஆதித்தனை பார்க்க மருத்துவமனைக்குச் சென்று இருக்கிறாள்.''

''நந்தனாவைப் பற்றி சரத்திற்கு எப்படித் தெரியும்? நானே இனி தானே அவனிடம் இதைப் பற்றி பேசலாம் என்று இருந்தேன்.''

''இது வேறு கதை வசு! நந்தனாவை திருச்சி பஸ் ஸ்டாண்டில் தன்னந் தனியாக தவிப்புடன் பார்த்தேன். முகவரியை தொலைத்து விட்டு தவித்துக் கொண்டிருந்தாள். அவள் கையில் மரகதக்கல் மோதிரத்தைப் பார்த்தேன். வேறு எதைப் பற்றியுமே கேள்வி கேட்காமல் வீட்டிற்கு கூட்டி வந்து விட்டேன். அம்மா, அப்பா இல்லாத பெண். பாசம் காட்டியதும் ஒட்டிக் கொண்டாள். கற்பூர புத்தி. நிறைய விஷயங்களில் உன்னைப் போலவே இருந்தாள்.''

''இல்லை தேவேட்டா! அவள் மிகவும் உறுதி வாய்ந்தவள். நெருப்பு கூட அவளை எரிக்க முடியாது; இரும்பைப் போல நெருப்பில் வலிமையாகி விடுவாள். என்னை எப்படி கேள்விகளால் உலுக்கி விட்டாள் தெரியுமா? சரத்சந்தர் கதாபாத்திரம் போல் பலவீனர்களுக்காக குரல் கொடுப்பவள். எதையும் தைரியமாய் தட்டிக் கேட்பாள். அவள் கதை சொல்லும் பொழுது பார்க்க வேண்டும். நவரசங்களும் வெளிவரும்.''

ஆதித்தன் விரைந்து தேறி வந்தான். தன்னை பார்க்க வந்த நந்தனாவிடம், ''ஏன் ராதா? என்னை கண்டும் உன்னை, உண்மையை மறைத்தாய்?''



''அன்றைக்கு நட்பு இருந்தது உண்மைதான். நம் அன்பு எதையும் எதிர்பார்க்காத அன்பாய் தான் இருந்தது. நான் எதிர்பாராத விதமாய் உதவினேன். நீங்களும் எனக்கு நடக்க இருந்த ஆபத்திலிருந்து காப்பாற்றினீர்கள். வேறு எந்தக் கனவும் அப்போது நமக்குள் இல்லை. நீங்கள் கொடுத்த முகவரியை தொலைத்து விட்டேன். அப்போது தான் தாத்தா வந்தார். என்னை எந்தக் கேள்வியும் கேட்காமல் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அற்புதமான அன்பைப் பொழிந்தார். வளர வளர உங்கள் மேல் ஓர் ஈர்ப்பு வந்தது. ஆனாலும் உங்களை பார்ப்பேனா? என எனக்குத் தெரியாது. இருந்தும் ஆசை வந்தது. முத்தச்சி வீட்டிற்கு நீங்கள் வருவீர்கள் என்று கூட தெரியாமல் தான் உங்களை சந்தித்தேன்.''

''அப்பொழுது நீ சொல்லியிருக்கலாமே? எனக்கு உன்னை அடையாளமே தெரியவில்லை. உன்னிடம் பேசப் பேச எனக்கு ராதாவின் நினைவு தான். உன்னை நான் முத்தச்சி வீட்டிற்கு போகச் சொல்லி தான் முகவரி கொடுத்தேன். ஆனால் நீ முகவரியை தொலைத்தது எனக்குத் தெரியாததால் முத்தச்சியை விசாரித்துவிட்டு நீ வேறு எங்கோ உறவினர் வீட்டிற்குச் சென்று விட்டதாக எண்ணி விட்டேன். உன்னைப் பற்றி தெரிந்து கொள்ளும் ஆசையில் தான் இந்தியாவிற்கே வந்தேன். உன் ஊரெல்லாம் போய் உன்னைப் பற்றி விசாரித்தேன். நீ ஏன் அடிக்கடி என்னிடம் வெடுவெடுத்தாய்?''

''உங்கள் மனதில் வேறு பெண் இருக்கலாம் என்று நினைத்தேன். மேலும் விபுவையோ, ரோஷனியையோ நீங்கள் மணந்து கொள்ளப் போகிறீர்கள் என்று எண்ணினேன்; ஒரு பொறாமைக்கூட வந்தது.''

''அதுதான்! நீ யார் என்ற உண்மையை மறைத்தாயா? ஆனால் நீ யாரென்று நான் சீக்கிரமே கண்டு கொண்டேன். நீயே என் ராஜா என்று ஒத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். ம்ஹூம்! எங்கே நீ பிடி கொடுத்தாய்? முத்தச்சி கூட தாத்தாவின் மேல் தப்பாய் சந்தேகப் பட்டதை உணர்ந்து விட்டார்கள். நீ எப்படி?

''விவசாயம் செய்ய உண்மையாகவே உங்களுக்கு சம்மதம் தானா?''

''உனக்காகத்தான் ஒத்துக் கொண்டேன். ஆனால் இப்பொழுது எனக்கே ஆர்வம் வந்துவிட்டது. விவசாயத்தை மதிப்பை கூட்டல் முறையில் செய்யப் போகிறேன். நம் நிலத்தில் விளையும் நெல்லை, நாமே நவீன அரிசி ஆலை கட்டி அதில் அரிசியாக மாற்றி விற்பனை செய்யப் போகிறேன். மேலும் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழில் நுட்பம் இங்கேயே ஏற்படுத்தப் போகிறேன். இன்னும் இயற்கை உரம் தயாரிப்பு, உணவு பதப் படுத்தல் போன்ற பல துறைகளில் விரிவுப்படுத்தும் எண்ணமும் இருக்கிறது. என் எம்.பி.ஏ. இதற்கும் பயன்படும். ஹேய்! உனக்கு ஞாபகம் இருக்கிறதா? உன்னைப் பற்றி ஆங்கிலத்தில் ஒர் கவிதை சொன்னது எத்தனை பொருத்தமாக இருக்கிறது! அன்றைக்கு சொன்னதைவிட இன்றைக்கு ரசித்து இன்னும் உணர்வுப் பூர்வமாய் சொல்வேன். சொல்லட்டுமா? ராதா என்றால் அதிகமான அன்பு. எதையும் எதிர்பாராமல் அன்பு செய்கின்ற அன்பு.''

''அன்பைத் தேடி

அலைகின்ற வேளையில்

என் உயிரின் ஊற்றாய்.''

என அவன் கூற நந்தனா புத்தம் புது மலராய் பூத்தாள்.

*